உடைத்தெறி...

வெண்கலக் கதவுகளை உடைத்து..
இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து..
இரும்புத்திரை நாடுகளுக்குள்ளே சுவிசேஷம் கடத்திச்
சென்ற YWAM, RUDI LACK ன் த்ரில்லிங் ஸ்டோரி...

தமிழில் - Pr. Romilton

கம்யூனிச பல்கேரியாவுக்குள்ளே...

(பகுதி-1)

REV. RUDI LACK

Original in English

BREAKTHROUGH

Author:

RUDI LACK

தமிழில்

Pastor. Romilton

Delhi

Mob: +91 98106 46981

முன்னுரை

பெத்லகேமின் ஒலிமுக வாசலின் கிணற்றுத் தண்ணீரின் மேல் ஆவல் கொண்டு, "என் தாகத்துக்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வருகிறவன் யார் ?" என்ற தலைவனின் தாகத்தைத் தங்கள் மேல் சுமந்து, தங்கள் உயிரையும் துச்சமாய் மதித்துப் பெலிஸ்தரின் பாளயத்துக்குள் துணிந்து புகுந்து போய்த் தண்ணீர் கொண்டு வந்து தாகம் தீர்க்க முனைந்த அந்த மூன்று அதிபதிகளைப் போல,

வெண்கலக் கதவுகளை உடைத்து இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து அந்தகாரத்திலுள்ள பொக்கிஷங்களையும் ஒளிப்பிடத்திலுள்ள புதையல்களையும் உனக்குத் தருவேன் என்ற வார்த்தையை நம்பி,

சுவிசேஷத்துக்கு வாசல்கள் இறுக மூடப்பட்டு, போனால் திரும்பி வராத இரும்புத்திரை தேசங்களுக்குள்ளும், மூங்கில்திரை நாடுகளுக்குள்ளும், துணிந்து புகுந்து போய் "என் தாகத்துக்குத் தருவாயா ?" என்று கேட்ட நேசரின் ஆத்தும தாகம் தீர்க்க தன் உயிரையும் பணயம் வைத்து வேதப்புத்தகங்களை ருமேனியாவுக்குள்ளும், ஆப்பிரிக்காவின் டான்ஸேனியாவுக்குள்ளும், சீனாவுக்குள்ளும், இன்னும் இதர பல நாடுகளுக்குள்ளும் கடத்திச் சென்ற, YWAM ன் RUDI LACK ன் த்ரில்லிங் ஸ்டோரி இது..

ஆங்கிலத்தில் அவர் எழுதி O M நிறுவனம் வெளியிட்ட BREAKTHROUGH என்ற புத்தகமே "உடைத்தெறி" என்று மொழிபெயர்க்கப்பட்டு இங்கு பதிவிடப்படுகிறது..

சமயம் வாய்க்காத காலங்களிலும், வாய்க்காத சமயத்தையும் தேவனுக்காக வாய்க்கப்பண்ணிய இப்படிப்பட்டவர்களின் அசாத்தியத் துணிச்சலும் தைரியமும் பாரமும் வீரியமும் வேகமும், அடைக்கப்பட்ட, இந்த, சமயம் வாய்க்காத நாட்களிலும் கூட நம்முடைய சோம்பலின் கட்டுகளை உடைத்தெறிந்து தேவனுக்காக ஏதாவது ஒன்றைச் செய்ய நம்மை ஏவி எழுப்பிவிடுவதாக !

மிகுந்த நம்பிக்கையுடன்...

Pr. S. Romilton
அடைபட்ட அக்கினி

உடைத்தெறி...

(பகுதி-1)

கம்யூனிச பல்கேரியாவுக்குள்ளே...

பக்கம்: 06-112

(பகுதி-2)

ஆப்பிரிக்க எல்லைகளுக்குள்ளே...

பக்கம்: 113-201

(பகுதி-3)

சீனாவின் மூங்கில் திரைகளுக்குள்ளே...

பக்கம்: 202-213

(பகுதி-1)

அட்டவணை

1. ஹேண்ட்ஸ் அப்.. 007

2. ருடால்ஃப் என்ற நான்.. 015

3. லாரன் கன்னிங்காம்.. 025

4. ரோலி சாஸர்.. 034

5. குழுத்தலைவரின் அனுமதி கோரி............................. 041

6. எல்லை தாண்டி பல்கேரியாவுக்குள்.......................... 050

7. பள்ளத்தாக்கிலும் மலைகளிலும்............................... 057

8. பல்கேரிய கஸ்டம்ஸ் ஆபீஸில்................................. 066

9. உயிரைப் பிடித்துக் கொண்டு பல்கேரியாவுக்குள்...... 073

10. முகவரியைத் தேடி.. 078

11. வழிநடத்தும் தேவன்.. 086

12. பிடிபட்டால்..15 வருஷம் கடுங்காவல்...................... 094

13. யாரோ எங்களைப் பார்த்துவிட்டார்கள்.................... 099

14. திரும்பும் வழியில் விபரீதம்...................................... 105

" ஹேண்ட்ஸ் அப் "
"HANDS UP !!"

அந்த மிஷன் காம்ப்பவுண்டுக்குள் ஒரு grey கலர் ஆர்மி ட்ரக் புயலாகப் புகுந்தது..

புழுதியைக் கிளப்பிக் கொண்டு கிறீச்சிட்டு என் கார் அருகே அது வந்து நிற்க..அதிலிருந்து ஒரு டஜன் ஆப்பிரிக்க இராணுவ வீரர்கள் மிலிட்டரி யூனிஃபார்மில் வேகமாக இறங்கினர்..

அவர்களோடு 3 சீன கம்யூனிஸ்ட் வீரர்களும் இறங்கினர்..

டாக்டர்.டர்ரியும் நானும் நம்ப முடியாமல் வாயடைத்துப்போய் பார்த்துக் கொண்டிருந்தோம்..

அவர்களில் ஒரு ஆப்பிரிக்க ஆபீஸர் உடனே துப்பாக்கியை என் முகத்துக்கு நேரே நீட்டி .. " ஹேண்ட்ஸ் அப் " என்று உறுமினான்..

என் கைகள் என்னையறியாமலேயே மேலே உயர்ந்தன..

" ஓடிப்போயிரலாம்னு நினைச்சு கூடப் பாத்துராத.."
என்று முகத்தைக் கல்லாக்கிக் கொண்டு கர்ஜித்தான்
அந்த முரட்டு ஆசாமி..

எனக்கு ஒன்றும் ஓடவில்லை.என் நினைவுகள்
தாறுமாறாக சிதற ஆரம்பித்தன..

இந்த மத்திய ஆப்பிரிக்க Zambiaவுக்குள் இன்று நான்
நுழைந்ததிலிருந்தே நாள் முழுக்க வண்டி ஓட்டிய
களைப்பால் ஒரு பக்கம் உடலெல்லாம் அணுஅணுவாய்
வலிக்க..
கூடவே பயத்தில் சப்த நாடியும் நடுங்க ஆரம்பித்தது..

டாக்டர்.டர்ரியை அவர்கள் ஒரு பக்கமாய்த் தள்ளிவிட
,அவர் செய்வது அறியாமல் உறைந்து போய் நின்றார்.

கொஞ்சம் கொஞ்சமாய் உண்மை சுரீர்ரென்று உறைக்க
ஆரம்பித்து..

என்னை அறியாமல் நான் ஃபாலோ
பண்ணப்பட்டிருக்கிறேன்..
யாரோ என்னை நிழலாய்த் தொடர்ந்திருக்கிறார்கள்..

“ வசமாய் மாட்டிக் கொண்டேன் !!"

"பாஸ்போர்ட் எங்கே?

தன் துப்பாக்கியை எனக்கு நேரே நீட்டி.." உன் பாஸ்போர்ட் பேப்பர் மற்றும் பெர்மிட் எங்கே ?" என்று கத்தினான் அந்த ஆப்பிரிக்க கமாண்டிங் ஆபீஸர்..

பயத்தில் பேச்சு மூச்சற்றுப் போய் என் வெள்ளை வோக்ஸ்வேகன் வேனை நோக்கி கை நீட்டினேன்..

"போய் எடுத்துட்டு வாடா.."என்று உறுமினான் அவன்..

"ரூடி..கர்த்தரை நம்பு,அவர் உன்னை நிச்சயம் தப்புவிப்பார்" என்று டாக்டர் டர்ரி எனக்குப் பின்னால் கிசுகிசுப்பது சன்னமாய்க் கேட்டது..

ஆனால் நானோ அவர்கள் கையில் சரியாய் சிக்கியிருந்தேன். கர்த்தர் கூட இதிலிருந்து என்னைத் தப்பிக்க வைக்க முடியுமா என்று நினைக்கும் அளவுக்கு விஷயம் அவ்வளவு சீரியஸாகி விட்டது என்று மட்டும் புரிந்து போனது..

நான் இப்போது நின்று கொண்டிருப்பது ஆப்பிரிக்காவிலுள்ள Zambia வில்..ஆனால் என் பர்ஸில், நான் ஒரு Zimbabwe நாட்டு நிரந்தரக் குடியுரிமை பெற்றவன் என்ற பெர்மிட் பேப்பர் மற்ற பேப்பர்களோடு இருந்தது..

1975 ல் Zambia வுக்கும் Zimbabwe க்கும் இடையே எந்த அரசுத் தொடர்போ நல்லுறவோ இல்லாத ஒரு காலம் அது..

இரண்டு நாடுகளுக்கும் நடுவேயிருந்த எல்லை இறுக்கமாக மூடப்பட்டிருந்தது.
Zimbabwe யிலிருந்து நான் இப்போது வந்திருக்கும் Zambia வுக்குள் நுழைய Botswana வழியாக முன்பின் தெரியாத பாதை வழியாக சுற்றி வந்திருந்தேன்..

Zimbezi நதியருகே உள்ள பார்டரில் நான் Zambia வுக்குள் நுழைந்த போது அங்கிருந்த கஸ்டம்ஸ் ஆபீஸர் நான் ஒரு Zimbabwe குடியுரிமை பெற்றவன் என்று அறிந்திருந்தால் நிச்சயமாக இந்த நாட்டுக்குள் என்னை நுழைய விட்டிருக்க மாட்டான்.

நான் அந்த கஸ்டம்ஸில் எனது ஸ்விட்சர்லாந்து பாஸ்போர்ட்டை மட்டுமே காட்டியிருந்தேன்.

அதில்,இதற்கு முன்,நான் எவ்வளவு நாள் Zimbabwe யில் தங்கியிருந்தேன் என்பது பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை..

என் மற்ற பேப்பர்களோடு Zimbabwe ID proof மற்றும் Residence proof குறிப்பிடப்பட்ட ஒரு தனி அடையாள அட்டை என் பர்ஸுக்குள்ளே இருந்தது.

நாடு விட்டு நாடு திருட்டுத்தனமாய் நுழைந்த ஒரு உளவாளி என்று என்னைக் கடுமையான சிக்கலில் மாட்ட வைக்க அந்த அடையாள அட்டை ஒன்று மட்டுமே போதுமானதாய் இருந்தது..

அந்த இராணுவ அதிகாரிகள் இருந்த mood ஐப் பார்த்தால் முதலில் என்னைச் சுட்டுத் தள்ளிவிட்டு பிறகு தான் விசாரணையையே ஆரம்பிப்பார்கள் போலிருந்தது..

எப்படியோ என் வேனை நோக்கி நடந்தேன். கதவைத் திறக்க முயற்சித்த என் கைகள் என்னையும் மீறி நடுங்கிக் கொண்டிருந்தன..

கடைசியாக, நடுங்கிக் கொண்டே வேனிலிருந்து பர்ஸை எடுத்தேன்.

என்னுடைய ஒவ்வொரு அசைவையும் கண்கொத்திப் பாம்பாக பின்னாலிருந்து கவனித்துக் கொண்டே இருந்தனர்..

பர்ஸுக்குள் இருந்த அந்தப் பேப்பர் மட்டும் அவர்கள் கண்ணில் சிக்கினால் என்னை முடித்து விட்டு தான் அவர்களுக்கு மறுவேலை..

ஆனால் அதைத் தனியே வெளியில் எடுத்து ஒளித்து வைக்க முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலை அது..

" தகப்பனே! இந்தத் தப்பிக்க வழியில்லாத நிலையிலிருந்து என்னை விடுவிக்க மாட்டீரோ ?" என்று எனக்குள்ளே ஒரு சிறிய ஜெபம் ஏறெடுத்தேன்.

" வண்டியிலே ஏறு !! "

" ஏறுடா வண்டியில !" எரிச்சலில் கத்தினான் ஒருவன்..

என் ஹார்ட் பீட் எக்கச்சக்கமாய் எகிற..திறந்த ஆர்மி ட்ரக்கின் பின் பக்கம் ஏறினேன்..

அந்த ட்ரக்கிலிருந்த புழுதியையும் தூசியையும் பார்த்தாலே தெரிந்தது..
அந்த வண்டி அங்குள்ள Tan-Zam ரெயில்வே லைன் போடும் வேலையில் உபயோகப்படுத்தப்படும் லோக்கல் லாரி என்று..

வண்டியில் பரவிக்கிடந்த கல்லையும் மண்ணையும் ஒதுக்கி விட்டு கீழே உட்கார்ந்தேன்.

என் தலைவிதி நிர்ணயிக்கப்பட்டு விட்டது.
எனக்குப்பின் ஏறிய ஆப்பிரிக்க மிலிட்டரிக்காரர்கள் ஒவ்வொருவராக என்மேல் விழ ஆரம்பித்தார்கள்..

தொள தொளவென்று யூனிஃபார்ம் போட்டிருந்த ஒரு Chinese டிரைவர் வண்டியை ஸ்டார்ட் பண்ணினான்.

வண்டி ஸ்டார்ட் பண்ணப்பட்டது தான் தாமதம், அதற்குள் ஆப்பிரிக்க வீரர்களும் Chinese ஆபீஸர்களும் நிறைந்த இன்னொரு ட்ரக் ஒன்று வேகமாக மிஷன் காம்ப்பவுண்டுக்குள் நுழைந்தது..

வேகமாய் வந்த அந்த ட்ரக், நான் இருந்த லாரிக்கு மிக அருகில் வந்து கிறீச்சிட்டு நின்றது.

அதிலிருந்த ஒரு ஆப்பிரிக்கன் கத்தினான்.." ஏய் ! நில்லு..இந்த ராஸ்கல் சப்ளை பண்ணின(விநியோகித்த) எல்லா துண்டுப்பிரதி மற்றும் புத்தகங்களிலேயும் எங்களுக்கு சாம்ப்பிள் வேணும்.."

என் பக்கத்திலிருந்த ஆப்பிரிக்க வீரன் ஒருவன்.."சீக்கிரம் போய் எல்லாத்திலேயும் ஒரு சாம்ப்பிள் எடுத்துட்டு வா.." என்று என்னை வண்டியிலிருந்து காலால் உதைத்துத் தள்ளி விட்டான்..

லாரியிலிருந்து கீழே விழுந்த நான் சுதாரித்து எழுந்து நின்ற போது, என் பேப்பரை ஒளித்து வைக்க இது எனக்குக் கிடைத்த சரியான சந்தர்ப்பமோ என்று நினைத்து எனக்குள் லேசாக பெருமூச்சு விட்டுக் கொண்டேன்..

" கண் காணா இடம் நோக்கி..."

என் வேனின் பின்பக்கத்தைத் திறந்த நான் பின்னால் அடுக்கியிருந்த பெட்டிகளில் ஒன்றின் மேல் தடுமாறி விழுந்தேன்.

அந்தச் சைனாக்காரன் எடுத்துக் கொண்டு வரச் சொன்ன சாம்ப்பிளைத் தேடுவது போல பாவனை செய்து கொண்டே என் பர்ஸை பெட்டிகளுக்கு இடையில் மறைத்துக் கொண்டு Zimbabwe ID proof ஐ எடுத்து லாவகமாகப் பெட்டிகளுக்குள் புத்தகங்களுக்கு அடியில் பத்திரமாக ஒளித்து வைத்து விட்டேன்..

எடுக்க வேண்டிய சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புத்தகங்களின் சாம்ப்பிள்களை எடுத்துக் கொண்டு ஒரு நிம்மதிப் பெருமூச்சோடு லாரியை நோக்கி நடந்தேன்..

இப்போது என் பர்ஸில் ஸ்விஸ் பாஸ்போர்ட் மட்டுமே இருந்தது.நான் Zimbabwe யில் தங்கியிருந்ததற்கான எந்த அத்தாட்சியின் சுவடும் அதில் இல்லை..

ஒரு மிலிட்டரிக்காரன் மறுபடியும் என்னை லாரிக்குள் தள்ளினான்.
டாக்டர்.
டெர்ரி எதுவும் செய்ய முடியாதவராய் என்னையே பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார்..

அவரை ஏக்கத்தோடு திரும்பிப் பார்த்தவனாய் ஆர்மி ட்ரக்கில் ஏறிய நான் அப்படியே அந்த லாரியின் தளத்தில் விழுந்தேன்..

என் இரு பக்கமும் இரண்டு ஆப்பிரிக்க வீரர்கள் துப்பாக்கியோடு உட்கார்ந்தார்கள்.
இன்னொரு நான்கு பேர் அருகில் நின்று கொண்டிருந்தார்கள்..

Chinese ஆபீஸர்கள் முன்னால் கேபினில் டிரைவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்கள்..

என்னைச் சுற்றி மிலிட்டரி வீரர்கள் முழுக்காவலோடு நிற்க, லாரி கிளம்பியது.

என்னை எங்கே கொண்டு போகிறார்கள் ? என்ன செய்யப்போகிறார்கள் ?

இதற்குள் சூரியன் மறைந்தது.வண்டி வேகமாய் ஓட ஓட, திறந்த லாரியில் இரவின் குளிர் காற்றில் நடுங்க ஆரம்பித்தேன்..

ஆனால் குளிரின் நடுக்கத்தைக் காட்டிலும்,பயமும் திகிலும் கொண்ட நடுக்கம் என் எலும்புகளைச் சில்லிடப் பண்ணியது..

Rudolf என்ற என் பெயருக்கு அர்த்தமே இல்லாமல் நடுங்கிக் கொண்டிருந்தேன்..

ருடால்ஃப் என்ற நான்.. ஒரு FLASHBACK

ருடால்ஃப்...
சுருக்கமாக ரூடி...
இது தான் என் பெற்றோர் எனக்கு வைத்த பெயர்..

தேவனுக்குத் தங்களை முழுவதும் அர்ப்பணித்த பெற்றோர். என் தகப்பனார் Hans Lack அநேக ஸ்விஸ் இவாஞ்சலிக்கல் சபைகளுக்குப் போதகராயிருந்தார்..

நான் பிறந்த போது இரண்டாம் உலகப்போர் உச்சக்கட்டத்தில் இருந்தது. Aarburg என்ற எங்கள் சொந்த ஊர் ஜெர்மனி எல்லையிலிருந்து
வெறும் ஒரு மணி நேர தூரத்தில் ஸ்விட்சர்லாந்து பார்டரில் இருந்தது.

எப்போது வேண்டுமானாலும் ஹிட்லரின் நாஜிப்படைகள் எங்களைத் தாக்கலாம் என்ற சூழ்நிலையிலிருந்தது எங்கள் ஊர்..

யூதர்களையும், எங்களைப் போன்ற இவாஞ்சலிக்கல் கிறிஸ்தவர்களையுமே குறிவைத்திருந்த ஹிட்லரின் வீரர்களின் கவனத்தைத் தவிர்க்கும் எண்ணத்தில் என் பெற்றோர் எனக்கு வேதத்தின் அடிப்படையிலான கிறிஸ்தவப் பெயர் வைக்கவில்லை..

மாறாக..என் பெற்றோர் என்னை எதற்கும் அஞ்சாத ஓநாய் என்று அர்த்தம் கொள்ளும் ருடால்ஃப் என்றே பெயரிட்டு அழைத்தார்கள்.

அப்படிச் செய்யக் கர்த்தரே அவர்களை நடத்தினார் என்று பின்னாட்களில் நான் அறிந்து கொண்டேன்.

பெயருக்கு ஏற்றபடியே என் சிறு வயது முதலே தைரியமும் துணிச்சலும் எதிலும் எளிதில் இறங்கிப் பார்த்துவிடும் பழக்கமும் எனக்கு இருந்தது..

எங்கள் வீடு எப்பொழுதும் மிஷினரிகளுக்கு ஒரு திறந்த வாசலாகவே இருந்தது.

பெயர் கூட உச்சரிக்க முடியாத சில தூர நாடுகளிலிருந்து வரும் மிஷினரிகள் தங்கள் சாட்சிகளையும் ஊழியத்தில் தாங்கள் சந்தித்த சவால்களையும் சொல்லச் சொல்ல.. சிறுவனான நான் கண்ணிமைக்காமல் கேட்டுக் கொண்டே இருப்பேன்..

எனக்கு இப்போதும் ஞாபகம் உண்டு.எனக்கு 5 வயதிருக்கும்..

ஆப்பிரிக்காவிலிருந்து வந்திருந்த ஒரு மிஷினரியை என் பெற்றோர் இரவு விருந்துக்கு அழைத்திருந்தார்கள்.

அந்த மிஷினரி, தன் த்ரில்லிங் அனுபவங்களைச் சொல்லச் சொல்ல டைனிங் டேபிளைச் சுற்றி உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தவர்கள் ஒருவருக்கும் நான் இருக்கும் ஞாபகமே இல்லாமல் போகவே, நான் தூங்கப் போகும் நேரம் கடந்து போனதைக் கூட அவர்கள் கவனிக்கவில்லை.

என் சிறிய மூளைக்கு அவர் சொன்ன காரியங்கள் புத்திக்கு அப்பாற்பட்டதாய் இருந்தாலும் ,அவர் பேசப் பேச ஆச்சரியத்தில் மூழ்கிப் போன நான் அடுத்தது என்னவாயிருக்கும் என்ற சஸ்பென்ஸில் அசைவற்றுப் போய் வாய் பிளந்து உட்கார்ந்து கொண்டிருந்தேன்..

இதே அனுபவங்களை அடிக்கடி கேட்டுப் பழக்கப்பட்ட நான் கொஞ்சம் பெரியவனானதும், நானும் தேவனுடைய அன்பின் சுவிசேஷத்துடன் ஆப்பிரிக்காவின் அடர்ந்த கானகங்களில்

சிங்கங்களோடு போராடி அண்ட்டார்ட்டிக்கின் ஆழங்களைக் கடந்து அமேஸான் நதியின் கரைகளில் வாழும் இரத்தத்தை உறிஞ்சும் நரமாமிசப் பட்சிணிகளின் மத்தியில் ஊழியம் செய்யப் போகும் தைரியமும் துணிச்சலுமான ஒரு மிஷினரியாக என்னையே கற்பனை செய்து கொண்டேன்..

" அவரைப் பின் செல் "

என் கிறிஸ்தவ வாழ்க்கையை உருவாக்கி மெருகேற்றியதில் மிக முக்கிய பங்கு என் அப்பாவையே சேரும்..

என்னை சரியான வழியில் நிறுத்தி என் வாழ்க்கையில் நான் அடைய வேண்டிய மிகச் சிறந்த தரத்தை நிர்ணயித்தவர் அவரே..

ஒரு மிஷினரி ஆக வேண்டுமென்ற என் கனவுக்கு அங்கீகாரம் கொடுத்து அதை நனவாக்க வேண்டியவர் அவர் தான் என்பதில் நான் உறுதியாய் இருந்தேன்..

நான் வளர்ந்த போது எங்கள் சபையின் வாலிபர் ஊழியத்தில் தீவிரமாய் இருந்த நான் என் விசுவாசத்திலும் உறுதியாய் நின்றேன்..

ஆனால் எனக்குள் தீயாய் எரிந்து கொண்டிருந்த மிஷினரி தாகம் என்னை அறியாமலே எப்படியோ கொஞ்சம் கொஞ்சமாக அணைந்து கொண்டிருந்தது..

மற்றவர்களுக்கு இயேசுவைப் பகிர்ந்து கொள்வது மெதுவாகக் குறைந்து போனது.

இதற்குள் நல்ல வேலை, நல்ல சம்பளம்,உலகத்தின் சொகுசு எல்லாம் எனக்குள் வந்துவிட, என் வாழ்க்கையின் நோக்கம் திசைதிரும்பியது.

ஒரு கெமிக்கல் ஆராய்ச்சியாளன் ஆகும் எண்ணம் தீவிரமடைந்து, அதைப் பற்றியே யோசிக்கவும் பேசவும் ஆரம்பித்தேன்..

ஆனால் என் பயிற்சியின் மூன்றாம் வருஷம் தேவன் இடைபட்டு என் வாழ்க்கையின் பாதையை மாற்றி மறுபடியும் ஆதி அன்புக்கும் ஆதி தரிசனத்துக்கும் நேரே நடத்தினார்..

ஊழியர்களும் மிஷினரிகளும் விருந்தினர்களாக வந்து போவது எங்கள் குடும்பத்தின் ஒரு அங்கமாகவே மாறியிருந்தது..

ஒரு முறை அடால்ஃப் ஸ்நெல்ஸ்பெர்க் என்ற ஜெர்மன் பிஸினெஸ்மேன் ஒருவர் வந்திருந்தார்..

அப்போது எனக்கு வயது 20.என் ஆவிக்குரிய வாழ்க்கை தரை மட்டத்தில் இருந்த நேரம் அது..

நான் சபைக்குப் போய்க் கொண்டும் தவறாமல் வேதம் வாசித்துக் கொண்டும் இருந்த போதும், ஆரம்பத்தில் இருந்த அர்ப்பணிப்பின் கூர்மை சுத்தமாக மழுங்கிப் போயிருந்தது..

எங்களோடு அடால்ஃப் தங்கியிருந்த இரண்டு வாரமும்,ஏதோ சுத்தமும் சுகந்த வாசமான காற்றை சுவாசித்துக் கொண்டிருப்பது போல வீடே சந்தோஷமாய் இருந்தது..

45 வயதான இந்த மனுஷனுக்குள் இயேசு கிறிஸ்துவுக்காக இருந்த பற்றி எரியும் தாகத்தையும் வைராக்கியத்தையும் இதற்கு முன் நான் யாரிடமும் பார்த்ததில்லை..

அவருக்குள் இருந்த உத்வேகம் என் ஆவிக்குரிய வாழ்க்கையைத் திரும்ப அனல் மூட்டி எழுப்பிவிட்டது..

அடால்ஃப் புறப்படுவதற்கு சில நாட்களுக்கு முன், அவர் என்னையும் என் தங்கையையும், தெற்கு ஜெர்மனியில் அடுத்த ஜனவரியில் அவரது சபை நடத்தப் போகும் வாலிப முகாமுக்கு வரும்படி அழைத்தார்..

அதுவே என் வாழ்க்கையின் திருப்புமுனையாகப் போகிறது என்பதை கொஞ்சமும் அறியாமல் இருந்தேன்..

BLACK FOREST கேம்ப்

ஜனவரி யூத் கேம்ப்க்கு போகவா வேண்டாமா என்று எனக்குள் போராட்டம்..ஒரு பக்கம் போக விருப்பம், இன்னொரு பக்கம் மனமில்லை..

கடைசியாக, அடால்ஃப் எங்கள் வீட்டை விட்டுப் புறப்படுவதற்கு முந்தின நாள் இரவு,கேம்ப்புக்கு போக நான் முடிவு செய்துவிட்டு,அடுத்த நாள் காலை அடால்ஃபிடம் சொன்னபோது..

சந்தோஷமாய் புன்முறுவல் செய்த அடால்ஃப், "ஸீ யூ ரூடி there.." என்று சொல்லி விட்டுச் சென்றார்..

எங்கள் சபையின் யூத் லீடரும் என்னுடன் வர விருப்பப்படவே, நானும் என் தங்கை எஸ்தரும் அவருமாக மூவரும் கேம்ப்புக்குப் போனோம்..

Stuggart ஊருக்கு வெளியே சுற்றிலும் காட்டுப் பகுதியான Black Forest என்ற இடத்தில் ஒழுங்கு செய்திருந்தார்கள்.

நாங்கள் கேம்ப் சென்ட்டருக்கு வந்து சேர்ந்த போது அடால்ஃபின் பெந்தேகோஸ்தே சபையின் 70 ஜெர்மன் வாலிபர்களை சந்தித்தோம்..

அவர்கள் ஏற்கெனவே ஒருவரை ஒருவர் அறிந்திருந்ததாலும் எங்களுக்கு எல்லாரும் புதுமுகமாய் இருந்ததாலும் எனக்கு அந்த இடமும் சூழ்நிலையும் அவ்வளவு பிடிப்பு இல்லாமல் தர்மசங்கடமாய் இருந்தது..

ஆனால் முதல் நாள் இரவு நடந்த கூட்டம் இது வரை நான் அனுபவப்படாத ஒன்றாக இருந்தது.
எங்கேயோ விருப்பமில்லாத இடத்துக்கு வந்து விட்டது போலிருந்தது..

ஆனால் அங்கு காணப்பட்ட உற்சாகமும் சந்தோஷமும் என்னையும் தொற்றிக் கொள்ளவே..
இரண்டாம், மூன்றாம் நாட்களுக்குள் எனக்குள் இருந்த விருப்பமில்லாத தன்மை கொஞ்சம் கொஞ்சமாகக் கரைய ஆரம்பித்தது..

அவர்களது அன்பும் அர்ப்பணிப்பும் என் தாகத்தை அதிகரிக்க, நானும் அதைப் பெற்றுக் கொள்ள மாட்டேனோ என்று ஏங்க ஆரம்பித்தேன்..

அப்போது தான் அங்குள்ள கேம்ப் லீடர் என்னிடம் பேசினார்..

" ரூடி, நீ இரட்சிக்கப்பட்டிருப்பது உண்மை தான். ஆனால் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவது ஒரு வித்தியாசமான மிகவும் அவசியமான அனுபவம்.."

என்னால் பதில் சொல்ல முடியவில்லை.அறைக்குத் திரும்பி அந்தக் கோணத்தில் அது சம்பந்தப்பட்ட வேத பகுதியைத் திருப்பினேன்.

“ கர்த்தாவே, நீர் எனக்கு வைத்திருக்கும் யாவற்றையும் நான் பெற்றுக் கொள்ள விரும்புகிறேன்..ஆனால் ஒரு உண்மை எனக்குத் தெரிய வேண்டும் .."

"இந்த பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்பது உம் மூலம் உண்டானதோ ?" என்று ஜெபிக்க ஆரம்பித்தேன்..

அந்த புதன் கிழமை அதற்குப் பதில் கிடைத்தது.அன்று மாலை ஆவியின் அபிஷேகத்துக்கான கூட்டம் நடந்தது..

நானும் முழங்கால் படியிட்டேன்.அவர்கள் எனக்காக ஜெபித்த போது நான் அறியாத, ஒரு இனம் புரியாத சந்தோஷம் எனக்குள் வர..

என் கையை உயர்த்தித் துதிக்கத் துதிக்க,ஏதோ நான் ஒரு உன்னத வல்லமை என்னை ஆட்கொள்ள..என் நாவு நான் அறியாத பாஷையைப் பேச ஆரம்பித்தது..

அந்த இரவின் அனுபவம் அடுத்து வந்த என் கிறிஸ்தவப் பாதையையே புரட்டிப்போட்டு ஒரு புரட்சியை உண்டாக்கி விட்டது..

கேம்ப்புக்குச் சென்ற எங்கள் மூவரது வாழ்க்கையும் புதுப்பிக்கப்பட்டு உயிரூட்டப்பட்டு ஆவிக்குரிய மின்சாரம் தாக்கப்பட்டவர்களாய் வீடு வந்து சேர்ந்தோம்..

தரிசனம்

என் Black Forest அபிஷேக அனுபவத்துக்குப் பிறகு நான் லண்டனிலுள்ள கின்லே பைபிள் காலேஜூக்கு இரண்டு வருட பைபிள் பயிற்சிக்காகச் சென்றேன்.

அதன்பின் ஸ்விட்சர்லாந்து திரும்பிய நான் இவாஞ்சலிக்கல் ஃப்ரீ சர்ச்சின் உதவி போதகராகப் பொறுப்பேற்றேன்.

தேவனுடைய ஊழியத்தில் நான் என்னை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டு, முழுமூச்சில் என் வேலைகளைச் செய்து கொண்டிருந்தாலும், என் மனதின் எங்கோ ஒரு மூலையில் ஒரு அதிருப்தி இருந்து கொண்டே இருந்தது..

உலகம் முழுவதும் சென்று சுவிசேஷம் அறிவியுங்கள் என்ற இயேசு கிறிஸ்துவின் கட்டளையின்படி நானும் ஒரு மிஷினரியாக வேண்டும் என்பதே என் ஏக்கமும் துடிப்பும் கனவுமாக இருந்தது..

என் சொந்த நாடாகிய ஸ்விட்சர்லாந்தில் ஒரே சபைக்குள்ளே உட்கார்ந்து கொண்டு வாழ்நாளைக் கழிப்பது என்பது என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒன்றாக இருந்தது..

உலகம் முழுவதும் பயணம் செய்து வாலிபர்களைக் கிறிஸ்துவுக்காக எழுப்பி விடுவதே என் தாகமாக இருந்தது..

ஆனால் இதை எப்படி செய்வது ? எங்கிருந்து ஆரம்பிப்பது ? என் தலையை குடைந்து கொண்டிருந்த மிகப் பெரிய கேள்வி இது !

இரண்டு வருட பாஸ்டர் ஊழியத்துக்குப் பிறகு "இதுக்கு மேல தாங்காது" என்ற கொதி நிலைக்கு வந்து விட்ட நான், என் உதவி பாஸ்டர் பதவியை ராஜினாமா செய்யும் முடிவுக்கு வந்து விட்டேன்..

எந்த இடத்தில் அபிஷேகம் பெற்றேனோ, எந்த அபிஷேகம் என் வாழ்க்கையையே புரட்டிப் போட்டதோ அதே Black Forest முகாமுக்கு மறுபடியும் ஏழு வருடங்களுக்குப் பிறகு போனேன்..

என் ராஜினாமாவை இது வரை நான் கொடுத்திருக்கவில்லை என்றாலும், பாஸ்டர் வேலையை விட்டுவிட வேண்டும் என்ற முழுமுடிவோடு அங்கு சென்றிருந்தேன்..

அந்த ரிட்ரீட்டில் இருந்த நாட்கள் ஒன்றின் மாலையில் அங்குள்ள கேம்ப் லீடர் Fredம் நானும் ஜெபித்துக் கொண்டிருந்தோம்..

அப்போது எங்கள் சபையிலிருந்து என்னோடு கேம்ப்க்கு வந்திருந்த 19 வயது ரோலி சாஸருக்காக பாரத்தோடு ஜெபித்துக் கொண்டிருந்தேன்..

அப்போது திடீரென்று Fred ஜெபத்தை இடைமறித்து, " ரூடி, தேவன் உனக்காக ஒரு தரிசனத்தைக் காண்பிக்கிறார் " என்று விவரிக்க ஆரம்பித்தார்.

" ரூடி, உனக்குப் பக்கத்தில் நீ அறியாத ஒரு மனிதன் நிற்பதைப் பார்க்கிறேன்..
வரும் நாட்களில் உன் ஊழியத்தில் இந்த மனிதன் முக்கிய பங்கு வகிக்கப் போகிறான்..

இன்னொரு முக்கிய விஷயம்..நீ இவ்வளவு சீக்கிரம் உன் போதக ஊழியத்திலிருந்து விலகுவது தேவ சித்தமல்ல..

இந்த மனிதனைத் தேடி நீ ஓட வேண்டாம்.தேவனே அவனை உன்னிடம் அனுப்புவார்.உன் எதிர்கால ஊழியத்தில் அவன் உன்னை நடத்திச் செல்வான்..

ஸ்விட்சர்லாந்து எல்லையைத் தாண்டி பல இடங்களுக்கு உன் ஊழியம் பரந்து விரிந்து செல்லும்..ஆனால் நீ பொறுமை இழக்கக் கூடாது.இந்த மனிதனை நீ சந்திக்க ஓரிரு வருடங்கள் ஆகலாம்.."

தரிசனத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகவும் சந்தோஷமாகவும் கேட்டுக் கொண்டேயிருந்த நான்,கடைசியில் சொன்ன வார்த்தையைக் கேட்டு சோர்ந்து போனேன்..

இப்போதே ரிஸைன் பண்ணிவிட வேண்டும் என்ற முடிவில் இருந்த எனக்கு, ஒரு வருஷம் பொறுப்பதே பெரிய விஷயம்..

"ஐயோ ! இரண்டு வருஷமா ?" நினைத்தே பார்க்க முடியாது !

ஆனால் Fred மூலம் தேவன் தான் பேசுகிறார் என்பது உறுதியாகத் தெரிந்தது.

ஆகவே கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, இப்போதைக்கு ரிசைன் பண்ண வேண்டாமென்று முடிவு செய்துவிட்டு ஊர் திரும்பிய நான், அரைமனதுடன் மறுபடியும் பாஸ்டர் பொறுப்பைத் தொடர்ந்தேன்..

லாரன் கன்னிங்காம்

கேம்ப்பிலிருந்து வீடு திரும்பிய நான் வழக்கம் போல் வேலைகளில் முன்பை விட பிஸியாகி விட்டேன்.

அப்பா சீனியர் பாஸ்டராக இருந்ததாலும், எங்களுக்குக் கிளைச் சபைகள் இருந்ததாலும் மேலும் பல பொறுப்புகள் என் மேல் வந்தன..

வழக்கம் போல் எங்கள் வீட்டில் சுவிசேஷகர்களும் மிஷினரிகளும் ஊழியர்களும் வந்து போய்க் கொண்டிருந்தனர்.

அவர்களில் ஒருவர், எங்களிடம்அடிக்கடி வந்து போகும் வில்லர்ட் கேன்ட்டெலான்..ஒரு நாள் அவரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது.

சமீபத்தில் அமெரிக்காவிலிருந்து ஸ்விட்சர்லாந்துக்கு குடியேறியிருக்கும் லாரன் கன்னிங்காம் என்னும் தனது நண்பர் பற்றியும், நாங்கள் அவரை சந்திப்பது நல்லது என்றும் எழுதியிருந்தார்.

லாரன் கன்னிங்காம்,
Youth With A Mission என்ற நிறுவனத்தை நிறுவி நடத்துவதாகவும்,

அதன் மூலம் உலகம் முழுவதுமுள்ள வாலிபர்களை சந்திக்கும் தரிசனத்தோடு School Of Evangelism ஒன்றை ஸ்விட்சர்லாந்தில் ஆரம்பிக்கப் போவதாகவும்,

கர்த்தர் வாலிபர்கள் மத்தியில் எப்படி அவரது தரிசனத்தை நிறைவேற்றி வருகிறார் என்றும் விவரிக்கப்பட்டிருந்த அந்தக் கடிதத்தை மிகவும் ஆர்வத்தோடு படித்தேன்..

என் கனவும் லாரனின் தரிசனமும் ஒரே மாதிரி இருப்பது போல் இருந்தது.

ஒரு வேளை இந்த லாரன் கன்னிங்காம் தான் என் எதிர்கால ஊழியத்தில் என்னை நடத்துவார் என்று நான் எதிர்பார்த்துக் காத்திருக்கும் மனிதனோ?

Black Forest கேம்ப்பில் Fred ஒரு மனிதனைப் பற்றி தீர்க்கதரிசனம் சொல்லி இப்போது ஒன்றரை வருஷம் ஆகியிருந்தது..ஆனால் இது வரை ஒருவரும் என்னைச் சந்திக்க வரவில்லை..

இப்போது இந்தக் கடிதம் வந்து சில வாரங்ள் சென்று,நானும் அப்பாவும்,வரப்போகும் பெந்தேகோஸ்தே ஞாயிறு வார இறுதி விசேஷித்த கூட்டங்களுக்காக எந்த ஊழியரை பிரசங்கிக்க அழைக்கலாம் என்று பேசிக் கொண்டிருக்கும் போது, திடீரென்று வில்லர்ட்டின் கடிதம் ஞாபகம் வரவே, கடிதத்தைப் படித்துப் பார்த்த அப்பா அவருக்குப் போன் பண்ணச் சொன்னார்..

எங்கள் அழைப்பை லாரன் கன்னிங்காம் மிகுந்த சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்ளவே,அவரையே அந்த வருஷ பெந்தேகோஸ்தே வாரத்தின் விசேஷித்த செய்தியாளராக அறிவித்தோம்..

நிறைவேறிய தீர்க்கதரிசனம்

பெந்தேகோஸ்தே ஞாயிறு அன்று சரியான நேரத்துக்கு வந்து சேர்ந்தார் லாரன்.

ஆராதனையில் அவரது School Of Evangelism மாணவர்களில் சிலர் சாட்சி கொடுத்தார்கள்.

லாரனின் தேவசெய்தி அளிக்கும் நேரம் வந்தது.முழு சபையும் ஒருவித எதிர்பார்ப்போடும் மிகுந்த ஆவலோடும் காத்திருந்தது..

லாரனின் ஒவ்வொரு வார்த்தையிலும் நான் இதுவரை கண்டிராத பாரமும் அபிஷேகமும் உத்வேகமும் வெளிப்பட்டது.

இதுவரை எந்த மிஷினரியின் பாதமும் பட்டிராத உலகின் மூலை முடுக்கெல்லாம் வாலிபர்களின் வீர சேனை கெம்பீரமாய் சுவிசேஷத்தோடு முன்செல்லும் தனது தரிசனத்தை அவர் முன்வைக்க வைக்க,
சபையை ஒருவித தேவஅக்கினி பற்றிப்பிடிக்க ஆரம்பித்தது..

ரஷ்யாவின் செஞ்சதுக்கத்துக்கும், நரமாமிசப் பட்சிணிகளின் கரீபியன் தீவுகளுக்கும் சுவிசேஷத்துடன் தான் அழைத்துச் சென்ற YWAM வாலிபர்களின் சுண்டியிழுக்கும் சாட்சிகளை அவர் பகிர்ந்து கொண்டபோது..

அவரது செய்தி, வெறும் ஒரு தூரதரிசனம் கொண்ட மனிதனின் வார்த்தைகளாக மட்டுமல்லாமல் ஆழ்ந்த அனுபவரீதியாக இருந்தது.

இயேசுவுக்காக உலகம் முழுவதும் செல்ல வேண்டும் என்ற என் சொந்தக் கனவையே மிகத்தெளிவாக பிரதிபலித்த அவரது ஒவ்வொரு வார்த்தையும் எனக்குள் மிக ஆழமான தாக்கத்தை உண்டாக்கிற்று..

Fred தீர்க்கதரிசனமாகச் சொன்ன மனிதன் இவரே தான் என்று என் ஆவியில் மிகத் துல்லியமாக உணர்ந்த எனக்கு அந்தச் செய்தியின் இறுதியில் நடந்த ஒரு சம்பவம் அந்தத் தீர்க்கதரிசனத்தை திட்டவட்டமாக உறுதிப்படுத்திற்று..

அன்று லாரனும் அவரது மனைவியும் எங்களோடு இரவு விருந்தில் அமர்ந்திருக்கும் போது, தனது அடுத்த கட்ட விரிவான திட்டங்களை விவரித்துக் கொண்டிருந்த லாரன் திடீரென்று என்னைப் பார்த்து..

" ரூடி ! நீ ஏன் இந்த ஊழியத்தில் எங்களோடு இணைந்து கொள்ளக்கூடாது ?" என்று நேரடியாகக் கேட்டார்..

அதுவே எனக்கு கடைசி கன்ஃபர்மேஷனாக இருந்தது..

அப்பாவைக் கன்வின்ஸ் பண்ண சில மாதங்கள் ஆனாலும் எங்கள் சபையின் முழு ஆதரவும் எனக்கு இருந்தது..

ஆகவே அப்பாவின் சம்மதத்தோடு 1969 செப்டம்பரில் YWAM-ன் ஐரோப்பிய முழுநேர ஊழியனாகச் சேர்ந்து கொண்டேன்..

அதன்பின், எனக்குக் கொடுக்கப்பட்ட சவாலான பணிகள்,நான் அனுப்பப்பட்ட இடங்கள்,எல்லை தாண்டும் துணிச்சலான சேலஞ்சுகள் - இவற்றையெல்லாம் வைத்து..

நான் அவரவர் நாடுகளில் என்ன நோக்கத்தோடு நுழைந்திருக்கிறேன் என்பதை அந்தந்த நாட்டு அதிகாரிகள் கண்டுபிடித்திருப்பார்கள்என்றால் என் பாஸ்போர்ட்டில் - PERSONA NON GRATA -அதாவது - " இவன் ஒரு வேண்டப்படாத அந்நியன் "- என்று சீல் குத்தியிருப்பார்கள் !!!

தேவனின் கடத்தல்காரன்
பிரதர் ஆண்ட்ரூ

நான் இப்போது YWAM ட்ரெயினிங் சென்ட்டரில் பயிற்சிக்காக சேர்ந்திருந்தேன்.அநேக ஆசிரியர்களும் பயிற்சியாளர்களும் வந்து போயினர்..

" தேவனின் கடத்தல்காரன் " என்று அழைக்கப்பட்ட ஒருவர் எங்கள் சென்ட்டருக்கு வருவதாக ஒருமுறை அறிவிக்கப்பட்டது..

Open Doors என்ற நிறுவனத்தின் நிறுவனரும் டைரக்டருமான ஹாலந்தைச் சேர்ந்த பிரதர் ஆண்ட்ரூ என்பவர் அவர்..

அவர் தன் ஊழியத்தைப் பற்றிச் சொல்லச் சொல்ல,பயிற்சியிலிருந்த நாங்கள் 30 பேரும் நாற்காலி முனைக்கு வந்து விட்டோம்..

இதுவரை பைபிள் காலேஜில் கற்றுக் கொண்ட அநேக விஷயங்களை விட மிக வித்தியாசமாய் இருந்தது அவரது செய்தி..

கிழக்கு ஐரோப்பாவின் மூடப்பட்ட இரும்புத்திரை கம்யூனிஸ்ட் நாடுகளுக்குள்,கடந்த 15 வருடங்களாக பைபிள் கடத்திக் கொண்டிருந்தார் பிரதர் ஆண்ட்ரூ..

தனது அடையாளத்தை மறைத்துக் கொள்வதற்காகவே தன்னை பிரதர் என்ற பெயரிலே காட்டிக் கொண்டார்..

எந்தத் தொடர்பும் இல்லாதிருந்தும் கர்த்தர் தன்னிடம் சொன்ன ஒரே ஒரு வார்த்தையை நம்பி மாஸ்கோவுக்குள் பைபிள் கொண்டு சென்ற அனுபவத்தை விவரித்துக் கொண்டிருந்தார் பிரதர்..

வெளிப்படையாக அங்கு இயங்கிக் கொண்டிருந்த ஓப்பன் பாப்ட்டிஸ்ட் சபைக்கு ஆராதனைக்குச் சென்றார்.

ஆராதனை முடிந்து எல்லாரும் கலைந்து சென்ற பின் அங்கே துக்க முகத்தோடு நின்று கொண்டிருந்த ஒரு மனிதனிடம் பேச்சு கொடுத்தார் ஆண்ட்ரூ..

பேச்சுவாக்கில் அந்த மனிதன் சொன்னான்..
" இங்கு வந்தால் உனக்கு பைபிள் தருவேன் என்று கர்த்தர் என்னிடம் சொன்னதை நம்பி 3000 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சைபீரியாவிலிருந்து இந்த மாஸ்கோவுக்கு வந்தேன்..

ஆனால் இங்கே எங்கும் பைபிள் கிடைப்பதாகத் தெரியவில்லை.என்னுடைய 3000 கிமீ பிரயாணம் எல்லாம் வீண்.."

அதைக் கேட்ட பிரதர் ஆண்ட்ரூ..தன் கோட் பாக்கெட்டிலிருந்து தான் மறைத்து வைத்திருந்த ஒரு பைபிளை அந்த மனிதன் கையில் கொடுத்து..

" இதோ பார்! இந்த பைபிளை உன்னிடம் கொடுக்க 3000 கிமீ தூரத்திலுள்ள மேற்கத்திய நாட்டிலிருந்து நான் வந்திருக்கிறேன்.." என்று சொல்லி கொடுத்து விட்டு நகர்ந்தார்..

" தேவனுக்காகத் துணிந்து இறங்கு !
எங்கெல்லாம் போக விரும்புகிறாயோ, தைரியமாய்ப் போ!
ஆனால் உயிரோடு திரும்பி வருவாய் என்ற நம்பிக்கையோடு அல்ல..

சிவப்புக் கம்பள வரவேற்பு கிடைக்காத இடங்களுக்குக் கூட போக உன்னையே ஆயத்திப்படுத்திக் கொள்.." என்று அவர் பேசப் பேச, வகுப்பில் ஒரு வித பயம் கலந்த நிசப்தம்.

அவரது அனுபவங்களை மெய்மறந்து கேட்பது ஒன்று.ஆனால் அதே துணிச்சலோடு தானாக இறங்குவது மற்றொன்று.

அவரது ஒவ்வொரு வார்த்தையும் என் மிஷினரி தாகத்தைத் தீ மூட்டி விட்டது..

பிரதர் ஆண்ட்ரூவைப போலவே, தேவனுக்காக ரிஸ்க் எடுத்து உயிரைப் பணயம் வைத்து,இது வரை யாரும் கால் வைத்திராத இடங்களுக்குத் தைரியமாய்ப் போக முடிவு செய்து கொண்டேன்..

கானகப் பாதை காரிருளில்..

மூன்று மாத School Of Evangelism (SOE) பயிற்சி வகுப்புகள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க, ஒவ்வொரு இரவும் நாங்கள் ஒரு சிலராகக் கூடி ஜெபிக்க ஆரம்பித்தோம்..

சில நாட்களில் நள்ளிரவு வரை ஜெபம் நீண்டு சென்றது.இரண்டு மூன்று மணி நேரம் போவது தெரியாமல் எங்களை அறியாமலே ஜெபத்தில் மூழ்கியிருந்தோம்..

நாங்கள் ஒன்றும் பெரிய ஜெபவீரர்கள் அல்ல..எல்லா பெலவீனங்களோடும் இருந்த சாதாரண பைபிள் காலேஜ் ஸ்டூடன்ட்ஸ் தான் நாங்கள்..

ஆனால் எங்களைத் தனித்துக் காட்டிய விஷயம் ஒன்று நிச்சயமாய் இருந்தது- அது தேவனோடு சீரியஸாக நாங்கள் காட்டிய தீவிரம் !

ஜெபத்தில் ஒவ்வொரு நாளும் எங்களை ஊற்றி ஜெபிக்க ஜெபிக்க..
எங்கள் ஜெபம் கம்யூனிச நாடுகளை நோக்கித் திரும்பியதைக் கண்டோம்..

இதுவரை பெயர் அறிந்திராத நாடுகளுக்காகக் கூட ஜெபித்தது ஆச்சரியம் அளித்தது..

அவைகளில் ஒன்று கம்யூனிச அல்பேனியா !
தாங்கள் தான் உலகத்திலேயே கம்யூனிசத்தை சுத்தமாகப் பின்பற்றுவதாக மார்தட்டிக் கொண்ட நாடு அது !

லாரனின் மனைவியும் எங்கள் ஜெபக்குழு உறுப்பினரான ரியோனாவும் தேவன் தங்களுக்குத் தந்த பாரங்களைப் பகிர்ந்து கொண்டார்கள்..

ரியோனாவை அல்பேனியாவுக்காக பாரப்படுத்திய தேவன்,எனக்கு பல்கேரியாவைப் பற்றிய பாரத்தைக் கொடுத்தார்..

பிரதர் ஆண்ட்ரூ தான் பல்கேரியாவைக் குறித்த தேவைகளை எனக்கு உணர்த்தியவர்.

தெற்கே கிரீஸ்..
மேற்கே யூகோஸ்லேவியா
கிழக்கே கருங்கடல்..
வடக்கே தானுபே நதி -

..என்ற எல்லைப் பரப்புடன் 50 லட்சம் ஜனத்தொகை கொண்ட பல்கேரியா, கம்யூனிச இராட்சசன் விழுங்கிய பல நாடுகளில் ஒன்று !

முதலாம்,இரண்டாம் உலகப் போர்களில் சோவியத் யூனியனை எதிர்த்து ஜெர்மனி பக்கம் சாய்ந்திருந்தனர் பல்கேரியர்கள்..

அதற்கு பதிலடி கொடுத்த ரஷ்யர்கள் 1944 ல் வலுக்கட்டாயமாக பல்கேரியாவை ஆக்கிரமித்துத் தங்கள் சோவியத் கொடியை அங்கு பறக்கவிட்டார்கள்..

26 வருடங்கள் கழிந்தும் "குட்டி ரஷ்யா" என்றுபெயர் பெறும் அளவுக்கு கம்யூனிஸ்ட்டுகளின் இரும்புக் கரங்களில் சிக்கிச் சின்னாபின்னமாயிருந்தது பல்கேரியா !

பிரதர் ஆண்ட்ரூ தெளிவாகச் சொல்லியிருந்தபடி அல்பேனியாவும் பல்கேரியாவும் சுவிசேஷத்துக்குத் தங்கள் வாசல்களை அடைத்துக் கொண்டதோடு, அவைகள் சபைகளையும் கிறிஸ்தவர்களையும் படுத்திய பாடு கொஞ்சநஞ்சமல்ல..

ரோலி சாஸர்

பரிசுத்த ஆவியானவர், இந்த தேவனற்ற தேசங்களுக்காக வாக்குக்கடங்காத பெருமூச்சுக்களோடு எங்களிலிருந்து ஜெபிக்க ஜெபிக்க,

அந்த நாட்டிலுள்ள நிராதரவான கிறிஸ்தவ சகோதர சகோதரிகளைக் குறித்த அன்பும் கரிசனையும் நாளுக்கு நாள் எனக்குள் பெருக ஆரம்பித்தது..

பல்கேரியாவில் ஒரு பைபிள் கூட இல்லாத கிறிஸ்தவர்களின் நிலையை நினைக்கும் போது,

இங்கே எங்களுக்கு கிடைத்த பயிற்சியையும் என்னிடம் சேர்த்து வைத்திருக்கும் அருமையான ஆவிக்குரிய புத்தகங்களையும் நான் பார்க்கும் போது ஏதோ ஒரு பெரிய குற்றவுணர்வு என்னைத் தாக்கியது..

பிரதர் ஆண்ட்ரூ ஓரிரு தடவை பல்கேரியாவுக்குள் எப்படியெல்லாம் பைபிள் கடத்தினார் என்று தன் அனுபவங்களைச் சொன்ன ஞாபகம் அடிக்கடி வர..

அவரைப் போலவே நானும் செய்ய எனக்குள் விருப்பமும் தாகமும் உண்டாக ஆரம்பித்தது..
ஆனால் எப்படிச் செய்வது?

எங்கள் மூன்று மாத ட்ரெயினிங் முடிந்து இரண்டு மாத ஃபீல்டு ட்ரிப் ஆரம்பமாகும் நிலையில் இருந்தோம்..

இதற்கிடையில் கிடைத்த வாரஇறுதி விடுமுறையில் வீட்டுக்கு வந்த நான்,இரண்டு மாத ஃபீல்டு ட்ரிப்பில்,

ஸ்விட்சர்லாந்து வழியாக இத்தாலி,யூகோஸ்லேவியா,கிரீஸ் சென்று அங்கிருந்து படகு மூலமாக இஸ்ரேல் போய்,திரும்ப துருக்கி கிரீஸ் வழியாக ஸ்விட்சர்லாந்து வந்து சேரும் திட்டத்தை எங்கள் சபையில் விளக்கிக் காண்பித்துக் கொண்டிருந்தேன்..

ஆராதனை முடிந்ததும், முன்பு என்னோடு Black Forest Camp க்கு வந்த ரோலி சாஸர் என்னைச் சந்திக்க வந்தான்..

21 வயதான அவன்,நான் விவரித்த சுவிசேஷப் பயணத்தினால் தொடப்பட்டு," நானும் உங்களோடு சேர்ந்து கொள்ளலாமா " என்று கேட்டான்..

"ஸாரி ரோலி..இது எங்கள் YWAM ஸட்டூடன்ஸூக்கு மட்டும் தான்.." என்றேன்.

"நான் இரண்டு மாதம் லீவு எடுத்துக் கொண்டு வருகிறேன்..பயணச் செலவுகளைக்கூட நானே பார்த்துக் கொள்கிறேன்.." என்று ஒருவித கெஞ்சலோடு சொன்ன ரோலியின் உற்சாகத்தை அணைக்க விரும்பாத நான் " எங்கள் லீடரிடம் கேட்கிறேன்.." என்று சொன்னேன்..

மறுபடி ட்ரெயினிங் சென்ட்டருக்குத் திரும்பிய நான் ரோலியின் விருப்பத்தை லாரனிடம் சொல்ல.."அதனால் ஒன்றும் பிரச்சனை இல்லை ரூடி..அவன் வரட்டும்.." என்று சொன்னதைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன்..

Field Trip புறப்படும் நாள் நாள் வர,ரோலியும் எங்களோடு சேர்ந்து கொண்டான்..

அவன் எங்கள் டீமில் சேர்த்துக் கொள்ளப்பட்டது எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பதை அப்போது நான் உணரவில்லை..

பணித்தளத்தை நோக்கி

இரண்டு வேன்,ஒரு பஸ்..
கூடவே டான் ஸ்டீபனின் பழைய ஃபோர்டு வேன்..
இவைகள் ஒன்றன்பின் ஒன்றாக அணிவகுக்க,எங்கள் பணித்தள பயணம் தொடங்கியது..

ஏற்கெனவே நிர்ணயித்தபடி, ஸ்விட்சர்லாந்திலிருந்து இஸ்ரேல் வழியாக துருக்கி, கிரீஸ் மூலம் திரும்பவும் ஸ்வீடன் திரும்புவதாகத் திட்டம்..

ஆனாலும் இடையில் ப்ரோக்ராம் திடீரென்று மாறுமானால் அதற்கும் தயாராகவே திட்டமிட்டிருந்தோம் ..

நாங்கள் புறப்பட்ட இரண்டாம் வாரம் வடக்கு இத்தாலி சேரந்து, அங்கிருந்து அதிரியா கடலை ஒட்டியவாறு யூகோஸ்லேவியா வந்தோம்..

பெல்கிரேடில் லாரன் எங்களை சந்தித்தார்.
அங்கிருந்து தெற்கு நோக்கி E 761 ஹைவேயில் வந்து கொண்டிருந்தோம்..

பச்சைநிற வோல்க்ஸ்வேகனை லாரன் ஓட்டிக் கொண்டிருந்தார்.நான் அவர் அருகிலுள்ள ஸீட்டில் உட்கார்ந்திருந்தேன்..

எங்களுக்கு முன்பாக இரண்டு பாதைகள் பிரிந்தது.ஒன்று கிரீஸ் வழியாக தெற்கே போவது..
இன்னொன்று பல்கேரியா வழியாகப் பிரிந்தது..

பாதை பிரியும் இடம் வந்த போது லாரன் என்னைப் பார்த்து..
“ எந்த வழியாகப் போகலாம் ரூடி ?" என்று கேட்டார்..

ஜெபத்தில் எனக்கிருந்த ஆர்வத்தையும் நான் எப்போதும் ஆவியின் வழி நடத்துதலிலேயே இருப்பேன் என்றும் என்னிடம் எதிர்பார்த்த லாரன், திடீரென்று இப்படிக் கேட்டதும், ஒரு நிமிடம் திகைத்து விட்டேன்..

" பல்கேரியா வழியாகப் போகலாம்" என்று என் மனதின்படி சொன்னேன்..

ஒரு நிமிஷம் என்னைப் பார்த்து விட்டு லேசாகத் தலையசைத்த லாரன்..
"வேண்டாம் ரூடி..அந்தப் பாதை வேண்டாம் என்று நினைக்கிறேன்.." என்றார்

என்னைப் போல அல்லாமல், அவர் இந்த நாட்களில் கர்த்தரோடு அதிகம் ஜெபத்தில் இருந்தபடியால்..

"ரூடி..நம்ம பசங்க எல்லாம் புதுப்பசங்க..பல்கேரியா மாதிரி பிரச்சனையான நாடு வழியாகப் போறது இப்போதைக்கு நல்லதில்லனு நினைக்கிறேன்.." என்று தேவ நடத்துதலின்படி சொன்னார்..

ஆகவே பல்கேரியா செல்லும் வழியாகப் போகாமல் நேர் வழியே வாகனத்தை செலுத்தினோம்.

முழு நாள் பிரயாணக் களைப்போடு கடைசியாக ஏத்தென்ஸ் நகரின் நகர்ப்புறமான கத்தரீனி என்ற இடத்திலுள்ள சபையின் யூத் கேம்ப் வளாகத்துக்கு வந்து சேர்ந்தோம்..

கனவு நனவாகுமோ ?

நாளுக்கு நாள் பல்கேரியாவின் பைபிள் தேவையைக் குறித்த என் பாரம் என்னை எரித்துக் கொண்டே இருக்க, அவ்வப்போது ஒரு கேள்வி எனக்குள் எழ ஆரம்பித்தது..

பல்கேரியாவுக்கான என் ஜெபத்துக்கு பதிலை தேவன் என்னிடமே எதிர்பார்க்கிறாரோ ?

அந்த நாட்டுக்குள் வேதாகமங்களைக் கடத்திக் கொண்டு போக தேவன் பயன்படுத்த விரும்பும் அந்த நபர் நான் தானோ ?

அடுத்து நாங்கள் ஏத்தென்ஸ் போகப் போகிறோம். ஒருவேளை ஸ்விட்சர்லாந்து திரும்பும் வழியில் நான் மட்டும் பல்கேரியாவுக்குத் தனியாகப் போய் வரவேண்டுமோ ?

இந்த எண்ணங்கள் எனக்குள் மலையாய் எழும்ப எழும்ப, இது கர்த்தர் தரும் பாரமே அல்லாமல் என் சுயவிருப்பம் அல்ல என்று தேவன் திட்டவட்டமாய் எனக்கு வெளிப்படுத்தினார்..

அதுவும் இந்தப் பணிக்கள நாட்களிலேயே நான் பல்கேரியாவுக்குள் சென்று வர வேண்டும் என்ற தீர்மானம் எனக்குள் உறுதியாகி விடவே..

ருமேனிய,பல்கேரிய மொழி வேதாகமங்களை ஆங்காங்கே இருந்து சேர்க்க ஆரம்பித்து விட்டேன்..

இதை ஏத்தென்ஸிலேயே ஆரம்பித்தேன்.இடையிடையே நேரம் கிடைக்கும் போதெல்லாம் அந்தந்த ஊர்களின் கிறிஸ்தவ புத்தக நிலையங்களுக்குச் சென்று பல்கேரிய, ருமேனிய வேதாகமங்ளை வாங்கி வைத்துக் கொண்டேன்..

நண்பர்களின் அன்பின் காணிக்கைகள்,மற்றும் வீட்டில் கிடைத்த பணஉதவி யாவும் பைபிள் வாங்க உதவியாக இருந்தது..

ஒவ்வொரு முறையும் கேம்ப்பை விட்டு வெளியே போய் விட்டு வரும்போதெல்லாம் ஒரு பெட்டியை சுமந்து கொண்டு வருவதை என்னுடன் இருந்த மாணவர்கள் பார்க்க நேர்ந்தாலும், அதற்குள் என்ன இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியாமலே இருந்தது..

என்னோடு கூட வருவாயா ரோலி ?

பெயர்செபா, டெல்அவீவ் வழியாக ஹைஃபா நோக்கி நகர்ந்து கொண்டிருந்த எங்கள் குழு,கர்மேல் மலை செல்லத் தீர்மானித்தது..

கர்மேலின் உச்சியிலே அக்கினியை இறக்கி,கீசோன் ஆற்றங்கரையிலே பாகாலின் பூசாரிகளை வெட்டிப்போட்டு, "கர்த்தரே தேவன்" என்று நிரூபித்த எலியா தீர்க்கன் தன் முகம் முழங்காலில் படக்குனிந்த இடங்களை நேரடியாகக் காண எனக்குள் மிகுந்த வாஞ்சை இருந்தது..

ஆனால் அதைவிட, பல்கேரியாவுக்குள் பைபிள் எடுத்துச் செல்லும் வேலை மிக முக்கியமாக எனக்குக் காணப்பட்டதால்..

பல்கேரிய வேதாகமம் சேகரிக்க இஸ்ரேலில் கிறிஸ்தவ புத்தக நிலையங்களைத் தேடிச் செல்ல ஆரம்பித்தேன்..

இதுவரை பல்கேரியாவுக்காக என் மனதில் இருந்த எண்ணத்தை எங்கள் லீடர் லாரனுக்கு நான் தெரியப்படுத்தவில்லை என்றாலும் கர்த்தரிடத்திலிருந்து திட்டவட்டமான உறுதியைப் பெற்றிருந்தேன்..

ஒரு நாள் இரவு, நாங்கள் இஸ்தான்புல்லில் தங்கியிருந்த போது என் நண்பன் ரோலியும் நானும் ஹோட்டலில் காபி குடித்துக் கொண்டிருந்தோம்..

இந்த ஃபீல்டு ட்ரிப்பில் நானும் அவனும் அதிக நேரம் ஒன்றாக செலவழித்திருந்தோம்.
என்னைவிட 5 வருஷம் அவன் ஜூனியராக இருந்தாலும் நான் அவனை ஒரு நண்பனாகவே கருதினேன்..

காபி குடித்துக் கொண்டே கேட்டேன்..
"என்ன ரோலி என்னுடைய பல்கேரிய ட்ரிப்பைப் பற்றி என்ன நினைக்கிற ?
நான் ரொம்ப தீவிரமா இருக்கேனோ?"

என்னுடைய உற்சாகத்தில் அவனுக்கு ஈடுபாடு இல்லாதது போல முகத்தில் எந்தச் சலனமும் இல்லாமல் அமைதியாய் உட்கார்ந்திருந்தான் ரோலி..

சற்று நேரம் கழித்து காபியே லேசாக உறிஞ்சிக் கொண்டே,"
எனக்குத் தெரியல ரூடி..
நீ ஏன் லாரனிடம் கேட்கக்கூடாது ?
நேரடியா கேட்டுப் பார்..இது தேவ சித்தமானால் அவரே சரின்னு சொல்லுவார்.."

ரோலி சொன்னது எனக்கும் சரி என்று பட்டது

"சரி தான் ரோலி..
உண்மையிலே லாரனுக்கு கர்த்தர் சத்தம் கேட்கும் பழக்கம் உண்டு..
நான் பேசிப் பார்க்கிறேன்..
உண்மையிலே நான் சரியான முடிவில் தான் இருக்கிறேனான்னு தெரிஞ்சிரும்.." என்று சொல்லிவிட்டு..

" லாரன் அனுமதித்தால் என்னோடு வருவியா ரோலி, என்னால் தனியாகப் போறது கஷ்டம்.." என்று அவனைப் பார்த்து நேராகவே கேட்டேன்..

நெற்றியைச் சுருக்கி யோசித்துக் கொண்டே..
"சரி நீ முதல்ல லாரன் என்ன சொல்றார்னு கேளு..பிறகு பார்ப்போம்" என்று கமிட் பண்ணிக் கொள்ளாமல் பதில் சொன்னான் ரோலி..

நானும் அதற்கு மேல் அவனை வற்புறுத்தவில்லை.

இப்போதைக்கு டீம் லீடர் லாரனின் அனுமதியைப் பெறுவதே என் முதல் வேலையாய் இருந்தது..

குழுத்தலைவரின் அனுமதி கோரி.

அடுத்த நாள், எங்கள் குழுவின் கூடாரங்களுக்கு வெளியே தனியே நின்று கொண்டிருந்த குழுத்தலைவர் லாரனைப் பார்த்த நான், அவரோடு பேச,அந்த சந்தர்ப்பத்தைப் பயனபடுத்திக் கொண்டேன்..

பல்கேரியாவுக்காக தேவன் எனக்குள் தந்த பாரம்,அதற்காக நான் இதுவரை ஆங்காங்கே இருந்து சேர்த்து வைத்திருந்த வேதாகமங்கள்..

கர்த்தருடைய வசனம் கிடையாத பஞ்சத்தில் இருக்கும் அந்த தேசத்தின் சபைகளைக் குறித்து எனக்குள் பற்றி எறியும் வாஞ்சை - எல்லாவற்றையும் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை மூச்சுவிடாமல் சொல்லி முடித்தேன்..

ஒவ்வொரு இரவிலும் நாங்கள் குழுவாகச் சேர்ந்து பல தேசங்களுக்காக ஜெபிப்பது..மற்றும் நான் அவ்வப்போது பெட்டி பெட்டியாகக் கொண்டு வந்து சேர்த்து வைக்கும் வேதாகமங்கள் பற்றிய மற்றவர்களின் முறுமுறுப்பு..

மற்றும் இந்த விஷயத்தில் நான் காட்டிவந்த அதிதீவிரம் - இவை யாவற்றையும் நன்றாகவே அறிந்திருந்த லாரன், அன்போடு என் தோள் மேல் கை வைத்தவராய் எதுவும் பேசாமல் கொஞ்ச நேரம் அமைதியாக நின்று கொண்டிருந்தார்..

சுபாவத்தின்படியே அமைதியான,அதிகம் பேசாத லாரன்,இதினால் வரும் எல்லா லாப நஷ்டங்களையும் ஒவ்வொரு கோணத்திலும் நிறுத்து நிதானித்தவராய், தேவ ஞானத்துக்காக தனக்குள்ளே ஜெபித்துக் கொண்டே,யோசித்துக் கொண்டிருந்தார்..

அவருடைய பதிலுக்காக ஒருவித சங்கடத்தோடு நின்று கொண்டிருந்தேன்.
அவருடைய மௌனம் அவரது விருப்பம் இல்லாமையைக் காட்டுவது அல்ல என்று நான் அறிந்திருந்தாலும் என் விருப்பத்தை அவர் நிராகரித்து விடுவாரோ என்ற பயம் ஒரு பக்கம்..

கடைசியாக லாரன் பேச ஆரம்பித்தார்..
" பல்கேரியாவுக்குள் பைபிள் எடுத்துட்டு போற..நல்லது தான்..ஆனா யார் கிட்ட கொண்டு போய் சேர்க்கப் போற ரூடி ?"

"சரியா தெரியல லாரன்..பிரதர் ஆண்ட்ரூ சொன்ன விபரங்கள்,அது போக நான் விசாரிச்சு வச்ச சில விஷயங்கள் தவிர இரும்புத்திரைக்குப் பின்னால உள்ள சபைகளைப் பத்தி எனக்கு அதிகம் தெரியாது..

ஆனா எல்லா சபைகளும் உண்மையானது இல்லைங்கிறதும் பாஸ்டர்களே அவங்க அவங்க சபையை உளவு பாத்து கவுர்மன்ட்டுக்கு சொல்றாங்கன்னு மட்டும் தெரியும் லாரன்.." என்றேன்.

" என்ன சொல்ற ரூடி நீ ?" என்று லாரன் கேட்க..
"ஆமா லாரன்.. தலைநகர் சோஃபியாவில இவாஞ்சலிக்கல் சர்ச் ஒண்ணு இருப்பதாகவும் அதோட பாஸ்டரே அரசாங்கத்துக்கு இன்ஃபார்மரா இருப்பதாகவும் கேள்விப்பட்டேன்..

அவரோட பேர் தெரியாது..ஆனா ஆள் நம்பகமான ஆள் இல்லன்னு மட்டும் தெரியும்.."

"அப்படியா.." என்று ஆழ்ந்த யோசனையோடு கேட்டுக் கொண்டார் லாரன்..

" பிரதர் ஆண்ட்ரூவை இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் உண்மையான, தேவையுள்ள நபர்களை சந்திக்க வைத்த தேவன்,எனக்கும் அப்படியே செய்வார்னு நம்புறேன் லாரன்.." என்று நம்பிக்கையோடு சொன்னேன்..

என்னை நேருக்கு நேர் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டேயிருந்த லாரன் எதுவும் பேசவில்லை..

பல்கேரியாவுக்கு என் அழைப்பை உறுதிப்படுத்திய தேவன்

லாரன் தொடர்ந்தார்..
"எத்தனை பல்கேரிய, ருமேனிய பைபிள் உங்கிட்ட இருக்கும் ரூடி ?”

சட்டென்று மனதுக்குள் எண்ணினவனாக..
"200 க்குள் இருக்கும் என்றேன்..

"இன்னும் தேவைப்படும் என்று நினைக்கிறியா ?”

"கொஞ்சம் யோசித்துப்பார் லாரன்..50 லட்சம் பேர் உள்ள நாட்ல வெறும் 200 பைபிள் ஒரு பக்கெட்ல விழுந்த ஒரு ட்ராப் தண்ணி மாதிரி தான்.." ஒரு பைபிள் கூட இல்லாத எத்தனை கிறிஸ்தவங்க அந்த நாட்ல உண்டு ?"

நான் சொல்வது அவருக்கு சரியென்று படவே.." இங்க துருக்கியில் எங்க போய் வாங்கப் போற ரூடி ?"

"பிரிட்டிஷ் எம்பஸி மூலமா இங்கே இஸ்தான்புல்லில் உள்ள பைபிள் சொஸைட்டியை தொடர்பு கொண்டிருக்கேன். இன்னும் பதில் வரல.."

இந்தக் காரியத்தில் எனக்கிருக்கும் சிரத்தையையும் சீரியஸ்னெஸ்ஸையும் கண்ட லாரன், புருவத்தை உயர்த்தியவராய்..

"இன்னும் எவ்வளவு பைபிள் தேவைப்படும் ?" என்று கேட்டார்..

முதலில் 10 பல்கேரிய, 10 ருமேனிய பைபிள் தேவைப்படும் என்று முதலில் கணக்கிட்டு,அது மிகவும் கொஞ்சம் என்று நினைத்தவனாய் 10 ருமேனிய பைபிளும் 50 பல்கேரிய பைபிளும் தேவைப்படுகிறது என்றேன்..

எதுவும் சொல்லிக் கொள்ளாமல் நான் சொன்னதை மனதில் வைத்துக் கொண்டாலும்,எனக்கு ஒரு சின்ன டெஸ்ட் வைக்கவே இப்படிக் கேட்டார் என்று பின்னால் அறிந்து கொண்டேன்..

அன்று மதியமே சந்தோஷமாய் பைபிள் சொஸைட்டிக்குப் போனேன்.அங்கிருந்த லேடியிடம் 10 ருமேனிய,50 பல்கேரிய பைபிள் கிடைக்குமா என்றேன்..

பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றவர்.. சற்று நேரத்தில்.."சாரி பிரதர்..வெறும் 10+10 தான் இருக்கிறது..
உங்களுக்கு வேண்டுமா என்றார்.

"அவசியம் கொடுங்கள் வாங்கிக் கொள்கிறேன்" என்றேன்.

10 ருமேனிய,10 பல்கேரிய பைபிள் !

என் பர்ஸைத் திறந்தேன்.சரியாக 20 பைபிளுக்கான பணம் மட்டுமே அதில் இருந்தது. பைபிள் சொஸைட்டியில் 60 பைபிள் இருந்திருந்தாலும் என்னால் வாங்கியிருக்க முடியாது.

அப்போது தான் ஞாபகம் வந்தது..லாரன் கேட்கும் போது முதலில் 10,10 தேவை என்று அவரிடம் சொல்ல வந்தது..

இதுவே தேவன் என்னை பல்கேரியாவுக்கு அனுப்ப அழைத்த அழைப்பின் உறுதியாய் இருந்தது..

அனுமதி அளிக்கப்பட்டது

வேதாகமங்களை வாங்கிக் கொண்டு மறுபடி லாரனை சந்தித்த என்னைக் கண்டு சந்தோஷப்பட்டது மட்டுமல்ல,இதில் கர்த்தருடைய கரம் இருப்பதைக் கண்ட லாரன்..

" ஓகே ரூடி ! பத்திரமா பல்கேரியா போய்ட்டு வா..ஆனா நாலு நாள் தான் உனக்கு டைம்..வரப்போற நாட்கள்ல நிறைய teamகளை கூட்டிட்டு போற வழிகாட்டியா இருக்கிறதுக்கு இது உனக்கு முதல் ட்ரிப்பா இருக்கட்டும்.." என்று என்னை ஆசீர்வதித்து அனுமதி தந்தார்..

என் சந்தோஷத்துக்கு அளவில்லை.அனுமதி கிடைத்து விட்டது.டான் தனது Ford Van ஐ நான் எடுத்துக் கொண்டு போக சந்தோஷமாகக் கொடுத்து விட்டான்..

இப்போது எனக்கு வேண்டியதெல்லாம் வழியில் வண்டி ஓட்டுவதில் உதவியாக இருக்க எனக்கு ஒரு friend.அவ்வளவு தான்..

நேராக ரோலியை சந்திக்கப் போனேன்.

"ரோலி..லாரன் எனக்கு பெர்மிஷன் தந்து விட்டார் என்னோடு கூட வருவியா?" என்றேன்.
கொஞ்ச நேரம் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான் ரோலி..

"இவன் மறுத்து விட்டால்??
வேறு யாரைக் கூப்பிடுவது?"
என் இருதயத்துடிப்பு ஒரு நிமிஷம் நின்று விட்டது போல் உணர்வு..

என்னைப் பார்த்துக் கொண்டிருந்த ரோலி முகத்தில் பெரிய சிரிப்பு..

"ஓகே ரூடி..நான் வர்றேன்..எப்ப போகலாம் ?"

அடுத்த நாள் எங்கள் குழு இஸ்தான்புல்லில் இருந்து திரும்பி ஏத்தென்ஸூக்கு வெளியிலிருந்த கத்தெரேனியிலுள்ள முன்பு சென்ற அதே யூத் கேம்ப்புக்கு சென்றது..

நாங்கள் அங்கு சேர்ந்த அதே நேரத்தில் Rev.டங்க்கன் கேம்ப்பெல் (எழுப்புல் வீரர்) எங்களோடு ஒரு வாரம் தங்கியிருக்கும்படி வந்தார்..

ஒரு வாரம் சென்று, அவர் போன பின்பு எங்கள் பல்கேரிய ட்ரிப்பை வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தோம்..

Rev.டங்க்கன் கேம்ப்பெல் மூலம் தேவன் தமது எழுப்புதல் அக்கினியை ஸ்காட்லாந்தின் ஹெப்ரிட்ஸ் தீவுகளில் ஊற்றிக் கொண்டிருந்த நாட்கள் அவை..

அவர் எங்களோடு இருந்த நாட்கள், உண்மையிலே எங்களுக்குள் இருந்த கொழுந்துவிட்டு எரியச் செய்தது மட்டுமல்ல..

ரோலிக்கும் எனக்கும் மிக அவசியமாய்த் தேவைப்பட்ட உற்சாகத்தையும் உத்வேகத்யையும் கொடுத்து எங்கள் எலும்புகளையும் இரத்த நாளங்களையும் முறுக்கேற்றி விட்டது..

ஜெபம் - எங்கள் இன்றியமையாத தேவை

குழுத்தலைவரின் அனுமதி மட்டுமன்றி எனக்கு அவர் அளித்த மகிழ்ச்சியான ஆதரவையும் கண்ட எங்கள் மாணவர் குழு,

இந்தத் திட்டம் ரூடி லேக்கின் உணர்ச்சி வசப்பட்ட ஆர்வக் கோளாறு அல்ல என்ற எண்ணத்தோடு இப்போது தான் என்னை சீரியஸாகத் திரும்பிப் பார்க்க ஆரம்பித்தனர்.. கூடவே அவர்களுக்கு என் மேல் கரிசனையும் அக்கறையும் வந்தது..

எங்கள் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமானால் முழு மாணவர் குழுவின் ஒரு மனமும் தேவைப்பட்டதை என் மனதில் உணர்ந்தேன்

இது வரை எங்களுக்கு அவர்களிடமிருந்து இந்தக் காரியத்தில் ஒத்துழைப்பு இல்லை.இன்னும் ஆங்காங்கே ஒரு சிலரின் முணுமுணுப்பு கேட்டுக் கொண்டு தான் இருந்தது..

நாங்கள் பயணத்தில் இருக்கும் நான்கு நாட்களும் எங்கள் குழுவினரின் 24 மணி நேர சங்கிலித் தொடர் ஜெபம் எங்களுக்குத் தேவைப்பட்டது..

ஆனல் அவர்களுக்குள் அந்த பாரத்தை ஏற்படுத்தி முழு அர்ப்பணிப்போடு எங்களுக்காக ஜெபிக்க வைக்கும் அளவுக்கு ஒருமனதையும் ஒற்றுமையையும் என்னால் உருவாக்க முடியவில்லை..

நாங்கள் புறப்படும் நாள் நெருங்க நெருங்க சில முக்கியமான காரியங்களுக்காக இந்த ஜெபத்தேவை என்னை அதிகமாய் அழுத்த ஆரம்பித்தது..

முதலாவது பிரதர் ஆண்ட்ரூ சொன்ன வார்த்தைகள்..

அவரது வார்த்தைகள் இது தான்..
" கர்த்தர் என்னை இரும்புத்திரை நாடுகளுக்குப் போ என்று சொன்னாரே தவிர..
பத்திரமாய் நீ வந்து சேருவாய் என்று எந்த வாக்குத்தத்தமோ guarantee யோ எனக்குத் தரவில்லை.."

க்ளாஸ் ரூமில் மயிர்க்கூச்செரியும் அவரது அனுபவங்களை த்ரில்லிங்கோடு கேட்பது நன்றாகத் தான் இருந்தது.

ஆனால் விசுவாசத்தோடு அவரையே மாதிரி துணிச்சலோடு கால் வைத்து இறங்குவது
எப்படியிருக்கும் என்பது,இப்போது அந்த நாள் நெருங்க நெருங்கத் தான் உணர முடிந்தது..

அப்போது தான் புரிந்தது..எங்கள் ஜெபம் போதாது..இன்னும் தீவிரமான ஜெபம் தேவை என்று..

எங்களை அழுத்திய இரண்டாவது காரியம்..
ரோலியோ நானோ மெக்கானிக் இல்லை..
டான் தன் வண்டியை மனமுவந்து தந்திருந்தாலும் இது வரை நாங்கள் வந்த வழியெல்லாம் அது தகறாறு செய்யாத நாளில்லை..

ஒரு வேளை நாங்கள் போகும் வழியிலோ, பல்கேரியாவுக்கு உள்ளே விபத்தோ, ரிப்பேரோ ஆனால் அதின் எந்த பார்ட்டையும் வாங்கவோ சரி செய்யவோ முடியாத நிலை நிச்சயம் உண்டாகும் என்ற கவலையும் அழுத்தியது..

இவை மட்டுமல்ல, பைபிள்களை சரியான நபரிடம் கொண்டு சேர்ப்பது எனது அடுத்த கவலை..

நானும் என் டீம் மேட் ரியோனாவும் அதிகமாய் இதற்காக ஜெபித்தோம்.
கஷ்டப்பட்டு எல்லை கடந்து அந்த நாட்டுக்குள் நுழைந்து விட்டாலும், சேகரித்த வேதாகமங்களை உண்மையும் உத்தமுமான நபரிடம் சேர்க்க வேண்டுமே என்பதே எனக்கு இப்போது பெரிய கவலையாய் இருந்தது..

தலைநகர் சோஃபியாவில் பாஸ்டர் உஸ்கட்ஸோ என்பவரது பெயரும் முகவரியும் மட்டுமே சமீபத்தில் கிடைத்திருந்தது..

அதைத் தவிர அவரைப் பற்றிய வேறு எந்த விபரமும் எனக்குத் தெரியவில்லை..

அதோடு,அங்குள்ள குறிப்பிட்ட ஒரு இவாஞ்சலிக்கல் சபையின் போதகர் ஒருவரை சந்திப்பதைத் தவிர்த்து விடும்படியாகவும், அவர் அந்த அரசாங்கத்துக்கு இன்ஃபார்மராக செயல்படுவதாகவும் மட்டுமே எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது..

நானும் ரியோனாவும் அதிகமாய் இந்த விஷயங்களுக்காக ஜெபிக்க ஜெபிக்க..
தேவன் எனக்குள் ஒரு விசேஷித்த நம்பிக்கையையும், தைரியத்தையும், விசுவாசத்தையும் ஊற்றினார்.

கர்த்தர் என்னை சரியான நபரிடத்தில் நடத்துவார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்குள் வேரூன்றிவிட்டது..

எல்லை தாண்டி பல்கேரியாவுக்குள்

ஏத்தென்ஸிலிருந்து பல்கேரிய எல்லையைத் தொடும் நீண்ட பயணத்தின் போது வழியிலுள்ள மலைகளைக் கடக்க வேண்டியிருக்கும் என்பதால் இரவின் முன் பகுதியில் புறப்படுவதே ஏற்ற நேரம் என்று திட்டமிட்டிருந்தேன்..

இப்படி யோசித்துக் கொண்டே தூங்கிப் போன நான், ரோலியும் நானும் எல்லைப் பாதுகாப்பு செக்யூரிட்டிகளால் கைது செய்யப்பட்டு,

எங்கள் வேதாகமங்கள் கைப்பற்றப்பட்டு, நாங்கள் சிறையில் அடைக்கப்பட்டது போலவும், அங்கே எங்களைக் கைது செய்தவர்களுக்கு நாங்கள் தைரியமாய் சுவிசேஷம் சொல்வது போலவும் கனவு கண்டேன்..

அடி உதை உபத்திரவங்களுக்கு மத்தியிலும் ருடால்ஃப் என்ற என் பெயருக்கேற்றது போல துணிச்சலாகவே நின்று கொண்டிருந்தேன்..

தூக்கம் கலைந்த பிறகு தான் அது கனவு என்று தெரிந்தது..

விடியற்காலம் எழுந்து எங்கள் கேம்ப்புக்கு அருகே இருந்த கடற்கரையில் தனியான ஒரு இடம் தேடி அமர்ந்தேன்..

ஜெபித்துக் கொண்டே வேதத்தைத் திறந்த போது, சங்கீதம் 45 ன் 4ல் "உமது வலது கரம் பயங்கரமானவைகளை விளங்கப் பண்ணும்.." என்ற வார்த்தை என் கண்களில் பளிச்சிட்டது..

அந்த வார்த்தை ஜெர்மன் மொழிபெயர்ப்பில் " துணிச்சலான காரியங்களைச் செய்யும்" என்று எழுதப்பட்டுள்ளது..

அந்த வசனத்தை தியானித்துக் கொண்டே கடல் அலைகளைப் பார்த்துக் கொண்டிருந்த போது ரியோனா என்னை நோக்கி வருவதைக் கண்டேன்..

அவளும் என்னைப் போலவே ஜெபிக்க சீக்கிரம் எழுந்திருந்தாள்.அருகில் உட்கார்ந்தாலும் வெகு நேரம் அமைதியாகவே இருந்தாள்.

இருந்தாலும் அதிகாலை சூரிய உதயத்தையும் கடற்கரையின் அழகையும் ரசித்தவர்களாய் உட்கார்ந்திருந்தாலும் மனதோ,அன்றைக்கு நான் புறப்பட வேண்டிய காரியத்தையும், வழியில் நேரிட வாய்ப்புள்ள அநேக ஆபத்துக்களையும் அசை போட்டுக் கொண்டிருந்தது..

ரியோனா அமைதியைக் கலைத்தவளாய்.."ரூடி, என் ஜெப நேரத்தில் சில வசனங்களைக் கர்த்தர் உனக்காகக் கொடுத்தார் என்று நம்புகிறேன் என்று சொல்லி சங்கீதம் 112 ஐத் திறந்தாள்..

அன்று காலை வழக்கமாக நான் படித்த பகுதியும் அதுவாகவே இருந்தது..

" அவன் என்றென்றைக்கும் அசைக்கப்படாதிருப்பான்.

துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான்.அவன் இருதயம் கர்த்தரை நம்பித் திடனாருக்கும்.."

என்ற 6,7 வசனங்கள் என்னைத் தொட்டன..

பைபிள் பதுக்கல்

இந்த வசனங்களைத் தவிர இன்னொரு வசனத்தையும் ரியோனா மூலமாகக் கொடுத்தார் கர்த்தர்..
எண்ணாகமம் 10:33

"அவர்கள் கர்த்தருடைய பர்வதத்தை விட்டு,மூன்று நாள் பிரயாணம் போனார்கள்.மூன்று நாள் பிரயாணத்திலும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி அவர்களுக்கு இளைப்பாறும் ஸ்தலத்தைத் தேடிக் காட்டும்படிக்கு அவர்ளுக்கு முன் சென்றது.."

3 நாட்கள்..லாரன் எனக்கு நான்கு நாட்கள் அல்லவா கொடுத்தார் ? ஒரு வேளை 3 நாட்களிலேயே எங்கள் short term mission (வேலை)முடிந்து விடுமோ?

எது எப்படியோ..கர்த்தர் எங்களுக்குச் சொல்ல நினைப்பது இது தான்..
"நான் உனக்கு முன்னே போய்,உன்னைப் பாதுகாத்து பத்திரமாகக் கொண்டு வந்து சேர்ப்பேன்.."
இது ஒன்றே எனக்குப் போதுமானதாய் இருந்தது.

இப்போது காலை மணி 7:30..கேம்ப்பில் அவரவர் எழுந்து ரெடியாகிக் கொண்டிருந்தனர்..

அதற்குள் நான் செய்து முடிக்க வேண்டிய மிக முக்கியான வேலை ஒன்று இருந்தது.

நாங்கள் கொண்டு போகும் கடத்தல் பொருட்களை (பைபிள்களை) வண்டிக்குள் பதுக்கி வைக்க வேண்டும்! யாருக்கும் தெரியாமல் !

வண்டியை தூரத்தில் நிறுத்தி விட்டு,ஒரு சில ஸ்டூடன்ட்ஸ் உதவியோடு யாருக்கும் சந்தேகம் வராமல் எங்கள் packing ஐ ஆரம்பித்தோம்..

ஒரு பெட்டி பைபிளைக் கையில் வைத்துக் கொண்டு.." இத எங்க மறைக்கப் போற ரூடி?" என்று ஒரு பையன் கேட்டான்..எனக்கும் புரியவில்லை.

எங்கள் விலையேறப் பெற்ற இந்த பொக்கிஷத்தை எங்கே மூடி மறைப்பது?

கார் கண்ணாடிக்குக் கீழே கதவு இடுக்குகளுக்குள் ஒளித்து மறைத்துக் கடத்திச் சென்றதாக ஒரு முறை "தேவனின் கடத்தல்காரன்" பிரதர் ஆண்ட்ரூ சொன்னது ஞாபகம் வந்தது..

டானின் வண்டியில் அப்படி எந்த வழியும் இல்லாததால் அப்படிச் செய்வது சாத்தியப்படவில்லை..

எல்லைப் பாதுகாப்பு செக்யூரிட்டிகளின் எக்ஸ்ரே கண்களிலிருந்து ஒளித்து மறைக்க ஏற்ற இடம் எதுவும் எங்கள் வண்டிக்குள் இருப்பது போல் தெரியவில்லை..

" ஏய் எனக்கு ஒரு ஐடியா தோணுது ரூடி !
பழைய சூட்கேஸ்ல துணியோட துணியா பேக் பண்ணி tent அடிக்கிற கேன்வாஸ்,கயிறு, சுத்தியல்,கூடார ஆணி,இன்னும் கூடாரம் அடிக்கிற சமாச்சாரங்களோட பழைய சாமானோட சாமானா போட்டு வைப்போம்.." என்று என் உதவிக்கு வந்தான் ரோலி.

எனக்கும் சரியென்று படவே.." great ஐடியா ரோலி..அப்படியே பண்ணிரலாம்.. என்றேன்.

போய்ட்டு வாங்கப்பா Bye

ஒரு பக்கம்,பைபிள் பதுக்கல் வேலை மும்முரமாக நடந்து கொண்டிருக்க..ஒரு ஆள் உற்சாகமாய் காற்றடைக்கும் படுக்கையை ஊத ஆரம்பித்தான்..

இன்னொருவன் காற்றடைக்கும் நீச்சல் ட்யூபை ஊதி வேனின் பின்பக்கம் மற்ற சாமான்களோடு போட்டு வைத்தான்..

ஒழுங்காக அடுக்கப்படாமல்,
தாறுமாறாக இறைந்து கிடந்த வண்ணமாய் போடப்பட்டிருந்த ரப்பர் வளையங்கள்,கேம்ப் ஸ்டவ்,கேமரா,கூடாரம் போடும் பொருட்கள், பழைய புத்தகங்கள் -

இவைகளுக்குக் கீழே கம்பளிக்கு அடியில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த சூட்கேஸில் 200 பைபிள்-

யார் கண்ணிலும் பட்டு விடக்கூடாது என்று மிகக் கவனமாக செட்-அப் பண்ணப்பட்டிருந்தது..

ஏதோ யோசித்தவனாக, பழைய துருப்பிடித்த ஒரு அயர்ன் பாக்ஸை கொண்டு வந்து அவைகளோடு போட்டான் ஒருவன்..

இந்தக் காயலான் கடை சமாச்சாரம் எங்கள் செட்டப்புக்கு தத்ரூபமாய் அமைந்தது.அதற்குப் பின்னால் ஒரு தேவ நோக்கம் இருந்தது பின்னால் தான் தெரிய வந்தது..

நாங்கள் இப்படி load பண்ணிக் கொண்டிருக்கும் போதே எங்களில் இருந்த ஒரு மெக்கானிக், வண்டியை ஒரு தடவை கடைசியாக செக் பண்ணினார்..

பாதுகாப்பான பயணத்திற்காக ஏற்கனவே நாங்கள் ஜெபித்திருந்தாலும்,
இவ்வளவு வேலை செய்து வைத்திருக்கும் இந்த வண்டி வழியில் தகறாறு செய்து விடக்கூடாதே ன்ற பயம் இருக்கத்தான் செய்தது..

ஆனால் இது கர்த்தர் கொடுத்த வாகனம்.எந்தப் பிரச்சனையும் வராமல் எங்களை பத்திரமாய் கொண்டு போய், திரும்பக் கொண்டு வந்து சேர்ப்பார் என்று நான் அவரையே நம்பத் தான் வேண்டும்..

நாங்கள்காலையில் சீக்கிரமே புறப்பட நினைத்திருந்தோம். ஆனால் இந்த packing வேலையும் ஆயத்தங்களும் நாங்கள் எதிர்பார்த்ததைவிட எங்களைத் தாமதப்படுத்தி விட்டன..

எல்லாம் முடிய மத்தியானத்துக்கு மேலாகி விட்டது. இப்போது புறப்படத் தயாராகி விட்டோம்..

எல்லோரும் எங்களை வழியனுப்பக் கூடிவிட்டார்கள்.எங்களை வழியனுப்ப வந்த அவர்கள் முகத்திலிருந்த உற்சாகம், அவர்களது ஜெப ஆதரவை எங்களுக்குக் காட்டியது..

" போய்ட்டு வாங்கப்பா Bye.." என்று டானுடன் சேர்ந்து எல்லாரும் வண்டியைத் தட்டி சத்தமிட..புழுதியைக் கிளப்பிக் கொண்டு புறப்பட்டது எங்கள் Gray Ford..

வழியெங்கும் நினைவுகள்

எங்களை வழியனுப்பினவர்களின் சத்தம் எங்களுக்குப் பின்னால் தேய்ந்து மறைய, அடுத்த 12 மணி நேரம் வண்டி ஓட்ட ஸ்டியரிங்கைப் பிடித்த நான்..

கடைசியாக ஒரு தடவை எல்லாம் சரியாக இருக்கிறதா என்று நோட்டம் விட்டவனாக,என் பர்ஸையும் தொட்டுப் பார்த்துக் கொண்டேன்.
அதில் இருந்தது வெறும் 100 டாலர் மட்டுமே..

என் தனிப்பட்ட சேமிப்பு எல்லாம் பைபிள் வாங்கவே சரியாக இருந்தது.சில ஸ்டூடன்ட்ஸ் கடைசி நேரத்தில் என் கையில் கொஞ்சம் பணத்தைத் திணித்தார்கள்..

ஊரிலிருந்த நண்பர்களிடமிருந்து எதிர்பாராமல் கடைசி நேரத்தில் கொஞ்சம் பணம் வந்தது..

நாங்கள் புறப்படுவதற்கு சற்று முன்பு எங்களிடம் போதிய பணம் இல்லை என்று அறிந்த லாரன்..
எங்கள் அவுட்ரீச் fund லிருந்து கொஞ்சம் வாங்கிக் கொள்ளும்படி சொன்னார்..

ஆனால் எங்கள் தேவைக்குக் கர்த்தரையே நம்பியிருக்க நான் முடிவு செய்திருந்ததால் அதை வாங்கவில்லை..

டிரைவர் சீட்டிலிருந்த நான், பின்னால் திரும்பி ஒரு முறை வண்டியில் போடப்பட்டிருந்த பொருட்களையும் அவைகள் பரப்பிக் கிடந்த விதத்தையும் பார்த்துக் கொண்டேன்.

அவைகளுக்குக் கீழே 200 பைபிள்களும் மறைத்து வைக்கப்பட்டிருந்த விதம்,பார்டர் செக்யூரிட்டிகளின் கண்களில் அவைகள் சிக்க வாய்ப்பில்லை என்பது போலிருந்தது..

கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்த ரோலியும் நானும் அமைதியாகி விட்டோம்.இப்போது நாங்கள் இருவர் மட்டுமே..

நாள் முழுவதும் இருந்த எல்லா டென்ஷன் கலந்த ஆச்சரியமும் மறைந்து,
அவரவர் அவரவர் சிந்தனையில் மூழ்கிப் போனோம்..

" அடுத்து வரும் நாட்களில் என்னென்ன நடக்கும்? ஒருவேளை பார்டரில் பிடிபட்டால் பைபிள் மட்டுமல்ல..வண்டியிலுள்ள பொருட்களோடு வண்டியும் பறிமுதல் செய்யப்பட்டு விடும்..

அப்படி ஒன்று நடக்குமானால் அதைவிட வேதனை எதுவும் இருக்காது.."

பள்ளத்தாக்கிலும் மலைகளிலும்

எங்கள் பயணம் ஏத்தென்ஸிலிருந்து வடக்கு நோக்கி ஒலிவக் காடுகள் நிறைந்த நாட்டுப்புற வழியாகச் சென்று கொண்டிருந்தது..

எங்களுக்கு வலது பக்கம் பரந்து விரிந்த நீல நிற மத்திய தரைக்கடல்.
ஆங்காங்கே கிரேக்கத் தீவுகள்..

இதன் வழியாகப் பயணித்த நாங்கள் பிந்திய இரவில் மலைத் தொடர்களுக்கு வந்து சேர்ந்தோம்.

இந்த மலைகளுக்கு அந்தப் பக்கம் இறங்கினால் பெரிய சமவெளி..அதைத் தாண்டி பல்கேரியாவின் எல்லை..

இப்போது எங்கள் வேன் செங்குத்து மலை மேல் ஏற ஆரம்பித்தது.
நடுஇரவு..மலைப்பாதை குறுகலாய் ஏறிச் சென்றது.

ஒவ்வொரு கூரிய ஹேர்ப்பின் வளைவிலும் மிகக் கவனமாய் வண்டியை மேலே செலுத்திக் கொண்டிருந்தேன்.

கடந்த இரவு லேட்டாகத் தூங்கி,காலையில் சீக்கிரம் எழுந்தது..அது போக,கடந்த 2 நாட்களில் இருந்த டென்ஷன் எல்லாம் சேர்ந்து என்னைத் தாக்க ஆரம்பித்தது..

நள்ளிரவில் தூக்கத்தைக் கட்டுப்படுத்தி,மலையில் வண்டி ஓட்டுவது மிகக் கடினமாய் இருந்தது..

ரோலி என் பக்கத்து சீட்டில் தூங்கிக் கொண்டிருந்தான்.மலையேறும் முன்னே வண்டியை அவனிடம் கொடுத்திருக்க வேண்டும்.அவனைத் தொந்தரவு செய்ய மனமின்றி நானே ஓட்டிக் கொண்டிருந்தேன்..

சொல்லப் போனால் மலையில் ஏறுமுன்பே இரவில் வேறு எங்காவது தங்க முயற்சி செய்திருக்க வேண்டும்..ஆனால் இப்போது மிகவும் பிந்திவிட்டிருந்தது.மலையின் வளைவுகளில் எங்கும் நிறுத்த முடியாத இக்கட்டான நிலை..

ஏற்கெனவே எங்கள் ஆயத்தங்களிலேயே பாதி நாளாகி விட்டதால்,
சீக்கிரம் புறப்பட வேண்டும் என்று எங்கும் நிறுத்தாமல் வந்து விட்டோம்..

ஒருபக்கம் இப்படி நினைவுகளோடு,
கஷ்டப்பட்டு தூக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு ஓட்டிக் கொண்டிருக்கும் போதே திடீரென்று ஒரு எதிர்பாராத வளைவு..

ஸ்டியரிங்கை டைட்டாகப் பிடித்திருந்த நான்..ஏதோ ஒன்று நடக்கப் போவதை உணர்ந்தேன்.

என்னை அறியாமலேயே வண்டியிலிருந்து வீல்கள் கழன்று ஓடுவது போல கண்ட்ரோல் மீறி முன் சக்கரங்கள் வேகமாய் சுழல ஆரம்பித்தது.

எங்களுக்கு இடது பக்கம் இருந்த,அடி ஆழமில்லாத அதல பாதாளத்தில் வண்டியோடு நானும் ரோலியும் உருண்டு விழுவதைப் போல உணர்வு தாக்க..

" கர்த்தாவே !" என்று கத்தினேன்..

என் அலறல் கேட்டு ரோலி பதறி எழுந்தான்..

*எங்களைத் தாங்கிய ஊக்கமான ஜெபம்

"என்னாச்சு ?
எங்கே போகிறோம் ?" என்று, நடப்பது என்னவென்று புரிய ஆரம்பிக்கும் முன்பாகவே, வண்டியின் சக்கரங்கள் வலதுபக்கம் திரும்ப,பாதுகாப்பான வளைவில் முன்னோக்கி ஏற ஆரம்பித்திருந்தோம்..

"மயிரிழையில் நம்ம தப்பிச்சிருக்கோம் ரூடி..என்னாச்சி நமக்கு ?" என்று கண்களை அகல விரித்தான் ரோலி..

"புரியவே இல்லடா”

பிரச்சனை தானாகவே சரியாகி விட்டாலும் என் இருதயம் துடிக்க மூச்சு வாங்கினேன்..

"ஒரு வேளை களைப்பினால் கண் அசந்திருப்பேனோ ?ஆனாலும் எங்கேயும் மிஸ் பண்ணின மாதிரி தெரியலையே .."

வண்டிக்குப் பைத்தியம் பிடித்து விட்டது போலிருந்தது.எங்களை மலை உச்சியிலிருந்து உருட்டிவிட்டு எங்கள் வேலையை ஒன்றுமில்லாமல் போகப்பண்ண சத்துருவின் சதி என்பது மட்டும் தெரிந்தது..

"நமக்காக பின்னாலிருந்து நம்ம டீமே ஜெபிக்குது " என்று சொல்லிக் கொண்டான் ரோலி..

"உண்மை தான் ரோலி,நம்ம மட்டும் இந்த மிஷன்ல தனியாப் போகல..தேவன் நமக்கு நிறைய ஜெபிக்கிற friends ஐக் கொடுத்திருக்கிறார்" என்று இருவரும் ஒருவரை ஒருவர் தைரியப் படுத்திக் கொண்டோம்..

இந்தச் சம்பவம் எங்கள் இருவரையும் அதிகமாகவே உலுக்கி விட்டிருந்தாலும், ஒரு பாதுகாப்பான இடத்தில் சற்று நேரம் நிறுத்தி தேவனுடைய பாதுகாவலுக்காக இயேசுவுக்கு நன்றி சொன்னோம்..

அதன்பின், வண்டி ஓட்டுவதில் ஒருவர் மாற்றி ஒருவர் நேரம் எடுத்துக் கொண்டதோடு,தனி ஜெபத்திலும் விழிப்பாகி விட்டோம்..

பிறகு எங்கள் கவலையீனத்துக்கோ,
பிசாசின் தாக்குதலுக்கோ நாங்கள் இடம் கொடுக்கவே இல்லை.

இப்போது டிரைவர் சீட்டை ரோலிக்குக் கொடுத்துவிட்டு அருகில் உட்கார்ந்த நான்,
எங்களுக்குப் பின்னால் யூத் கேம்ப்பில் எங்களை ஜெபத்தில் தாங்கிக் கொண்டிருந்த மன்றாட்டு ஜெப வீர நண்பர்களை நினைத்து ஆண்டவருக்கு அதிகமாய் நன்றி செலுத்தினேன்..

பிறகு தான் தெரிந்தது..அன்றைய நாளின் நள்ளிரவில் குறிப்பாக எங்கள் பாதுகாப்புக்காக ஜெபிக்கும்படி அநேகரை தேவன் நடத்தியிருந்தார் என்று..

எல்லை தாண்ட ஏற்ற நேரம் தாரும் தேவனே !

ஏற்கெனவே நாங்கள் தாமதமாகப் புறப்பட்டிருந்ததாலும், எடுத்த மிஷனை முடிக்க எங்களுக்கு நாலே நாட்கள் மட்டும் டைம் கிடைத்திருந்ததாலும்..

மிகப் பெரிய விபத்திலிருந்து இப்போது தான் தப்பியிருந்ததாலும்,நேரம் இல்லாத காரணத்தால்,இரவு முழுவதும் ட்ரைவ் பண்ணுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை..

ஒருவர் வண்டி ஓட்டும் போது ஒருவர் சற்று ஓய்வெடுத்துக் கொண்டோம்..

இப்போது அதிகாலை 4 மணி..எங்கள் வண்டி மலையிலிருந்து இறங்கி,வடக்கு கிரீஸுக்கும் தென் பல்கேரியாவுக்கும் இடையே உள்ள பெரிய சமவெளியை வந்து அடைந்தது..

சில கிலோமீட்டர் தொலைவில் தான் பல்கேரிய பார்டர் இருந்தது.நேரே எல்லையை நோக்கி சுலபமாக வண்டியை ஓட்டியிருக்கலாம்..
இப்போது நைட் டூட்டி செக்யூரிட்டிகள் ரோந்து போகும் நேரம்...

ஆனால் Mrs.Joy Dawson மூலம் ,கர்த்தரிடம் சிறு சிறு காரியத்தையும் கூட கேட்டு கேட்டு செய்ய நான் கற்றுக் கொண்டிருந்தேன்..

அதன்படியே, இப்போது பல்கேரிய எல்லைக்குள் ஊடுருவ சரியான நேரத்தைக் கர்த்தரிடத்தில் கேட்டுத் தான் செய்ய வேண்டும் என்று எனக்குள் மிகத்திட்டமாய் உணர்ந்தவனாய்,வண்டியை சாலையிலிருந்து திருப்பி வயல் வெளியில் ஒரு மரத்தடியில் நிறுத்தினேன்..

ரோலி இன்னும் டிரைவர் சீட் பக்கத்தில் ஆழ்ந்த தூக்கத்திலே இருந்தான்.அவனைத் தொந்தரவு செய்ய விருப்பமின்றி என் பைபிளை எடுத்துக் கொண்டு வண்டியிலிருந்து இறங்கினேன்..

வண்டியை விட்டு சற்று தூரத்தில் வயல்வெளியில் உட்கார்ந்தவனாய் அதிகாலை இருட்டில் தேவனை நோக்கிக் கூப்பிட ஆரம்பித்தேன்.

விடிந்தும் விடியாத காலை நேரம்..

என்னையே ஆராய்ந்து பார்த்தேன்..
ஏதேனும் அறிக்கை செய்யப்படாத பாவமோ தவறுகளோ இன்னும் இருக்குமோ ?
ஆவியானவரே உதவி செய்யும்..என்று ஜெபித்தபோது..

அப்படி எதுவும் நினைவுக்கு வரவில்லை என்ற நிச்சயத்துடன்..
என் சிந்தனையில் அந்நிய எண்ணங்களையோ என் மனதின் சொந்த யோசனைகளையோ கூட பிசாசு போட்டு விடாதபடி பிசாசின் மேல் அதிகாரம் எடுத்து ஜெபித்தேன்..

இப்பொழுது கர்த்தரையே முழுவதும் சார்ந்து கொண்டு,என் மிக முக்கியமான கேள்வியை கர்த்தர் முன் வைத்தேன்..

"தகப்பனே, எல்லையைத் தாண்ட எங்களுக்கு நீர் நியமித்திருக்கிற சரியான நேரத்தை எனக்குக் காட்டுமே !"

இப்போது கர்த்தரிடத்திடத்திலிருந்து நான் தெரிந்து கொள்ளும் துல்லியமான பதிலில் தான்,நாங்கள் பல்கேரியாவுக்குள் நுழையும் எங்கள் மிஷனின் வெற்றியும் தோல்வியும் அடங்கியிருக்கிறது !

கர்த்தர் வைத்திருக்கும் சரியான நேரத்தைத் தவற விட்டு விட்டு தவறான நேரத்தில் உள்ளே நுழைய முயற்சிப்போமோனால்,

நாங்கள் எடுத்துச் செல்லும் எங்கள் விலையேறப் பெற்ற பொக்கிஷமான வேதாகமங்களும்,எங்கள் வாகனமும் பறிமுதல் செய்யப்படுவது மட்டுமல்லாமல், நாங்கள் கைது செய்யப்படவோ,
திருப்பி அனுப்பப்படவோ எல்லா வாய்ப்புகளும் நிச்சயமாகவே இருந்தது..

வண்டி பறிமுதல் செய்யப்பட்டால்,
திரும்பிவர எங்கள் கையில் போதிய பணமும் இல்லாத ஒரு இக்கட்டான நிலை !

இதே அதிகாலை நேரம்..எத்தனையோ கிலோமீட்டர் தொலைவில் அங்கே ஏத்தென்ஸில் எங்கள் யூத் கேம்ப்பில்..

கர்த்தர் டீம் லீடர் லாரனை தோளில் தட்டி எழுப்பி எங்களுக்காக ஜெபிக்கச் சொல்கிறார்..

அது மட்டுமல்ல,சங்கிலித் தொடர் ஜெபத்தில் இருந்த ஸ்டூடன்ஸில் அநேகரும் கூட,கர்த்தர் வைத்திருக்கும் மிகச் சரியான நேரத்தை நாங்கள் தெரிந்து கொள்ளாமல்,

அவசரப்பட்டு க்ராஸ் பண்ணிவிடக்கூடாது என்று குறிப்பாக அதற்காக மட்டுமே அந்த நேரத்தில் ஜெபித்ததாக - இவை எல்லாவற்றையும் பிறகு அறிந்து கொண்டேன்..

ஆறாம் மணி நேரத்திலே

"ஆண்டவரே ! நாங்கள் எல்லையைக் கடக்க வேண்டிய சரியான நேரத்தைக் காட்டுமே.." என்று மறுபடியும் ஜெபித்து விட்டு அவரது பதிலுக்காக ஆவலோடு காத்திருந்தேன்..

நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

"ஆறாம் மணி நேரத்தில்" என்ற வார்த்தை என் மனதில் பளிச்சிட்டது..

என் பைபிளைத் திறந்து வேகமாய்ப் புரட்டினேன். மாற்கு 15ல் 33ம் வசனம் தெளிவாக என் கண்களில் பட்டது..

"ஆறாம் மணி நேரத்தில்.."

என்னைப் பொறுத்த மட்டில் அந்த வார்த்தை எனக்கு ஒரு காரியத்தை மட்டுமே சொல்லியது..

அடுத்த ஒரு மணி நேரத்தில் சரியாகக் காலை 6 மணிக்கு நாங்கள் பார்டரைக் க்ராஸ் பண்ணியாக வேண்டும்..

எபிரேய கால அட்டவணையில்,அவர்களது நாள்,காலை 6 மணிக்கு ஆரம்பிக்கும் என்பதோ,
இந்த வசனத்தில் சொல்லப்பட்ட "ஆறாம் மணி நேரம்" என்பது அவர்களது காலண்டரில் நடுப்பகலைக் குறிக்கும் என்பதோ என் சிந்தனையில் தோன்றவே இல்லை..

அது என் அறியாமையாகவே இருந்தாலும், கர்த்தர், அந்த வசனத்திலுள்ள அந்த வார்த்தையையே, நாங்கள் எல்லையைக் கடக்கும் சரியான மணி நேரம் என்பதை,என் குழந்தைத்தனமான புரிந்து கொள்ளுதலுக்கேற்ப பயன்படுத்தி என்னோடு பேசினார்..

கர்த்தர் தந்த வார்த்தைக்காக அவருக்கு நன்றி சொல்லிவிட்டு வேனுக்கு வந்து ரோலியை எழுப்பி, கர்த்தர் சொன்னதை அவனிடம் சொல்லி அவனைத் துரிதப்படுத்தினேன்..

இதற்குள் லேசாக விடிய ஆரம்பித்தது.அவனும் நானும் வண்டிக்குள் காத்திருந்தோம்.

ஒரு பக்கம் பசி..மறுபக்கம் உடம்பை உடைக்கும் களைப்பு..வழியில் சாப்பிட எங்கும் நிறுத்தாததால் இரவு முழுவதும் பசியோடே வண்டி ஓட்டி வந்திருந்தோம்..

வண்டியில் எங்களிடம் சாப்பிட பொருட்கள் இருந்தாலும்,இப்போது உள்ள டென்ஷனில் எதுவும் சாப்பிடும் நிலையிலும் நாங்கள் இல்லை..

உடனே வண்டியை ஸ்ட்டார்ட் பண்ணி போய் விடலாம் போலிருந்தது.
ஆனாலும் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் போகத் துணியவில்லை..

அவர் ஏற்கனவே "ஆறு மணி" என்ற நேரத்தைக் கொடுத்திருக்கிறார்.அதன் காரியம் என் புத்திக்குப் புலப்படாவிட்டாலும்,நாங்கள் அந்த நேரத்துக்கு முன் நகர்வது புத்தியீனம் என்பதை மட்டும் அறிந்திருந்தேன்..

நிமிடங்கள் நகர்ந்தன..

சரியாக 5:55..
கடைசியாக ஒரு முறை வண்டியிலிருந்த பொருட்களைத் திரும்பிப் பார்த்துக் கொண்டேன்..
கனகச்சிதமாக இருந்தது எங்கள் செட்டப்..

ரோலியைப் பார்த்தவனாய் வண்டியை ஸ்டார்ட் பண்ணினேன்..

அநத நேரம் எங்கள் பாஸ்போர்ட்டுக்களை அவன் தயாராக எடுத்து வைத்துக் கொண்டான்..

பாஸ்போர்ட் முழுவதும்,நாங்கள் எந்தெந்த நாடுகளுக்குள் போய் விட்டு வெளி வந்திருந்தோமோ, எல்லா நாட்டு முத்திரைகளுடன், ஷேவ் பண்ணப்படாத எங்கள் முகத்தையும் சேர்த்துப் பார்க்கும் போது 'உலகம் சுற்றும் வாலிபர்கள்' என்று நன்றாகவே தெரிந்தது..

ஒரு நீண்ட பெருமூச்சுடன்
ஆக்ஸிலேட்டரை மிதித்து,வயலில் நிறுத்தியிருந்த வேனை ரோட்டுக்குக் கொண்டு வந்தேன்..

கடைசியாக,வர வேண்டிய 'அந்த நேரம்' வந்தே விட்டது..

பல்கேரிய கஸ்டம்ஸ் ஆபீஸில்

இப்போது கூப்பிடு தொலைவில் பல்கேரிய கஸ்டம்ஸ் ஆபீஸ்..

ஒரு நிமிடம் ரோலியைத் திரும்பிப் பார்த்தேன்.

நயாக்ராவின் நீர்வீழ்ச்சியைப் போல உடல் முழுவதும் நரம்பு மண்டலங்களில் இரத்தம் பீச்சியடித்துக் கொண்டிருந்தது - பயமும் திகிலும் கலந்து..

"கர்த்தாவே, இந்த செக்யூரிட்டி கார்டுகளின் கண்களை மூடிப்போடுவீராக!" என்ற பிரதர் ஆண்ட்ரூவின் ஜெபத்தை மூச்சு வாங்கிக் கொண்டே ஜெபித்தவனாக,
இரண்டில் ஒன்று பார்த்து விடுவது என்ற முடிவோடு வண்டியை அழுத்தினேன்.

தேவன் எல்லாவற்றையும் தன் ஆளுகைக்குள் வைத்திருக்கிறார் என்ற நம்பிக்கையோடு,அவரது வாக்குத்தத்தங்களை நினைத்துக் கொண்டே முன் சென்றேன்..

அங்கே எனக்கு எதிரே ஒரு சின்ன,
மரக்கட்டையால் செய்யப்பட்ட குடிசை..
ரோட்டின் இரண்டு பக்கமும் zebra line போடப்பட்டிருந்த கம்பங்கள்..குறுக்கே ஒரு கட்டை..

வண்டியை ஸ்லோ பண்ணினேன்.இப்போது சரியாக பல்கேரிய எல்லைக்கு வந்து விட்டோம்..

என் வாட்ச்சைப் பார்த்தேன்.மணி சரியாக 6..

மரக்கட்டையாலான அந்த சின்ன ரூம் தான் கஸ்டம்ஸ் ஆபீஸ்.

ஜன்னலின் குறுக்குக் கட்டையைத் தட்டினேன்.

கறும்பச்சை யூனிஃபார்ம் போட்டிருந்த,தனியேயிருந்த ஒரு கார்டு ஜன்னலைத் திறந்து எட்டிப்பார்த்தவனாய்..

“வண்டியிலிருந்து வெளியே வா "என்று அரைகுறை இங்கிலீஷில் கத்தினான்..

நாங்கள் என்னவோ அவன் சொல்லை மீறிவிடப் போகிறோமோ என்று நினைத்தானோ என்னவோ,தன் இடுப்பில் வைத்திருந்த பிஸ்டலைத் தட்டி தன் அதிகாரத்தை எங்களுக்குக் காட்டிக் கொண்டான்..

ரோலி என் பாஸ்போர்ட்டை என் கையில் கொடுக்க.. சாந்தமாய் அந்த guard க்குப் பின்னால் அந்த மரக்கட்டை ரூமுக்குள் போனோம்..

அங்கே யூனிஃபார்மில் இருந்த சில ஆபீசர்கள் எங்கள் பாஸ்போர்ட்டைச் செக் பண்ண,தேவையான எல்லா பேப்பர் ஒர்க்கும் சில நிமிடங்களில் முடிந்தது.

கூடவே,எங்களிடமிருந்த கிரீக் கரன்சியை லோக்கல் பல்கேரிய கரன்சியாக மாற்றிக் கொண்டோம்.

இவை எல்லாவற்றையும்,எங்களை முதலில் உள்ளே கொண்டு வந்த கார்டு எங்களுக்குப் பின்னாலிருந்து கவனித்துக் கொண்டேயிருந்தான்..

பேப்பர் வேலை முடிந்து எல்லாம் க்ளீயர் ஆனதும்,
எங்களைப் பார்த்து..
"வண்டியைத் திற..செக் பண்ணனும்" என்றான்.

பேப்பர் செக்கிங் போது கொஞ்சம் தளர்ந்திருந்த என் நரம்புகள்,மறுபடியும் விறைத்துக் கொண்டன. ஆனால் ஒன்றுமே தெரியாதது போல கேஷுவலாக அவனைப் பார்த்து லேசாக சிரித்துக் கொண்டேன்..

முகத்தின் சின்ன அசைவுகளைக்கூட கண்டுபிடித்துவிடும் அளவுக்குப் பக்காவாக ட்ரெய்ன் பண்ணப்பட்டவர்கள் இவர்கள்..

எங்கள் பேப்பர் formality க்கும் தனக்கும் எந்தச் சம்பந்தமுமே இல்லாதது போல அதில் எந்த இன்ட்ரஸ்ட்டும் காட்டிக் கொள்ளாமல்..

என்னையும் ரோலியையும், உண்மையிலே இவர்கள் டூரிஸ்ட்டுகள் தானா என்று கழுகைப் போலத் தன் எக்ஸ்ரே கண்களால் பார்த்துக் கொண்டே இருந்தான் அந்த guard..

எல்லைக் காவலர்களின் கேமரா கண்கள்

எங்கள் வண்டியை செக் பண்ண வேண்டுமென்ற guard பின்னாலே வண்டியை நோக்கி நானும் நடந்தேன்.

வண்டியிலிருந்த ஒரு இங்கிலீஷ் நியூஸ் பேப்பரை எடுத்த ரோலி,கஸ்டம்ஸ் ஆபீஸின் படியில் உட்கார்ந்து, தன் கண்ணாடியை சரி செய்து கொண்டு படிக்க ஆரம்பித்தான்..

இந்த guard களின் எண்ணத்தைத் திசைதிருப்ப நாங்கள் ஏற்கெனவே பேசி வைத்திருந்த நாடகத்தின் ஒரு பகுதி இது !

காலை இளம் வெயிலில் இதமாகக் குளிர் காய்ந்து கொண்டே இங்கிலீஷ் பேப்பரோடு உட்கார்ந்திருந்த ரோலியைப் பார்த்து எனக்கு சிரிப்பு வந்தது..

இதே, வேறு ஒரு தருணமாயிருந்தால், வாய்விட்டே சிரித்திருப்பேன்..

காரணம்,ரோலி ஒரு ஸ்விஸ்- ஜெர்மன். இங்கிலீஷ் சுட்டுப் போட்டாலும் வராது. ஒரு வார்த்தை கூட இங்கிலீஷ் தெரியாதவன் இங்கிலீஷ் பேப்பரை வைத்துக் கொண்டு ஹாயாக உட்கார்ந்திருக்கிறான்..

இது ஒருபக்கம் நடக்க, நான் நல்ல பிள்ளையாய், வண்டியில் ஒளித்து மறைக்க ஒன்றுமில்லாதது போல,வண்டியின் எல்லாக் கதவுகளையும் திறந்து கொடுத்தேன்..

வண்டிக்குள் தாறுமாறாய் இறைந்து கிடந்த எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே.."ம்ம்" என்று சொல்லிக் கொண்டே சுற்றிவந்தான் அந்த கார்டு..ஜன்னலில் அழுக்குச் சட்டை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது..

காற்றடித்த ரப்பர் மெத்தை,டயர்,மற்றும் tent சாமானோடு சாமானாக பைபிள் நிறைந்த சூட்கேசும் கிடந்தது.

" ஓ ஊர் சுத்துறதுனா ரொம்பப் பிடிக்குமோ ?" என்று வறட்டுக் கேள்வி ஒன்று கேட்டுக்
கொண்டான்..

" ஆமா கொஞ்ச நாளா அப்படியே சுத்திட்டு வர்றோம்.." என்று நானும் கூலாக பதில் சொன்னேன்..

என்ன தான் ரொம்ப friendly யாக அவனோடு பேச்சு கொடுத்து அவன் mind ஐ டைவர்ட் பண்ண முயற்சி செய்தாலும் அவன் காரியமே கண்ணாயிருந்தான்..

எனக்குள் கேள்விகள் ஒவ்வொன்றாக எழும்ப ஆரம்பித்தது. "6 மணி என்று கர்த்தர் சொன்னது உண்மை தானா ?நான் சரியாகத் தான் கர்த்தர் சத்தத்தைக் கேட்டேனா ?”

வண்டியின் உட்பகுதி,கதவு,பேனல் என்று இண்டு இடுக்கெல்லாம் துளாவியது பக்காவாக ட்ரெய்ன் பண்ணப்பட்டிருந்த அவனது கேமரா கண்கள்..

பின்பக்கம் கிடந்த சாமான்களைப் பார்த்த அவன்..ஒரு நிமிடம் நிறுத்தி நிதானமாக ஒவ்வொன்றாய் நோட்டம் விட..என் இருதயத் துடிப்பு ஒரு நிமிஷம் நின்று விட்டது போலிருந்தது.

கேம்பிங் கியரை (டென்ட் சாமான்கள்) நகர்த்தச் சொல்வானோ?அதற்குக் கீழே உள்ள சூட்கேஸைத் திறக்கச் சொல்லி விடுவானோ ?

" ஆண்டவரே !"

தன் பச்சைத் தொப்பியை பின்னுக்குத் தள்ளிக் கொண்டவன், தலையைச் சொறிந்தான்.

"ஏதோ ஒண்ணு சரியில்லையே !" என்று அவனுக்கு சந்தேகப் பொறி தட்டுவது போலிருந்தது.

ஆனால் அது என்ன என்பது தான் அவனுக்குப் புரியவில்லை.

மூச்சுவிடக் கூட தைரியமில்லாமல் அவனுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தேன்.

" இவனைப் பார்த்தால், கர்த்தர் சொன்ன நேரத்தில் நுழையாமல், தப்பான நேரத்தில் வந்து ஏடாகூடமான ஆளிடம் எசகுபிசகாக மாட்டிக் கொண்டோமோ ?"

"கர்த்தருடைய வழிநடத்துதலைத் தவறாகப் புரிந்து கொண்டேனோ ?"

தலை கிறுகிறுவென்று சுத்த ஆரம்பித்தது..

அவர்கள் கண்களை மூடிப்போடு !"
(ஏசா 6:10)

ஒவ்வொன்றாய் பார்த்துக் கொண்டே வந்த அவனது பார்வை, அந்தத் துருப்பிடித்த அயர்ன் பாக்ஸ் மேல் விழ..(கடைசி நேரத்தில் ஸ்டூடன்ட் ஒருவன் சாமான்களோடு போட்டு வைத்தது)

சிரித்துக் கொண்டே..
"இதை யூஸ் பண்றீங்களா என்ன?" என்று கேட்டான்.
"இல்ல.. இல்ல.. Greece ல ஒரு பீச்ல கிடந்தது..

எதுக்காவது தேவைப்படும்னு போட்டு வச்சோம்.." என்றேன்.

தன் சந்தேகம் தீர எல்லாவற்றையும் பார்த்தவன்..முகத்தில் ஒரு உணர்ச்சியும் இன்றி தோளைக் குலுக்கினவனாய் எங்கள் பாஸ்போர்ட்டைக் கையில் கொடுத்தான் - பல்கேரியாவுக்குள் நுழையும் என்ட்ரி பெர்மிட் சீலுடன்..

நான் வண்டியில் ஏறி டிரைவர் சீட்டில் உட்கார..ரோலி ரொம்ப கேஷுவலாக பேப்பரை மடித்து சுருட்டிக் கொண்டு வண்டிக்குள் உட்கார்ந்தான்..

அவனைப் பார்த்தால் ஊர் சுற்ற விரும்பாத டூரிஸ்ட் போல காட்டிக் கொண்டான்.ஆனால் என் பக்கத்தில் உட்கார்ந்த அவனது கை நடுங்கிக் கொண்டிருந்தது..

நான் எவ்வளவு நெர்வஸாக இருந்தேனோ அதே அளவு அவனும் இருந்தான்.இருவரும் உள்ளே உட்கார்ந்ததும் அந்தக் கம்யூனிஸ்ட் கார்டு எங்களைப் போகும்படி கையசைத்தான்..

"சீக்கிரம் கிளம்பலாம் ரூடி.." என்று மூச்சு வாங்கிக் கொண்டே ரோலி மெதுவாகச் சொன்னான்..நான் ஏற்கெனவே வண்டியை ஸ்டார்ட் பண்ணியிருந்தேன்..

"என்ஜாய் யுவர் ட்ரிப்.."என்று இப்போது சந்தோஷமாய் அனுப்பி வைத்தான் அந்த guard.

வண்டி நகர்ந்தது..

புறப்பட்டது தான் தாமதம்..
சில கிலோமீட்டர் தள்ளி தான் வண்டியை நிறுத்தினேன்.இரண்டு நாளாக இருந்த டென்ஷன் போய் இரண்டு பேரும் பெருமூச்சு விட்டோம்..

வண்டியை விட்டு இறங்கின நாங்கள் ஒருவரை ஒருவர் தட்டிக் கொடுத்து விட்டு, செக்யூரிட்டிகளின் கண்களை மூடிப்போட்டு,தடை செய்யப்பட்ட பொருட்களை அவர்கள் கண்களுக்கு மறைத்து, கொண்டுவரச் செய்த கர்த்தரை முழுபெலத்தோடு அரைமணிநேரம் விடுதலையோடு துதித்தோம்..

அதன்பின் வண்டியில் ஏறிய எனக்கு அடுத்த தலைவலி காத்திருந்தது.
"இவ்வளவு ரிஸ்க் எடுத்து கொண்டு வந்திருக்கும் சரக்கை யாரிடம் கொண்டு போய் பத்திரமாய் சேர்ப்பது ?"

எனக்கிருந்த ஒரே ஒரு பிடிமானம்..பல்கேரியத் தலைநகர் சோஃபியாவிலுள்ள பாஸ்டர் உஸ்கட்ஸோவ் என்பவரின் முகவரி மட்டுமே..

அவரைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாவிட்டாலும் அந்த ஒரே ஒரு முகவரி தான் எங்களிடம் இருந்தது..

வேறு வழியே இல்லை..

உயிரைப் பிடித்துக் கொண்டு பல்கேரியாவுக்குள்

ஒரு முன்னெச்செரிக்கையாக,பாஸ்டர் உஸ்கட்ஸோவின் பெயரை ஒரு துண்டுப் பேப்பரில் எழுதி நான் பர்ஸுக்குள் வைத்திருந்தேன்..

அவரது முகவரி எழுதப்பட்ட இன்னொரு துண்டுக் காகிதம் என் கையில் தனியாக இருந்தது.

அந்த எழுத்துக்கள் எங்களால் உச்சரிக்கவும் முடியாதபடி vertical ஆக எழுதப்பட்டிருந்தது மட்டுமல்லாமல், எங்களிடம் பல்கேரிய map ம் இல்லாததால் அந்த இடத்தைக் கண்டு பிடிப்பதும் முடியாத ஒன்றாக இருந்தது.

ஆனால் அந்த அட்ரஸ் Sofia வில் இருக்கிறது என்பது மட்டும் தெரியும்.

ஆகவே வேறு எந்த வழி வகையும் இல்லாததால், நேரே சோஃபியா நோக்கி வண்டியைச் செலுத்தினோம்..

எல்லையிலிருந்து 5 மணி நேர ஓட்டம்..பச்சைப் பசேலென்ற பல்கேரிய நாட்டுப்புறங்கள் வழியே..

இப்போது ரோலி வண்டியை ஓட்ட.. கரடுமுரடான சரி செய்யப்பட்டிராத சாலைகள் வழியே வண்டி ஓடிக்கொண்டிருக்க..

அவ்வளவு டென்ஷனான நிலையிலும் ரோலி அருகில் உட்கார்ந்திருந்த நான் பல்கேரியாவின் கிராமப்புறங்களை ரசித்துக் கொண்டே வந்தேன்..

பார்டர் க்ராஸிங் கண்டத்திலிருந்து இப்போதைக்கு தப்பியிருந்தாலும்,எந்த நேரத்திலும் இரகசிய போலீசிடம் சிக்கிப் பிடிபடும் ஆபத்து நிச்சயமாக எங்களுக்கு முன் இருந்தது..

பல்கேரிய கிராமப் புறங்கள்

ரூடி தொடர்கிறார்..

எங்கள் வண்டி முன்னே செல்லச் செல்ல..எனக்கு இருபக்கமும் பரந்து விரிந்திருந்த பல்கேரிய கிராமப்புறங்களைப் பார்த்துக் கொண்டே வந்தேன்..

அறுவடை நேரம்..விவசாயிகள் காலையிலேயே வயல்களில் தங்கள் வேலையைத் தொடங்கியிருந்தார்கள்..

வளர்ந்த நாடுகளில் காணப்படும்விவசாய இயந்திரங்கள் மிகவும் குறைவாகவே தென்பட்டன.அறுவடையை அறுத்துத் தீருமுன் கடுமையான வேலை அவர்களுக்குக் காத்திருந்தது..

மிகக் கடுமையான சூழ்நிலையில்,குறுக்கு ஒடிய வேலை செய்யும் கொத்தடிமைகளைப் போன்ற இந்த ஆண்களையும் பெண்களையும் பார்த்த போது,என் இருதயம் அவர்களுக்காக வேதனையால் நிறைந்தது

" கர்த்தாவே, இந்தக் கம்யூனிஸத்தின் கட்டுகளிலிருந்துஇவர்களை விடுவிக்க மாட்டீரோ" என்று மௌனமாய் ஜெபித்தேன்..

பல்கேரியாவுக்குள் நுழையும் இந்த மிக ரிஸ்க்கான திட்டத்துக்காக கர்த்தருக்குக் கீழ்ப்படிய நாங்கள் செய்த தீர்மானத்துக்காக நான் அவருக்கு மிகவும் நன்றியுள்ளவனாய் இருக்கிறேன்..

இந்த ஜனத்தின் சரீரத் தேவைகளை சந்திக்கும் சக்தி இப்போது எங்களிடம் இல்லாவிட்டாலும்,அவர்களுடைய ஆவிக்குரிய பசியைப் போக்கும் ஆகாரம் எங்களிடம் இருந்தது.

எங்கள் வேலையின் தீவிரம் மறுபடியும் உறுத்தவே,"இயேசுவே,நாங்கள் வைத்திருக்கும் 'மன்னாவை'பத்திரமாகக் கொண்டு சேர்க்க உதவி செய்யும்" என்றேன்..

எங்களுக்குப் பக்கத்தில் குதிரை வண்டிகளும், குழந்தைகளையும் பெரியவர்களையும் கொண்டு செல்லும் பழைய வாகனங்களும் கடந்து சென்றன..

இந்தத் தேசத்தின் மேலிருந்த ஆவிக்குரிய அந்தகாரத்தைக் காணும் போது,இந்த நாட்டுப்புற ரம்மியத்தையும்,ஜனங்களின் பண்பாட்டு நாகரீகங்களையும் ரசிக்கும் மனநிலையில் நான் இல்லை..

கிறிஸ்தவர்கள் மேல் மட்டுமல்ல,தன் தேசத்துக் குடிகள் எல்லார் மேலும் கம்யூனிசம் தன் இரும்புக் கரத்தை நீட்டியிருந்து
கிறிஸ்தவர்கள் மேல் மட்டுமல்ல,தன் தேசத்துக் குடிகள் எல்லார் மேலும் கம்யூனிசம் தன் இரும்புக் கரத்தை
நீட்டியிருந்தது.

தங்கள் நாட்டைப் போல் சுதந்திரம் வேறு எங்கும் கிடையாது என்று கம்யூனிஸ்டுகள் பறைசாற்றிக் கொண்டாலும்,தேசம் எங்கும் மதச்சுதந்திரமோ,
பேச்சு சுதந்திரமோ,
எழுத்துச் சுதந்திரமோ எங்கும் காணோம்..

இவைகளையெல்லாம் யோசிக்க யோசிக்க,ஒரு பக்கம் ஜனங்களின் மீதான அநீதியை நினைத்துக் கோபம் எழும்பினாலும் அடுத்து செய்ய வேண்டிய வேலை என்னை அழுத்தியது..

எங்களிடம் ரோடு மேப்பும் இல்லாமல் உள்ளூர் பாஷையும் தெரியாமல், பாஸ்டர் உஸ்கட்ஸோவின் முகவரியைக் கண்டுபிடிப்பது முடியாத காரியமாய் இருந்தது..

இப்போது கிராமப்புற எல்லை தாண்டி சோஃபியாவின் நகர்ப்புறத்துக்குள் நுழைந்தோம்..

தலைநகர் என்று பெயர் தானே தவிர,நகரின் சாலைகள் இருந்த நிலையில் வண்டி ஓட்டுவதே கடினமாய் இருந்தது..

சோஃபியா நகர்

சோஃபியா நகருக்குள் நுழைந்த எங்களுக்கு அநேக ஆச்சரியங்கள் காத்திருந்தது..

பாதசாரிகளும், கைவண்டிகளும்,குதிரை வண்டிகளும், 20,30 வருஷத்துப் பழைய துருப்பிடித்த கார்களும் ஓடிக் கொண்டிருந்தன..

இவைகளோடு சேர்ந்து ஏகப்பட்ட ஆம்புலன்ஸுகளும் ஓடிக் கொண்டிருந்தது தான் ஆச்சரியம்.

விபத்துக்கள் அதிகம் நடக்கக்கூடிய ஊர் போலிருக்கிறது என்று நினைத்தவனாய்,
ஒவ்வொரு திருப்பத்திலும் கவனமாய் ஓட்ட ஆரம்பித்தேன்..

பிறகு தான் தெரிந்தது, அவைகள் ஆம்புலன்ஸுகள் அல்ல..இரகசிய போலீஸ் தங்களை மறைத்துக் கொள்ளப் பயன்படுத்திய உத்தி என்று..

இவைகளோடு கூட, ஆங்காங்கே தெரு முனைகளிலும் மெயின் ரோடுகளிலும் காணப்பட்ட பெரிய பெரிய போர்டுகள், எனக்கு விசித்திரமாய்க் காணப்பட்டன..

என்னால் படிக்க முடியாவிட்டாலும்,அவைகள் பறைசாற்றிக் கொண்டிருந்த கம்யூனிஸ அறிவிப்புகளும் அறைகூவல்களும் தெளிவாகத் தெரிந்தன..

ஒன்று மட்டும் திட்டவட்டமாய்ப் புரிந்தது..
இப்படிப்பட்ட தீவிரக் கமயூனிசக் கொள்கை கொண்ட ஒரு நாட்டில், ஒரு விசுவாசி, தன் விசுவாசத்தைக் காத்துக் கொள்ள எவ்வளவு போராட வேண்டியிருக்கும் என்று..

இது வரை ஓட்டிக் கொண்டிருந்த ரோலியிடமிருந்து வண்டியை வாங்கிக் கொண்ட நான்,

"உன் வழிகளில் எல்லாம் அவரை நினைத்துக் கொள்.அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வை படுத்துவார்..(நீதி 3:6)"

என்ற வசனத்தை நினைத்தவனாய், "தகப்பனே,வழி நடத்துமே.."என்று ஜெபித்துக் கொண்டே ஓட்ட ஆரம்பித்தேன்..

20 இலட்சம் ஜனத்தொகை கொண்ட ஒரு நகரில், விளங்காத பாஷை கொண்ட முகவரியை மட்டும் வைத்துக் கொண்டு அலைவது, வைக்கோல் போரில் ஊசியைத் தேடுவது போன்ற கதையாய் இருந்தது..

திடீரென்று ஒரு டூரிஸ்ட் ஹோட்டல் என் கண்ணில் பட்டது."ஒரு வேளை ஜெர்மனோ ஆங்கிலமோ பேசும் யாராவது கிடைக்கலாம்..ஆனால் கவனம் தேவை" எனக்குள்ளே சொல்லிக் கொண்டேன்..

ஆகவே, ரெஸ்ட் எடுக்க வந்த டூரிஸ்ட்டுகள் போல காட்டிக் கொண்டு,சாப்பிட ஏதோ ஒன்று ஆர்டர் பண்ணிவிட்டு, "இங்க ஏதாவது டூரிஸ்ட் ஸ்பாட் இருக்குமா?" என்று அந்த வெயிட்டரிடம் கேஷுவலாகக் கேட்டேன்..

பிறகு ஏதோ நினைத்தவனாய்," ஒரு map கிடைக்குமா?" என்று அங்கிருந்த ரிசெப்ஷனிஸ்ட்டிடம் கேட்டேன்..

அவள் வேறு எதுவும் கேட்காமல் சிரித்துக் கொண்டே,ஒரு map ஐக் கொடுத்தாள்..

எல்லாம் சரியாய்ப் போய்க் கொண்டிருப்பது போலத் தெரிந்தது..

முகவரியைத் தேடி

வண்டிக்குள் ரோலி,ஒரு பக்கம் சோஃபியாவின் map ஐ கவனமாய் ஆராய்ந்து எனக்கு வழி காட்டிக் கொண்டிருக்க,

நானோ குறுக்கும் நெடுக்குமான குறுகலான தெருக்களினூடே வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தேன்..

ஒவ்வொரு முனையிலும் வண்டியை நிறுத்தி நிறுத்தி தெருவின் பெயர்ப் பலகையை பார்த்துக் கொண்டே சென்றோம்.எங்கள் பொறுமைக்குப் பலன் கிடைத்தது..

ரோலியின் map reading உண்மையிலே கை கொடுக்க, என் கையிலிருந்த துண்டுப் பேப்பரிலுள்ள அட்ரஸை அதன் வடிவமைப்பை மட்டுமே வைத்துப் பார்த்து அந்தத் தெருவைக் கண்டு பிடித்து விட்டோம்..

வண்டியை அந்த வீட்டுக்கு முன் நிறுத்துவதற்குப் பதிலாக,முன்னெச்சரிக்கையோடு சில தெருக்கள் தள்ளி,

அங்கிருந்த நதிக்கரை அருகே,ஒரு மரத்தடியில், கிளைகளுக்குக் கீழே பாதி மறைக்கும்படியாக நிறுத்தி வைத்தேன்..

இருந்தாலும் அப்படியே நிறுத்தி விட்டுப் போவது கவலையாகத் தான் இருந்தது.யார் வேண்டுமானாலும் இந்தப் பழைய வண்டியை உடைத்து உள்ளிருப்பவைகளைக் கண்டுபிடித்துவிட வாய்ப்பு இருந்தது..

"ஆண்டவரே, உம் தூதர்களைக் காவல் வையும்" என்று ஜெபித்து விட்டு அந்தத் தெருவை நோக்கி நடந்தேன்..

வண்டியை இப்படியே விட்டுவிட்டுப் போக விரும்பாததற்கு இன்னொரு காரணம்,ஒரு வேளை வண்டி கண்டுபிடிக்கப்பட்டு நாங்கள் பிடிபடுவோமானால், எங்களோடு சேர்ந்து நாங்கள் சந்திக்கச் சென்ற பாஸ்டரும் கைது செய்யப்பட எல்லா சாத்தியமும் இருந்தது..

குறிப்பாக நாங்கள் சந்திக்கப் போகும் பாஸ்டர் எப்படிப்பட்டவர் என்று எங்களிடம் எந்த விபரமும் இல்லை.

யார் வேண்டுமானாலும் உளவாளியாய் இருக்கலாம் என்பதும்,
குறிப்பாக ஒரு குறிப்பிட்ட இவாஞ்சலிக்கல் சபையின் பாஸ்டர், கவர்மன்ட் இன்ஃபார்மர் என்றும்,

எக்காரணத்தைக் கொண்டும் அவரை மட்டும் சந்தித்து விடக்கூடாது என்றும் நாங்கள் எச்சரிக்கப் பட்டிருந்தோம்..

மத்தியான வெயில் எங்கள் தலையைப் பிளக்க,அந்தத் தெருவிலுள்ள அந்த வீட்டைத் தேடி நடந்தோம்.

அநேக வீடுகளுக்கு நம்பர் இல்லை.தெருவைக் கண்டு பிடிப்பது போலவே வீட்டைக் கண்டுபிடிப்பதும் குதிரைக் கொம்பாக இருந்தது..

தேடித் தேடி நொந்து போய் கடைசியாக அந்த இரண்டு அடுக்கு வீட்டு முன் வந்து நின்றோம்..

போதகர் மகள்

அந்த வீடு மறைவாக இல்லாமல்,வெளியில் தெரியக்கூடியதாய் இருந்ததால் எனக்கு என்னவோ அவ்வளவு பிடிக்கவில்லை..

தெருவில் நடந்து போகிறவர்கள் யாராவது, வெளிநாட்டவர்களாகிய நாங்கள் வெளியே நிற்பதைப் பார்த்து அந்த வீட்டாரைப் பற்றி ரகசிய போலீசுக்குத் தகவல் கொடுத்து விட்டால் ??
எங்கள் தவறால் அவர்கள் கைது செய்யப்பட்டு விட்டால் ??

பயம் ஒரு பக்கம் அழுத்தினாலும்..இப்போது இவ்வளவு தூரம் வந்து விட்டோம்..இனி திரும்பிப் போவது நினைத்துப் பார்க்க முடியாது..

இந்தச் சிந்தனைகளோடு அரை மனதாய்க் கதவைத் தட்டினேன்.பதில் வரவில்லை.நடுக்கத்தோடு நின்று கொண்டிருந்தோம்..

கொஞ்சம் பின்னுக்குத் தள்ளி வந்து,இன்னும் கொஞ்சம் பலமாகத் தட்டினேன்.இப்போது வீட்டுக்குள் யாரோ நடமாடும் சத்தம் கேட்டது..

திடீரென்று 20 வயது வாலிபப்பெண் ஒருத்தி பால்கனியிலிருந்து எட்டிப் பார்த்தாள்..

எங்களை வெளிநாட்டவர்கள் என்று அடையாளம் கண்டு கொண்ட அவள்.."ஹாய்" என்று ஆங்கிலத்தில் பேச முற்பட..

"பாஸ்டர் உஸ்கட்ஸோவைப் பார்க்க வந்தோம்.."என்றேன்.

"அவர் என்னோடஅப்பா தான்..இப்ப வீட்ல இல்லையே ? நான் எதுவும் உங்களுக்கு ஹெல்ப் பண்ணனுமா ?" என்று கேட்டாள்..

நாங்கள் வந்த உண்மையான நோக்கத்தை, இங்கே தெருவில் நின்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம் என்று நினைத்து..

"நாங்கள் டூரிஸ்ட்டுகள்..அப்பா பேரை யாரோ கொடுத்தாங்க..அதான் பாத்துட்டு போகலாம்னு வந்தோம்..இன்னிக்கு ஈவ்னிங் ஏதாவது சர்ச் சர்வீஸ் இருக்குமா ?" என்று கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டேன்..

எங்களுக்கிருந்த ஒரே தொடர்பு இது தான்.இந்த வாய்ப்பையும் நழுவ விட்டால் அவ்வளவு தான்..

"ஓ ! கண்டிப்பா வாங்க !
இன்னிக்கு ஈவ்னிங் ப்ரேயர் உண்டு..நான் கீழே வந்து அட்ரஸ் தர்றேன்.." என்று சொல்லிவிட்டு உள்ளே போனாள்..

"இவ்வளவு ஓப்பனா பேசுகிறாளே " என்று ஆச்சரியப்பட்டேன்.சிறிது நேரம் கழித்து கீழே வந்தவள்,சர்ச் அட்ரஸ் அழகாக எழுதப்பட்ட ஒரு பேப்பரைத் தந்தாள்..

அவள் சிந்தனைகளை அவளது முகபாவனையில் அறிய முற்பட்டேன்.
ஆனால் எனக்கு எதுவும் பிடிபடவில்லை.

சற்று சங்கடமாக இருந்தாலும்,எங்களை அவள் ஸ்டடி பண்ணுமுன்னே அவளுக்கு "தாங்க்ஸ்" என்று சொல்லிவிட்டு ரோலியும் நானும் உடனே இடத்தைக் காலி செய்தோம்

ரிஸ்க் எடுப்போம்

அந்த வீட்டிலிருந்து, நதிப்பக்கம் நிறுத்தியிருந்த காரை நோக்கி நடந்துகொண்டே,பாஸ்டர் மகளோடு நடந்த எங்கள் சந்திப்பைப் பற்றிப் பேசிக் கொண்டே போனோம்..

" ஒரு வேளை நாங்கள் நினைப்பது போல் கிறிஸ்தவர்கள் விடுதலையோடு ஆராதிக்கத் தடையில்லையோ ?

இவ்வளவு வெளிப்படையாக பயமே இல்லாமல் ஆராதனை நேரத்தையும் இடத்தையும் சொன்னாளே ?

கம்யூனிச ஒடுக்குதலைப் பற்றி நாங்கள் கேள்விப்பட்டதெல்லாம் வெறும் கதையோ ?
அல்லது யாரோ விரித்த வலையில் வசமாய் மாட்டப் போகிறோமோ ?”
இப்படியே பேசிக் கொண்டே நடந்தோம்..

அவள் எழுதிக் கொடுத்த அட்ரஸை ஒரு தடவை படித்துப் பார்த்தேன். அப்பொழுது தான் பொறி தட்டியது..

எந்த மிஷன் டைரக்டரைச் சந்திப்பதை நாங்கள் தவிர்க்கும்படி எச்சரிக்கப் பட்டிருந்தோமோ,அதே இவாஞ்சலிக்கல் சர்ச்சின் அட்ரஸ் தான் அது!!

"இப்போது என்ன செய்வது ? சர்ச் அட்டென்ட் பண்ணவா வேண்டாமா ?"

ரோலியும் நானும் தீவிரமாய் இதன் நுணுக்கங்களை அலசி ஆராய்ந்தோம்..

கடைசியாக எங்களுக்கு முன் வேறு எந்த வழியும் தென்படவில்லை.எஙகளுக்கிருந்த ஒரே தொடர்பு இது தான்.கொண்டு வந்த பைபிள்களைக் கொடுக்க வேறு யாரும் இல்லவும் இல்லை..

எங்களைப் பின்னாலிருந்து ஜெபத்தில் தாங்கும் எங்கள் ஸ்டூடன்ட்ஸ் ஞாபகம் வந்தது.

Haifa வில் பைபிள் வாங்கச் சென்ற பைபிள் சொஸைட்டியில் இருந்த அந்த லேடி எங்களுக்காக ஜெபிப்பேன் என்று சொன்ன ஞாபகம் வந்தது..

பைபிள்களைத் திருப்பிக் கொண்டு போவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று.ஆகவே என்ன நடந்தாலும் பரவாயில்லை..ரிஸ்க் எடுத்துத் தான் பார்ப்போமே என்ற முடிவுக்கு வந்து விட்டோம்..

" ஒரு வேளை அந்த சபையிலும் உண்மையான விசுவாசிகள் இல்லாமலா போய்விடுவார்கள்?
கர்த்தர் அவர்களிடம் நம்மை நடத்த மாட்டாரா?"
என்ற நம்பிக்கையோடு தைரியமாய் நடந்தோம்..

அன்று மதிய நேரம் முழுவதையும் சோஃபியாவின் மார்க்கெட் பகுதியில் கழித்தோம்..

அங்கிருந்த தரம் குறைந்த பொருட்களையும் காய்ந்த காய்கறிகளையும் பழங்களையும் பார்த்தபோது ஆச்சரியமாக இருந்தது..

தலைகளைக் கவிழ்ந்து,பயந்த முகத்தோடு கால்கள் பின்ன,வேகமாய் இங்குமங்கும் நடந்து கொண்டிருந்த ஜனங்களைப் பார்த்த போது, கம்யூனிஸம் வாக்களிக்கும் சுதந்திர வாழ்க்கைக்கும் செழிப்புக்கும், இவர்களுக்கும் சம்பந்தமே இல்லாமல் இருந்தது..

இவைகளுக்கு மத்தியிலும் அவர்களது அன்றாட வாழ்க்கை வெறுமையும் வறட்சியுமாய் போய்க்கொண்டிருந்தது அவர்களது முகத்தில் அப்பட்டமாய்த் தெரிந்தது..

திக்குத் தெரியா தெருக்களில்

அன்றைய மாலை ஆராதனை 7 மணிக்குத் தொடங்குவதாக இருந்தது.

6 மணிக்கு வண்டியில் ஏறிய நாங்கள், இன்னும் நிறைய நேரம் இருக்கிறது என்று சர்வசாதாரணமாக சர்ச் இருக்கும் இடத்தைத் தேடிப் போக ஆரம்பித்தோம் ..

நாங்கள் எதிர்பார்த்தது போல், தேடுவது ஒன்றும் சுலபமான வேலையாகத் தெரியவில்லை.

முன்பு போலவே,ரோலி map ஐத் தடவிக் கொண்டிருக்க, நாங்கள் ஒவ்வொரு தெரு முனையிலும் நின்று நின்று தெரியாத பாஷையில்,வெறும் எழுத்தின் வடிவமைப்பை மட்டும் வைத்துக் கொண்டு துளாவிக் கொண்டிருந்தோம்..

இப்போது மணி ஏழாகியும், சர்ச் இருக்கும் ஏரியாவைக் கூட வந்து சேரவில்லை.தேடித்தேடி மணி எட்டும் ஆகிவிட்டது. எனக்கு கிலி பிடித்தது..

பகல் வெளிச்சம் மறைந்து இருள் பரவ ஆரம்பித்திருந்தது. இதற்காகவா இத்தனை தூரம் வந்தோம்?

ஒரு விஷயம் புரிந்தது.

கிறிஸ்தவர்களைச் சந்தித்து வேதத்தை அவர்கள் கைகளில் சேர்க்க விடாமல் செய்ய பிசாசு முழுமூச்சாய் இறங்கியிருக்கிறான் என்பது மட்டும் தெரிந்தது..

இன்று ஒரு நாள் இராத்திரி மட்டும் தான் எங்களுக்கு இருந்தது.
என்ன ஆனாலும் நாளைக்கு நாங்கள் பல்கேரியாவை விட்டு திரும்பப் புறப்பட்டாக வேண்டும்..

" வா ரோலி, ஜெபம் பண்ணுவோம்.." என்றேன்

சத்தத்தை உயர்த்தி முழு அதிகாரத்தோடும் அந்தகார சக்திகளைக் கட்டிவிட்டு, "தேவனே, எங்களை சரியாக வழிநடத்துமே.." என்று ஜெபித்தோம்..

இதற்குள் முழு நகரத்தையும் இருள் மூட, ஆங்காங்கே தெரு லைட்டுகள் எரிய ஆரம்பித்தன.

பகல் வெளிச்சத்திலேயே தெரியாத பாஷையில் அட்ரஸ் கண்டுபிடிப்பது அவ்வளவு கஷ்டமாய் இருந்தது.இப்போது இருட்டில்..சுத்தமாக முடியாத ஒன்றாகி விட்டது.

வண்டியை விட்டு இறங்கி குண்டும் குழியுமாயிருந்த களிமண் தெருக்களில் நடக்க ஆரம்பித்தோம்.

இந்த ரோடுகளையும் தெருக்களையும் பார்த்து ஒரு பக்கம் எரிச்சல் தான் வந்தது.எங்கள் சுவிட்சர்லாந்தில் கிராமத்து தெருக்கள் கூட இந்த சிட்டி ரோடுகளைப் பார்க்கிலும் எவ்வளவோ மேல்!

மறுபடியும் வண்டியில் ஏறினோம். நேரம் போய்க் கொண்டே இருந்தது.இடம் கண்டு முடிக்க முடியாத விரக்தி ஒரு பக்கம் ..

ஆராதனை ஆரம்பித்து இப்போது ஒரு மணி நேரம் ஆகிவிட்டிருந்தது.
மங்கலான ஒரு தெரு லைட்டுக்குக் கீழே நின்று.." தகப்பனே எங்கே போய்த் தேடுவோம் ?" என்று அழ ஆரம்பித்தோம்.

ஏற்கெனவே ஒரு முழு நாள் ஆகி விட்டது.ஒரு கிறிஸ்தவரைக்கூட கண்டுபிடிக்க முடியவில்லை..

என்ன ஆனாலும் இன்று ராத்திரிக்குள், கொண்டு வந்த சரக்கை டெலிவரி பண்ணியே ஆக வேண்டும்.

இன்று இரவு இதை இறக்காவிட்டால் நாளைக்கு திரும்பி கிரீஸ்க்கு திருப்பிக் கொண்டு போவதைத் தவிர வேறு வழியே இல்லை.

இவ்வளவு தூரம்,
இவ்வளவு ரிஸ்க் எடுத்து வந்தும் இப்படி விரக்தியுடன் திரும்பிப் போகவா கர்த்தர் இத்தனை தூரம் கொண்டு வந்தார் ?

நிச்சயம் அப்படி இருக்காது..

வழிநடத்தும் தேவன்

ஏறக்குறைய 2 மணி நேரத் தேடலுக்குப் பிறகு கடைசியாக ஒரு முனையில் திரும்பினோம்.

இதற்கு முன் கிட்டத்தட்ட பத்து தடவைகளுக்கு மேலாக ஒவ்வொரு திருப்பத்திலும் அட்ரஸ் செக் பண்ணியது போலவே,

இந்த முறையும் அதின் எழுத்து வடிவை வைத்து தெருப்பெயர் அதோடு ஒத்துப் போகிறதா என்று செக் பண்ண,இந்த முறை ஒத்துப்போவது போலத் தெரிந்தது..

திரும்பவும் செக் பண்ணினோம்.எங்களால் நம்பவே முடியவில்லை.
அதே தெரு தான்..

மத்தியானம் செய்தது போலவே முன்னெச்சரிக்கையோடு வண்டியை கொஞ்ச நேரத்தில் நிறுத்தி விட்டோம்..

அதே நதிக்கரையில், ஆனால் வேறு இடத்தில் நிறுத்திவிட்டு 10 நிமிடம் நடந்தோம்.

சபை கட்டிடம் மற்ற கட்டிடங்களுக்கு நடுவில் சாதாரணமாக இருந்தது.

உள்ளிருந்து மெல்லிய குரலில் வந்த பாடல் சத்தம் மூலம்,சரியான இடத்துக்கு வந்து விட்டோம் என்று அறிந்து கொண்டோம்..

சாத்தியிருந்த கதவை லேசாகத் திறந்து நானும் ரோலியும் பின் பெஞ்சில் அமர்ந்து கொண்டோம்.

இரண்டு மணி நேரம் லேட்டானாலும் சரியான இடத்துக்கு வந்து விட்டோம் என்பதை நம்பவே எங்களுக்குக் கொஞ்ச நேரம் பிடித்தது..

அந்த சிறிய சாதாரண ஹாலில் 200 பேர், நெருக்கமாக ஆண்கள் ஒரு பக்கமும் பெண்கள் ஒரு பக்கமுமாய் உட்கார்ந்திருந்தார்கள்..

வேதபாட வகுப்பு அல்ல,அது ஒரு ஜெபக் கூட்டம் என்று சிறிது நேரம் சென்று அறிந்து கொண்டேன்..

விசுவாசிகள் ஒவ்வொருவராக சத்தத்தை உயர்த்தி ஜெபித்துக் கொண்டிருந்தார்கள்..

பாஷை அறியாததால் என்ன ஜெபிக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள முடியாவிட்டாலும் அவர்கள் ஊக்கமாக ஜெபிப்பதை என் ஆவியில் உணர்ந்தேன்..

அவர்களது ஜெபத்தில் மெய்மறந்து போன ரோலியும் நானும்சந்தோஷத்தோடு ஒருவரை ஒருவர் பார்த்து லேசாக சிரித்துக் கொண்டோம்..

முந்திக் கொண்டு ஓடு

சர்ச் இருக்கும் இடத்தை நாங்கள் கண்டு பிடித்து விட்டாலும் இப்போது புதிதாக இன்னொரு பிரச்சனை முளைத்தது..

இந்த 200 பேரில்,
உண்மையும் நம்பகமுமான ஆளை எப்படிக் கண்டுபிடித்து, கொண்டு வந்த பைபிள்களை ஒப்படைப்பது ?

ஜெபக்கூட்டம் நடந்து கொண்டிருந்தது.அது முடியும் வரை எங்களை யாரும் கவனித்ததாகக் கூடத் தெரியவில்லை..

" நாங்கள் மேற்கத்திய நாடுகளிலிருந்து உங்களைக் காண வந்திருக்கிறோம் என்று எழுந்து நின்று சொல் " என்று எனக்குள் ஒரு எண்ணம் எழுந்தது..

அப்படி சொல்லும் பட்சத்தில் பக்கத்தில் உள்ளவர்களின் கவனம் எங்கள் மேல் திரும்பும் வாய்ப்பு இருந்தாலும், யாராவது இன்ஃபார்மர்கள் இருந்தால் உஷாராகி விடுவார்கள் என்ற உண்மையும் உறைத்தது..

"நோ நோ..கர்த்தர் இம்மட்டும் எங்களை நடத்தி வந்திருக்கிறார்..
என் மதியீனத்தால் நானே மாட்டிக்கொள்வதில்லை.." என்று முடிவு செய்துவிட்டு கர்த்தரே சரியான நபரிடம் நடத்தட்டும் என்று நம்பி அவர் கையில் விட்டுவிட்டேன்..

சோர்ந்து தொய்ந்து போன முகங்களோடு வாடிப் போயிருந்த அந்த சபையை ஒரு முறை பார்த்தேன்..

" வசனத்தின் ஆரோக்கியமும் உபதேசமும், பெலப்படுத்தலும் இன்றி எத்தனை காலமாய் இவர்கள் ஆவியில் பெலவீனமாய் இருப்பார்கள் ?"

இவர்களை உற்சாகப்படுத்துவது எவ்வளவு அவசியம்? எழுந்து இவர்களை உற்சாகப்படுத்தும் செய்தி ஒன்றைக் கொடு.." என்று எனக்குள் மறுபடியும் எண்ணம் வந்தது..

நானாகவே என் மாம்ச சிந்தையில் முந்திக் கொண்டு ஓடமாட்டேன் என்று என்னையே கட்டுப்படுத்திக் கொண்டாலும்,

"இது தான் தருணம்..விட்டால் உன் வாய்ப்பை இழந்தாய்.." என்று உள்ளிருந்து ஒரு குரல் உந்தித் தள்ளியது..

"போ..முன்னால் போ..இப்போதே போ.." - எனக்குள் போராட்டம் வலுத்தது.

"தேவையில்லாமல் பயப்படுகிறேனோ? தைரியமாய் முன்னால் போய் சொன்னால் தான் என்ன ?"

"கோழையாய் இருக்காதே..போ..இப்போதே போ.." எனக்குள் எழுந்த சத்தம் என்னைத் துரத்தியது.

சற்று நேரம் நிதானித்த நான்,"இல்லை..இது பரிசுத்த ஆவியானவரின் சத்தமே இல்லை..நான் ஆத்திர அவசரமாய் முந்திக் கொள்ளப் போவதில்லை.."என்று தீர்மானித்தேன்.

என்னை அழுத்துவது பிசாசு தான்.கரத்தர் இந்த மிஷனுக்கு என்னை அழைத்திருக்கிறார்.நான் அவரையே நம்ப வேண்டும்..நானே என் இஷ்டத்துக்கு முந்திக் கொண்டு ஓட மாட்டேன்.. என்று முடிவு செய்துவிட்டு,

"கர்த்தாவே, அவர்களே எங்களை முன்னுக்கு வரும்படி அழைக்க உதவி செய்யும்.." என்று ஜெபித்தேன்.

ஆச்சர்யமான தேவன்

சபையில் இது வரை யாரும் எங்களைக் கவனித்ததாகவோ நாங்கள் வந்திருப்பதை அறிந்ததாகவோ கூடத் தெரியவில்லை..

ஜெபம் முடியும் நேரத்தில், ஜெபத்தை நடத்திக் கொண்டிருந்தவர் மேடையிலிருந்து இறங்கி நேரே எங்களிடம் வந்தார்..

வந்தவர்,அரைகுறை ஆங்கிலத்தில்.." நீங்கள் யார் ? எங்கிருந்து வந்திருக்கிறீர்கள் ?" என்று மெல்லிய குரலில் கேட்டார்..

"நாங்கள் ஸ்விட்சர்லாந்திலிருந்து வந்திருக்கும் விசுவாசிகள்.." என்று மெதுவாகச் சொன்னேன்..

இங்கு அந்நியர்கள் பிரசங்கம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளதால் பிரசங்கிக்க உங்களை என்னால் அனுமதிக்க இயலாது, ஆனால் நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளான வாழ்த்துக்களை சபைக்குத் தெரிவிக்கலாம்.." என்று அவர் சொல்ல..

"ஆம் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.." என்று தலையசைத்து விட்டு அவர் பின்னால் மேடைக்குச் சென்றேன்.

அடுத்த 15 நிமிடம் "வாழ்த்து" சொல்லும் சாக்கில், பிரசங்கமின்றி, பவுல் பேதுரு மற்றும் வேதத்தின் பல தாசர்களைப் பற்றி, வசனம் கிடைக்காத பஞ்சத்திலுள்ள அந்த சபைக்குக் கர்த்தருடைய வார்த்தையைக் கொடுத்தேன்..

என் சுய இஷ்டப்படி முந்திக் கொள்ளாமல், ஆவியானவரின் வழிநடத்துதலின்படி நடக்க எனக்குக் கிருபை தந்த தேவனுக்குநான் எவ்வளவு நன்றியுள்ளவனாய் இருக்கிறேன் !

கூட்டம் முடிந்து ஜனங்கள் எங்களை சூழ்ந்து கொண்டார்கள். அவர்களில் ஒருவருக்காவது ஜெர்மனோ ஆங்கிலமோ தெரிந்திருக்கா விட்டாலும்,

அவர்களால் ஒரு வார்த்தை கூட எங்களிடம் பேச முடியாவிட்டாலும்,
அவர்கள் முகத்தில் காணப்பட்ட மகிழ்ச்சியே அவர்கள் எங்கள் மேல்
வைத்த அன்பை வெளிப்படுத்தியது..

அதுவே எங்களை உற்சாகப்படுத்தியது.

கடைசியாக எல்லாரும் வெளியேறியபின், அந்த சபைத் தலைவர் மட்டும் நின்று கொண்டிருந்தார்.

சந்தோஷமாய் எங்களோடு கை குலுக்கியவர்,என் வார்த்தைகளுக்காக நன்றி சொல்லிவிட்டு,

"நீங்கள் பகிர்ந்து கொண்ட வார்த்தைகள் மிகவும் பிரயோஜனமாய் இருந்தது..ஆனால் அதிக நேரம் கொடுக்க இயலாததற்காக வருந்துகிறேன்..உங்களுக்குத் தான் இங்குள்ள சூழ்நிலை தெரிந்திருக்குமே ?" என்றார்..

அவரது கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவரையே பார்த்தவனாய்.."நாங்கள் நன்றாகவே அறிந்திருக்கிறோம்.." என்றேன்.

அவரது ஆங்கிலம் அரைகுறையாக இருந்தாலும், அவரது அன்பிலும் வார்த்தையிலும் உண்மையை உணர்ந்தவனாய், நான் தேடிக் கொண்டிருந்த மனிதன் இவர் தான் எனக்குள் உணர்ந்தேன்..

ஆனால் நாங்கள் வந்த நோக்கத்தை சொல்லுமுன், நான் ஒரு விஷயத்தை உறுதிப்படுத்த வேண்டியிருந்தது..

இந்த சபையின் தலைமைப் போதகர் இவர் தானா அல்லது வேறொருவரா என்பது எனக்குத் தெரிய வேண்டும்..

"நீங்கள் தான் டைரக்டரா "
என்று கொஞ்சம் சங்கடத்தோடு தயவாய்க் கேட்டேன்.

" ஓ நோ.. நான் அஸிஸ்ட்டன்ட் பாஸ்டர் தான்..
பாஸ்டர் உஸ்கட்ஸோவ் தான் இந்த சபையின் Chief Pastor.."

என் இருதயமே ஒரு வினாடி நின்று போனது போலிருந்தது.

"பாஸ்டர் உஸ்கட்ஸோவா?"
திரும்பக் கேட்டேன்..

கவர்மன்ட் இன்ஃபார்மர் பாஸ்டர் உஸ்கட்ஸோவ்

"பாஸ்டர் உஸ்கட்ஸோவா?" என்று திரும்பக் கேட்டதும்,

"ஏன் உங்களுக்குத் தெரியுமா ?" என்று கேட்டார்..

"இல்லை..இல்லை.." என்று அவசர அவசரமாக மறுத்தேன்.

இந்த பாஸ்டர் உஸ்கட்ஸோவைப் பற்றி அல்லவா கேள்விப்பட்டேன்
தன் சொந்த ஜனங்களைப் பற்றியே அரசங்கத்துக்கு உளவு சொல்லும் இன்ஃபார்மர் என்று ?

எக்காரணம் கொண்டும் சந்திக்கவே கூடாது என்று இவரைப் பற்றி அல்லவா திரும்பத் திரும்ப எச்சரிக்கப்பட்டேன் ?

எனக்குள் நடந்து கொண்டிருந்த ஜீவ மரணப் போராட்டத்தை அறியாத அந்த அஸிஸ்ட்டன்ட் பாஸ்டர் சொன்னார்..
"பாஸ்டர் உஸ்கட்ஸோவ் இப்போது வெளியூர் போயிருக்கிறார்.."

நான் சொன்னேன்..
" அவருடைய பெயரும் அட்ரஸும் கிடைத்தது.
ஆனால் அவரைப் பார்க்க முடியவில்லை.." என்று.

ஒரு வேளை இன்று மதியம் அவர் வீட்டில் இருந்திருந்தால்,அவர் ஒரு உளவாளி என்று தெரியாமலே எல்லா பைபிளையும் அவர் கையிலே கொடுத்து விட்டு வந்திருப்போம்!

எங்கள் வேதாகமங்கள் தவறான கைகளில் போவது மட்டுமல்லாமல் நாங்கள் இருவரும் கூட எவ்வளவு பெரிய கண்ணியில் சிக்கிக் கொள்ளும் ஆபத்திலிருந்தோம் !

எங்களுக்காக பின்னாலிருந்து ஜெபித்துக் கொண்டிருந்த ஒவ்வொருவருக்காகவும் மட்டுமன்றி,தேவ ஆவியினவரின் சரியான வழிநடத்துதலுக்காகவும் மௌனமாய் நன்றி சொன்னேன்..

ஆனால் இப்போது இன்னொரு குழப்பம்.
"எனக்கு முன்னாலிருக்கும் இந்த ஆளை மட்டும் எந்த வகையில் நம்புவது?"

"கர்த்தர் எங்களை வேறு யாரிடமும் நடத்தவில்லை.
சபையின் நபர்களில் ஒருவரும் இப்போது இல்லை.எல்லாரும் போய் விட்டார்கள்..

இந்த பல்கேரியாவின் சபைகளின் எங்களது ஒரே லிங்க்
இந்த ஒரே மனிதர் மட்டும் தான்..
என்ன செய்யலாம் ?”
ஒரு நிமிடம் யோசித்தேன்..

இதற்குள் பாஸ்டர் கேட்டார்.." நீங்கள் என்ன விஷயமாக
வந்திருக்கிறீர்கள்?"

"சரி..இதற்கு மேல் வழியில்லை..சொல்லியேஆக வேண்டும்"
என்று முடிவு செய்தவனாய் அங்குமிங்கும் பார்த்துவிட்டு
யாருமில்லை என்று நிச்சயித்துக் கொண்டு,

அவரது காதருகே சென்று மெதுவாக.."நாங்கள் பைபிள்
கொண்டு வந்திருக்கிறோம்.." என்றேன்..

புருவங்களை சுருக்கிக் கொண்டு,தன் காதுகளையே நம்ப
முடியாமல்.."பைபிளா ?" என்றார்..

"ஆம் பார்டர் க்ராஸ் பண்ணி பைபிள் கடத்திக் கொண்டு
வந்திருக்கிறோம்" என்றேன்.

நம்ப முடியாதவராய் ரோலியை அவர் ஏற இறங்கப் பார்க்க..
அவனும் தலையசைத்தான்..

"பைபிளா ?" என்று கேட்ட அவரது முகத்தில் தான் எத்தனை
விதமான உணர்ச்சிகள்! சந்தோஷம் ! பயம் ! ஆச்சரியம் !

தன்னையே நம்ப முடியாமல்.."எத்தனை ?" என்று கேட்டார்..

"100 பல்கேரியன், 100 ருமேனியன்" என்றேன்.

சந்தோஷம் தாங்காமல் லேசாக விசிலடிக்க ஆரம்பித்து
விட்டார் அந்த மனிதர்...

பிடிபட்டால்..
15 வருஷம் கடுங்காவல்

அந்த அஸிஸ்ட்டன்ட் பாஸ்டர் ஒருவித பயத்தோடு தொடர்ந்தார்..

" சுவிசேஷத்துக்காக நான் 15 வருஷம் ஜெயிலில் இருந்திருக்கிறேன்..
இத்தனை பைபிள்களோடு மாட்டினால் இன்னொரு 15 வருஷம் உள்ளே தான் இருக்க வேண்டும்.."

"நாம் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்..சரி இப்போது பைபிள் எங்கே ?"

"வண்டியில் வைத்திருக்கிறோம்.யாருக்கும் தெரியாத தூரத்தில் வண்டியை நிறுத்தியிருக்கிறோம்.." என்றதும்
" ஞானமாய் செய்தீர்கள்.."
என்று சொல்லிவிட்டு கொஞ்சம் ரிலாக்ஸானவர்...

"என்னிடம் வண்டி எதுவும் இல்லை..சைக்கிள் தான் இருக்கிறது உங்களோடு வந்து அதை ஒரு பாதுகாப்பான இடத்தில் வைக்கிறேன்..

இங்கே சர்ச்சில் வைப்பது பாதுகாப்பு அல்ல..சபையின் உயர்மட்டத்தில் உள்ளவர்களிலும் அரசாங்க இன்ஃபார்மர்கள் உண்டு.." என்றார்.

அவர் பாஸ்டர் உஸ்கட்ஸோவின் பெயரைக் குறிப்பிடாவிட்டாலும் தன் சீனியர் பாஸ்டரின் நடவடிக்கைகளை நன்கு அறிந்திருந்ததால்,அவரைத் தான் சொல்கிறார் என்று தெரிந்து கொண்டேன்..

சோஃபியா நகரின் இருண்ட தெருக்களின் வழியே..

சரியான ஒரு நபரிடம் நேர்வழியாய் எங்களை நடத்திய தேவனுக்கு அமைதியாய் நன்றி சொல்லிக் கொண்டே, அந்த பாஸ்டருக்குப் பின்னால் நடந்து சென்றோம்..

"நீங்கள் வண்டி நிறுத்தியிருக்கும் இடத்துக்கு நடக்க 10 நிமிஷம் ஆகும்" என்றார்..

பாஸ்டரும் நானும் முன்னே நடக்க,யாருக்கும் சந்தேகம் வராதபடி ரோலி கொஞ்ச தூரத்தில் பின்னே வந்தான்.

தெரு விளக்குகளின் வெளிச்சம் மங்கலாய் இருந்தபடியால்,பெரும்பாலும் இருளாகவே காணப்பட்ட தெருக்களின் வழியாக நடந்து கொண்டிருந்தோம்.

பாஸ்டர் உள்ளூர் ஆளாக இருந்ததால்,வழி தேட வேண்டிய அவசியம் ஏற்படாமல் அவர் பின்னாகவே நதியோரத்தை நோக்கிச் சென்றோம்..

சற்று நேரம் முன்பாக சர்ச் இருந்த இடத்தைத் தேடித் தேடி அலைந்த ரோலியும் நானும் பட்ட பாட்டை நினைத்தவனாய்,

இப்போது இந்த இருண்ட தெருக்களுக்குள்ளே தடவித் திரியாதபடி எங்களுக்கு சரியான ஒரு துணையைத் தந்த கர்த்தருக்கு நன்றி சொல்லிக் கொண்டே நடந்தேன்..

நிலா வெளிச்சத்தில் வண்டி இருந்த இடத்தை அடைந்த எங்கள் மூவரில், நானும் பாஸ்டரும் முன்பக்கம் ஏறிக் கொள்ள,ரோலி பின்புறம் ஏறிக் கொண்டான்..

இப்போது ரோலி செய்ய வேண்டிய முக்கியமான வேலை ஒன்று இருந்தது.
சூட்கேஸிலிருந்து நாங்கள் இதற்காவே கொண்டு வந்திருந்த அட்டைப் பெட்டியில் பைபிள்களை மாற்றி வைக்க வேண்டும்..

ஒரு வித டென்ஷனாடு,
வண்டியை ஸ்டார்ட் பண்ணினேன்.எங்கள் முழு ஆப்ரேஷன் பல்கேரியா மிஷனின் மிக முக்கியமான நேரத்துக்கு வந்திருந்தோம்..

நாங்கள் பதுக்கி வைத்திருந்த சூட்கேஸிலிருந்து அவ்வளவு பைபிள்களையும்
அடுத்த அரைமணி நேரத்துக்குள் பெட்டியில் அடுக்க வேண்டும்..

ஓடும் வண்டிக்குள் வெளியே தெரியாமல் ரோலி செய்ய வேண்டிய வேலை இது..

நகர் முழுவதும் ரோந்து சுற்றிக் கொண்டிருக்கும் இரகசிய போலீசின் கண்ணில் சிக்காமல் செய்து முடிக்க வேண்டிய ஒரு க்ரூஷியல் job இது..

போலீஸ் ! போலீஸ் !

ரோலியும் நானும் இது வரை போயிராத, ஊரின் ஒதுக்குப்புறமான ஒரு இடத்துக்கு, இருளான தெருக்களின் வழியே,
வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தேன்..

இதற்குள், வண்டிக்குப் பின்னால் ரோலி பைபிள்களை பெட்டிக்குள் அடுக்கிக் கொண்டிருந்தான்..

இரண்டு ரெட் லைட்டைத் தாண்டி மூன்றாவது ரெட் லைட்டில் வந்து நின்று கொண்டிருக்கும் போது, எங்கள் வண்டிக்குப் பின்னாலேயே ஒரு போலீஸ் பைக் வருவதைப் பார்த்து விட்டேன்..

எங்கள் van வெளிநாட்டு வண்டி என்று நன்றாகவே தெரிந்ததாலும்,வண்டியின் உட்பக்கத்தில் ஏதோ அசைவு

தெரிவதையும் பார்த்த அந்த போலீஸ்காரன், வண்டியின் கண்ணாடி வழியே எட்டிப் பார்க்க முயற்சி செய்ததை என்னால் பார்க்க முடிந்தது..

ஐயோ ! வைத்திருந்த பைபிள்களோடு கூடவே ஒரு உள்ளூர் பாஸ்டரோடும் கையும் களவுமாய் மாட்டப்போகிறோம் !

"ரோலி ! குனிஞ்சுக்க !
உடனே குனி ! குயிக் !"
பல்லைக் கடித்துக் கொண்டு அவசர அவசரமாய் சொன்னேன்..

விஷயத்தின் தீவிரம் தெரியாவிட்டாலும், என் சத்தத்திலிருந்த அவசரத்தை உணர்ந்த ரோலி,

வண்டியில் தரையில் பரப்பிக் கிடந்த பைபிள்கள் மேலேயே படுத்துக் கொண்டு ஸ்லீப்பிங் bag ஐ விரித்து தன்னை மூடிக் கொண்டான்..

என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும்

ட்ராஃபிக் லைட் மாற, ஆக்ஸிலேட்டரை மிதித்தேன்..வண்டி கிளம்பியது..

அந்தப் போலீஸ்காரன் எங்களைத் தொடர்கிறானா என்று சில விநாடிகள் பார்த்தேன்.அவனைக் காணவில்லை.. சந்தேகப்படும்படி அவன் கண்ணில் எதுவும் படவில்லை..

ஆக ஒருவழியாக இப்போது ஆபத்து கடந்து போக, ரோலியை வெளியே வரச் சொன்னேன்..

மயிரிழையில் தப்பித்திருந்தோம்.என் பக்கத்திலிருந்த பாஸ்டரைப் பார்த்தேன்.

எங்களைப் போலவே அவருக்கும் பயத்தில் முகம் வெளிறிப் போயிருந்தது..

காரணம் ஒரு நிச்சயமான ஆபத்து எங்கள் தலை மேலிருந்தது.

இருட்டான தெருக்கள் வழியே வண்டி போகப் போக, யாரும் ஒருவருக்கொருவர் பேசவில்லை..பயம் இன்னும் விலகாமலே இருந்தது..

15 நிமிடத்துக்குப் பின் ஊருக்கு வெளியே ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில், வண்டியை நிறுத்தும்படி பாஸ்டர் கைகாட்டினார்..

வண்டியை நிறுத்தியதும் ஒரு தெருவில் 5 வீடுகள் தள்ளி உள்ள ஒரு வீட்டைக் காட்டி, நான் முதலில் போய் அங்கே காத்திருப்பேன்..அதன்பின் 5 நிமிடம் கழித்து உங்கள் பெட்டியை எடுத்து வாருங்கள் என்றார்..

இருட்டில் அவருடைய உருவம் அந்த வீட்டினுள் நுழைவது தெரிந்தது.

சிறிது நேரம் சென்று நானும் ரோலியும் பெட்டிகளை வெளியே எடுத்தோம்..

கனமான பெட்டிகளை கஷ்டத்தோடு தூக்கினேன். குண்டும் குழியுமான தெருவில் பெட்டியோடு கால் தடுமாறியது..

யாரோ எங்களைப் பார்த்துவிட்டார்கள்

ஊருக்கு இந்தப் பக்கத்தில்,லைட் வெளிச்சம் ஓரளவு நன்றாக இருந்தது..

நாங்கள் நின்ற இடத்துக்கு சரியாக ரோட்டுக்கு எதிர்புறத்தில் ஒரு ஒயின்ஷாப் இருந்தது.
இங்கிருந்து பார்த்தால் bar ஜன்னல் வழியே நிறைய இராணுவ வீரர்கள் உள்ளே இருப்பது தெரிந்தது..

நாங்கள் நின்ற இடத்தைப் பார்த்தால்,இதை விட மோசமான, ஆபத்தான இடம் வேறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை..

பாஸ்டர் காட்டிய அந்த வீட்டுக்குள் புகுந்து எங்களுக்குப் பின்னால் கதவை மூடினோம்.ஒரே இருட்டாக இருந்தது..

கொஞ்ச நேரம் நின்ற நிலையிலே கண்ணைக் கசக்கிக் கொண்டு எங்களையே அட்ஜஸ்ட் பண்ணப் பார்த்தோம்..

வீட்டுக்கு வெளியே தெருவில் யாரோ வரும் காலடி சத்தம் கேட்டது.
கனத்த பெட்டியைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டே, பயத்தில் உறைந்து போனேன்..

"யாரோ எங்களைப் பார்த்து விட்டார்கள் !”

இரண்டு பெரிய பெட்டியைத் தூக்கி வந்த நாங்கள் நிச்சயமாக சந்தேகத்துக்கு இடமாக இருந்திருக்க வேண்டும் !

நகர்ந்து வந்த காலடி சத்தம், வீட்டு வாசலருகே வந்ததும், ஸ்லோவாகி சரியாக வீட்டு வாசலுக்கு முன்னே வந்து நின்றது..
மங்கிய தெரு வெளிச்சத்தில் ஒரு ஜோடி பூட்ஸ் நிழல் வாசலில் நிற்பது தெளிவாகத் தெரிந்தது !!

பாழடைந்த கட்டிடத்துக்குள்ளே..

சரியாக வாசலுக்கு வெளியே ஒரு ஷூ நிழல் நிற்பது தெரிய.. ஒரு நிமிஷம் என் மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்றேன்..

எந்த வினாடியும் கதவு திறக்கப்பட்டு,நானும் ரோலியும் பைபிள் அடங்கிய பெட்டிகளோடு கையும் களவுமாகப் பிடிபடலாம் என்ற நிலை..

100 பைபிள்களின் தாங்க முடியாத கனத்தோடும், இருந்த டென்ஷனோடும் என் கை இரண்டும் நடுங்கிக் கொண்டிருந்தது..

இதற்கு மேல் தாங்க முடியாது என்று பெட்டியைக் கீழே போட்டுவிடப் போகிற அந்த நேரத்தில் அந்த நிழல்,வீட்டை விட்டு தெருவில் முன்னே நகர ஆரம்பித்தது..

ஆபத்து கடந்தது என்று கொஞ்சம் ரிலாக்ஸாகி, எங்களுக்கு முன்னே இருந்த இன்னொரு பின்வாசல் வழியே நுழைந்தோம்..அங்கே ஒரு திறந்தவெளி காணப்பட்டது.

அங்கே பாஸ்டர் காத்திருப்பார் என்று எதிர்பார்த்தோம்.அந்த திறந்தவெளியின் நான்கு பக்கமும் உயர்ந்த அப்பார்ட்மென்ட் தான் தெரிந்ததே தவிர எங்களுக்கு முன் சென்ற பாஸ்டரைக் காணோம்..

என் நாடி நரம்பெல்லாம் ஒடுங்கிப்போனது.எங்கே போய் விட்டார்? உடனே திடீரென்று தூரத்தில் ஒரு சுவர் பக்கம் நின்று கொண்டிருந்த அவரது நிழல் தெரிந்தது..

திறந்தவெளி மைதானத்தை துரிதமாய்க் கடந்த நாங்கள், பாஸ்டருக்கு முன்பாகப் பெட்டியை இறக்கினோம்..

"அதோ அந்தக் கட்டிடத்தின் உள்ளே உள்ள மறைவிடத்தில் வைக்கவேண்டும்.." என்று சொல்லிவிட்டு பெட்டியை எடுக்கக் குனிந்தவர்..

ஏதோ சத்தம் கேட்டு அப்படியே சிலையாய் நின்றவராய்.."ஓடிப்போய் அந்தப் பாழடைந்த பில்டிங்கில் சீக்கிரம் ஒளிந்து கொள்ளுங்கள்" என்று அவசரமாய் சைகை காட்டினார்..

ரோலியும் நானும் அந்தப் பழைய பாழடைந்த சின்ன shed க்குள் நுழைந்து கதவை மூடிக் கொண்டோம்..

ஒரு ஆள் நிற்கவே இடம் போதாத அந்த அறையில் அடித்த நாற்றம் அடிவயிற்றைப் புரட்டி எடுத்தது..

எப்படியோ,ஒளிந்து கொள்ள ஒரு இடம் கிடைத்தது..அது போதும்!
என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்றோம்..

எந்த நிமிடத்திலும் யாரோ ஒரு இரகசிய போலீஸ் வந்து " Hands Up !" என்று கத்துவான் என்ற ஒரு பதட்டத்தில் எங்கள் இருதயம் படபடத்துக் கொண்டிருந்தது.

பாதுகாப்புடன் ஒப்படைக்கப்பட்ட ஜீவ அப்பம்

சந்தேகமே இல்லாமல், நாங்கள் பதுங்கிய அறைக்கு வெளியே யாரோ வருவது கேட்டது..மூச்சைப் பிடித்துக் கொண்டேன்.

என் நெற்றியிலிருந்து வழிந்த வியர்வை உடம்பெல்லாம் நனைத்தது..

கதவு திறந்தது..ஆனால் வேறு யாருமில்லை.
பாஸ்டர் தான் நின்று கொண்டிருந்தார்.

"ஒன்றும் பிரச்சனையில்லை..நைட் ஷிப்ட் முடிந்து போகிற ஒரு ஆள் தான் க்ராஸ் பண்ணினார்..இருந்தாலும் ரிஸ்க் தான்.." என்று எங்களை வெளியே வரச் சொன்னார்.

உண்மை தான்.
எங்களைப்போன்ற வெளிநாட்டவர்களோடு இந்த மாதிரி நேரத்தில் அவரை யாராவது பார்த்து விட்டால், மறுபடியும் அவர்ஜெயிலுக்குப் போவது நிச்சயம்..

எவ்வளவு சீக்கிரம் நானும் ரோலியும் வெளியேறுவோமோ அவ்வளவு நல்லது.

கடைசி வரை நின்று பாஸ்டருக்கு உதவி செய்து பெட்டிகளை செட்டில் பண்ணிவிட்டு போக நினைத்தோம்.

ஆனால் சீக்கிரம் இடத்தைக் காலி செய்வது நல்லது என்று முடிவு செய்து.." நாங்கள் புறப்படுகிறோம்.." என்றோம்.

அவரது முகத்தில் ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் "நல்லது " என்றார்.

பெட்டியின் ஓரத்திலிருந்து ஒரு பேப்பரைக் கிழித்து என் முகவரியைக் கிறுக்கிக் கொடுத்து விட்டு.."எல்லாம் நல்லபடியாக முடிந்தால்,"பல்கேரியாவில் climate நன்றாக இருக்கிறது" என்று ஒரு போஸ்ட் கார்டு மட்டும் போடுங்கள்.." என்று சொல்லிவிட்டு நகர்ந்தோம்.

எங்கள் இருவரது கைகளையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு.." கர்த்தருடைய வார்த்தை கிடைக்காத பஞ்சத்தில் அடிபட்டுக் கிடக்கும் எங்களுக்கு ஜீவ அப்பத்தைக் கொண்டு வந்த தூதனைப் போலிருக்கிறீர்கள்..
உங்களுக்கு நன்றி சொல்ல வார்த்தைகளில்லை..கர்த்தர் உங்களோடு இருப்பாராக !" என்று எங்களுக்கு விடை கொடுத்து அனுப்பினார் பாஸ்டர்..

தலை தப்பியது

வெளியே தெருவுக்கு வந்ததும், யார் கண்ணிலும் படுகிறோமா என்று ஒரு முறை வேகமாகப் பார்த்தேன்..

எங்கள் பதுக்கல் வேலை நடந்த இடத்திலிருந்து சில மீட்டர் தூரத்திலேயே, எங்களைக் கவனிக்காமல் இன்னும் அந்த இராணுவ வீரர்கள் குடித்துக் கொண்டு தான் இருந்தார்கள்..

"ஆனால் ஆபத்து இன்னும் கடந்து போகவில்லை.
எங்கள் பல்கேரிய நண்பர் மேல் சந்தேகம் வராதபடி
ரோலியும் நானும் யார் கண்ணிலும்
பட்டுவிடுமுன்பாகத் துரிதமாகத் தப்பித்து விட வேண்டும்.."

வெறிச்சோடி இருந்த தெருவிலிருந்து உடனடியாக வெளியேறிய நாங்கள், தெரு ஓரமாக இன்னும் எங்கள் வண்டி பாதுகாப்பாக நின்று கொண்டிருந்ததைக் கண்டோம்..

இரண்டு பேரும் ஏறி உட்கார்ந்ததும்,"ஐயோ இந்த வண்டி வேற சத்தம் போட்டு நம்மைக் காட்டிக் கொடுத்துவிடக் கூடாதே" என்று எனக்குள்ளே ஜெபித்துக் கொண்டே ஸ்டார்ட் பண்ணினேன்..

இஞ்சின் ஸ்டார்ட் ஆவதற்குப் பதில்,அது ஏதோ சத்தம் கொடுக்க ஆரம்பித்தது. திரும்ப சாவியைத் திருப்பினேன்..

" ஐயையோ! இந்த வண்டி காட்டிக் கொடுத்து விட்டால்,கம்யூனிஸ்ட் போலீஸ் கேட்கும் கேள்விகளுக்கு என்ன பதில் சொல்வோம்" என்று மனம் வேகமாக ஓட ஆரம்பித்தது..

"வண்டியைத் தள்ளிப் பாரு.." எனறு அவசரமாய் ரோலியிடம் கிசுகிசுத்தேன்.

கரடுமுரடாய்க கிடந்த தெருவில் இறங்கி வண்டியை அவன் தள்ள ஆரம்பிக்க, நான் திரும்ப ஸ்டார்ட் பண்ணினேன்..

இந்த முறை உறுமிக் கொண்டு ஸ்டார்ட் ஆகிவிட்டது.
"உடனே ஏறு.." என்று சொல்லவும், துள்ளி ஏறினான் ரோலி..

ஏதோ ஜேம்ஸ் பாண்ட் ஸ்டைலில் அங்கிருந்து
கிளம்பினோம்..

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!
அங்கே எதிரில் குடித்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவனும், எங்கள் டிராமாவைக் கவனித்ததாகத் தெரியவில்லை..

திரும்பும் வழியில் விபரீதம்

பதுக்கல் நடந்த இடத்திலிருந்து எவ்வளவு தூரம் போக முடியுமோ அவ்வளவு தூரம் போய்விட வேண்டுமென்ற வேகத்தில் ஆக்ஸிலேட்டரை மிதித்துக் கொண்டிருந்தேன்..

நள்ளிரவைத் தாண்டி ஒரு மணி நேரம்..
டிராஃபிக் மிகவும் குறைவாகவே இருந்தது..

சரியான ஸ்பீடில் போய்க் கொண்டிருந்தோம்..
திடீரென்று ரோட்டின் ஓரத்திலிருந்து யூனிபார்ம் போட்ட உருவம் ஒன்று சிவப்பு விளக்கை மிக வேகமாக வண்டியை நோக்கி அசைத்தது..

"நாங்கள் யாரென்று இவனுக்கு எப்படி தெரிந்தது? எனக்குத் தெரிந்த வரையில் எங்களை யாரும் பார்க்கவில்லையே ?"
என் இருதயம் வேகமாக இயங்கியது..

வண்டியை நிறுத்தினேன்.ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த அந்தப் போலீஸ்காரனின் மூஞ்சைப் பார்க்க வேண்டும் !

அவன் போடாத கெட்ட வார்த்தை இல்லை..
ஏசித் தீர்த்து விட்டான் - எல்லாம் பல்கேரிய லேங்குவேஜில் தான்!

ஒரு வார்த்தையும் புரியவில்லை..ஆனால் ஐயா செம கடுப்பில் இருக்கிறார்னு மட்டும் புரிந்தது..

அவனுக்கும் புரிந்தது..
எனக்கு அவன் வார்த்தையில் ஒன்றும் புரியவில்லை என்று..

வெறுத்துப் போய்
"speedometer" ஐ கை காட்டினான்.

அப்போது தான் புரிந்தது..
"ஓவர் ஸ்பீடு தான் காரணம்.. வேறு எதுவும் பிரச்சனை இல்லை" என்று..

நிம்மதியாய்ப் பெருமூச்சு விட்டு விட்டு ஐயா மன்னியும் என்று கையெடுத்துக் கும்பிட்டேன்..

வண்டியில் பின்னால் கிடந்த காயலான் கடை சமாச்சாரத்தை எல்லாம் கை காட்டி.."சும்மா நாங்க டூரிஸ்ட் தான்.." என்று சமாளித்தேன்...

பாஷை தெரியாமல் வெறுத்துப் போய் கடைசியாக,
“போங்கடா.."
என்று கைகாட்டினான்..

விட்டால் போதும் என்று வண்டியை மிதித்தேன்.
டென்ஷனும் தலைவலியும் அழுத்த, ரோலியிடம் வண்டியைக் கொடுத்து விட்டு பின்னால் போய், காற்றடைத்த பைக்குள் புகுந்து, படுத்துத் தூங்கி விட்டேன்..

கொஞ்ச நேரத்தில், டயருக்குக் கீழே ஏதோ ஒரு சத்தம் கேட்க..கண்திறந்து பார்த்த போது தான் வண்டி எங்கேயோ நின்று போனது ...

எங்கே பார்த்தாலும் இராணுவ வீரர்கள்

ஆழ்ந்த தூக்கத்திலிருந்த நான், சத்தம் கேட்டு..
"என்னாச்சு " என்று பதறிக் கொண்டு எழுந்தேன்..

பயத்தில், ரோலி டிரைவர் சீட்டிலிருந்து எழுந்து ஓடப் பார்த்தான்..
"என்னாச்சு ?" என்றேன்.

"என்னால இதுக்கு மேல ஓட்ட முடியாது..தூக்கம் கண்ணைக் கெட்டுது.." என்றான்.

இதற்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாது என்ற நிலைக்கு இருவரும் வந்து விட்டோம்..

ஜன்னலுக்கு வெளியே பார்த்தேன்..சிட்டியை விட்டு வெகுதூரம் வந்திருந்தோம்.கிராமப்புறம் போலிருந்தது.

“சரி..ஓரங்கட்டு..எங்கேயாவது நிறுத்துவோம்.." என்றேன்.

பக்கத்தில் ஒரு வயல் அருகே ஒரு சமமான இடத்தில் வண்டியை நிறுத்தி விட்டு என்னுடைய ஸ்லீப்பிங் bag க்குள் நுழையும் நேரத்தில் ஜன்னல் வழியே யாரோ எங்கள் வண்டியை நோக்கி வருவது தெரிந்தது..

நிலவு வெளிச்சத்தில், ஒரு soldier வருவதைப் பார்த்து விட்டேன்.
வண்டியை நேரே வந்து கொண்டிருந்தான்..
கையில் துப்பாக்கி ரெடியாக..

டைட்டானிக் கப்பல் மாதிரி மூழ்க ஆரம்பித்தேன்..

எங்கள் கையில் பைபிள் எதுவும் இல்லாவிடாலும், இந்த கம்யூனிஸ்ட் போலீஸ்காரர்கள் சந்தேகத்தில் யாரைப் பிடித்தாலும் உடனே ஜெயில் தான்..
கோர்ட்,கேஸ்,அப்பீல் ஒன்றும் கிடையாது..

நொடியில் என் மூளையில் flash அடித்தது. ஏதோ நினைத்தவனாய், உடனே வண்டிக்குள்ளிருந்த லைட்டை ஆன் பண்ணினேன்..

நேரே வந்த சோல்ஜர் வண்டிக்குள் எட்டிப் பார்த்துவிட்டு எப்படியோ திருப்தியாகிப் போய் விட்டான்..

வண்டிக்குள் இறைந்து கிடந்த tent மற்றும் trekking சாமான்களுக்காக கர்த்தரைத் துதித்தேன்..

யூகோஸ்லேவிய எல்லை

இருட்டில் மறைந்து விட்ட அந்தப் போலீஸ்காரன் போனதும்,நிம்மதியாய் மூச்சு விட்டேன்..

தூக்கம் கலைந்தது மட்டுமல்ல, நாங்கள் இருவருமே அளவுக்கதிகமான சோர்வோடு இருந்தோம்..

ஆனாலும் இன்னும் நாங்கள் கம்யூனிஸ்ட் எல்லைக்குள்ளே இருக்கிறோம் என்பதும் அது எப்போதுமே ஆபத்து தான் என்பதையும் நன்றாகவே உணர்ந்திருந்தேன்..

லேசாகக் கண்ணை மூடி தூங்க முயற்சித்தாலும், சிறு சத்தத்துக்கும் விழித்துக் கொள்ள வேண்டியதாய் இருந்தது..

இதற்குள் விடியற்காலம் ஆகிவிட்டிருந்தது..திடீரென்று ஏதோ மரக்கிளை உடைந்து விழுந்தது போன்ற சத்தம்..

பார்த்தால்,இன்னொரு சோல்ஜர் சுற்றிக் கொண்டிருந்தான்.

யோசித்தேன்.." ஏன் இவனுங்க எங்க பழைய வண்டியையே சுத்தி சுத்தி வர்றானுங்க ?"

அப்போது தான் புரிந்தது..
யார் இந்த மிலிட்டரிகாரர்கள் என்று..
நாங்கள் நினைத்ததை விட மிக அதிகமாகவே நாங்கள் யூகோஸ்லேவிய எல்லைக்கு அருகில் வந்திருக்கிறோம்..

நாங்கள் நினைத்தபடி இவர்கள் எங்களை சந்தேகப்படவில்லை.
ஆனால் இவர்கள் ரோந்து சுற்றும் எல்லை பாதுகாப்புப் படையினர் என்பது மெதுவாகத் தான் புரிந்தது..

அடுத் சில மணி நேரங்கள் அங்கேயே ரெஸ்ட் எடுத்து விட்டு யூகேஸ்லேவியாவுக்குள் நுழைய ஆயத்தமானோம்.

ஒரு அடையாளம்

நாங்கள் ஏற்கனவே கிரீஸ் வழியாக பல்கேரியாவுக்குள் நுழைந்த அதே பார்டர் வழியாக வெளியேறினால்,

"ஏன் இவ்வளவு குறுகிய நாட்களுக்குள் திரும்புகிறீர்கள் ? இங்கு இவ்வளவு சீக்கிரம் முடிந்த வேலை என்ன?"

என்பது போன்ற கேள்விகளைத் தவிர்ப்பதற்காக, யூகோஸ்லேவியா மூலம் வேறு ஒரு வழியாக வெளியேற முடிவு செய்தோம்..

அப்படி செய்தால், ஏற்கனவே சந்தித்த செக்யூரிட்டி கார்டுகளைத் தவிர்க்கலாம் என்று நினைத்து,காலையில் வேறு ஒரு பார்டர் நோக்கி பயணமானோம்..

இன்னும் பதில் தெரியாத கேள்வி ஒன்று எனக்குள் உறுத்திக் கொண்டே இருந்தது.

இப்போது க்ராஸ் பண்ணப் போகும் யூகோஸ்லேவிய எல்லையில், "பல்கேரியாவில் என்ன வேலையாக, எங்கெங்கே போனீர்கள்? யாரையெல்லாம் சந்தித்தீர்கள் ?" என்று கேள்விகள் கேட்கப் பட்டால் என்ன பதில் சொல்வது ?

இப்படி ஒரு கேள்வி எழ வாய்ப்பு இல்லைதான். இருந்தாலும் கேட்கப்பட்டால் என்ன பதில் சொல்வது ?

குழப்பம் தீரவில்லை.
கிறிஸ்தவனாய் இருப்பதால் பொய் சொல்லவும் முடியாத இக்கட்டான நிலை..

" ஆண்டவரே ! இந்த மாதிரி தர்மசங்கடமான சூழ்நிலை வராதபடி காத்துக் கொள்ளுமே !

நாங்கள் பிரச்சனையின்றி எல்லையைத் தாண்டி விட்டால், அதையே,நாங்கள் சரியான நபரிடம் தான் பைபிள்களை ஒப்படைத்து வந்தோம் என்று அடையாளமாக எடுத்துக் கொள்வேன்.." என்று ஜெபித்தேன்..

நாங்கள் சந்தித்த பல்கேரிய உதவி பாஸ்டர் உண்மையான மனிதர் தான்.

ஆனால் கம்யூனிச அரசாங்கத்துக்கு உளவு பார்க்கும் ஒரு மனிதனோடு இந்த ஆள் உடன் ஊழியராக இருப்பது தான் ஒரு நெருடலான விஷயமாக இருந்தது..

சொல்லப் போனால், ஒரு வகையில் ரோலியும் நானும் நிச்சயமில்லாத ஒரு காரியத்தை வேறு வழியின்றி ரிஸ்க் எடுத்து தான் செய்து விட்டு வந்திருந்தோம்..

ஜெயம் ஜெயம் இயேசு நாமத்தில்

காலை 7 மணி..

யூகோஸ்லேவியா
பார்டர் செக்போஸ்ட்..

எங்களுக்கு முன்பாக நின்று கொண்டிருந்த சில வண்டிகளுக்குப் பின்னே வரிசையில் நாங்கள்..

சற்று நேரத்தில்..
"பாஸ்போர்ட் ப்ளீஸ்.." என்று கேட்டான் ஒரு guard..

பாஸ்போர்ட்டைக் கொடுத்ததும் உள்ளே BP ஏறியது.ஒளித்து மறைக்க எங்களிடம் ஒன்றுமில்லாவிட்டாலும்,
பயமும் டென்ஷனும் விலகாமலே இருந்தது..

பாஸ்போர்ட்டில் இருந்த முத்திரையைப் பார்த்த அந்த கார்டு,"இவ்வளவு சீக்கிரம் பல்கேரியாவுக்குள் போய்விட்டுத் திரும்பும் அளவுக்கு அப்படி என்ன உங்கள் அவசரமான ட்ரிப் என்று கேட்டு விடுவானோ..?
இருதயம் ஏகத்துக்கும் அடித்துக் கொண்டிருந்தது..

பாஸ்போர்ட்டைப் பார்த்து தலையசைத்துக் கொண்டே வண்டியைச் சுற்றி வந்தவன்..பின் கதவைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தான்..

Tent சாமான்கள் மேலே வேண்டுமென்றே போட்டு வைக்கப்பட்டிருந்த துருப்பிடித்த அயர்ன் பாக்ஸைப் பார்த்து சிரித்துக் கொண்டவன்..

கதவைச் சாத்திவிட்டு..
பாஸ்போர்ட்டில் சீல் அடித்துக் கொடுத்து விட்டு,கேள்வி ஒன்றும் கேட்காமல்
"Have a good journey”
என்று சந்தோஷமாய் கையசைத்தான்..

பார்டர் க்ராஸ் பண்ணுவது இவ்வளவு சுலபமாய் இருந்திருக்க வாய்ப்பில்லை..எங்கள் ஜெபத்துக்கு பதில் மட்டுமல்ல,எங்கள் மிஷன் வெற்றிகரமாக முடிந்ததற்கு தேவன் தந்த அடையாளம் இது..

யூகோஸ்லேவியாவுக்கும் கிரீஸூக்கும் நடுவே எந்தச் சிக்கலையும் சந்திக்கும் அளவுக்கு எங்கள் மனதிலோ உடம்பிலோ தெம்பு இல்லை..

முந்தாநாள் தான் கிரீஸை விட்டு பல்கேரியாவுக்குள் போயிருக்கிறோம்..ஒரு நாள் விட்டு மறுநாளே ஏன் வேறு வழியாக கிரீஸூக்குள் திரும்ப வேண்டும் ?

ஒரு வேளை இப்படி ஒரு சந்தேகம் அவர்களுக்கு வந்திருக்குமானால் வண்டியை அக்கு வேறு ஆணி வேறாக அலசியிருப்பார்கள்..

பல்கேரிய எல்லைக்குள் நுழையும் போதும், வெளியேறும் போதும், எங்களோடு இருந்த தேவ கரத்தையும் பாதுகாவலையும் நன்றியோடு நினைத்தேன்..

8 மணி நேரம் கழித்து, 3 மணிக்கு தூசி படிந்த எங்கள் வண்டி ஏத்தென்ஸிலுள்ள கத்ரீனியில் யூத் கேம்ப்புக்குள் நுழைந்தது..

சரீரம் பெலனற்று சக்கையாய்ப் போயிருந்தாலும், ஆவி களிகூர்ந்து கொண்டிருந்தது..

வண்டியின் பெட்ரோல் டாங்க் காலியாகிப் போய், பாக்கெட்டில் சில சில்லறைக் காசுகள் மிஞ்ச வந்து சேர்ந்திருந்தோம்..

ஆனாலும் தேவன் எங்கள் விசுவாசப் பயணத்தை கனப்படுத்தியிருந்தார்.

நாங்கள் புறப்படுமுன் எங்கள் ஜெபக்குழு மூலம் தீர்க்கதரிசனமாய்க் கொடுக்கப்பட்ட வசனத்தின்படியே, உயிரைப் பணயம் வைத்து நாங்கள் மேற்கொண்ட பயணம், மூன்றே நாட்களில் வெற்றியோடு முடிந்தது !

அல்லேலூயா !

உடைத்தெறி...

ஆப்பிரிக்க எல்லைகளுக்குள்ளே...

(பகுதி-2)

(பகுதி-2)

அட்டவணை

1. எல்லைகள் விஸ்தாரமாகட்டும்.................................... 115

2. ஆப்பிரிக்காவுக்குள் ஒரு குட்டி கம்யூனிச சீனா............. 122

3. திட்டம் பகிர்ந்து கொள்ளப்பட்டது............................... 130

4. உன்னை அனுப்புகிறவர் நானல்லவா ?........................ 137

5. டெம்க்கே நோக்கி... 144

6. கனவு பலித்தது.. 152

7. கிஸ்மு மிஷன் காம்ப்வுண்ட்.. 160

8. உடனிருந்த தேவகரம்... 167

9. ஆண்டவரே இவன் கண்களை மூடிப்போடும்!............... 174

10. எல்லாவற்றுக்கும் முடிவு சமீபமாயிற்று....................... 183

11. உன் பாஸ்போர்ட் எங்கே?... 192

எல்லைகள் விஸ்தாரமாகட்டும்

எங்கள் பல்கேரிய ட்ரிப் எங்கள் School Of Evangelisத்தின் சிகரமாய் அமைந்தது..

அது தேவனின் பலத்த கிரியைகளைக் காண என் கண்களைத் திறந்தது..

இதற்கு முன், எனது வகுப்பறை நாட்களில் பிரதர் ஆண்ட்ரூ தனது அனுபவங்களை விளக்கிக் கூறியதைக் கூர்ந்து கவனித்திருக்கிறேன்..

ஆனால் இப்போதோ,
கர்த்தருக்காகக் கடக்கக் கூடாத எல்லைகள் என்று எதுவுமில்லை என்ற
உண்மையை என் சொந்தக் கண்களாலேயே கண்டேன்..

சமீபத்திய பல்கேரிய பயணத்தின் வெற்றி,அடுத்து, தேவனுக்காக எட்டப்படாத சிகரங்களைத் தொட்டுப் பார்த்துவிட என்னை உந்தித் தள்ளிக் கொண்டிருந்தது..

இப்போது நாங்கள் Belgradeல் எங்கள் கேம்ப் சைட்டில் இருந்தோம்.
ஒரு நாள் மாலை எங்கள் டீம் லீடர் லாரன் என்னிடம் வந்து...

“ ரூடி, வா ! காலாற கொஞ்சம் வாக்கிங் போய்ட்டு வரலாம்.." என்றார்..
அப்படியே நடந்து பக்கத்திலுள்ள காட்டுப் பக்கமாகச் சென்றோம்..

லாரன் நேரடியாக விஷயத்துக்கு வந்தார்..

" ரூடி, நீ ஒரு யூரோப்பியனாக இருப்பதால், வெறும் ஐரோப்பிய நாடுகளின் அனுபவம் மட்டுமல்ல, அதைத் தாண்டிய எல்லைகளின் அனுபவங்களும் உனக்குத் தேவை என்று உணருகிறேன்..

Mr.Floyd McClung தலைமையிலான உலகம் முழுவதும் சென்று வரும் டீம் ஒன்று இன்னும் ஒரு வாரத்தில் கென்யா வருகிறது..
நீயும் அவர்களோடு சேர்ந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன்.." என்றார்

" ஆப்பிரிக்காவின் கென்யா !”

அல்லேலூயா !!!!!!!

கடக்கப் போகும் புதிய எல்லைகள்

ஆப்பிரிக்கா, நான் அறியாத ஒரு புதிய கண்டம்..

கடக்க வேண்டிய புதிய எல்லைகளும்,ஊடுருவிச் செல்ல வேண்டிய வித்தியாசமான கலாச்சாரங்களும், எதிர்கொள்ள வேண்டிய ஏராளமான சவால்களும் நிறையவே நிறைந்த இடம்..

என் மனதில், நான் சிறு வயதில் கேட்டிருந்த ஆப்பிரிக்க மிஷினரிக் கதைகளின் ஞாபகம் வந்து அலை மோதின..

ஆப்பிரிக்க சுதேசிகளின் ஈட்டியும் வில்லும், வனவிலங்குளின் கோரமுகங்களும், திக்குத்தெரியாக் காட்டினுள் அலைந்து திரிவதும் என் முன்னே வந்து நின்றது..

உண்மையிலே நான் சந்திக்கப் போவது இவைகளைத் தானோ ?

அப்படியிருக்க வாய்ப்பில்லை என்று ஒருபக்கம் தோன்றினாலும், லாரனும் நானும் கேம்ப்புக்குத் திரும்புமுன்னே என் மனம் சந்தோஷத்தில் அமைதியாகி..

என் சிந்தனைகள் சிறகடித்து கென்யாவின் நைரோபியை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது..

சரியாக இரண்டு வாரம்..

நான் கென்யா போக வேண்டிய விமான டிக்கெட்டுக்கான தொகை ஸ்விட்சர்லாந்திலுள்ள என் தாய் சபை மூலம் சந்திக்கப்பட, இரண்டு வாரத்தில் நான் நைரோபி போய் சேர்ந்தேன்..

எட்டு அமெரிக்கர்களும் இரண்டு நியூசிலாந்தினரும் கொண்ட Round-the-World team எனக்கு முன் அங்கு வந்து சேர்ந்திருந்தது..

எனக்குள்ளே இருந்த உற்சாகமும் உத்வேகமும் அவர்களிலும் காணப்படுமோ என்று யோசித்துக் கொண்டிருந்த நான்..

அவர்கள் வேகத்துக்கு ஈடுகொடுக்க வேண்டியதாகிப் போனது உண்மையிலே பெரிய விஷயம் தான் !

ஆப்பிரிக்காவில் முதல் நாள்

ஆப்பிரிக்காவில் நான் கால் வைத்த முதல் நாள் மதியம்..

ஏர்போர்ட்டில் என் அப்பாவின் மிஷினரி நண்பர்கள் வந்து என்னை Round-the -world Team தங்கியிருந்த கெஸ்ட் ஹவுஸுக்கு என்னை அழைத்துக் கொண்டு போனார்கள்..

அங்கு வாசலிலே டீம் லீடர் Floyd McClung என்னை சந்தித்தார்.என்னை விட உயரமாயிருந்த அவர் அவசர அவசரமாய் என் சூட்கேஸை தானே வாங்கிக் கொண்டு என் அறைக்கு அழைத்துக் கொண்டு போனவர்..

"நாம் உடனே கிளம்ப வேண்டும் ரூடி..இப்போது 40 நிமிடத்தில் மத்தியான மீட்டிங் ஒன்று இருக்கிறது" என்றார்.
டீமிலிருந்த மற்றவர்கள் ஏற்கனவே போய் விட்டிருந்தனர்..

"சர்ச் சர்வீஸ் முடிந்ததும் சென்ட்ரல் சிட்டி பார்க்கில் ஓப்பன் ஏர் மீட்டிங் இருக்கிறது.. நீ பிரசங்கம் பண்றியா ரூடி ?" என்றார் Floyd..

நான் இங்கு வந்ததே இதற்குத் தானே ? ஒரு சிறிய வாய்ப்பைக்கூட நான் இழக்கத் தயாராயில்லை. ஆப்பிரிக்காவின் வெயிலும் வெப்பமும் எனக்குப் புதிதாக இருந்தாலும் உடனே சரி என்று ஒத்துக் கொண்டேன்..

பாடல்கள் பாட ஆரம்பித்ததுமே கூட்டம் கூடியது.மிகுந்த விடுதலையோடு கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டேன்..

திறந்தவெளி மீட்டிங் முடிந்தவுடனே அங்குள்ள நேஷனல் யூனிவர்சிட்டிக்குப் போனோம்.

500 கென்ய மாணவர்கள் கூடியிருந்தனர்.
ஏறக்குறைய எல்லாருமே கிறிஸ்துவை அறியாதவர்கள்.

Floyd ன் செய்தி நேரடியாக ஒவ்வொருவரையும் தொடுவதாக இருந்தது.
செய்தியின் தீவிரத்தினால் ஒருவராவது அசையவில்லை..

நானோ அவரையே பார்த்துக் கொண்டு நின்றேன்..

கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார் ?

அடுத்து வந்த நாட்களில் ஆப்பிரிக்காவின் வாழ்க்கை முறையை நான் வேகமாகப் புரிந்து கொள்ள ஆரம்பித்தேன்..

தண்ணீரைக் கொதிக்க வைத்துக் குடிக்காமல் போனால் என்னவாகும் என்பதை நேரில் கண்டேன்..

இதில் அஜாக்கிரதையாய் இருந்தால் இரத்த பேதியும்,வயிற்றுப் போக்கும் தொற்று
நோய்களுடன் சேர்ந்து,
முழு டீமையும் ஒன்றுமில்லாமல் முடக்கிப் போடும் அபாயம் வெளிப்படையாகவே காணப்பட்டது..

இது போக,அங்கு காணப்பட்ட ஒரு வகையான புல் கீற்றுகளுக்கும் காய்ந்த இலைதழைகளுக்கும் நடுவே மறைந்து கிடக்கும் ஒரு நூதனமான பாம்பு வகையை எப்படி இனம் கண்டுபிடிப்பது என்பதும் எங்களுக்கு சொல்லித்தரப்பட்டது..

எனவே எங்கள் சொந்த நாட்டில் இருந்தது போல் அல்ல, இங்கே ஆப்பிரிக்காவில் உள்ள சீதோஷ்ண நிலைக்கு ஏற்றபடி காலைவேளையின் குளிர்ந்த நேரத்திலும்,

மாலை வெயில் தாழ்ந்த பின்னும்,ஊழியம் செய்வது என்றும், மதியம் ஓய்வு எடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது..

ஆயினும் ஆப்பிரிக்க வெயிலோ,காடு மேடுகளோ, வனவிலங்குகளோ கிறிஸ்துவின் அன்பைவிட்டு எங்களைப் பிரிக்க முடியவில்லை..

எங்கள் லீடர் Flyod, எங்களுக்குக் கிடைத்த எல்லாத் தருணங்களையும் வாய்ப்புக்களையும் உபயோகப் படுத்திக் கொள்ள எங்களை ஊக்கப்படுத்தினார்..

அதன்படி, சபை சார்ந்த ஸ்கூல்கள், காலேஜ்கள் மட்டுமன்றி,அங்கிருந்த மற்ற எல்லாப் பள்ளிகள்,கல்லூரிகள் யுனிவர்சிட்டிகள் சிறிய, பெரிய சபைகள் என்று எதையும் விட்டு வைக்காமல் சுவிசேஷ ஊழியத்தில் பம்பரமாய் சுழன்றோம்..

அடுத்த அஸைன்மென்ட்

Floyd ன்
தலைமைத்துவத்தின் மேல் எனக்கிருந்த மரியாதை நாளுக்கு நாள் அதிகரிக்க ஆரம்பித்தது..

தனக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பைக் கூட நழுவ விடாத ஒரு மனிதர் அவர்.

சுவிசேஷம் அறிவிக்க வாய்ப்பே இல்லாத நாட்களில் கூட, வீடு வீடாகச் சென்று கைப்பிரதிகள் கொடுக்கவும், தெருக்களில் மக்களை சந்தித்து தனி ஆள் ஊழியம் செய்யவும் எங்களை அனுப்பி விடுவார்..

Floyd ன் கீழ் இந்த டீமுடன் கென்யாவில் அடுத்த மூன்று மாதமும் என்னென்ன செய்யப் போகிறேன் என்ற சந்தோஷத்தில் என் ஒவ்வொரு நாளையும் பயனுள்ளதாக்கிக் கொண்டேன்..

நைரோபி வந்து ஒரு வாரம் சென்று,ஒரு நாள் மதியம் கெஸ்ட் ஹவுஸின் ஹாலில் கொஞ்சம் ரிலாக்ஸாக பைபிள் படித்துக் கொண்டிருந்தேன்..

மத்தியானத்தின் எங்கள் ஓய்வுநேரம் அது!

திடீரென்று Floyd வந்து..
" ஹாய் ரூடி, டீ சாப்பிடுறியா ?" என்று கேட்டுக் கொண்டே..
கோப்பையில் டீ நிரப்பிக் கொண்டு என் பக்கத்தில் நாற்காலி போட்டு உட்கார்ந்தார்.

"நல்லநேரம் ரூடி..தனியா இருக்கிற..உங்கிட்ட கொஞ்சம் பேசணும்..
உனக்கு ஒரு அசைன்மென்ட் வச்சிருக்கிறேன்..
கேட்டால் உனக்கே இன்ட்ரஸ்ட்டிங்கா இருக்கும்.." என்றார்.

" அடுத்த அஸைன்மென்ட்டா ?
எனக்கா ?
கேட்டவுடனே டீ குடிக்கிறதை மறந்து விட்டு நாற்காலியை முன்னுக்கு இழுத்துப் போட்டு தீவிரமாய் கேட்க ஆரம்பித்தேன்..

ஆப்பிரிக்காவுக்குள் ஒரு குட்டி கம்யூனிச சீனா

அடுத்த அஸைன்மென்ட்டா?

Floyd என்ன சொல்ல வருகிறார்?
கொஞ்ச நாட்கள் முன்பு அவரோடு பேசிக்கொண்டிருந்த போது அவர் சொன்ன சில காரியங்கள் ஞாபகம் வந்தது..

இங்கு கென்யாவுக்கு வந்த Round-the-World Team வரும் முன்பு அந்த டீம் சில நாட்கள் இந்தியாவில் இருந்தது..

அங்கே இருந்த நாட்களில் அவர்கள் அங்கே பிரதர் ஆண்ட்ரூவை சந்தித்தனர்.
இந்த டீம் அடுத்து போகப் போவது ஆப்பிரிக்கா என்று அவர் கேட்டவுடனே..

" Floyd, நீங்கள் அங்குள்ள கம்யூனிச சீனர்களைக் கண்டிப்பாகக் கண்டுபிடித்து எப்படியாவது அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க முயற்சி செய்யுங்கள்.." என்று சொல்லியிருந்தார்..

" எனக்குப் புரியலையே Floyd ?கம்யூனிஸ்ட் சைனீஸா? ஆப்பிரிக்காவிலா ?
புதுசா கேள்விப்படுறேனே? "
என்றேன்..

Floyd தெளிவாகச் சொல்ல ஆரம்பித்தார்..

"சில வருடங்கள் முன்பு..
30 சிறிய ஆப்பிரிக்க நாடுகள் சேர்ந்து,தங்கள் நாட்டு முன்னேற்ற பணித் திட்டங்களுக்காக மேற்கத்திய நாடுகளிடம் உதவி கேட்டன..

மேற்கத்திய நாடுகள் உதவிக்கரம் நீட்ட முன்வராமல் போகவே..
அந்த ஆப்பிரிக்க காலனி நாடுகள் மெயின்லாண்ட் சைனாவை உதவிக்கு நோக்கிப் பார்க்க..
சைனா உடனே உதவ முன்வந்தது..

உடனே ஆயிரக்கணக்கான சீன இஞ்சினியர்களும், தொழில் நுட்ப வல்லுநர்களும்,

விவசாயத் துறையிலும், பாசனத் துறையிலும், ரேடியோ ட்ரான்ஸ்மிஷன் மற்றும் கட்டுமான வேலையிலும் கடந்த சில வருடங்களில் ஆப்பிரிக்காவுக்குள் தீவிரமாக வந்து இறங்கினர்..

வந்தவர்கள், கூடவே தங்கள் மார்க்ஸிய கம்யூனிசக் கொள்கைகளையும் தீவிரமாகப் பரப்புவதில் மும்முரமாக இருந்தனர்..

இவைகள் எல்லாவற்றிலும், மிகப்பெரிய டெவலப்மண்ட் project,
Tanzania வின் TAN-ZAM எனப்படும் ரெயில்வே ப்ராஜக்ட்..

இந்த ரெயில்வே லைன்..
copper வளம் மிக்க Zambia வையும் Dar-e-Salam என்ற துறைமுக நகரத்தையும் இணைக்கும் 1500 கிமீ தூரமுள்ள மிக முக்கியமான இருப்பு ரெயில் பாதை..

இந்த ரெயில்வே வேலையில் ஆயிரக்கணக்கான சீனர்கள் களமிறங்கியிருந்தனர்..

இவைகள் யாவையும் பிரதர் ஆண்ட்ரூ விபரமாய் சொல்லிவிட்டு Floyd க்கு ஒரு சவால் விடுத்தார்..

" Floyd, இன்று வரை எந்த மேல் நாட்டவரும் சுவிசேஷம் அறிவிக்கும் நோக்கத்துடன் சைனாவுக்குள் போக முடியாது..

ஆனால் நீங்கள் போகும் ஆப்பிரிக்காவுக்குள் ஒரு குட்டி சைனாவையே தேவன் கொண்டு வந்து உங்கள் கையில் கொடுக்கிறார்..

இது உங்களுக்கு தேவன் தரும் ஒரு அரிய வாய்ப்பு.. எப்படியாவது இதை பயன்படுத்தி இந்தக் கம்யூனிச சீனர்களுக்கு சுவிசேஷம் அறிவக்க இது உங்களுக்கு முன்னிருக்கும் சவால் !

"இது தேவன் தரும் அஸைன்மன்ட் !
உங்க டீமோட சேர்ந்து புகுந்து விளையாடுங்க Floyd.. !"

"இது தேவன் தரும் அஸைன்மன்ட்...!!!"

- இந்த வார்த்தைகள் Floyd ஐ தூங்க விடவில்லை..

உகாண்டா

இந்த அஸைன்மென்ட் எளிதான ஒன்றல்ல..

சைனாவிலிருந்து வந்துள்ள இந்தச் சீனர்களை சந்திப்பது அவ்வளவு ஈஸி இல்லை.

குழுவாய் தங்கியிருக்கும் அவர்கள் மற்ற ஆப்பிரிக்கர்களோடு கலந்திருக்க அனுமதிக்கப்படுவதில்லை..

அவர்களோடு வேலையில் ஈடுபடும் ஆப்பிரிக்கர்கள் மட்டுமே அவர்களோடு தொடர்பில் இருக்க முடியுமே அன்றி வெளியில் உள்ளவர்கள் அவர்களை சந்திப்பது சாத்தியமில்லாதிருந்தது..

ஆனால் இந்த ஒரு காரியம் தான் எனக்கு இன்ட்ரஸ்ட்டிங்காக இருந்தது.உண்மையில் இது போன்ற மிகக் கடினமான சவால்களை எதிர்கொள்ளத் தான் நானும் அதிகம் விரும்பினேன்..

என்னுடைய இப்படிப்பட்ட குணத்தைத் தான் Floyd ம் எதிர்பார்க்கிறாரோ ?

"சரி, Floyd, சொல்லுங்க என்ன அஸைன்மென்ட் ?"

Floyd பேச ஆரம்பித்தார்..

"ரூடி, ஸ்விட்சர்லாந்திலுள்ள உங்க அப்பா சபையிலிருந்து சப்போர்ட் பண்ணப்படுகிற, உகாண்டாவிலுள்ள ஒரு மிஷினரி, ஒரு டீமை உகாண்டாவுக்கு அனுப்பும்படி என்னிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்..

ஆகவே ஒரு சின்ன டீமை அனுப்பலாம் என்று நினைக்கிறேன்.நீ அதை lead பண்ண முடியுமா ?"

"ஐயையோ உகாண்டாவா?" என்று சொல்ல வேண்டும் போலிருந்தது..

ஆனாலும் எனக்குள்ளிருந்த சிறிய ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டேன்.காரணம் உகாண்டாவைப் பற்றி நான் கேள்விப்பட்டிருந்தவைகள் என்னவோ வேறு..

இருந்தாலும் இது,ஒரு புது எல்லையைத் தாண்டக் கிடைத்த புது சேலஞ்ச் என்பதால் எனக்குள் எழுந்த உணர்வுகளை வெளிக்காட்டிக் கொள்ளாமல்..

" ஓகே Floyd, நான் இந்த டீமை உகாண்டாவுக்கு நடத்திச் செல்கிறேன்.." என்று சம்மதித்தேன்..

ஸொரோட்டி அவுட்ரீச்

உகாண்டா செல்லும் 5 பேர் கொண்ட எங்கள் டீம் உருவானது..

என்னோடு ரமோனா, நட்டாலி என்ற இரு அமெரிக்க வாலிபப் பெண்களும்,டான் என்ற அமெரிக்க வாலிபனும், டாம் என்ற நியூசிலாந்து பையனும் ஆக 4 பேர் இணைந்தனர்..

முதலில் உகாண்டாவில் உள்ள மபாலே என்ற இடத்தில் ஏற்னவே இருந்த மிஷினரிகளோடு சில நாட்கள் செலவிட்ட நாங்கள், நாட்டின் வடமேற்கில் உட்பகுதியிலுள்ள ஸொரோட்டி என்ற இடத்தில் அதிக நாட்கள் செலவிட்டோம்..

ஸொரோட்டியின் மிஷினரி பங்களாவின் அருகிலே 100 பேர் அமரக்கூடிய செங்கல் கட்டிட ஆலயம் ஒன்று இருந்தது..

ஆலயத்தின் பின் பகுதியில் சபையின் ஆப்பிரிக்கப் போதகர் இருந்தார்..

எங்க் அவுட்ரீச் ஊழியத்தில் உதவி செய்ய அவரோடு 6 உகாண்டா விசுவாசிகளும் இரண்டு முழுநேர சுவிசேஷகர்களும் தங்கியிருந்தனர்..

எங்கள் programme படி அங்கிருக்கும் நாட்கள் கொஞ்சமானதால், ஒவ்வொரு வாய்ப்பையும் முழுமையாக பயன்படுத்த முடிவு செய்து, முதல் வாரத்தில்,வீடு வீடாகச் சென்றும், தெருக்களிலும்,மார்க்கட் பகுதிகளிலும் சுவிசேஷம் அறிவித்தோம்.

அவர்களுக்கு நேரம் ஒரு பொருட்டாக இல்லாததால் சிலர் வெகு நேரம் வரை கூட நாங்கள் சொல்வதைக் கவனித்துக்
கேட்டார்கள்..

அந்த ஆலயத்திலிருந்து எங்களுக்கு உதவியாக வந்த சகோதரர்கள் எங்களுக்கு மொழி பெயர்த்ததால் மொழிப் பிரச்சனை தெரியவில்லை..

முதல் வாரத்தில் ஒருவரையும் கர்த்தருக்காக ஆதாயப்படுத்த முடியாவிட்டாலும், நிறையவே விதை விதைத்திருந்தோம்..

அடுத்த ஞாயிறு சபைக்கு வரும்படி அநேகரை அழைத்தோம். அடுத்த ஞாயிறு ஆலயம் நிரம்பி வழியும் என்று நான் சந்தோஷத்தில் மூழ்கியிருந்தேன்..

TAN -ZAM அழைக்கிறது

Soroti யில் எங்கள் ஊழியம் உற்சாகமாகவும் கனியுள்ளதாகவும் இருந்தது.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சுவிசேஷத்துக்காக வாசல்கள் திறக்கப்பட்டது.

தெருக்களிலும் மார்க்கெட் பகுதிகளிலும் தொடர்ந்து ஓப்பன்- ஏர் மீட்டிங்களை நடத்திக் கொண்டிருந்தோம்.

இதற்கிடையில் நாங்கள் உகாண்டாவில் சந்தித்த பிசாசின் போராட்டங்களை ஜெபத்தில் ஒருமனதோடு முறிய அடித்தபோது, சொரோட்டியில் எங்கள் கடைசி இரண்டு வார ஊழியங்கள் இன்னும் பயனுள்ளதாக இருந்தது..

இவைகள் ஒரு பக்கம் ஆசீர்வாதமாக நடந்து கொண்டிருந்தாலும், என் மனமோ ஒரு புதிய வழி நடத்துதலுக்காக ஏங்கிக் கொண்டிருந்தது.

Tan-Zam ரெயில்வே ப்ராஜக்ட்டில் வேலை செய்யும் கம்யூனிஸ்ட் சைனீஸ் பற்றி கேள்விப்பட்ட நாளிலிருந்தே எப்படியாவது அவர்களை சந்தித்து சுவிசேஷம் கொடுத்தே ஆக வேண்டும் என்ற வேகமும் அதற்கான வழியைக் கண்டுபிடிக்கும் ஆர்வமும் நாளுக்கு நாள் எனக்குள் அதிகரித்துக் கொண்டே இருந்தது..

Tan-Zam ரெயில்வே வேலை உகாண்டாவின் தெற்கு எல்லையிலுள்ள Tanzaniaவில் நடந்து கொண்டிருந்தது.

நாங்கள் இப்போதிருக்கும் சொரோட்டியிலிருந்து உகாண்டாவின் தலைநகர் கம்ப்பாலாவுக்கு 3 மணி நேர பஸ் பயணம்,பின் அங்கிருந்து Tanzania வின் தலைநகர் Dar-es-Salaam க்கு ஒன்றரை மணிநேர flight..

மொத்தத்தில் 5 மணி நேரத்திற்கும் குறைவான நேரத்தில் Tanzania போய் சேர்ந்து விடலாம் என்று தெரிந்த போது,

டீமிலிருந்து நான் மட்டும் சில நாட்கள் பிரிந்து Tanzania வுக்குள் போய் உண்மை நிலவரம் என்னவென்றும் கம்யூனிஸ்ட் சைனீஸை சந்திக்கும் வாய்ப்புக்களை அறிந்து வரும்படிக்கும் போய் வந்தால் என்ன என்று ஒரு திட்டம் என் மனதில் உருவானது..

இதற்கு டீம் லீடர் Floyd அனுமதி தருவார் என்ற நம்பிக்கையும் எனக்கிருந்தது.

ஏனென்றால்,"சுவிசேஷம் அறிவிக்கக் கிடைக்கும் ஒரு வாய்ப்பையும் நழுவ விட்டுவிடாதே " என்பதே பிரதர் ஆண்ட்ரூ மற்றும் Floydன் தாரக மந்திரமாக இருந்தது..

ஒரு வேளை மூங்கில் திரை நாடான சீனா,வெளிநாட்டு மிஷினரிகளை தடை செய்திருக்கலாம்..

ஆனால் இங்கு ஆப்பிரிக்காவுக்குள் வந்திருக்கும் அந்தக் கம்யூனிஸ்ட் சைனாக்காரர்களை சந்திப்பதிலிருந்து எங்களை எது ஒன்றும் தடை செய்யப் போவதே இல்லை என்ற முடிவோடு எழுந்தேன்..

உறுதி செய்யப்பட்ட அழைப்பு

இந்தக் காரியங்கள் எதையும் பற்றி என் டீமிலுள்ள மற்றவர்களுக்கு நான் எதுவும் சொல்லிக் கொள்ளவில்லை..

ஆனால் இந்தத் திட்டம் எனக்குள் உருவாகி உறுதியாகி திடப்படவே, கர்த்தர் என்னோடு பேசுகிறார் என்பதை மட்டும் உறுதியாய் நம்பினேன்..

இருந்தாலும் ஒரு நாள் இரவு எல்லோரும் படுக்கைக்குப் போன பின்பு, கர்த்தரிடத்திலிருந்து திட்டமான,உறுதியான வழிநடத்தலைப் பெறும்படி ஜெபத்தில் உட்கார்ந்தேன்..

முதலில் எனக்குள் அறிக்கை செய்யப்படாத பாவமோ அல்லது என்னையே பெருமைப் படுத்தும் நோக்கமோ இருக்கிறதோ என்று என்னையே ஆராய்ந்து பார்த்தேன்..

அதன்பின் கடைசியாக இந்த மிக முக்கியமான கேள்வியைக் கேட்டேன்..
"தேவனே,Tanzaniaவிலுள்ள கம்யூனிஸ்ட் சைனீஸை சந்திக்க என்னை அனுப்ப நீர் விரும்புகிறீரா ?"

சற்று நேரம் அமைதியாக அமர்ந்திருந்தேன்.
அப்போது மிகத் தெளிவான கூர்மையான ஒரு தேவ வசனம் மனதில் பளிச்சிட்டது..

ஏசாயா 52..
அதில் என்ன இருக்கிறது என்று உடனே தெரியாவிட்டாலும், படிக்க ஆரம்பித்த போது 7ம் வசனம் முதல்,தொடர்ந்து ஒரு வெளிச்சம் அந்த வசனங்களில் விழுந்து மின்னியது..

"புறப்படுங்கள், புறப்படுங்கள்..
இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களைக் காக்கிறவராயிருப்பார்.."
(ஏசா 52:11,12)

படித்து முடித்ததும்,கர்த்தர் என்னை அனுப்ப விரும்புவது திட்டமானது என்று புரிந்தது..

நான் Tanzania வுக்குப் போக வேண்டும்.ஆனால் இப்போது எனக்குள் இருந்த ஒரே கேள்வி..

"டீமிலுள்ள மற்றவர்களுக்கு இதை எப்படி தெரியப்படுத்துவது ?"

திட்டம் பகிர்ந்து கொள்ளப்பட்டது

அடுத்த நாள் காலை என் அறையை விட்டு வெளியே வந்த போது, என் டீம் மேட் ரமோனா கிச்சனில் breakfast ரெடி பண்ணிக் கொண்டிருந்தாள்..

உகாண்டா ஊழியர் சார்ல்ஸ் மார்க்கெட்டிலிருந்து அப்போது தான் சூடாக bread வாங்கி வந்திருந்தார்..

Dan ஏற்கனவே டைனிங் டேபிளில் உட்கார்ந்திருந்தான். அவர்கள் சாப்பிட ஆரம்பித்தார்கள்..

எனக்குப் பசியில்லை.
சாப்பிடும் மூடிலும் இல்லை..என் திட்டத்தை எப்படி இவர்களுக்குத் தெரியப்படுத்துவது என்று புரியாமல் யோசனையில் இருந்தேன்..

ஏதோ புரிந்து கொண்ட ரமோனா.."என்ன ரூடி , எல்லாம் ஓகே தானே? என்ன யோசனை என்பது போல் கேட்டாள்..

"ஆமா ரூடி..ஏதோ உனக்குள்ளே ஓடிட்டு இருக்கிற மாதிரி தெரியுது..என்னாச்சு ?" என்று அவள் கேட்டுக் கொண்டிருக்கும் போதே..
டாமும் நட்டாலியும் உள்ளே நுழைந்தனர்..

"ஓகே..உங்க எல்லார் கிட்டயும் ஒரு விஷயம் சொல்லணும்..இது தான் சரியான சந்தர்ப்பம்னு நினைக்கிறேன்.." என்று சொல்லிக் கொண்டே முன்னுக்கு வந்தேன்..

Breakfast ஐ மறந்துவிட்டு ஐந்து பேரும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தனர்..

அப்போது, ஆரம்பத்திலிருநது பிரதர் ஆண்ட்ரூ ஆப்பிரிக்காவில் Tan Zam ரெயில்வே ப்ராஜக்டில் வேலை செய்யும் கம்யூனிஸ்ட் சைனீஸ் பற்றி கொடுத்த அறைகூவலையும்..

அதே விஷயத்தை Floyd பகிர்ந்து கொண்டதையும்,தேவன் அவர்களுக்காக என் மனதில் தந்த பாரத்தையும்,

உண்மை நிலை கண்டறிய Tanzaniaவின் Dar-es-Salaam போய்வர நான் உத்தேசித்துள்ளதையும், அதற்காக தேவன் ஏசாயா 52ன் மூலம் என்னோடு பேசின வார்த்தைகளையும் ஒன்று விடாமல் சொல்லி முடித்தேன்..

டாமுக்கு குஷி தாங்கவில்லை..
"உண்மையிலே கர்த்தர் பேசியிருக்கிறார்.."என்று டான் தலையசைத்தான்.

"எங்களைப் பற்றி கவலைப்படாதே ரூடி.. நாங்கள் manage பண்ணிக் கொள்வோம்.."என்று நட்டாலி சொல்ல..

"ஆமா ரூடி, நீ கிளம்பு.. நாங்க உனக்காக ஜெபம் பண்ணிட்டே இருப்போம்,கர்த்தர் உன் கூட இருக்கிறார்.." என்று முடித்தாள் ரமோனா..

தலைவரின் அனுமதி

குழுவிலிருந்த ஒவ்வொருவரும் என் திட்டத்தை ஆதரிக்க, உகாண்டாவின் உள்ளூர் ஊழியரான சார்ல்ஸ் மட்டும் தன் அதிருப்தியைத் தெரிவித்தான்..

" ரூடி, உனக்குத் தெரியுமா ? இந்தச் சைனீஸ், வெளி ஆட்கள் தங்கள் முகாமுக்குள் வரமுடியாதபடி குழுவாகத் தனித்தே முகாமிட்டு இருந்து வருகிறார்கள்..

ஒரு முறை என் நண்பன் ஒருவன் ஸ்வாஹிலி மொழி கைப்பிரதி ஒன்றை ஒரு சைனீஸுக்குக் கொடுக்கப் போக, கிட்டத்தட்ட அவன் வேலையே பறிபோகும் நிலையானது.." என்று எச்சரித்தான்..

நான் எதுவும் சொல்லாமல் தலையசைத்துக் கொண்டேன்..

"Dar-es-Salaamல் உனக்கு எதுவும் தொடர்பு உண்டா? உனக்குத் தெரிந்தவர்கள் யாரும் இருக்கிறார்களா?" என்று கேட்டான்..
"யாருமில்லை.." என்றேன்.

நானும் ரோலியும் பல்கேரியாவுக்குள் போன போதும் எங்களுக்குத் தெரிந்தவர்கள் யாருமில்லை.. ஆனாலும் அப்போது நடத்திய தேவன் இப்போதும் நடத்துவார்" என்றேன்..

சார்ல்ஸின் முன்னெச்சரிப்பு என்னை எந்த வகையிலும் பாதிக்கவில்லை..

ஆனாலும் நைரோபியிலிருந்த Floyd க்கு போன் பண்ணி அனுமதி பெற்றபின், வேறு எதுவும் என்னைத் தடுத்து நிறுத்த முடியவில்லை..

இப்போது க்ரீன் லைட் கிடைத்து விட்டது.நான் போகத்தான் போகிறேன்.

நான் போகத் தீர்மானித்து விட்ட சில நாட்களில், Tanzania விலுள்ள ஒரு மிஷன் ஸ்தாபனத்தின் ஜெர்மன் தலைவர் Flitz எங்களை சந்திக்க வந்தார்.

கொஞ்ச நாட்களாகவே நாங்கள் அவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாலும் நான் Tanzania புறப்பட நினைத்திருந்த இந்த நேரத்தில் அவர் வந்தது, தேவனுடைய திட்டத்தை உறுதி செய்வதாய் இருந்தது..

ஆபத்தோட விளையாடாதே ரூடி !

Flirtz வந்த போது நான் தெருக்களில் கைப்பிரதிகளையும் புத்தகங்களையும் விநியோகித்துக் கொண்டிருந்தேன்..

வெளியில் வெயிலிலிருந்து வந்த நான்," இதோ, ஏதாவது குளிர்ச்சியாகக் குடித்துவிட்டு வருகிறேன் " என்று சொல்லி விட்டு, கொஞ்ச நேரத்தில் அவர் முன் வந்து உட்கார்ந்தேன்.

சைனீஸைப் பற்றி ஒரு தகவல் கூட விடாமல் அவரிடமிருந்து பெற்று விட வேண்டும் என்று மிகவும் கவனமாய்க் கேட்க ஆரம்பித்தேன்..

Tanzania வுக்குள் எனக்குத் தெரிந்த ஒரே தொடர்பு அவர் தான்.ஆகவே அறிமுக வார்த்தைகளோடு நேரே விஷயத்துக்கு வந்தேன்..

ஆனால் பேசப் பேசத் தான் தெரிய வந்தது..
அவருக்கு அங்கு வேலை செய்யும் சைனீஸ் பற்றிய விரிவான விபரங்கள் குறித்த தெளிவு அவ்வளவு இல்லை என்று.

இருந்தாலும் அவர்கள் வேலை செய்யும் ப்ராஜக்ட் குறித்த பரவலான அறிவு அவருக்கு இருந்தது.அதை என்னோடு உற்சாகமாகப் பகிர்ந்து கொண்டார்..

கிட்டத்தட்ட அரைமணி நேரம் என் இடைவிடாத கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டே வந்தவர்..திடீரென்று இடைமறித்து,

" ஏன் இந்த சைனீஸ் மேல உனக்கு இவ்வளவு ஆர்வம் ரூடி ?" என்று கேட்க..
நான் Tanzania வுக்குப் போக இருக்கும் நோக்கத்தைச் சொன்னேன்..

உடனே அவருடைய புருவங்கள் சுருங்கின..
" ரூடி ! நீ எவ்வளவு ஆபத்தான வேலைல
இறங்கியிருக்கிறன்னு உண்மையிலே உனக்குத் தெரியுமா ?

நீ செய்ய நினைத்திருக்கிறது பயங்கர கஷ்டம் மட்டுமில்ல..
ஏறக்குறைய செய்யவே முடியாத ஒரு வேலைய ஏதோ
கத்துக்குட்டி மாதிரி கைல எடுத்திருக்கிற..

ஆபத்தோட விளையாடாத ரூடி ! "

அவருடைய எச்சரிப்பு என்னை எந்த வகையிலும்
பாதிக்கவில்லை..

அடுக்கடுக்கான தடைகள்

தொடர்ந்து பேசிக் கொண்டிருந்த Fritz சைனீஸ்
கம்யூனிஸ்ட்டுகளுக்கு சுவிசேஷம் அறிவிப்பதில் வெற்றி
காண வேண்டுமானால் எப்படிப்பட்ட மலை போன்ற
தடைகளைத் தாண்டியாக வேண்டும் என்று ஒவ்வொன்றாய்
பட்டியலிட்டார்..

முதலாவது அவர்கள் தங்கியிருந்த கேம்ப்புகள் மிகவும்
தூரமான இடங்களில், பல நூற்றுக்கணக்கான கிலோமீட்டர்
இடைவெளிகளில் சிதறி இருக்கின்றன..

இரண்டாவது, அவைகளைக் கண்டுபிடிப்பது கடினமானது
மட்டுமல்ல,அரசாங்கமே வெளி நபர்கள் அவர்களை
சந்திப்பதை தடைசெய்து வைத்துள்ளது.

மூன்றாவது, அவர்கள் குடியிருப்புகளைச் சுற்றி இரும்பு முள்
வேலி போடப்பட்டுள்ளது..

நான்காவது, அந்தப்பக்கம் போகும் வெளிநாட்டவர்கள் தீவிர
சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்..

ஐந்தாவது, சீன அரசாங்கத்திலிருந்து பொருளாதார உதவி பெறும் ஒப்பந்தத்தில், எந்த வித மதப்பிரச்சாரம் செய்யும் முயற்சியையும் சைனீஸ் கேம்ப்புக்குள் Tanzania அனுமதிக்காது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதால், இந்த அரசாங்கம் இந்த விஷயத்தில் மிகக் கவனமாக உள்ளது..

எல்லாவற்றையும் சொல்லிவிட்டு சற்று நிதானித்த Fritz, என்னை ஒரு தகப்பனைப் போல பார்த்து, " ரூடி! இந்த உன் வெள்ளைத் தோலை வைத்துக் கொண்டு நீ அவர்கள் கேம்ப் பக்கம் மறந்து கூட போய்விட முடியாது..

ஏற்கனவே இங்கிருக்கும் வெளிநாட்டு மிஷினரிகள் யாராவது உனக்கு இந்த விஷயத்தில் உதவுவார்கள் என்று நான் நிச்சயம் நம்ப மாட்டேன்.

சில நூறு கம்யூனிஸ்ட்டுகளுக்கு சுவிசேஷம் சொல்லப் போய் தங்கள் விசாவை யார் இழக்க விரும்புவார்கள் ?

அது போக, உள்ளூர் ஆப்பிரிக்க விசுவாசிகள் கூட இதில் ஏதாவது உதவ முடியுமா என்பதும் சந்தேகமே!

இந்த மலை நாட்டை எனக்குத் தாரும்

Fritz சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் அடுத்த 24 மணி நேரமும் என் விசுவாசத்தை அதிகமாய் அசைத்து விட்டதும் அல்லாமல்,என் தைரியத்தையே ஒரு உலுக்கு உலுக்கி விட்டது..

நான் எடுக்கப் போகும் "வாழ்வா சாவா " ரிஸ்க், அதிலுள்ள புதைகுழிகள், ஆபத்துக்கள் என் முன் ஒவ்வொன்றாய் வந்து கொண்டே இருந்தன..

அவர் சொல்வதெல்லாம் உண்மை தான்.
நிச்சயமாக இது ஒரு ஈஸி மிஷன் இல்லவே இல்லை..

ஆனால் இதிலுள்ள லாப நஷ்டங்களைக் கணக்கிட்ட போது, அது என் தீர்மானத்தைக் குலைத்துப் போடுவதற்குப் பதிலாக, அதை இன்னும் முறுக்கேற்றி, " தலையே போனாலும் " இதுவே என் தலையான கடமை என்று என்னை உசுப்பேற்றி விட்டது..

'வேறே ஆவியை' உடைய காலேபின் அபிஷேகம் என்னைத் தட்டியெழுப்ப, "இராட்சதர்கள் நிறைந்த இந்த மலை நாட்டை எனக்குத் தாரும்" என்ற அந்த வாக்குத்தத்தத்தைப் பிடித்துக் கொண்டேன்..

அது போக, கர்த்தர் எனக்கு ஏற்கனவே கொடுத்த ஏசாயா 52ல், " புறப்பட்டுப் போங்கள்.. சுவிசேஷகனுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவை !" என்ற வார்த்தை சந்தேகமே இல்லாமல் அவரே கொடுத்தது தான் ...

இப்போது நான் தயங்கினால்,யோனாவைப் போல கீழ்ப்படியாதவனாகி விடுவேன் என்று நிச்சயமாய்த் தெரிந்தது..

வழக்கமான வழிமுறைகள் இந்த முறை ஒத்துவராது, இந்த சைனீஸ் கம்யூனிஸ்ட்டுகளை வேறு வழியில் தான் சந்தித்தாக வேண்டும் என்று முடிவு செய்து கொண்டேன்..

தேவனே தமது பட்சத்திலிருந்து அனுப்பும் ஒரு பிரதிநிதியாக நான் அனுப்பப்படுகிறேன் என்ற நிச்சயம் பலமாக எனக்குள் இருந்ததால், Tanzania வின் தலைநகர் Dar-es-Salaam ல் எனக்காக யாரோ ஒருவரை தேவன் முன்னதாகவே ஆயத்தப்படுத்தி வைப்பார் என்று நிச்சயமாய் நம்பினேன்..

அது யார் என்பதும் அவரை எப்படி சந்திக்கப் போகிறேன் என்பது தான் எனக்குள் இப்போது இருந்த பெரிய கேள்வி ....

உன்னை அனுப்புகிறவர் நானல்லவா

சில நாட்கள் சென்று, எங்கள் டீமை Danன் பொறுப்பில் ஒப்படைத்து விட்டு,ஏர்போர்ட்டுக்கு பஸ் பிடித்து அங்கிருந்து ஒரு சின்ன flightல் Dar-es-Salaam க்குப் புறப்பட்டேன்.

அந்த ப்ளேன் அந்த சிட்டியில் இறங்கியதும் என் நம்பிக்கை சிறகடித்துப் பறந்தது..

இப்போதும் இந்த ஊரில் எனக்குத் தெரிந்த முகம் எதுவும் இல்லை. ஆனாலும் ரோலியையும் என்னையும் பல்கேரியாவில் அற்புதமாய் நடத்திய தேவன், இங்கும் எனக்கு முன்பாகச் சென்று வழியை ஆயத்தப் படுத்துவார் என்ற நம்பிக்கை என் மனதை நிரப்பியிருந்தது..

ஏர்ப்போர்ட்டுக்கு வெளியே கொளுத்தும் வெயிலில் சூட்கேஸை எடுத்துக் கொண்டு, ப்ரிட்ஸ் கொடுத்த அந்த மலிவான கிறிஸ்தவ ஹாஸ்டல் ஒன்றின் அட்ரஸைக் கையில் வைத்துக் கொண்டு வெளியே வந்தேன்..

இநத் சாகடிக்கும் வெயிலில் எப்படி இந்த ஆயிரக்கணக்கான சைனீஸ் வேலை செய்கிறார்கள் என்று என் மனம் அவர்களுக்காகப் பரிதபித்தது..

முதலில் அந்த ஹாஸ்டலுக்கு பஸ்ஸில் போகலாம் என்று நினைத்த நான், பிறகு டாக்சி எடுத்துக் கொண்டேன்..

கொஞ்ச தூரம் போன டாக்ஸி கடற்கரை ஓரமான அந்தப் பழைய கறுப்பு பில்டிங் அருகே வந்து நின்றது.

வாசலில் நீல நிறத்தில் " தி லூாத்தர் ஹவுஸ்" என்ற போர்டு தொங்கிக் கொண்டிருந்தது.

அந்த ஹாஸ்டல் ஒன்றும் பெரிய ஹில்ட்டன் ஹோட்டல் அல்ல..ஆனால் அது என் பாக்கெட்டுக்கு ஏற்ற இடமாக இருந்தது.

என்னை ஏமாற்ற நினைத்த டாக்ஸி டிரைவருக்கு அவன் கேட்ட காசைக் கொடுத்துவிட்டு லூத்தர் ஹவுஸுக்குள் நுழைந்து ரூம் எடுத்துக் கொண்டேன்..

கையளவு மேகம்

புதிய இடம், புழுக்கம், வெப்பம் - எல்லாம் சேர்ந்து என்னைத் தூங்க விடவில்லை..

காலை எழுந்து அங்கிருந்த என்னைப் போன்ற கெஸ்ட்டுகளோடு breakfast க்கு உட்கார்ந்தேன்.

யாரிடமாவது பேச்சு கொடுக்கலாம் என்று சுற்றுமுற்றும் பார்த்தேன்.இவர்களில் யாராவது,நான் சந்திக்க வந்திருக்கும் சைனீஸ் ரெயில்வே பணியாளர்களிடம் போக உதவி செய்வார்களோ என்று நோட்டம் விட்டேன்..

இந்த நாட்டின் சட்டதிட்டங்களைக் கடந்து, உயிருக்குப் பயப்படாமல்,இரும்பு வேலிகளைத் தாண்டி அவர்களுக்கு சுவிசேஷம் கொண்டு போக என்னோடு வரக்கூடிய தெம்பும் தைரியமும் உடைய, தேவனுக்காக அக்கினியாய் நிற்கும் யாரோ ஒருவரை என் மனம் வேகமாய் தேடியது..

அங்கு உட்கார்ந்திருந்தவர்களில் ஒரு நடுத்தர வயது பெண்ணும் இருந்தார்.
அவரிடம் பேச்சு கொடுத்த போது அவர் ஒரு மிஷினரி என்று தெரிந்தது.

ஏற்கனவே லோக்கல் ஊழியர் சார்ல்ஸ் மற்றும் Fritz என்னை எச்சரித்திருந்தபடி, நான் வந்த உண்மையான நோக்கத்தை வெளிப்படுத்தாமல் மிகவும் கவனமாக ஒவ்வொரு வார்த்தையையும் அளந்து பேசினேன்..

" இங்கே ஏதாவது கிறிஸ்தவ புத்தக நிலையம் தெரியுமா ?" என்று அந்தப் பெண்ணிடம் கேட்டேன்.

பொதுவாக கிறிஸ்தவ புத்தக நிலையங்கள் உள்ளூர் சபைகளைப் பற்றி அறிந்திருக்கும் என்பதால் அதன் மூலம் ஏதாவது தொடர்பு கிடைக்க வாய்ப்பு உண்டு என்று நினைத்தேன்..

உடனே.. " ஓ நேற்று தான் ஒரு கிறிஸ்டியன் புக் ஷாப்புக்கு நான் போய் வந்தேன்..இங்கிருந்து பக்கம் தான்..நடந்தே போய் விடலாம்..
கண்டுபிடிக்கக் கஷ்டம் இருக்காது " என்றார்..

உடனே அந்தப் பெயரையும் அட்ரஸையும் குறித்துக் கொண்டேன்..

புத்தக நிலையத்தில்..

Dar -es-Salaam முழுவதும் புதிய இடமாக இருந்தாலும் தேடித்தேடி கடைசியாக அவர் கொடுத்த புத்தக நிலைய முகவரிக்குப் போய் சேர்ந்தேன்.

37 ம் சங்கீதத்திலிருந்து அன்று காலையில் படித்த " உன் வழிகளைக் கர்த்தருக்கு ஒப்புவித்து அவர் மேல் நம்பிக்கையாயிரு..அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்" என்ற வசனம் ஞாபகத்துக்கு வரவே..

"தகப்பனே உம் சமுகம் எனக்கு முன்பாகச் செல்வதற்காக நன்றி.." என்று நன்றியோடு ஜெபித்தேன்.

கடையில் நுழைந்ததும், நரைத்த தலையுடன் இருந்த ஒரு ஐரோப்பிய லேடி சிரித்த முகமாய் "நான்உங்களுக்கு ஏதாவது உதவி செய்யட்டுமா ?" என்று அழகான ஆங்கிலத்தில் கேட்டார்..

நானும் புன்முறுவலுடன்..
"நீங்கள் செய்ய முடியும் என்று நினைக்கிறேன்"
என்றேன்.

கடையில் வேறு யாரும் இல்லாதது வசதியாக
இருந்தது.இப்போது நான் Dar -es-Salaam ல் நேருக்கு
நேராய் ஒரு கிறிஸ்தவரை சந்திக்கிறேன்..

ஆனால் பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்று யோசித்துக்
கொண்டே..
"நான் ஒரு ஸ்விஸ் ஜெர்மன் " என்றேன்.

அந்த லேடிக்கு இன்னும் சந்தோஷமாகி
விட்டது."அப்படியா" என்று பெரிய சிரிப்போடு
"அடடே எனக்கும் ஸ்வீடன் தான், வெல்கம் வெல்கம்
வெல்கம் டு டான்ஸேனியா " என்றார்.

பார்க்க மிகவும் ஒப்பனாகவும் ஃப்ரென்ட்லியாகவும்
தெரிந்தார்.

ஒரு வேளை இவர் தான் என்னை சரியாக guide பண்ண
தேவன் வைத்திருப்பாரோ என்று எல்லா பயத்தையும்
எறிந்து விட்டு நேராக விஷயத்துக்கு வந்தேன்..

எதிர்பாராதது நடந்தது

YWAM பற்றியும் நாங்கள் செய்யும் அவுட்ரீச்
ஊழியங்கள் பற்றியும் சொன்னதும்,wonderful
youngman என்று சந்தோஷப்பட்டார்..

"நான் நேற்று இரவு தான் இங்கு வந்தேன், ஏதாவது
லோக்கல் கிறிஸ்டியன் காண்ட்டாக்ட்
கிடைக்குமாஎன்று தேடுகிறேன்" என்றதும்,

" ஓ நான் வேண்டுமானால் உதவி செய்கிறேன்" என்று தாராளமாக முன்வந்தார்.

"உங்களால் முடியும்" என்று இன்னும் அவர் அருகில் வந்தேன்.
நாங்கள் பேசுவதை யாரும் கேட்டு விடக்கூடாது என்ற எச்சரிப்போடு,

"இங்குள்ள கம்யூனிஸ்ட் சைனீஸ்க்காக கர்த்தர் என் மனதில் ஒரு பாரத்தைக் கொடுத்திருக்கிறார்..
அதான் ஏதாவது தொடர்பு கிடைக்குமா என்று பார்க்கிறேன்.." என்று கிசுகிசுத்தேன்.

நான் சொல்ல வந்ததை முழுவதுமாகக் கூட சொல்லி முடிக்கவில்லை..
சைனீஸ் என்ற வார்த்தையைக் கேட்டவுடனே அந்த லேடிக்கு எங்கிருந்து அவ்வளவு கோபம் வந்ததோ தெரியவில்லை..

அவ்வளவு நேரம் சிரித்த முகமாய் பேசிக் கொண்டிருந்தவர், கையை வேகமாய் ஆட்டியபடி.." நோ நோ இங்கெல்லாம் யாரையும் பார்க்க முடியாது போ போ
" என்று நாயை விரட்டுகிறது போல விரட்ட ஆரம்பித்தார்..

எனக்கு ஒன்றும் புரியாமல் "தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள்" என்று கெஞ்ச ஆரம்பித்தேன்.

இந்த ஊரிலுள்ள ஒரே கிறிஸ்தவத் தொடர்பு இந்த அம்மா தான்,இவரையும் விட்டுவிட்டால் வேறு வழியில்லை என்று

"தயவு செய்து யாராவது லோக்கல் கிறிஸ்தவங்க இருந்தா சொல்லுங்களேன்" என்று அழாத குறையாக கெஞ்சினேன்..

அடுத்த லிங்க்

ஏதோ தேவ கிருபை தான்..

கொஞ்சம் கூலாகிவிட்ட அந்த லேடி.."சரி சரி அதோ அங்க ஒரு பாப்ட்டிஸ்ட் சர்ச் இருக்குது..அங்க வேணா போய் பாரு.." என்றதும் திரும்பி நடக்க ஆரம்பித்தேன்..

அவர் மறுபடியும் என்னைக் கூப்பிட்டு, "இங்கே டெம்க்கே-ன்னு ஒரு இடம் இருக்குது.
அங்கே கம்யூனிட்டி சென்ட்டர் பக்கம் பாஸ்டர் மால்யா இருக்கிறார்..
ஆனா இப்ப பகல்ல இருக்க மாட்டாரு, சாயந்திரமா போய்ப்பாரு.." என்றார்.

அந்த பாஸ்டர் பெயரையும் இடத்தையும் உடனே ஞாபகத்தில் குறித்துக் கொண்டு "ரொம்ப நன்றி மேடம்" என்று சொல்லிக் கொண்டே வெளியே வந்தேன்..

வெளியில் வெயில் வறுத்தெடுத்தது.
சரி..டெம்க்கே-யில் பாஸ்டர் மால்யா இப்போது இருக்க மாட்டார்
பாப்டிஸ்ட் சர்ச்சுக்குப் போய்ப் பார்ப்போம் என்று நடக்க ஆரம்பித்தேன்..

பாப்டிஸ்ட் சர்ச்சிலும் பாஸ்டர் வெளியே போயிருந்தார்.அவரது ஆப்ரிக்கன் அஸிஸ்டென்ட்டிடம் மிகவும் எச்சரிக்கையோடு சைனீஸ் ரெயில்வே ப்ராஜக்ட் பற்றி பேச்சு கொடுத்தேன்..

அவரும் பட்டும் படாமல் "அது எங்க ஏரியாவில் இல்லை..மற்றபடி எனக்குத் தெரிந்தவர்களும் யாரும் இல்லை" என்று நழுவினார்..

ஆனால் சைனீஸ் செட்டில்மென்ட்டுக்குப் போகும் வழி மட்டும் சொன்னார்..

வெளியே தெருவுக்கு வந்தேன்.காலை 11 மணி.
"ஆண்டவரே இப்ப நான் எங்க போவது?"

எனக்கு இப்போது இருக்கும் ஒரே லிங்க் பாஸ்டர் மால்யா மட்டும் தான்.ஆனால்அவரும் இப்போது இருக்க மாட்டார்

சரி சைனீஸ் செட்டில்மென்ட்டை பார்த்துவிட்டு தான் வந்து விடுவோமே என்று அங்கே போக பஸ் எடுக்க முடிவு செய்தேன்..

டெம்க்கே நோக்கி

நான் இப்போது பஸ் ஸ்டாண்டுக்குள் வந்து சரியான பஸ்ஸுக்காகக் காத்திருந்தேன்.

எல்லா பஸ் ஸ்டாண்டுகளிலும் காணப்படும் அதே கூட்டமும் நெரிசலும் இங்கும் காணப்பட்டது.

பெரிய பழக்கூடைகளையும் காய்கறிக் கூடைகளையும் தலையில் சுமந்து கொண்டு ஏறிக்கொண்டும் இறங்கிக் கொண்டும் இருந்தனர் ஆப்ரிக்கப் பெண்கள்..

அவர்களில் சில முஸ்லிம் பெண்கள் தலையை மட்டும் மறைக்கும் பாதி புர்க்கா அணிந்திருந்தனர்.

பஸ்கள் உள்ளே வருவதும் போவதுமாக இருந்தாலும் சைனீஸ் கேம்ப்புக்குப் போகும் பஸ் வந்த மாதிரி தெரியவில்லை..

மத்தியான வெயில் கொளுத்தியது.உட்கார எங்காவது நிழல் கிடைக்குமா என்று தேடினேன்.

நின்று நின்று ஒரு பக்கம் கால்வலி, இன்னொரு பக்கம் வேர்த்து ஊற்றியது..நேரம்ஆக ஆக, பொறுமை இழந்து, "ஒரு வேளை அந்தப் புத்தகக் கடை லேடி வேண்டுமென்றே தவறான பஸ் நம்பர் தந்திருப்பாரோ" என்று என்னை நினைக்க வைத்தது.

பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு ஆப்ரிக்க ஆளைப் பார்த்து "இந்த பஸ் எங்கே போகிறது?" என்று கேட்டேன்.

எனக்குப் புரியாத ஏதோ பெயர்களை வரிசையாக சொல்லிக் கொண்டே போனான்.அவன் சொன்னதில் "டெம்க்கே" என்பது மட்டும் பளிச்சென்று கேட்டது.

"டெம்க்கே" போகுமா? அது பாஸ்டர் மால்யாவின் இடமாச்சே? அதுவும் அவர் ஈவ்னிங் தான் இருப்பார்..

டெம்க்கே எவ்வளவு தூரம்,ஊருக்குள் இருக்கிறதா ? அல்லது சிட்டியை விட்டு வெளியிலா? அங்கே போனாலும் அவரை எப்படிக் கண்டுபிடிப்பது?

அவரது சபை பெயரும் தெரியாது,என்னிடம் இருந்த ஒரே க்ளூ அவரது வீடு கம்யூனிட்டி சென்ட்டருக்கு அடுத்து இருக்கிறது என்பது மட்டுமே..

ஒரு பக்கம் என் மனதில் இவ்வளவு கேள்விகள் இருந்தாலும், எப்படியாவது இந்த பஸ்ஸில் ஏறிவிட வேண்டும் என்ற அழுத்தமான உந்துதல் இருந்தபடியால் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தேன்.

பஸ்ஸின் பின்புற சீட்டில் உட்கார்ந்ததும், நான் எடுத்தது சரியான முடிவு தான் என்று ஒருவித அமைதி என் மனதில் வந்தது.

"என் தூதனை உனக்கு முன்பாக அனுப்புவேன்"

காலி பஸ்ஸை சுற்றிலும் பார்த்தேன்..சிறிது முன்னால் தனியாக உட்கார்ந்திருந்த ஒரு ஆப்ரிக்க மனிதனை நோக்கி என் கவனம் திரும்பியது..

"போய் அந்த மனிதனோடு உட்கார்ந்து கொள்" என்று கர்த்தர் சொல்வது போல் உணர்ந்தேன்.கீழ்ப்படிந்து எழுந்து போய் அவன் அருகே உட்கார்ந்தேன்..

இதற்குள் பஸ் புறப்பட்டது.ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்த அவனிடம் பேச்சுக் கொடுக்க வேண்டும் என்ற உந்துதல் இருந்தது..

ஆனால் எப்படி எங்கிருந்து பேச்சை ஆரம்பிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

அவன் கழுத்தில் அழகான மல்ட்டி-லென்ஸ் கேமரா ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்த எனக்கு, இப்படி ஒன்று என்னிடம் இருந்தால் இந்த அழகிய ஆப்ரிக்கக் காடுகளையும் காட்சிகளையும் எவ்வளவு அழகாக போட்டோ எடுக்கலாம் என்று நினைத்துக் கொண்டே..
" உங்கள் கேமரா ரொம்ப அழகாக இருக்கிறது.." என்று பேச்சை ஆரம்பித்தேன்..

"உண்மை தான்,நான் ஒரு நியூஸ் பேப்பர் ரிப்போர்ட்டர்.. இது எனக்கு ரொம்ப உதவியாக இருக்குது.." என்று மிக அழகான ஆங்கிலத்தில் பதில் சொன்னார்.

அதைத் தொடர்ந்து எங்கள் உரையாடல் தங்கு தடையின்றி தொடர்ந்தது.

ஜர்னலிஸ்ட்டாக இருப்பதால், Tan-Zam ரெயில்வே ப்ராஜக்ட் சைனீஸ் பற்றி தெரிந்திருக்கக்கூடும் என்பதால்.."இங்க வேலை செய்ற சைனீஸ் எல்லாம் எப்படி ?" என்று லேசாக கொக்கி போட்டேன்..

" ஓ அவங்களா ? அருமையான வேலை செய்றாங்க , நாட்டின் பொருளாதாரத்தில் அவங்க வந்த பிறகு நல்ல இம்ப்ரூவ்மென்ட் .." என்றார்.

அரசியல் மட்டத்திலும் அந்த மனிதனுக்கிருந்த செல்வாக்கை அறிந்தவனாய் இதற்கு மேல் கேட்டால்..
" உங்களுக்கென்ன அதில் அப்படி இன்ட்ரஸ்ட் ?" என்பது போன்ற தர்மசங்கடமான கேள்விகளைத் தவிர்க்கும்படி மேற்கொண்டு அதைப்பற்றி எதுவும் கேட்காமல் அமைதியாகி விட்டேன்..

இருவரும் அரைமணி நேரம் ட்ராவல் பண்ணியிருப்போம். எங்கே, நான் இறங்க வேண்டிய இடத்தை மிஸ் பண்ணி விடுவேனோ என்ற பயம் எனக்கிருந்தது..

எனவே "டெம்க்கேவுக்கு நான் போவது இது தான் முதல் முறை, எங்கே இறங்க வேண்டும் என்று சொல்வீர்களா?" என்று கேட்டேன்.

" ஓ தாராளமா ! நானும் அங்கே தான் போறேன்.."
என்று அவர் சொன்னதும்..
"ரொம்ப நன்றி.." என்று நன்றியுடன் சொன்னேன்..

பாஸ்டர் மால்யா வீடு நோக்கி

சிறிது நேரத்துக்குப் பிறகு நாங்கள் வந்த பஸ் ஓர் இடத்துக்கு வந்து நிற்க, நானும் ரிப்போர்ட்டரும் இறங்கினோம்.

"டெம்க்கே"யில் எங்கே போக வேண்டும்?" என்று நிருபர் கேட்டார்.

"இங்கு நான் ஒருவரை சந்திக்க வேண்டும்..அவர் பெயர் பாஸ்டர் மால்யா..ஆனால் இது வரை நான் அவரைப் பார்த்ததில்லை.." என்று சங்கடத்தோடு சொன்னேன்.

"மால்யா.." எங்கேயோ கேட்ட பெயர் மாதிரி இருக்கே..என்று தனக்குள் யோசித்துக் கொண்டே..

"மால்யா"ன்னு எனக்குகூட ஒருத்தரைத் தெரியும், நானும் அவரும் கிலிமஞ்சரோ என்ற கிராமத்தில் ஒன்றாக வளர்ந்தோம்..

இரண்டு பேரும் பெஸ்ட் ஃப்ரண்ட்ஸ்.ஒரு வேளை அந்த மால்யாவோ?
தெரியல..
சரி.. பாஸ்டர் மால்யா அட்ரஸ் தெரியுமா ?" என்று கேட்டார்.

"அட்ரஸ் தெரியாது..ஆனா கம்யூனிட்டி சென்ட்டருக்கு பக்கத்து வீடுன்னு மட்டும் சொன்னாங்க.." என்றேன்

"கம்யூனிட்டி சென்ட்டரா ?
ஓ அதோ இருக்குது பாருங்க! பக்கத்தில ஒரு சர்ச் கூட தெரியுது பாருங்க.." என்று காட்டினார்..

"அப்போ..பாஸ்டர் மால்யா வீடு அதாகத் தான் இருக்கும்..இவ்வளவு சீக்கிரம் கண்டு பிடிச்சிட்டோமே ! உங்க உதவிக்கு ரொம்ப நன்றி சார்" என்று கைகுலுக்க கை நீட்டினேன்.

ஆனால் அவர் அவ்வளவு சீக்கிரம் என்னை விடுவதாகத் தெரியவில்லை..

"நானும் வந்து அவரைப் பார்க்கலாம்னு நினைக்கிறேன். வரலாமா? உங்களுக்கு எதுவும் ஆட்சேபணை உண்டா ? என்றார்.

இந்த மனிதனின் உதவியின்றி இவ்வளவு தூரம் வந்திருக்கவோ நானாக கண்டுபிடித்திருக்கவோ முடியாது என்று நினைத்துக் கொண்டு..
"பரவாயில்ல அதனால என்ன வாங்க.." என்றேன்.

இந்த ரிப்போர்ட்டரை பக்கத்தில் வைத்துக் கொண்டு, பேச வேண்டிய சென்ஸிட்டிவான காரியங்களை
எப்படிப் பேசுவது ?
ஆனால் வேறு வழியும் இல்லை..

சரி..மத்தியானத்தில் தான் பாஸ்டர் இருக்க மாட்டாரே என்று என்னையே தேற்றிக் கொண்டு, எனக்கு முன்னால் நடந்து கொண்டிருந்த நிருபரைத் தொடர்ந்து சென்றேன்..

பாஸ்டர் மால்யா

சற்று மேடான தெரு வழியே நடந்து சர்ச் வாசலில் வந்து நின்றோம்.

பப்பாளி மர நிழலில் இருந்த அந்த பெயின்ட் அடிக்கப்படாத கதவைத் தட்டினேன்..பதில் இல்லை. திரும்பவும் தட்டினேன்..

பதில் இல்லாததால்..
"பாஸ்டர் இல்லை போலிருக்கிறது..பரவாயில்லை..

கொஞ்ச நேரம் எங்கேயாவது டைம் பாஸ் பண்ணிவிட்டு ஈவ்னிங் திரும்ப வர்றேன்.." என்று ரிப்போர்ட்டரிடம் சொல்லிவிட்டு, இருவரும் சற்று நடக்க ஆரம்பித்தோம்..

அதற்குள் கதவு திறக்கும் சத்தம் கேட்டுத் திரும்பினேன்..

அங்கே கதவருகில் 35 வயது மிக்க ஒரு ஆப்பிரிக்கர், மத்தியான தூக்கத்திலிருந்து எழுந்து கண்ணைக் கசக்கிக் கொண்டு நின்று கொண்டிருந்தார்..

திடீரென்று அந்த வெயில் நேரத்தில் எங்களை எதிர்பாராத அவர், ஆச்சரியத்தில்.."யாரையாவது தேடுகிறீர்களா ?" என்று கேட்டார்...

"ஆமா சார்..பாஸ்டர் மால்யாவைத் தேடி வந்தோம்.." என்றார் நிருபர்.

"நான் தான் பாஸ்டர் மால்யா.. உள்ளே வாங்க" என்றார்.உள்ளே போனோம்.

ஏற்கனவே வெயிலில் களைத்துப் போயிருந்த நான் ட்ராயிங் ரூம் சோபாவில் உட்கார்ந்ததும்,fan காற்றில் என் உடம்புக்கு கொஞ்சம் relief கிடைத்தது போலிருந்தது.

எங்களை உட்கார வைத்து விட்டு உள்ளே போய் இரண்டு பெரிய க்ளாஸில் ஐஸ் வாட்டர் கொண்டு வந்தார் பாஸ்டர் மால்யா..

அதைக் குடித்த நான்,இது வரை நடத்தி வந்த ஆண்டவரை நன்றியோடு நினைத்து துதித்தேன்..

இணைந்த நண்பர்கள்

" என்ன விஷயமா என்னைப் பார்க்க வந்தீங்க ?" என்று மிகவும் அன்போடு கேட்டுக் கொண்டே எங்களுக்கு எதிரே உட்கார்ந்தார் மால்யா..

நான் வந்த உண்மையான நோக்கத்தை வெளிப்படுத்தாமல், YWAM பற்றியும், உலகளாவிய விதத்தில் என்னென்ன மிஷினரி ஊழியங்கள் நாங்கள் செய்கிறோம் என்பது பற்றியும், கென்யாவிலும், உகாண்டாவிலும் எங்கள் டீம் ஏற்கனவே ஆக்டிவ்வாக இருப்பது பற்றியும், இப்போது Tanzania விலும் நாங்கள் ஏதாவது செய்ய விரும்புவது பற்றியும் விவரித்தேன்..

" ஓ ! நிச்சயமாக எங்களால் முடிந்த எல்லா உதவியையும் உங்களுக்குச் செய்வோம்" என்று உண்மையான கரிசனையோடு சொன்னார்..

ஆனால் அவருடைய கவனம் என் மேல் இருந்ததைக் காட்டிலும் என்னோடு வந்த ரிப்போர்ட்டர் மேலேயே அதிகமாக இருந்ததைக் கண்டேன்..

திடீரென்று நிருபரை நோக்கித் திரும்பிய மால்யா,"உங்களைப் பார்த்த மாதிரி இருக்குதே!" என்றார்..

"இருக்கலாம்..
எனக்குக்கூட அப்படித்தான் தோணுது..
நாம இரண்டு பேரும் ஒரே ட்ரைபல் கிராமத்துல வளர்ந்தோம்னு எனக்கு நல்லா ஞாபகம் இருக்குது.."

" ஆமா ஆமா ! உங்களை வாசல்ல பார்த்ததுமே தோணுச்சு ஒரு வேளை அவனா இருக்குமோன்னு.." என்று பாஸ்டர் சொன்னதுமே, இரண்டு பேரும் எழுந்து நின்று கட்டி அணைத்துக் கொண்டனர்..

பின்னர் உட்கார்ந்து இருவரும் தங்கள் சொந்த ஆப்பிரிக்க லோக்கல் லேங்குவேஜில் பேசிக் கொண்டே,தங்கள் பால்ய நாட்களின் நினைவுகளில் மூழ்கிப் போயினர்..

இடையிடையே ஆங்கிலத்துக்கு மாறி, என்னைப்பார்த்து "எக்ஸ்க்யூஸ் மீ " என்று சொல்லிக் கொண்டார் பாஸ்டர்..

இத்தனை வருஷத்துக்குப் பின் தேவன் தான் நம்மை சந்திக்க வைத்திருக்கிறார் என்று தன் நண்பரிடம் அப்படியே பேச்சைத் திருப்பியவர், பலகாலம் பிரிந்திருந்த தன் சிறுவயது நண்பருக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அழகாகப் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தார்..

எனக்கு ஒரு பக்கம் சந்தோஷமாக இருந்தாலும், ஏற்கனவே இரண்டு மணி நேரம் ஆகிவிட்டிருந்த படியால், நான் வந்த விஷயத்தைப் பற்றிப் பேச வாய்ப்பு கிடைக்காமலே போய்விடுமோ என்று எனக்குள் புழுங்கிக் கொண்டிருந்தேன்..

கனவு பலித்தது

இரட்சிக்கப்படாத தன் நண்பனுக்கு தேவனின் சுவிசேஷத்தை எந்தத் தயக்கமும் இல்லாமல் அழகாகச் சொல்லிக் கொண்டிருந்த பாஸ்டர் மால்யாவின் பாரத்தையும் விசுவாசத்தையும் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த எனக்கு,

Tanzania விலேயே நான் பார்த்த கிறிஸ்தவர்களுக்குள் ஆவிக்குரிய வைராக்கியமும், சைனீஸை சந்திக்க நான் வைத்திருக்கும் திட்டத்தையும்,தரிசனத்தையும் பகிர்ந்து கொள்ளக் கூடிய ஒரே நபர் இவராகத் தான் இருக்க முடியும் என்று எனக்குள் குறித்துக் கொண்டேன்..

கிறிஸ்துவே மெய்யான தேவன் என்ற சத்தியத்தை அவர் தன் நிருபர் நண்பருக்கு முன் வைத்த விதத்தை கூர்ந்து கவனிக்க கவனிக்க, கர்த்தர் எனக்காக இங்கு ஆயத்தப்படுத்தியிருந்த டான்ஸேனிய உதவியாளர் இவர் தான் என்று எனக்குள் முடிவு செய்து கொண்டேன்..

இதற்குள் மாலை 6 மணியாகி விடவே,
வந்திருந்த ரிப்போர்ட்டர் "எனக்கு வேலை இருக்கிறது.. கிளம்புகிறேன்.." என்று புறப்படவே, பாஸ்டர் மால்யாவும், எழுந்து வாசல் வரை சென்று தன் நண்பரை வழியனுப்பிவிட்டு வந்தார்..

அப்படியே, நேருக்கு நேராய் என்னைப் பார்த்து, " Mr.Lack, இப்ப நம்ம மட்டும் தான் இருக்கிறோம்..வாங்க விஷயத்துக்கு வருவோம்..என்ன விஷயமா வந்தீங்க ?" என்று சுற்றி வளைக்காமல் நேராகக் கேட்டார்.

"இவரும் நம்மள மாதிரி ஆள் போலிருக்குதே!" என்று நினைத்துக் கொண்டேன்..

"நீங்க என்னை ரூடி-ன்னே கூப்பிடலாம்.." என்றேன்.

"ஓகே..நான் சைமன்.." என்று மறுபடியும் என்னை வரவேற்று கைகுலுக்கிக் கொண்டார்..

"சரி, இப்ப சொல்லுங்க ரூடி ..
என்ன விஷயமா வந்தீங்க ?"

நான் பேச வாயெடுப்பதற்குள் அவரே தொடர்ந்தார்..

"நீங்க மத்தியானம் வாசல்ல வந்து நின்னப்போ என்னோட reaction ஐ கவனிச்சீங்களா ரூடி ?"

" ஆமா, ஒரு வேளை நாங்க முன்ன பின்ன தெரியாதவங்களா இருந்ததால ஒரு வேளை நீங்க அப்படி இருந்திருக் கலாம்.."

" உண்மை தான்..ஆனா வேற ஒரு காரியமும் உண்டு ரூடி.." என்று அவர் சொல்ல..
" என்ன சொல்றீங்க பாஸ்டர் ?" என்று கேட்க ஆர்வமானேன்..

" இரண்டு நாட்கள் முன்னால நான்ஒரு கனவு கண்டேன்..அதுல இதே ரிப்போர்ட்டர், தன்னோட கூட நான் இது வரை சந்திக்காத ஒரு வெள்ளைக்காரரை அழைச்சிட்டு வந்ததைப் பார்த்தேன்..இப்ப தான் புரியுது அந்த foreigner நீங்க தான்னு.."

என் காதுகளையே நம்ப முடியாமல் அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன்..

" என்னையவா ? இரண்டு நாள் முன்னாடி கனவுல பாத்தீங்களா ?" என்று திரும்பவும் கேட்டேன்.

“ஆமா.. உண்மையிலே பார்த்தேன்.. இப்ப தான் புரியுது.. கர்த்தர் தான் உங்களை இங்க கூட்டிட்டு வந்திருக்கிறார்..ஆனா ஏன் ? அதான் புரியல.."

“சரி..நீங்களே சொல்லுங்க ரூடி.. நீங்க வந்த உண்மையான பர்ப்பஸ் என்ன ?”

ஆதி முதல் அந்தம் வரை

நடந்த ஒவ்வொரு சம்பவத்தின் மூலமும் தேவனின் கரத்தையும் உறுதிப்படுத்தலையும் உறுதிப்படுத்திக் கொண்டு, பாஸ்டர் சைமன் மால்யாவிடம், ஆரம்பமுதல் கடைசி வரை நடந்த ஒவ்வொன்றையும் மனம் திறந்து விவரிக்க ஆரம்பித்தேன்..

ஆரம்பத்தில் Floyd இடம் என் பாரத்தைப் பகிர்ந்து கொண்டதையும்,சைனீஸ் மத்தியில் ஊழியம் செய்ய பிரதர்ஆண்ட்ரூ விடுத்த அறைகூவலையும்,அது என் மனதில் ஏற்படுத்திய பாதிப்பையும்,

Tan -zam ரெயில்வே ப்ராஜக்ட் பற்றிய என் ஜெபத்தையும், ஊ அதைத் தொடர்ந்து ஏசாயா 52 மூலம் தேவன் என்னோடு பேசியதையும்,

எந் லோக்கல் காண்ட்டாக்ட்டும் இல்லாமல்,விசுவாசத்தில் கால் வைத்து இங்கு Dar-es-salaam வரை பயணம் செய்து வந்ததையும் விவரித்தேன்.

இவை தவிர டார் -இ-சலாமில் சந்தித்த கிறிஸ்டியன் புத்தக நிலைய லேடி பற்றியும்,சைனீஸ் என்ற பெயரைக் கேட்டதும் அவரது ரியாக்-ஷனையும் எப்படியோ பாஸ்டர் மால்யாவின் இடம் பற்றி மட்டும் சொல்லிவிட்டதையும் ஒவ்வொன்றாகத் தெரிவித்தேன்.

இதற்குள் இடைமறித்த மால்யா," சரி, என்னோட பழைய friend ஐ எங்க பாத்தீங்க ?என்று கேட்டார்

" அதை ஏன் கேக்கிறீங்க பாஸ்டர்? நான் சைனீஸ் கேம்ப்புக்கு பஸ் ஏற வெய்ட் பண்ணிட்டிருந்தேன். பஸ்ஸே வரல..

நிக்கிற பஸ் எங்க போகுதுனு கேட்டேன்.
"டெம்க்கே' போகுதுன்னு சொன்னாங்க..ஏறி உட்கார்ந்தேன்.இந்த ஆள் முன்னால உட்கார்ந்திருந்தார்.

"அவர் பக்கத்தில போய் உட்கார்னு" ஆவியானவரோட உந்துதல் இருந்தது.
கடைசியா உங்க வீட்டுக்கே வந்து சேந்துட்டோம்.." என்று ஆதியோடு அந்தமாக எல்லாவற்றையும் சொல்லி முடித்தேன்..

சைமன் மால்யாவின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன.மெதுவாகப் பேச ஆரம்பித்தார்..

"ரூடி..என்னால நம்பவே முடியல..இந்த சைனீஸை எப்படியாவது சந்திக்க ஏதாவது வழி கிடைக்குமா என்று எங்கள் சர்ச்சில் எத்தனையோ மாதமா ஜெபிச்சிட்டு இருக்கிறோம்..

எங்க ஜெபத்துக்கு நேரடியான பதில் தான் கர்த்தர் உங்களை இங்கு கொண்டு வந்தது.."

இரண்டு பேரும் ஆச்சரியத்தில் கொஞ்ச நேரம் பேச்சு மூச்சற்று உட்கார்ந்து விட்டோம்.

இதற்குள்,பாஸ்டரின் மனைவி சாப்பாடு தயார் செய்து முடித்திருந்தார்கள்.

எழுந்த பாஸ்டர் சைமன், "வாங்க ரூடி சாப்பிடலாம்" என்று என்னை அழைத்தார்.

இருவரும் உட்கார்ந்தோம்.
காலையிலிருந்தே பசியோடு இருந்த நான் மனதில் திருப்தியோடு தேவனைத் துதித்தேன்.

சாப்பிட்டுக் கொண்டே, சுவிசேஷம் தடை செய்யப்பட்ட சைனீஸ் செட்டில்மென்ட்டுக்குள் மற்றவர்கள் கண்ணில் படாமல் எப்படி சுவிசேஷத்தைக் கடத்தலாம் என்ற வழிகளைத் தீவிரமாக அலச ஆரம்பித்தோம்..

சைமனும் நானும்

சாப்பிட்டுக் கொண்டே இருந்த பாஸ்டர் சைமன் மால்யா தன் ப்ளேட்டில் கத்தியையும் ஃபோர்க்கையும் ஒரு பக்கம் வைத்துவிட்டு..
" வழக்கமான method எல்லாம் ஒத்துவராது ரூடி.." என்றார்.

" நானும் நினைச்சேன்.." என்றேன் சாப்பிட்டுக் கொண்டே..

"கழுகு மாதிரி நம்மையே வாட்ச் பண்ணிட்டு இருக்கிறாங்க அதிகாரிங்க..என்ன தான் மெத்தட் யூஸ் பண்ணினாலும் ரொம்ப கவனமா இருக்கணும்..

ஓப்பன்-ஏர் மீட்டிங்கோ லிட்ரேச்சர் டிஸ்ட்ரிபியூஷனோ எதுவும் சாத்தியமே இல்ல.." என்றார்.

"உண்மை தான்.. அப்படிப் பார்த்தா வேற வழியே இல்லையா பாஸ்டர்..? என்றேன்.

"இருக்கிற நிலைமையைப் பார்த்தா அப்படித் தான் இருக்குது"

"எனக்கு ஒரு ஐடியா தோணுது பாஸ்டர்.."என்று பிரதர் ஆண்ட்ரூவின் ஓப்பன் டோர் மினிஸ்ட்ரி பற்றியும் சைனாவுக்குள் அவர்கள் விநியோகிக்க "மாசேதுங்" படம் போட்டு சிவப்பு கலரில் சைனீஸ் ஸ்டைலிலேயே gospel ப்ரிண்ட் பண்ணி விநியோகித்ததையும் விவரித்தேன்..

" ம்ம்ம்..இது வேணா ஒரு வேளை ஒர்க் ஆகலாம்.." என்று விருப்பத்தோடு தலையசைத்தார்..

நாங்கள் சாப்பிட்டு முடித்ததுமே சில மிஷினரிகள் மால்யாவைப் பார்க்க வந்தனர்.ஆனால் அவர்களிடம், நாங்கள் பேசிக் கொண்ட எதையும் அவர் பகிர்ந்து கொள்ளாததை கவனித்துக் குறித்துக் கொண்டேன்.

நானும் இதைப் பற்றி வாய் திறக்கவில்லை. அதன்பின் அந்த மிஷினரிகளே என்னை கெஸ்ட ஹவுஸ் வரை கொண்டு வந்து drop பண்ணினார்கள்.

அடுத்த நாள் பாஸ்டர் மால்யா என்னை சந்திப்பதாகவும் ஒரு சைனீஸ் கேம்ப்புக்கு அழைத்துப் போவதாகவும் சொல்லியிருந்தார்..

திட்டம் முடிவானது

அடுத்த நாள் பாஸ்டர் சைமன் மால்யாவோடு அந்த சைனீஸ் செட்டில்மென்ட்டுக்கு வெளியே நின்று கொண்டிருந்தேன்..

முழுவதும் மரக்கட்டைகளால் அடிக்கப்பட்ட சிறிய வீடுகள் நிறைந்து காணப்பட்டது அந்த செட்டில்மென்ட்..

முழுவதும் இரும்பு வேலி கட்டப்பட்ட சிறை வளாகம் போலிருந்தது.உள்ளிருந்தவர்கள் வெளியே வர முடியாதது மட்டுமல்ல, வெளியிலிருந்து ஒரு ஈ காக்கா கூட உள்ளே போக முடியாத அளவு டைட் செக்யூரிட்டி !

நான் அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அவர்களுக்கு சுவிசேஷம் கொடுக்கும் ஆர்வம் எனக்குள் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது.

அந்த இடத்தைப் பார்க்கப் பார்க்க,எவ்வளவு சீக்கிரம் சுவிசேஷத்தோடு திரும்பி வரமுடியுமோ,நான் வந்தே தீருவேன் என்று எனக்குள் முடிவு செய்துவிட்டேன்..

Dar-es-Salaam ல் இருந்த அந்த வாரக் கடைசிக்குள் எனக்கும் பாஸ்டருக்கும் இருந்த நட்பு மேலும் உறுதிப்பட்டதை உணர்ந்தேன்.

நாங்கள் ஒரு தீர்க்கமான முடிவுக்குள் வந்திருந்தோம்.அதன்படி, என் தரப்பிலிருந்து, நான் ஐரோப்பாவுக்குத் திரும்பி, அங்கிருந்து குறுகிய கால மிஷன் ட்ரிப்பாக சில வாலிபர்களை Tanzania வுக்கு அனுப்பவும், பிரதர் ஆண்ட்ரூவை சந்தித்து,அவர் சைனாவுக்குள் கொண்டு சென்ற சீன கம்யூனிஸ்ட் Gospel போன்ற சிவப்பு சுவிசேஷங்கள் ஆப்பிரிக்காவுக்கு ஏற்றபடி ப்ரிண்ட் பண்ணி டான்ஸேனியாவுக்குக் கொண்டு வரவும்,

அதே போல் பாஸ்டர் மால்யா தன் தரப்பில், தன் சபை விசுவாசிகளை உற்சாகப்படுத்தி ஜெபத்தைத் தீவிரப்படுத்தவும், நாங்கள் கொண்டுவரும் லிட்ரேச்சரை எப்படியாவது சைனீஸ் செட்டில்மென்ட்டுக்குள் கடத்தவும் முடிவு செய்து கொண்டோம்..

Dar-es-Salaam ஏர்போர்ட்டில்.." என் 100% சப்போர்ட் உங்களுக்கு உண்டு ரூடி..நீங்கள் லிட்ரேச்சர் சப்ளை பண்ணுங்கள்..அதை சரியான கைகளில் சேர்ப்பது என் பொறுப்பு.."என்று உறுதியளித்தார் பாஸ்டர்.

"நிச்சயம் என்னால் முடிந்த எல்லாத்தையும் செய்வேன் பாஸ்டர்.." என்று நான் சொல்ல..
இருவரும் உடன் பிறந்த சகோதரர்களைப் போல ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக் கொண்டோம்.
எனக்குப் பிரியவே மனம் வரவில்லை..

ப்ளேன் டேக் ஆஃப் ஆனதும், மேலிருந்து அந்தக் கடற்கரை ஊரான டார்-இ- சலாமை பார்த்துக் கொண்டிருந்தேன்.

என் மனம் ஆயிரக்கணக்கான சைனீஸ் ரெயில்வே தொழிலாளர்களை நினைத்தது.

இவ்வளவு பேரை சந்திக்க எத்தனை ஆயிரம் சுவிசேஷப் பிரதிகள் வேண்டும் !
எப்படி ப்ரிண்ட் பண்ணுவது ?
எனக்கு எந்த பண உதவியும் எங்கிருந்தும் வர வாய்ப்பில்லாத நிலையாய் இருந்தது..

இது அவ்வளவு சுலபமான வேலை இல்லை !

ஆனால் கர்த்தருடைய வெகு திட்டவட்டமான அங்கீகார முத்திரை மட்டும் இதில் தெளிவாகத் தெரிவது எனக்குத் தெரிந்தது..

"அவரே எல்லாம் பார்த்துக் கொள்வார்.." என்ற நம்பிக்கை தந்த தைரியத்தில் ஒரு நீண்ட பெருமூச்சோடு என் seat ல் சாய்ந்து கண்களை மூடினேன்..

கிஸ்மு மிஷன் காம்ப்வுண்ட்

Dar-es-Salaam லிருந்து திரும்பிய நான் மறுபடியும் எங்கள் குழுவினரோடு "கிஸ்மு" என்ற இடத்திலிருந்த மிஷன் காம்ப்பவுண்டில் சந்தித்து அவர்களோடு சேர்ந்து கொண்டேன்..

லேக் விக்டோரியா என்ற மிகப்பெரிய ஏரிக்கரையில் அமைந்திருந்த அந்த 20 ஏக்கர் மிஷன் காம்ப்வுண்ட் நாங்கள் இதுவரை ஆப்பிரிக்காவில் நைரோபியிலும் ஸோரோட்டியிலும் சேர்ந்து ஊழியம் செய்து கொண்டிருந்த மிஷினரி ஸ்தாபனத்தைச் சேர்ந்தது.

இருபது ஏக்கர் நிலப்பரப்பில் பச்சை பசேலென்ற சூழலில் பரந்து விரிந்திருந்த அந்தக் காம்ப்பவுண்டில் ஏறக்குறைய 20 பங்களாக்கள் ஆங்காங்கே மரங்கள் அடர்ந்த சுழலில் கட்டப்பட்டிருந்தன..

உகாண்டா மற்றும் டார்-இ-சலாமில் இருந்த வெயிலுக்கும்,ஆப்பிரிக்காவின் சுத்தம் சுகாதாரமற்ற சூழ்நிலையில் இவ்வளவு நாள் இருந்துவிட்டுத் திரும்பியிருந்த எங்களுக்கு இங்கே இருந்த பசுமைச் சூழல் எங்களை இதமாக வரவேற்றது..

அந்த காம்ப்பவுண்டை சுற்றிப்பார்க்க கிளம்பினேன்.மிக அழகான கட்டிடங்கள், மிஷினரி வீடுகள், கெஸ்ட் ஹவுஸ்கள்..

இவை தவிர ஒரு பைபிள் ஸ்கூல்..நாங்கள் போயிருந்த சமயம் பைபிள் ஸ்கூல் மாணவர்கள் விடுமுறையில் போயிருந்தார்கள்.பைபிள் ஸ்கூலின் பெரிய லெக்ச்சர் ஹால், அதைச்சுற்றி அமைந்திருந்த ஹாஸ்டல்.. வாவ் !

நடக்க நடக்க நீண்டு கொண்டே போன அந்தக் காம்ப்பவுண்டில் பைபிள் ஸ்கூலுக்குப் பின்புறம் இன்னும் தள்ளி ஒரு மிகப் பெரிய பில்டிங்..

இவ்வளவு பெரிய கட்டிடத்தில் என்ன நடக்கிறது என்று யோசித்துக் கொண்டே அதை நோக்கி நடந்து கொண்டிருக்கும் போது, எனக்குப் பினனால் யாரோ என்னைக் கூப்பிடும் சத்தம் கேட்டுத் திரும்பினேன்..

கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்

"வெல்கம் வெல்கம்" நீங்கள் ஒரு YWAM Staff என்று நினைக்கிறேன்..
யூத் கேம்ப்புக்கு வந்திருக்கிறீர்களா?" என்று சிரித்துக் கொண்டே அந்தக் கனடா நாட்டுக்காரர் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு என்னோடு கைகுலுக்கினார்..

"இந்த கேம்ப்பஸில் உள்ள ஒவ்வொன்றும் ரொம்ப impressive ஆக இருககிறது..மிக அழகாக மெய்ன்ட்டெய்ன் பண்ணுகிறீர்கள்.." என்றேன்.

"ஆமா உண்மையிலே தேவன் எங்களை ஆசீர்வதித்திருக்கிறார்..
முழுவதும் சுற்றிப் பார்த்தீர்களா?" என்று கேட்டார்..

"பைபிள் காலேஜைப் பார்த்தேன்..ஆனா அதுக்குப் பின்னால உள்ள பெரிய பில்டிங்கை எதுக்காக உபயோகப்படுத்துறீங்கன்னு தெரியல.." என்றேன்.

"வாங்க காட்டுறேன்" என்று அழைத்துச் சென்றார்.அதைப் பார்த்தால் ஒரு சிறிய factory மாதிரி இருந்தது.ஆனால் "மிஷன் காம்ப்பவுண்டில் factory எப்படி" என்று ஆச்சரியப் பட்டேன்.

அதற்குள்,அந்த பில்டிங்கின் ஒரு பகுதியிலிருந்த கதவைத் திறந்து என்னை உள்ளே அழைத்துச் சென்றார்.

பார்த்துவிட்டு என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை.என் முன்னால் ஒரு பெரிய பிரிண்ட்டிங் ப்ரெஸ் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது.

விதம் விதமான பிரிண்ட்டிங் மிஷின்கள், ஒரு பக்கம் கட்டு கட்டாக பேப்பர்கள் மிக அழகாக அடுக்கப்பட்டிருந்தது..

"ஸோ..நீங்க புக் பப்ளிஷிங் கூட பண்றீங்களா?" என்று ஆச்சரியப்பட்டுக் கேட்டேன்..

"எஸ் எஸ்..இது முழுவதும் கமர்ஷியல்.."என்று கொஞ்சம் பெருமிதத்தோடு சொன்னார்..

"வெளி ஆட்களுக்குப் பிரிண்ட் பண்ணித் தருவீர்களா ?" என்றேன்.
என் கண்களில் இப்பொழுதே சிவப்பு நிற சைனீஸ் Gospel books சுவர் ஓரமான அலமாரிகளில் அடுக்கி வைக்கப்பட்டது போலத் தெரிய ஆரம்பித்தது..

"ஓ எஸ்..Gospel மற்றும் புத்தகங்கள் யாருக்கு வேண்டுமானாலும் ஆர்டர் பேரில் பிரிண்ட் பண்ணிக் கொடுப்போம்.." என்றார்.

"ரொம்ப சந்தோஷம்.." என்று சொல்லிக் கொண்டே அவரோடு நானும் வெளியே வந்தேன்..

பாஸ்டர் மால்யாவோடு பேசி ஒரு வாரமாகிறது..
ஆனால் அதற்குள்ளாகவே எங்கள் கனவு நனவாகும் பெரிய தேவையை சந்திக்க இங்கேயே ஒரு ஆப்ரிக்கன் பப்ளிஷர் மற்றும் ப்ரிண்ட்டரை தேவன் எங்களுக்காகவே ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார்..

மீண்டும் ஸ்விட்சர்லாந்து

நான் மிஷன் காம்ப்பவுண்டில் தங்கியிருந்த அந்த ஒரு வாரத்தில்,அந்த publishing in charge உடன் பேசி ஏற்ற விலையில் 10000 சீன சுவிசேஷப் பிரதிகளுக்கு ஆர்டர் கொடுத்தேன்.

இப்போது எனக்கு முன்பாக இரண்டு பெரிய தடைகள் இருந்தன.
பிரதர் ஆண்ட்ரூவிடம் அவர் அச்சடித்த அதே புத்தகங்களை மீண்டும் அதே போல் என் தேவைக்காக பிரிண்ட் பண்ணிக் கொள்ள அவரது அனுமதி தேவைப்பட்டது.

அதுபோக இந்த 10000 பிரதிகளை பிரிண்ட் பண்ணத் தேவையான ஆயிரக்கணக்கான பணம்!

அந்த வார இறுதியில் Round -the -World டீம் Ghana வை நோக்கிச் செல்ல, நான் ஸ்விட்சர்லாந்துக்குத் திரும்பினேன்.

நிறைய கடிதங்கள் எனக்கு வந்திருந்தன. அவைகளில் ஒன்று ஒரு போஸ்ட் கார்டு, பல்கேரியாவின் தலைநகர் சோஃபியாவிலுள்ள பாஸ்டரிடமிருந்து வந்திருந்தது..

"பல்கேரியாவில் க்ளைமேட் நன்றாக உள்ளது.." என்று மட்டும் ஒரே ஒரு லைன் அதில் எழுதியிருந்தது.

(உடைத்தெறி-1ல் இதற்கு முன் நானும் ரோலியும் பல்கேரியாவின் இரும்புக் கதவுகளுக்குப் பின்னால் பைபிள் கொண்டு சென்று ஒரு இருளான இரவில் ஒரு பாஸ்டர் கையில் 200 பல்கேரிய பைபிளைக் கொடுத்துவிட்டு வரும்போது, எல்லாம் சரியாய் நடந்தது என்றால் "பல்கேரியாவில் க்ளைமேட் நன்றாக இருக்கிறது" என்று ஒரு போஸ்ட் கார்டு மட்டும் போடுங்கள்.." என்று அட்ரஸ் கொடுத்துவிட்டு வந்தேன்)

அந்த போஸ்ட் கார்டைப் படித்ததும், இவ்வளவு நாள் எனக்கிருந்த எல்லா டென்ஷனும் நீங்கி, இவ்வளவு ரிஸ்க் எடுத்து பல்கேரியாவுக்குள் பைபிள் கடத்திச் சென்ற எங்கள் ட்ரிப்பை ஆசீர்வதித்த ஆண்டவரை நன்றியோடு துதித்தேன்..

என்னுடைய அடுத்த அஸைன்மென்ட்டை விசுவாசத்தோடு தைரியமாய் கையில் எடுக்க இந்தக் கடிதம் எனக்கு ஒரு மிகப்பெரிய உந்துதலாய் உற்சாகமாய் இருந்தது.

பிரதர் ஆண்ட்ரூவுடன் எதிர்பாராத சந்திப்பு

YWAM ன் School of Evangelism மூலம் வெவ்வேறு பணித்தளங்களுக்கு சென்று வந்த நாங்கள், எல்லோரும் மறுபடியும் ஒன்றாக சந்தித்து அவரவர் அனுபவங்களை ஒரு சேர ஒருவரோடொருவர் பகிர்ந்து கொண்டது த்ரில்லிங்காக இருந்தது.

ஆனால் அதைவிட ஆச்சரியம், எங்கள் graduation service க்கு விசேஷ செய்தியாளராக பிரதர் ஆண்ட்ரூ (தேவனின் கடத்தல்காரன்) வரப்போகிறார் என்று அறிந்தது தான்..

கடைசிநாள் அவர் வந்துவிட்டார் என்று அறிந்ததும், டனிங் ஹாலில் அவரை சந்திக்கப் போனேன்.

என்னைப் பார்த்ததும்.."வா ரூடி, உன்னைப் பார்க்கவே சந்தோஷமா இருக்குது.."
என்று கட்டிப் பிடித்துக் கொண்டார்.

"அவுட் ரீச்சுக்கு எங்க போனீங்க ?" என்று கேட்டார்.
"அதிகமா உகாண்டாவில் தான் இருந்தோம்.."
என்றதும்,அவர் கண்கள் பளிச்சிட்டு என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து விட்டு "ஆப்பிரிக்காவா ? சொல்லு ரூடி...எப்படி இருந்தது?" என்றார்..

ஆரம்பத்திலிருந்து விலாவாரியாக விவரிக்க ஆரம்பித்தேன்..

Floyd ஐ இந்தியாவில் பிரதர் ஆண்ட்ரூ சந்தித்த போது,ஆப்பிரிக்காவிலுள்ள டான்-ஸாம் ரெயில்வே ப்ராஜக்ட் பற்றி கொடுத்த அறைகூவலையும்,

அது ஏற்கனவே எனக்குள் நான் சைனீஸ் பற்றி கொண்டிருந்த தாகத்தை எப்படி அனல்மூட்டிவிட்டது என்பதையும், டார்-இ-சலாமில் பாஸ்டர் சைமன் மால்யாவை அற்புதமாய் சந்தித்ததையும், அவர் இந்தப் பெரிய வேலையில், தான் தருவதாக சொல்லிய ஒத்துழைப்பையும் ஒன்று விடாமல் டீட்டெயிலாகச் சொன்னேன்..

"இது ஒரு பெரிய விஷயம் ரூடி.." என்று நிமிர்ந்து உட்கார்ந்தவர்,"சைனாவுக்குள் போய் அவர்களை சந்திப்பதைவிட,ஆப்பிரிக்காவிலேயே சைனீஸை சந்தித்து சுவிசேஷம் கொடுப்பது ஒருவகையில் சுலபம் தான்..
சரி..இதில் நான் ஏதாவது உனக்கு உதவி செய்ய முடியுமா ?
சொல்லு ரூடி.."என்று கேட்டார்..

ஒரு நீண்ட பெருமூச்சு வந்தது.

இவரிடம் எப்படி இந்த சென்சிட்டிவான விஷயத்தைச் சொல்வது? நான் ஏதோ ஆர்வக் கோளாறில் இவரே சொந்தமாய் தயாரித்து வெளியிட்ட சைனீஸ் Red Gospel ஐ இவரது அனுமதி பெறாமலே 10000 காப்பி ப்ரிண்ட் பண்ண ஆர்டர் கொடுத்து விட்டேன்..

முதலிலேயே பெர்மிஷன் வாங்கியிருக்க வேண்டும்..சரி என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டே.."ஆமா பிரதர் உங்களால ஒண்ணு செய்யமுடியும்.." என்றேன்.

என்னை நேருக்கு நேராய் பார்த்த பிரதர் ஆண்ட்ரு,
"சொல்லு ரூடி..
நான் என்ன செய்யணும்?" என்றார்..

"சைமன் மால்யாவும் நானும், நீங்கள் ஏற்கனவே ப்ரிண்ட் பண்ணியிருக்கும் சேர்மன் மாவோ ஸ்டைல் சிவப்பு காஸ்பல் புக் லெட்டை அப்படியே ப்ரிண்ட் பண்ணி டிஸ்ட்ரிபியூட் பண்ண யோசித்தோம்.

அதை ஆப்பிரிக்காவில் ரீ-ப்ரிண்ட் பண்றதைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?" என்று இழுத்தேன்.

யோசனையில் மூழ்கினார் ஆண்ட்ரூ..

ஒரு வேளை மறுத்து விடுவாரோ ?
அவருக்கு அதை மறுக்க எல்லா உரிமையும் உண்டு..

பேச்சு மூச்சில்லாமல் உட்கார்ந்திருந்தேன்..

“அதிசயமான தேவன்”

" எங்க ப்ரிண்ட் பண்ணப்போற ரூடி?"
என்று பிரதர் ஆண்ட்ரூ கேட்க..

"ஆப்பிரிக்காவின் லேக் விக்டோரியா பக்கத்தில் கிஸ்மு என்ற இடத்தில் ஒரு மிஷன் காம்ப்பவுண்ட் இருக்குது.. அங்க ஒரு ப்ரிண்ட்டிங் ப்ளஸ் பப்ளிஷிங் ஹவுஸே வச்சிருக்கிறாங்க.." என்று நான் சொன்னதும், ஆண்ட்ரூவின் கண்கள் விரியத் திறந்தது..

"உண்மையாவா ? எவ்வளவு charge பண்றாங்க ரூடி ?”

கிஸ்மு ப்ரிண்ட்டர்ஸ் சொன்ன கொட்டேஷனை சொன்னதும்,கொஞ்ச நேரம் ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டே, ஏதோ யோசித்தவராய்..
கையிலிருந்த காலி கப்பை "ம்ம்ம்"
என்று லேசாகத் தட்டிக் கொண்டிருந்தார்..

"இவர்கள் பெர்மிஷன் இல்லாமலே பெரிய காலடி வைத்து விட்டேன் என்று நினைப்பாரோ?"
என்று எனக்குள் அடித்துக் கொண்டிருந்தது..

கொஞ்ச நேரம் கழித்து,"ஓகே ரூடி.. செஞ்சுரலாம்..
நீ கென்யாவில ப்ரிண்ட் பண்ணக் கொடு..
எங்கள் ஓப்பன் டோர் மினிஸ்ட்ரி அதுக்கான செலவு
எல்லாத்தையும் பார்த்துக் கொள்ளும்.."
என்று சர்வசாதாரணமாக சொன்னார்..

" என்ன சொல்றீங்க பிரதர்?"
என்று ஆச்சரியம் தாங்காமல் கேட்டேன்.

"நீ ப்ரிண்ட் பண்ணு, நாங்க bill ஐ pay பண்ணிருவோம்"
என்று அலட்டிக்காமல் அமைதியாய் சொன்னார்.

"ரொம்ப ஆகுமே" என்றேன்.

"ரூடி, நீ எடுக்கிற முயற்சி சாதரணமானதில்ல..
ரொம்ப பெரிய விஷயம்..காஸ்பல் போக முடியாத இடங்களுக்கு எல்லை தாண்டி அதைக் கொண்டு போகிற வேலையில் நாங்கள் கணக்கு பார்ப்பதே இல்லை..

தைரியமா இறங்கு.. ப்ரிண்ட் பண்ணிட்டு பில்லை அனுப்பிவை.. மீதியை நான் பாத்துக்கிறேன்.." என்று ரொம்ப கூலாக, இவ்வளவு பெரிய தொகையை எனக்கு என்னவோ ஐஸ் க்ரீம் வாங்கித் தர்ற மாதிரி சொல்லி விட்டுப் போனார்..

"சரி..அப்போ சுவிசேஷத்தை கடைசிவரை பத்திரமா சைனீஸ் கம்யூனிஸ்ட் கைகளில் சேர்க்கிறது எங்க பொறுப்பு.." என்று நன்றியோடு அவருக்கு
முழு உத்திரவாதம் அளித்தேன்..

உடனிருந்த தேவகரம்

பல தாண்ட முடியாத தடைகளை எவ்வளவு சுலபமாகக் கர்த்தர் நீக்கி முன்னேற வைத்தார் என்று யோசித்து யோசித்து ஆச்சரியப்பட்டுப் போனேன்..

முதலாவது சைமன் மால்யா என்ற டான்ஸேனிய கிறிஸ்தவ மனிதனிடம் நான் கண்ட தைரியமும் வைாக்கியமும், எந்த சைனீஸிடமும் தொடர்பு கொள்வதை எல்லாவிதத்திலும் தடை செய்திருந்த தன் உள்நாட்டு சட்டத்தைக் காட்டிலும், தன் தேவனுடைய அன்பின் கட்டளையையே மிக மேன்மையாக முன்னிறுத்தி, கர்த்தருக்காக எவ்வளவு பெரிய ரிஸ்க்கையும் எடுக்க ஆயத்தயமாயிருந்த அந்த மனிதனின் துணிவை நினைத்து வியந்தேன்.

இரண்டாவது, மலிவான விலையில் அவ்வளவு சுவிசேஷப் பிரசுரங்களையும் அழகாகப் ப்ரிண்ட் பண்ணித்தர,அந்த ஆப்பிரிக்க மண்ணிலேயே ஒரு பப்ளிஷரை ஏற்கனவே ஆயத்தப்படுத்தி வைத்திருந்த தேவகரத்தை நினைத்து ஆச்சரியப்பட்டுப் போனேன்..

இப்போது மூன்றாவது , பிரதர் ஆண்ட்ரூவின் ஓப்பன் டோர்ஸ் நிறுவனம் இவற்றை ப்ரிண்ட் பண்ண பெர்மிஷன் தந்தது மட்டுமல்ல..அதின் முழுச் செலவையும் பொறுப்பெடுத்துக் கொண்ட அதிசயத்தை நினைத்து நினைத்து கனவா நனவா என்று நம்ப முடியாமல் நின்றேன்..

பேதுருவைப் போல், இயேசு சொன்னதும் கீழ்ப்படிந்து படகை விட்டு இறங்கும்போது, தண்ணீரில் நடக்க வைப்பது அவருக்குப் பெரிய விஷயமல்ல.

முழுவதும் கீழ்ப்படியும்போது நம்மால் செய்ய முடியாததை அவர் நம்மைக் கொண்டே செய்ய வைப்பார்.

மனிதப் பார்வையில் எவ்வளவு தான் முடியாத காரியமாக இருந்தாலும், தேவனால் கூடாதது ஒன்றுமே இல்லை என்று நமது ஒவ்வொரு முயற்சியிலும் நம்மோடுகூட இருந்து நிரூபிப்பார் அவர் !!!

" அடுத்த கட்ட ஆயத்தம் “

பிரதர் ஆண்ட்ரூவின் உதவிக்கரம் எனது சைனீஸ் அசைன்மன்ட்டுக்கு மட்டுமல்ல,ஆப்பிரிக்காவுக்கான எனது முழு மிஷினரி அழைப்பையுமே உறுதிப்படுத்தி உற்சாகமூட்டும் உந்து சக்தியாக இருந்தது..

அடுத்து வந்த நான்கு மாதங்களும், ஐரோப்பாவிலும்,பிரிட்டனிலும் பல சபைகளிலும்,வாலிப முகாம்களிலும்,கூட்டங்களிலும்,பைபிள் காலேஜ்களிலும் இதைப்பற்றி அறைகூவல் விடுத்து குறுகிய கால மிஷினரி ஊழியத்துககாக வாலிபர்களைத் தட்டி எழுப்பினேன்.

இதற்காக விசேஷித்த தகுதி என்று எதுவும் வேண்டாம் என்றும்,அழியும் ஆத்துமாக்களுக்கான தாகமும் இரட்சிப்பின் சுவிசேஷத்தை அறிவிக்கும் வேகமும் மாத்திரம் இருந்தால் போதும் என்றும் சொல்லி வந்தேன்.அநேக வாலிபர்கள் ஒப்புக் கொடுத்தனர்.

அமெரிக்காவின் ஓரல் ராபர்ட்ஸ் யுனிவர்சிட்டிக்குச் சென்றிருந்த போது, சீனாவின் மூங்கில் திரை ஏற்கனவே சுவிசேஷத்துக்கு மூடப்பட்டிருந்தாலும், அங்கிருந்த சிலர், என்றாவது ஒரு நாள் அது திறக்கும் என்ற விசுவாசத்தில், சீன மொழியான 'மேன்டரின் '
கற்றுக் கொண்டிருந்தனர்.

அதைக்கண்டு ஆச்சரியப்பட்ட நான் அவர்களுக்கு டான்ஸேனிய சைனீஸ் பற்றி சவால் கொடுத்தேன்.ஒரு தம்பதியினர் ஆர்வமாய் முன் வந்தனர்..

அதில் முக்கியமான ஒருவர்..Iain Muir என்ற நன்கு படித்து நல்ல வேலையில் இருக்கும் வாலிபன்.

தன் தாய்க்கு ஒரே மகனாய் இருந்தாலும்,தாயின் சம்மதத்தோடு இந்த short term மிஷினரி ஊழியத்தில் தன்னை இணைத்துக் கொண்டான்..

மீண்டும் நைரோபி

அந்த வருடம் பெப்ரவரியில் ஆப்பிரிக்கா புறப்பட நானும் அயனும் ரெடியாவதற்குள், இருபது பேர் கொண்ட குழு ஒன்று மார்ச் மாதம் புறப்பட ஆயத்தமாகி விட்டது.

20 முதல் 30 வயதுக்குட்பட்ட அமெரிக்கா, பிரிட்டன், ஸ்வீடன், Finland ,ஜெர்மனி என்று ஒரு இன்ட்டர்நேஷ்னல் டீமே form ஆகிவிட்டது.

மாணவர்கள், ஆசிரியர்கள், நர்சுகள், அக்கௌண்ட்டண்ட் என்று பலர் அதில் இருந்தனர்.

இவர்களுக்கு முன்பாகவே நானும் அயனும் நைரோபி வந்து சேர்ந்தோம். அங்கிருந்து பல இடங்களுக்கு ட்ராவல் பண்ணி கடைசியாக லேக் விக்டோரியாவின் கிஸ்மு வந்தோம்.

அடுத்த மூன்று வாரங்களில்,முழு டீமும் வந்து சேர்ந்தது. அதற்குள் நான் சைனீஸ் காஸ்பல் ப்ரிண்ட் பண்ணும் வேலையில் மும்முரமாய் இருந்தேன்.

அவர்கள் வந்த அன்று அவர்களுக்கு முன்பாக ஒரு புதுப் பெட்டியைத் திறந்து அவர்கள் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த சைனீஸ் காஸ்பலைக் காட்டியதும், முழு குழுவே சந்தோஷத்தில் அதிர்ந்தது.

இப்போது அவர்கள் கையில் இருந்தது, எங்கள் விசுவாசத்துக்கு தேவன் தந்த அத்தாட்சி - மட்டுமல்ல இனி இந்த முழு ப்ராஜக்ட்டில் இவர்கள் தான் முழுமூச்சாக செயல்படப் போகிறவர்கள்.

ஒவ்வொருவருக்கும் ஆர்வம் தாங்கவில்லை. எல்லோரும் அந்த வெயிட்டிங் ஹாலில் ஏகோபித்துக் கர்த்தரைத் துதித்தோம்..

டான்ஸேனியாவுக்குள் ஒரு "கடத்தல்" குழு

21பேர் கொண்ட ஒரு வலுவான குழு - ஆனால் ஒருவரை ஒருவர் அவர்கள் அறிந்து அறிமுகமாகியது கடந்த 24 மணி நேரத்தில் தான்..

ஆனாலும் ஒரே ஒரு பொதுவான நோக்கம் அவர்களை அன்பின் கயிறுகளால் இறுகக் கட்டியிருந்தது - அது..எப்படியாவது கர்த்தரின் அன்பை ஆப்பிரிக்காவுக்கு - முக்கியமாக அங்கு வந்துள்ள சீனர்களுக்குக் கொடுப்பது.

எங்களது உடனடியான அடுத்த சேலஞ்ச்..ப்ரிண்ட் பண்ணிய சுவிசேஷப் பிரதிகளை, தடை செய்யப்பட்ட டான்ஸேனியாவுக்குள் கடத்துதல்..

அடுத்த ஒரு வாரம் முழுவதும் ஜெபம்.. ஜெபம்..ஜெபத்திலேயே செலவிடப்பட்டது.இந்தத் திட்டத்தின் வெற்றிக்காக மட்டுமல்ல இவ்வளவு கஷ்டப்பட்டு அச்சிட்ட சுவிசேஷங்கள் எப்படியாவது சரியான கரங்களில் கிடைக்க தேவகரம் கூட இருந்து செயல்பட - ஜெபத்தில் வாரம் முழுவதும் செலவிட்டோம்.

3 குழுவாகப் பிரிக்கப்பட்டு- ஒரு குழு வடக்கே, நாங்கள் ஏற்கனவே போய் வந்த ஸொரோட்டிக்கும், இன்னொரு குழு தெற்கே, இது வரை போகாத Zambia வுக்கும், நான் பொறுப்பேற்ற 8 பேர் கொண்ட இன்னொரு குழு டான்ஸேனியாவுக்கும் பிரிந்து செல்ல முடிவு செய்யப்பட்டது.

எங்கள் 8 பேரையும் 2 சிறு குழுக்களாக எங்களுக்குள் பிரித்துக் கொண்டோம்.நானும் அயனும் இன்னும் இரண்டு ஸ்வீடன் பெண்களும் Serengeti game reserve காட்டுப்பகுதி வழியாக காரிலும், இன்னும் 4 பேர் லேக் விக்டோரியா வழியாக படகு மூலமாகவும் டான்ஸேனியா பார்டரைக் கடக்க முடிவு செய்தோம்.

இரண்டு குழுக்களும் ஆளுக்கு ஆயிரக்கணக்கான சுவிசேஷப் பிரதிகள் pack பண்ணிக் கொண்டோம்.

இதில் நானும் அயனும் தெரிந்தெடுத்த ரூட் ஆள் நடமாட்டம் இல்லாத வனப்பகுதி.யாரும் அதிகம் உபயோகப்படுத்தாத டான்ஸேனிய பார்டர் அது.

காடும் மலையும் நிறைந்த மிகவும் ஆபத்தான பகுதி. ஆனாலும் தைரியமாய் ரிஸ்க் எடுக்கத் துணிந்தோம்.

நாங்கள் இந்தக் காட்டுப்பகுதி வழியாகவும், மற்ற நான்கு பேரும் லேக் விக்டோரியாவில் படகு மூலமாகவும் டான்ஸேனியாவின் மாவன்ஸா என்ற இடத்தில் எங்கள் கடத்தல் பொருட்களோடு அடுத்த நாள் காலையில் சந்திப்பதாகத் திட்டம் வகுத்துக் கொண்டு ஜெபத்தோடு புறப்பட்டோம்...

சேரங்கி சரணாலயம் ஒரு புது அனுபவம்

எங்களது மற்ற குழுக்கள் பஸ்ஸில் புறப்படுவதைப் பார்த்துக் கையசைத்துக் கொண்டே தேவனைத் துதித்தேன்.சிறிது நேரத்தில் நாங்களும் எங்கள் Toyota வில் புறப்பட்டோம்.

" நமக்கு ஏதாவது பிரச்சனை வருமா ரூடி ?"| என்று அயன் என்னைப் பார்த்துக் கேட்டான்.

"அப்படி இருக்க வாய்ப்பில்லன்னு நம்புறேன் அயன்..நம்ம போற ரூட்ல இருக்கிற செக்யூரிட்டிங்க எல்லாம் கொஞ்சம் ரிலாக்ஸ்டா இருப்பாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன்..

ஆனா எதையும் நம்ப முடியாது..எதுவும் எப்பவும் நடக்கலாம்..தயாரா இருக்கணும்.." என்று ஒரு பக்கம் லேக் விக்டோரியாவின் அழகைப் பார்த்துக் கொண்டே அயனிடம் சொன்னேன்.

இதற்குள் நாங்கள் கிஸ்மு மிஷன் காம்ப்பவுண்ட் வந்து சேர்ந்தோம்.சிறிது நேரத்துக்குள் எங்கள் டீமில் இருந்த பெண்களும் மற்றவர்களும் Gospel பெட்டிகளை வண்டியின் பின்பக்கம் அடுக்கினார்கள்.

Children books ஐ மட்டும் டிரைவர் ஸீட் அருகில் என் பக்கத்தில் வைத்துக் கொண்டேன்.பார்டர் செக்யூரிட்டி கேட்டால் இதை மட்டும் காட்டும் எண்ணத்துடன் அப்படி செய்தேன்.

இப்போது எங்கள் வேன் சேரங்கி ரிசர்வ் வனப்பகுதி நோக்கிப் புறப்பட்டது.நீண்ட பயணத்துக்குப்பின் மிருகங்கள் நிறைந்த அந்தக் காட்டுப்பகுதிக்குள் வண்டி வந்தது.

அது காட்டுப் பகுதி மட்டுமல்ல,அது ஒரு பெரிய வனவிலங்கு சரணாலயமும் கூட.
நாங்கள் வந்த நேரம், பறவைகள் சரணாலயத்துக்கு வந்து போகும் காலம்..

அடுத்த சில மணி நேரங்கள் அந்த இடத்தின் அழகை ரசிக்க ஆரம்பித்தனர் என்னோடு இருந்தவர்கள்.

வரிக்குதிரை போன்ற brown கலர் மிருகங்கள் கூட்டம் கூட்டமாய் மேய்ந்து கொண்டிருந்தன.

ஒரே நேரத்தில் 50 ஒட்டகச் சிவிங்கிகள் கூட்டமாய் நகர்ந்து கொண்டிருந்ததைப் பார்க்கவே அழகாக இருந்தது.

காட்டெருமைக் கூட்டம் ஒரு பக்கம் போய்க் கொண்டிருந்தது.மான்கள் கூட்டம் சில இடங்களில் எங்கள் பாதையின் குறுக்கே வந்து கொண்டிருந்தன.

எங்கே ஏதாவது காண்டாமிருகமோ ஆப்பிரிக்க சிங்கமோ வந்து விடுமோ என்று ஒவ்வொருவரும் கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தோம்.

காட்டுச் சிங்கங்கள் ஒருபுறமிருக்க, எனக்கோ பார்டர் செக்யூரிட்டி கார்டுகளே அசல் சிங்கங்களாய் இப்போதைக்கு தெரிந்தார்கள்.

இது வரை பல கம்யூனிஸ்ட் நாடுகளுக்கு பைபிள் கடத்திச் சென்ற அனுபவம் எனக்கிருந்தாலும், எதையும் சர்வசாதாரணமாக என்னால் எடுத்துக் கொள்ள முடியவில்லை.

எப்போது வேண்டுமானாலும் எதுவும் நடக்க வாய்ப்பு உண்டு என்ற பயமும் ஜாக்கிரதையும் எனக்குள் இருந்து கொண்டே இருந்தது.

எதையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளும் நிலையில் நான் இல்லை.

லேசாக சந்தேகப் பொறி தட்டினாலும் இந்த பார்டர் செக்யூரிட்டிகள் எங்களை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடுவார்கள் !!

ஆண்டவரே இவன் கண்களை மூடிப்போடும்!

இப்போது நாங்கள் கென்யாவிலிருந்து டான்ஸேனியாவுக்குள் நுழைய ஓரிரண்டு கிமீ தூரமே இருந்தது.

வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு நாங்கள் கொண்டு போகும் விலையேறப் பெற்ற பொருளுக்காகவும் தேவனுடைய பாதுகாவலுக்காகவும் ஜெபித்தோம்..

"ஆண்டவரே ! இவர்கள் கண்களை மூடிப்போடும்" என்று அயன் ஜெபிக்க, எல்லோரும் ஆமென் என்று ஆமோதித்தோம்.

எங்கள் தரப்பில் செய்ய வேண்டியதெல்லாம் செய்து முடித்தாகிவிட்டது.இனி எல்லாமே கர்த்தர் கையில் தான்..

டான்ஸேனியாவில் நுழையும் வழியில் பெரிய செக்யூரிட்டியோ, நான் இது வரை பார்த்துப் பார்த்துப் பழகிப் போயிருந்த முள்வேலி இரும்புக் கம்பிகளோ இல்லை..

தூங்கி வழியும் இரண்டு பார்டர் செக்யூரிட்டிகள் மட்டும் உட்கார்ந்திருந்தனர்.

தோளில் துப்பாக்கியுடன்
கொட்டாவி விட்டுக் கொண்டே தூங்கிய முகத்துடன்,ஒரு குடிசை போன்ற காட்டேஜிலிருந்து ஒரு செக்யூரிட்டி வெளியே வந்தான்.

ஒரு வேளை அந்த நாள் முழுவதிலுமே அல்லது அந்த வாரத்திலே எங்கள் ஒரு வண்டி தான் இந்த வழியாக வந்திருககும் போல் தெரிந்தது.

ரொம்ப ரிலாக்ஸ்டாக இருந்தான்.ஆனாலும் நான் எதையும் கேஷுவலாக எடுத்துக் கொள்ளத் தயாராக இல்லை..

ஏனோ தானோ என்று எங்கள் பாஸ்போர்ட்டை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு சீல் அடித்துக் கொடுத்தான்.

பிறகு வண்டியைப் பார்த்தவன்," என்ன கொண்டு போறீங்க?" என்று கேட்டான்.

"புஸ்தகம் தான்.." என்று சொல்லிக் கொண்டே, என் பக்கத்திலிருந்த பெட்டியைத் திறந்து குழந்தைகளுக்காக ஆப்பிரிக்க மொழியில் அச்சிடப்பட்டிருந்த சில்ரன்ஸ் புத்தகங்களை எடுத்துக் காட்டிவிட்டு "நாங்கள் கிறிஸ்டியன் மிஷினரீஸ்..குழந்தைளுக்கு விநியோகிக்க கொண்டு போகிறோம்.." என்றேன்.

புத்தகத்தைத் திறந்து பார்த்து விட்டு,வண்டியில் பின்னாலிருந்த பெட்டிகளைப் பார்த்தான்.

" ஆண்டவரே அதை மட்டும் திறந்துவிட அவன் சொல்லிவிட வேண்டாம்.. தயவு செய்து கிருபை செய்யும்.."
என்று ஜெபித்தேன்.

எனது உடலின் ஒவ்வொரு தசையும் வலியாய் வலித்தது..

என்ன நினைத்தானோ, "சரி ok..Have a good day !" என்று கையசைத்தான்.

ஒரு வேளை அவைகளை மட்டும் திறக்கச் சொல்லியிருந்தால் எங்கள் நிலை எப்படி இருந்திருக்கும் என்று நினைத்துப் பார்க்கவே முடியவில்லை..
அவ்வளவும் தடை செய்யப்பட்ட சைனீஸ் புதிய ஏற்பாடுகள் !

மறுபடியும் வண்டியில் ஏறி உட்கார்ந்து ஸ்டியரிங்கைத் திருப்பினேன்..

ஒரு சிங்கக்குகையின் வாசலிலிருந்து, அதின் வாய்க்கு இரையாவதிலிருந்து அற்புதமாய்த் தப்பியிருந்தோம்!

தேவன் மறுபடி ஒரு முறை இதைச் செய்திருந்தார்!

கடைசியாகக் "கடத்தல்" பொருட்களுடன் டான்ஸேனியாவுக்குள்..

செக்யூரிட்டிகள் கண்களிலிருந்து தப்பிப் பிழைத்து பார்டர் தாண்டி பல மணி நேரங்கள் டான்ஸேனிய எல்லைக்குள் காட்டு வழியாகவே வந்து கொண்டிருந்தோம்..

மத்தியான வெயில் போய்,மாலை வெளிச்சம் சூழ ஆரம்பித்தது.

இன்னும் சில மணி நேரங்கள் தான்.

இரு புறமும் உயரமான புல் புதர்கள்..மாலை மயங்குமுன் மெயின் ரோட்டை அடைந்தாக வேண்டும்.அல்லது இந்தக் காட்டுக்குள் ஆப்பிரிக்க இரவைக் கழிப்பது என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஆபத்தானது என்று ஏற்கனவே எச்சரிக்கப்பட்டிருந்ததால் எவ்வளவு வேகமாக ஓட்ட முடியுமோ, அவ்வளவு வேகமாக குண்டும் குழியுமான மலைப்பாதையில் ஓட்டிக் கொண்டிருந்தேன்.

அவ்வப்போது மான்கள் குறுக்கே பாய்ந்து கொண்டிருந்தன.

“ஆண்டவரே..
கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரியும் மலைக்கு மத்தியில் நாங்கள் போக வேண்டிய வழியைக் காட்டும்.."என்று ஜெபித்தேன்.

இதற்குள் இருள் சூழ ஆரம்பித்தது.எங்கள் ஜெபத்தைக் கேட்ட கர்த்தர் நாங்கள் போக வேண்டிய பாதையில் சரியான நிமிடத்தில் கொண்டு வந்து சேர்த்தார்.

எங்கள் மகிழ்ச்சிக்கு அளவில்லை.மெயின் ரோட்டுக்கு வந்து சேர்ந்த அடுத்த ஒரு மணி நேரத்தில் நாங்கள் வந்து சேர வேண்டிய மாவன்ஸா ஊருக்குள் வந்து சேர்ந்தோம்.

நாங்கள் வருவது பற்றி ஏற்கனவே அங்குள்ள ஜெர்மன் மிஷினரி Fritz க்கு சொல்லியிருந்தோம்.
ஆரம்பத்தில் அவர் நான் எடுத்த இந்த முயற்சிக்கு ஆதரவு தராதது மட்டுமல்ல இது எவ்வளவு ரிஸ்க்கானது என்று கடுமையாக எச்சரித்தும் இருந்தார்.

ஆனால் தேவன் செய்த எல்லாவற்றையும் விவரித்து நாங்கள் கொண்டு வந்த சைனீஸ் காஸ்பலைப் பார்த்த போது, என்னைக் கட்டுப் பிடித்து அழுது விட்டார் Fritz.

மட்டுமல்ல..அவர் சொன்னார்.."ரூடி,இப்ப நான் இந்த ப்ராஜக்ட்ல என்னால முடிஞ்ச எதையாவது செய்யணும்.. சொல்லு நான் என்ன செய்யணும்?" என்று கேட்டார்.

"இப்ப உன்னோட இன்னொரு டீம் லேக் விக்டோரியா வழியாக வர்றாங்க..அங்க கஸ்டம்ஸ்ல எனக்குத் தெரிஞ்சவங்க உண்டு.. வா, க்ளீயர் பண்ண நான் ஹெல்ப் பண்றேன்.." என்று என்னை அழைத்துச் சென்றார்.

கஸ்டம்ஸ் ஆபீஸில் அவருக்குத் தெரிந்த நபர் ஒருவர் மூலம் எங்களது இன்னொரு டீம் கொண்டு வந்த எல்லா பெட்டிகளும் "CLEARED" முத்திரையுடன் வெளிவந்தன.

தேவ கிருபையால் பல ஆயிரம் சைனீஸ் காஸ்பல் களை இப்போது டான்ஸேனிய எல்லைக்குள் கொண்டு வந்து விட்டோம்.

இப்பொழுது எங்களுக்கு முன்னிருந்தது இன்னொரு பெரிய சேலஞ்ச்..

"சைனீஸ் ரெயில்வே தொழிலாளர்களைக் கண்டுபிடித்து இவைகளை எப்படி சரியாய் அவர்கள் கைகளில் சேர்ப்பது ?"

மலைப்பாதையில் பயணித்து வந்தது போலவே..எங்களுக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களை நோக்கி எங்கள் கண்களை ஏறெடுத்தோம்!!

ரெட் - காஸ்பலுடன் பாஸ்டர் மால்யா சபையில்

இப்போது எங்கள் அடுத்த வேலை துவங்கியது..
எங்கள் குரூப்பிலிருந்த மற்ற ஆறு பேரையும் Fritz இடம் மவான்ஸாவில் விட்டுவிட்டு நானும் அயனும் ரெட்-காஸ்பல்லை
வண்டியில் எடுத்துக் கொண்டு டார்-இ-சலாமுக்கு அடுத்த நாள் காலை புறப்பட்டோம்.

அது ஒரு நீண்ட நெடும் பயணம்..கடுமையான வெயில்..

நானோ பாஸ்டர் மால்யாவை சந்தித்து எப்போது இவைகளை அவர் கையில் சேர்த்து அதினால் அவர் முகத்தில் ஏற்படும் சந்தோஷத்தையும் எப்போது பார்ப்பேன் என்ற வேகத்தில் எதையும் பொருட்படுத்தாமல் போய்க் கொண்டிருந்தேன்.

கடைசியாக அன்று மாலை சைமன் மால்யா வீடு வந்து சேர்ந்தோம்.
6 மாதம் முன்பு நானும் அந்த ரிப்போர்ட்டரும் இதே வீட்டுக்கு வந்த அந்த நாளின் நினைவுகள் எனக்குள் வந்து போனது.

இதோ இப்போது சைனீஸ் காஸ்பலுடன் அதே மால்யாவை சந்திக்க தேவன் கிருபை தந்திருக்கிறார்.

பெட்டியைத் திறந்ததும் மால்யாவின் சந்தோஷத்துக்கு அளவில்லை.

"என் கண்ணையே என்னால நம்ப முடியல ரூடி..நான் எப்படி நினைச்சு வச்சிருந்தனோ அப்படியே இருக்குது.." என்று ஒவ்வொரு பக்கமாகப் புரட்டியவர்..அப்படியே கண்களை மூடி..

" நன்றி ஆண்டவரே! இதை பத்திரமாக எங்கள் கையில் சேர்த்தீரே !
இயேசுவே! அப்படியே இவைகள் யாருக்காக அச்சிடப் பட்டதோ அவர்கள் கைகளில் கொண்டு சேர்க்க கிருபை செய்யும்.." என்று ஜெபித்தார்.

அடுத்த ஞாயிறு..
200 பேர் கொண்ட திடமான தன் சபையில் எல்லோருக்கும் அதை விநியோகித்து விட்டு, சைனீஸ் மத்தியில் தைரியமாய் சுவிசேஷம் சொல்ல முன் வருவோர் யார் என்று ஒரு மிகச் சவாலான தேவ செய்தியைக் கொடுத்தார்.

ஸ்வாஹிலி மொழியில் அவர் பேசினதை நாங்கள் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும்,அவர் பேசின விதமும்,சபையார் அதை ஏற்றுக் கொண்ட விதமும் எங்களை ஆச்சரியப் படுத்தியது.

மட்டுமல்ல..எவ்வளவோ நாட்களாக அவர்கள் ஜெபித்த ஜெபம் இப்போது பதிலாக அவர்கள் கைகளில் கிடைத்ததின் சந்தோஷத்தை அந்த முகங்களில் காண முடிந்தது..

சைனீஸ் என்கவுண்ட்டர்

அடுத்த வாரம் முழுவதும் அயனும் நானும் பாஸ்டர் வீட்டில் தங்கி டெம்க்கே சபையினருடன், எந்தெந்தவழிகளில் இதை சைனீஸ் கைகளில் சேர்க்கலாம் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தோம்.

பாஸ்டர் மால்யாவின் சபையில் காய்கறி விற்கும் சிலர் மார்க்கட்டுக்கு சைனீஸ் காய்கறி வாங்க வரும்போது அவர்களிடம் கொடுப்பதாகச் சொன்னார்கள்.

சபையில் டாக்டர் ஒருவர் அவரோடு வேலை செய்யும் சைனீஸ்க்கு கொடுக்கப் போவதாகச் சொன்னார்.
இதற்குள் அநேகர் இந்த ஊழியத்தை ஆரம்பித்து விட்டிருந்தனர்.

ஒரு நாள் இரவு நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது பாஸ்டர் அவரது சபை விசுவாசி ஒருவர் சொன்ன சாட்சியை பகிர்ந்து கொண்டார்.

அந்த சபையின் விசுவாசி ஒருவர் சைனீஸ் ரெயில்வே ப்ராஜக்டில் அக்கௌண்ட்டண்ட்டாக இருப்பவர்..அவரிடம் ஒரு நாள் வேலை விஷயமாக இரண்டு சைனீஸ் வந்திருந்தனர்.

அவர்கள் அவரிடம் அடிக்கடி வந்து போகக் கூடியவர்கள்.ஒரு நாள் பேச்சோடு பேச்சாக.." ஓ ! உங்கள் சைனீஸ் பாஷையில் உள்ள ஒரு புக் எனக்கு கிடைத்தது..
படிக்கிறீர்களா ?"என்று இருவருக்கும் கொடுக்க..
அவர்கள் இதைப் பிரித்துப் படித்திருக்கிறார்கள்.

அவர்களில் ஒருவர்,
"இது பைபிளாச்சே ! 20 வருஷத்துக்கப்புறம் பார்க்கிறேன்.."
என்று ஆச்சரியமாய் வாங்கிப் பார்த்திருக்கிறார்..

இது போல பல விதங்களில் அவரது சபை விசுவாசிகள் தங்களால் முடிந்த அளவுக்கு எங்கெங்கெல்லாம் சைனீஸை சந்தித்து கொடுக்க முடியுமோ, தைரியமாய் இந்த ஊழியத்தைச் செய்து கொண்டிருந்தது எங்களை இன்னும் ஊக்கப்படுத்தியது.

சைனீஸ் ஃபுட்பால் டீம்

டெம்க்கே சபை தன்னால் முடிந்த எல்லா வகையிலும் இந்த ஊழியத்தைச் செய்து கொண்டிருந்தது.

நானும் சைமனும் புதுப்புது வழிகளைத் திட்டமிட்டு இந்த வேலைகளைச் செய்து கொண்டிருந்தோம்.
நாங்கள் அறியாத வழிகளை தேவன் திறந்து கொடுத்தார்.

சீக்கிரத்திலே Chinese National Football Team Tanzania வருவதாக அறிவிப்பு வந்தது.

"நாம் சைனீஸை சந்திக்க முடியாவிட்டால், நம்மை சந்திக்க கர்த்தர் அவர்களைக் கொண்டு வருவார்.." என்று பிரதர் ஆண்ட்ரூ ஒரு முறை சொன்னதை நினைத்துக் கொண்டேன்.

தங்கள் நேஷனல் டீம் வருகிறது என்பதால் நிச்சயம் ஸ்டேடியம் இங்குள்ள சைனீஸ்காரர்களால் நிரம்பும் என்று அறிந்திருந்தேன்.

ஆகவே இந்த பொன்னான வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்து, முன்னாகவே டிக்கட் ரிசர்வ் செய்துவிட்டேன்.

அந்த நேரம் அயனோ வேறு குழு உறுப்பினரோ என்னோடு இல்லாததால்,
நான் தனியாகவே இந்த வேலையை பொறுப்பெடுத்துக் கொண்டேன்.

மேட்ச் ஆரம்பிக்கும் அன்று அரை மணி நேரம் முன்னதாகவே ஸ்டேடியத்துக்குள் நுழைந்தேன்.என் முதுகில் மாட்டியிருந்த bag நிறைய ரெட்- காஸ்பல்ஸ்.

எப்படி கொடுப்பது என்று வழி தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்தேன்.

நான் நுழைந்த சமயம் ஸ்டேடியத்தில் அவ்வளவாக கூட்டம் இல்லை.திடீரென்று ஒரு எண்ணம் வந்தது..

"யாரும் பார்க்குமுன்பாக ஸ்டேடியத்தின் காலி சீட்களில் வைத்துவிடு.." என்று..

உடனே நேரத்தை வீணாக்காமல் கையிலிருந்த 300 க்கும் அதிகமான காஸ்பல்களையும் வேகமாக chair களில் வைத்துக் கொண்டே சென்றேன்.

இன்னும் யாரும் என்னை கவனிக்கவில்லை.மிக ஜாக்கிரதையாக ஏதோ சீட் தேடுவது போல என் வேலையை வேகமாக செய்து முடித்தேன்..

இதற்குள் ஸ்டேடியத்தில் கூட்டம் வந்து விட்டது.அழகான சிறிய சிவப்பு புக்லெட்டைப் பார்த்த சிலர் போட்டி போட்டுக் கொண்டு எடுத்துக் கொண்டிருந்தனர்..

மேட்ச் ஷெட்யூல் புக்லெட் என்று நினைத்து ஒருவர் கையிலிருந்து ஒருவர் பிடுங்கிக் கொண்டிருந்தனர்.

அதன்பின் என்ன நடந்திருக்கும் என்று யோசித்துக் கொண்டிராமல்,மீதியிருந்த காஸ்பல்களையும் வேகமாக வைத்துவிட்டு நைஸாக வெளியே வந்து விட்டேன்.

ஜெபத்தேடும் கண்ணீரோடும் முடிந்த அளவு விதைகளை விதைத்து விட்டேன்..தேவன் பலன் தருவார் என்ற நம்பிக்கையுடன்..

எல்லாவற்றுக்கும் முடிவு சமீபமாயிற்று

டான் - ஸாம் ரெயில்வே ப்ராஜக்ட் ஊழியத்தோடு ஆப்பிரிக்காவின் மற்ற ஊழியங்களையும் நான் கவனித்து வந்தேன்.
இதற்குள் இரண்டு வருடங்கள் ஓடிவிட்டிருந்தன..

ரொதேஷியா என்ற ஜிம்பாப்வேயில் இதற்குள் இரண்டு பைபிள் காலேஜ்களும் ஒரு YWAM ஆபீஸூம் நிறுவ தேவன் தேவன் கிருபை செய்திருந்தார்.

இப்போது அதை மற்றவர்கள் பொறுப்பில் விட்டுவிட்டு அடுத்த நிலை பணிக்காக ஐரோப்பாவுக்கு நகர வேண்டிய நேரம்..

ஆப்பிரிக்காவை விட்டு வெளியேறுமுன் ஒரே ஒரு முறை கடைசியாக டான்- ஸாம் போய் சைனீஸ் கம்யூனிஸ்ட்டுகளை சந்தித்துவர முடிவு செய்தேன்.இதற்குள் அங்கு ரெயில்வே ப்ராஜக்டும் முடியும் நிலையில் இருந்தது.

நைரோபியில் வாங்கிய ஒயிட் வோக்ஸ்வேகனில் காஸ்பல்களை நிரப்பிக் கொண்டு டான்ஸேனியா வழியாக Zambia வுக்குள் நுழைய திட்டமிட்டேன்.

பக்கத்து பக்கத்து நாடுகளான ஸாம்பியாவுக்கும் ஜிம்பாப்வேவுக்கும் இதற்குள் அரசியல் உறவுகள் சீர்குலைந்து மிகவும் மோசான நிலையில் இருந்தது.

ஜிம்பாப்வேயிலிருந்த வெள்ளைக்காரர்கள் குடியிருப்பின் மேல் நீக்ரோ தீவிரவாதிகள் அவ்வப்போது தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தனர்.

Zimbabwe யிலிருந்து Zambia வுக்குள் அவ்வளவு எளிதில் யாரும் போய்வர முடியாத இக்கட்டான சூழ்நிலை..

எனவே எனக்கிருந்த ஒரே வழி போட்ஸ்வானா என்ற இடம் வழியாக ஸாம்பியாவுக்குள் நுழைவது.

ஜிம்பாப்வே சிட்டிஸன்ஷிப் வைத்திருந்த நான் தடை செய்யப்பட்டிருந்த சைனீஸ் லிட்ரேச்சரோடு எதிரி நாடான ஸாம்பியாவுக்குள் நுழைவது சட்டபூர்வமாக மட்டுமல்ல, அரசியல் ரீதியாகவும் மிகப் பெரிய குற்றம்.

நான் பிடிபட்டால் ஜிம்பாப்வேயின் உளவாளியாகவே குற்றம் சாட்டப்படுவேன்.

முழுவதும் Gospel நிரப்பப்பட்டிருந்த என் வேனுடன் இப்போது நான் ஸாம்பியாவின் எல்லையில் கஸ்டம்ஸ் ஆபீஸில் க்ளீயரன்ஸுக்காக வரிசையில் நின்று கொண்டிருந்தேன்.

இது வரை எத்தனையோ முறை நான் பார்டர்களை க்ராஸ் பண்ணியிருககிறேன்.ஒரு தடவையாவது நான் தடுத்து நிறுத்தப்பட்டதில்லை.

ஆனால் இந்த முறை ஏதோ ஒருவித படபடப்பு எனக்குள் காணப்பட்டது.
"ஆண்டவரே பார்க்கும் கண்களை மூடிப்போடும்.." என்று அமைதியாக ஜெபித்தேன்.

வரிசையில் நின்றிருந்த என் முறை வந்தது.அந்த Zambian கஸ்டம்ஸ் அதிகாரி என்னை ஏற இறங்கப் பார்த்தார்..

இப்படியும் நடக்குமா ?

என்னை ஏற இறங்கப் பார்த்த அந்த அதிகாரி ஒரு form ஐ நீட்டி.." இதை நிரப்பிக் கொடு..நீ என்னவெல்லாம் வண்டியிலும் பாக்கெட்டிலும் வைத்திருக்கிறாயோ ஒவ்வொன்றையும் ஒன்று விடாமல் அதில் குறிப்பிடு..எல்லா டீட்டெய்லும் எனக்கு வேணும்.." என்றார்.

நிதானமாய் அதிலிருந்த எல்லாக் குறிப்பையும் பார்த்து விட்டு எனது ஸ்விஸ் பாஸ்போர்ட் டீட்டெய்ல்ஸ் மற்றும் நான் வைத்திருந்த எல்லாவற்றையும் எண்ணி எண்ணி கவனமாய் குறிப்பிட்டேன்.

ஆனால் தேவையில்லாத பிரச்சனை வேண்டாம் என்று சைனீஸ் லிட்ரேச்சரைப் பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை.

நிரப்பிய form ஐ அதிகாரியிடம் கொடுத்து விட்டு நின்று கொண்டிருந்தேன்.எல்லாவற்றையும் கவனமாய் ஆராய்ந்து விட்டு நான் சொன்ன பதிலோடு அவைகளை ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டார்.

" So Mr.Lack, அப்போ நீங்க ஸ்விட்சர்லாந்திலிருந்து வர்றீங்க ? ம் ம்.."
எனக்கு நாடி நரம்பெல்லாம் ஒடுங்க ஆரம்பித்தது..

"இப்போது எங்கேயிருந்து வருகிறாய்..எவ்வளவு நாள் எங்கெங்கே இருந்தாய் ?" என்ற தேவையில்லாத கேள்வி எல்லாம் கேட்டு விடுவாரோ ? அப்படி கேட்டால் எல்லா விபரமும் சொல்ல வேண்டுமே !" என்ற பயம் உள்ளூர என்னை உலுக்கி எடுத்தது.

" ம்ம்ம்..சரி..பைபிள், tracts
எல்லாம் எடுத்துட்டு போற..அப்படிதான ?"
"ஆமா சார்.."என்று எச்சில் விழுங்கி விட்டு..கொண்டு போறது சட்டத்துக்கு விரோதமா சார் ?" என்றேன்..

என்னை ஒரு தடவை பார்த்து விட்டு.." அப்படி இல்ல..நானும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒரு believer தான்..அதான் கேட்டேன்.." என்று சாதாரணமாக சொன்னார்..

டென்ஷனான என் நரம்புகள் நார்மல் நிலைக்கு வந்தன.
"அப்படியா சார் ?" என்று ஆச்சரியம் தாங்காமல் கேட்டேன்..

உலகம் முழுவதும் நான் பார்டர் க்ராஸ் பண்ணிய சரித்திரத்திலேயே என் வாழ்க்கையிலே முதன்முதலாக நான் சந்தித்த ஒரு கிறிஸ்தவ கஸ்டம்ஸ் அதிகாரி !!!

" இப்படியும் நடக்குமா ?" என்று மெய்மறந்து போய் நன்றி ஆண்டவரே என்றேன்.மீண்டும் ஒரு முறை தேவன் என்னோடு கூட இருந்து கிரியை நடப்பித்திருப்பதைக் கண்ணாரக் கண்டேன்.

இப்போது என்னை உட்கார வைத்த அவரோடு நான் என் விசுவாச அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள, அவரும் தன் அனுபவங்களை மனம் திறந்து பேசினார்..

ஆனாலும் நான் இப்போது வந்த டான்-ஸாம் வேலையைப் பற்றி சொல்லிக் கொள்ளவில்லை.

இன்னும் என் form ல் சீல் போடப்படாமல், அவர் கையிலேயே இருந்தது.
திரும்ப ஒரு முறை form ஐப் பார்த்தவர்..
"இன்னும் ஏதாவது வைத்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்..

கொஞ்ச நேரம் எனக்குள் போராட்டம்.."சைனீஸ் காஸ்பல் " பற்றி சொல்லவா வேண்டாமா என்று..

கடைசியில்.."ஆமா சார் கொஞ்சம் சைனீஸ் காஸ்பல் வச்சிருக்கிறேன்.." என்றேன்.

"அப்போ அதையும் நீங்க குறிப்பிடணுமே" என்று அழுத்தமாய் சொல்லி விட்டு form ஐ திருப்பித் தந்தார்.வேறு வழியில்லாமல் "சைனீஸ் காஸ்பல்" என்று எழுதினேன்.

"ஓகே குட்.." enjoy your trip..May God go with you.." என்று சொல்லி சீல் அடித்து கொடுத்து விட்டார்.

அவருக்குத் தெரியும் இது சட்டத்துக்கு புறம்பானது என்று..ஆனாலும் அதையும் குறிப்பிட வைத்து approval stamp போட்டுக் கொடுத்திருக்கிறார்..

"இப்படியும் நடக்குமா ?" என்ற எலிசா காலத்து பஞ்சத்தில் கேட்ட வார்த்தை தான் ஞாபகத்துக்கு வந்தது..

சகலமும் நன்மைக்கே

" ஆண்டவரே இது எப்படி?"
எல்லாம் தெரிந்தும் புரிந்தும் தடைசெய்யப்பட்ட லிட்ரேச்சர்களை கொண்டு போக அனுமதிககப் பட்டிருக்கிறேன்.. ஒன்றும் புரிய ல்லையே ?"

வி

சில நாட்களுக்குப் பிறகு தான் புரிந்தது..தேவன் ஏன் இவை எல்லாவற்றையும் அனுமதித்தார் என்று..

ஒரு வேளை இன்று அந்த form ல் சைனீஸ் காஸ்பல் வைத்திருப்பது பற்றி குறிப்பிடாமல் போயிருந்தால் பிறகு ஒரு நாளில் எனக்கு நடந்ததே வேறு மாதிரி ஆகியிருக்கும்.

அன்று இரவு ஒரு ஆப்பிரிக்கன் பாஸ்டருடன் தங்கினேன்.அடுத்த நாள் வண்டி நிறைய லிட்ரேச்சருடன் வடக்கு நோக்கி கிளம்பினேன்.

வழி நெடுக கிராமங்கள் தோறும் கைப்பிரதிகளையும் புத்தகங்களையும் கொடுத்துக் கொண்டே சென்றேன்.

புத்தகங்கள் அங்கு ஒரு அரிதான பொருளாயிருந்தது. ஸாம்பியாவில் இரண்டாவது நாள் இரவு மிஷினரி நண்பர்களுடன் லுஸாக்காவில் தங்கிவிட்டு மூன்றாம் நாள் பயணத்தைத் தொடர்ந்தேன்.

வண்டியின் ஜன்னல் வழியாக பார்ப்பவர்களுக்கெல்லாம் கொடுத்துக் கொண்டே போனாலும் எனது முக்கிய target சைனீஸ் தான்.

இப்போது மூன்றாம் நாள் முடியப் போகும் நிலையில் மிக்குஷி நதியோரம் வந்து விட்டேன்.கடைசியாக இப்போது டான்- ஸாம் ரெயில்வே ப்ராஜக்ட் வேலை நடந்து கொண்டிருந்த இடம் என்கண்களில் பட்டு விட்டது.

வேலை முடிந்து லேபர்கள் அவரவர் தங்கள் வீடு திரும்பும் மாலை நேரம்..
தூரத்தில் சைனீஸ் செட்டில்மென்ட்டைப் பார்த்து விட்டேன்.இது தான் கடைசியாக நான் வர நினைத்திருந்த இடம்.

யூனிஃபார்மில் சில ஆப்பிரிக்க செக்யூரிட்டிகள் ரோந்து சுற்றிக் கொண்டிருந்திருந்தனர்.
அன்று இரவு தங்க வேறு இடமில்லாததால் வண்டியிலேயே படுத்துக் கொண்டேன்..

அடுத்த நாள் காலை கண் விழித்த போது, சூரியனின் இதமான வெளிச்சத்தோடு தேவ பிரசன்னத்தையும் உணர்ந்த நான், முழுவதும் தேவசித்தத்தின் மையத்தில், என்னயே திட்டமாக உணர்ந்தேன்.

இதோ எனக்கு முன் ஒரு முழு சைனீஸ் குடியிருப்பு. அங்கிருந்த எல்லாரையும் மொத்தமாக என் கண்ணால் பார்த்தேன்.

அவர்களுக்காக என் உள்ளம் பொங்கியது.
Zambia வில் எனது இந்த ப்ராஜக்டின் கடைசி நாள் இது..இதன் பிறகு நான் இந்தப்பக்கம் திரும்பி வரப் போவதில்லை.
இதோடு ஆப்ரிக்காவில் என் ஊழியம் முடிகிறது.

இந்த நினைவுகள் எனக்குள் அலையலையாய் வந்து கொண்டிருந்த போதே என் உள்ளத்தை ஏதோ ஒரு கலக்கம் நிறைத்தது.

ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என்று என் தலைக்குள் ஒரு மஞ்சள் பல்பு மின்னி மின்னி எரிய ஆரம்பித்தது.

அன்றைய காலை தியான நூலைத் திறந்தேன்.
சங் 27:1-5 காணப்பட்டது.

"கர்த்தர் என் வெளிச்சம் என் இரட்சிப்புமானவர்.. யாருக்கு பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர்..யாருக்கு அஞ்சுவேன்?"

"தீங்கு நாளில் அவர் என்னைத் தமது கூடாரத்தில் மறைத்து, எனனைத் தமது கூடார மறைவில் ஒளித்து வைத்து என்னைக் கன்மலையின் மேல் உயர்த்துவார்.."

கண்ணீரோடே விதைக்கிறவன்

தினசரி தியான நூலை மூடிவிட்டு சிறிது நேரம் ஜெபத்தில் செலவிட்ட நான், இப்போது வண்டியை எடுத்தேன்.

100 மீட்டர் தள்ளி 2 ஆப்ரிக்க செக்யூரிட்டிகள் ஒரு காம்ப்பவுண்ட் வாசலில் காவலுக்கு நின்றிருந்தனர்.

வெளியில் இங்கிலீஷ் லிட்ரேச்சருடன் உள்ளே சைனீஸ் காஸ்பல் சிலவற்றை வைத்து வெளியே தெரியாமல், நேரே சென்று அவர்கள் கையில் கொடுத்தேன்.

முதலில் முறைத்துப் பார்த்தவன், பிறகு நன்றி சொல்லி வாங்கிக் கொண்டான்.

கொஞ்சம் தைரியத்துடன்,சில சைனீஸ் காஸ்பலை எடுத்து,"இது இங்குள்ள சைனீஸ்க்கு.." என்றேன்.
"சரி கொடுக்கிறேன்" என்று வாங்கி வைத்துக் கொண்டான்.

இப்படியே வழியெங்கும், எங்கெங்கெல்லாம் முடியுமோ இதே போல் கொடுத்துக் கொண்டே சென்றேன்.

ஒரு இடத்தில், ஒன்றும் தெரியாதது போல," இங்கு பெட்ரோல் கிடைக்குமா?" என்று பேச்சுக் கொடுத்துக் கொண்டே, என் விதைகளை விதைத்தேன்.

எங்குமே அதிக நேரம் நிற்காமல் கொடுத்துக் கொண்டே சென்றேன். சில இடங்களில் சைனீஸ் சூப்பர்வைசர்கள் மேற்பார்வை செய்து கொண்டிருந்தனர்.

ஆப்ரிக்கன்ஸ் மூலமே அவர்களிடம் கொடுக்க வைத்தேன். " ஆண்டவரே, நீர் ஏற்கனவே நியமித்துள் ள ஆத்துமாக்கள் கையில் இவைகள் போய்ச் சேர உதவி செய்யும்" என்று ஜெபித்துக் கொண்டே கொடுத்துக் கொண்டு போனேன்..

இதற்குள் மத்தியானம் ஆகிவிடவே,சிரஞ்சே என்ற இடத்துக்கு வந்து அங்குள்ள பிரஸ்பிட்டேரியன் பாஸ்டர் ரெவரண்ட் புலங்கோ என்பவரை சந்தித்தேன்.

அன்று மதியம் அவரது சபை உறுப்பினரான அந்த ஊர் டிஸ்ட்ரிக்ட் கமிஷனரும் எங்களோடு மதிய உணவு வேளையில் கலந்து கொண்டார்.

பாஸ்டர் என்னை அவருக்கு அறிமுகப்படுத்தும் போது, சைனீஸ் காஸ்பலையும் காட்டவே, எனக்கு உள்ளூர பயம் பிடித்தது.

ஆனால் கமிஷனர் என் முயற்சியை பாராட்டியதோடு, கம்யூனிஸ்ட் சைனீஸ், ஆப்ரிக்கர்களோடு தங்கள் கம்யூனிஸ சித்தாந்தத்தை எப்படி பரப்புகிறார்கள் என்றும், தங்கள் நாடு அவர்களிடம் உதவி பெறுவதால் எதுவும் செய்யக்கூடாமல் இருப்பது பற்றியும் பேச்சுவாக்கில் சொன்னார்..

மதிய உணவுக்குப்பின் புறப்பட்ட நான், வழியில் கண்களில் பட்ட எல்லா ரெயில்வே வேலை நடக்கும் இடங்களிலும் கொடுத்துக் கொண்டே சென்றேன்.

இதற்குள் மாலை ஆகிவிடவே, முந்தின இரவு போலவே, இன்றும் வண்டியிலே கழித்துவிட வேண்டாம் என்று நினைத்து இன்னும் சில கிமீ தொலைவில் உள்ள "சிட்டாம்பு" என்ற ஊருக்கு வண்டியை அழுத்தினேன்.

இந்த சிட்டாம்பு தான் 1800களின் துவக்கத்தில் புகழ் பெற்ற டேவிட் லிவிங்ஸ்டன் மருத்துவப்பணி செய்த இடம்.இன்றும் அந்த மருத்துவ ஊழியம் தொடர்ந்து நடக்கிறது.

ஒரு வேளை இந்த சிட்டாம்பு மிஷன் ஸ்டேஷனில் இரவு தங்க இடம் கிடைக்கலாம் என்று சிட்டாம்பு நோக்கி விரைந்தேன்.

சிறிது நேரத்தில், சிட்டாம்பு வந்து சேர்ந்த நான், அங்குள்ள மிஷன் ஸ்டேஷன் இன்சார்ஜ் டாக்டர் டர்ரியை சந்தித்தேன்.

நான் வந்த நோக்கத்தையும் வேலையையும் சுருக்கமாகத் தெரிவித்ததும்.." இங்குள்ள பாஸ்டரை நீங்கள் சந்திக்கலாமே " என்று கெஸ்ட் ஹவுஸின் பின்புறம் அழைத்துச் செல்ல எழுந்தார்..

அப்போது துப்பாக்கி ஏந்திய ஒரு டஜன் ஆப்ரிக்க இராணுவ வீரர்களுடன் ஒரு வேன் புழுதியைக் கிளப்பிக் கொண்டு கிறீச்சிட்டு வந்து அந்த மிஷன் பங்களா காம்ப்பவுண்டுக்குள் வந்து நின்றது !!

ஹேண்ட்ஸ் அப்

அந்த மிஷன் காம்ப்பவுண்டுக்குள் புயலாகப் புகுந்த அவர்களோடு 3 சீன கம்யூனிஸ்ட் வீரர்களும் இறங்கினர்..

டாக்டர்.டர்ரியும் நானும் நம்ப முடியாமல் வாயடைத்துப்போய் பார்த்துக் கொண்டிருந்தோம்..

அவர்களில்ஒரு ஆப்பிரிக்க ஆபீஸர் உடனே துப்பாக்கியை என் முகத்துக்கு நேரே நீட்டி ..
" ஹேண்ட்ஸ் அப் " என்று உறுமினான்..

என் கைகள் என்னையறியாமலேயே மேலே உயர்ந்தன..

" ஓடிப்போயிரலாம்னு நினைச்சு கூடப் பாத்துராத.." என்று முகத்தைக் கல்லாக்கிக் கொண்டு கர்ஜித்தான் அந்த முரட்டு ஆசாமி..

எனக்கு ஒன்றும் ஓடவில்லை.என் நினைவுகள் தாறுமாறாக சிதற ஆரம்பித்தன..

இந்த மத்திய ஆப்பிரிக்க Zambiaவுக்குள் இன்று நான் நுழைந்ததிலிருந்தே நாள் முழுக்க வண்டி ஓட்டிய களைப்பால் ஒரு பக்கம் உடலெல்லாம் அணுஅணுவாய் வலிக்க..
கூடவே பயத்தில் சப்த நாடியும் நடுங்க ஆரம்பித்தது..

டாக்டர்.டர்ரியை அவர்கள் ஒரு பக்கமாய்த் தள்ளிவிட ,அவர் செய்வது அறியாமல் உறைந்து போய் நின்றார்.

கொஞ்சம் கொஞ்சமாய் உண்மை சுரீர்ரென்று உறைக்க ஆரம்பித்து..

என்னை அறியாமல் நான் ஃபாலோ
பண்ணப்பட்டிருக்கிறேன்..
யாரோ என்னை நிழலாய்த் தொடர்ந்திருக்கிறார்கள்..

" வசமாய் மாட்டிக் கொண்டேன் !!"

உன் பாஸ்போர்ட் எங்கே?

தன் துப்பாக்கியை எனக்கு நேரே நீட்டி.." உன் பாஸ்போர்ட் பேப்பர் மற்றும் பெர்மிட் எங்கே ?" என்று கத்தினான் அந்த ஆப்பிரிக்க கமாண்டிங் ஆபீஸர்..

பயத்தில் பேச்சு மூச்சற்றுப் போய் என் வெள்ளை வோக்ஸ்வேகன் வேனை நோக்கி கை நீட்டினேன்..

"போய் எடுத்துட்டு வாடா.."என்று உறுமினான் அவன்..

"ரூடி..கர்த்தரை நம்பு,அவர் உன்னை நிச்சயம் தப்புவிப்பார்" என்று டாக்டர் டர்ரி எனக்குப் பின்னால் கிசுகிசுப்பது சன்னமாய்க் கேட்டது..

ஆனால் நானோ அவர்கள் கையில் சரியாய் சிக்கியிருந்தேன். கர்த்தர் கூட இதிலிருந்து என்னைத் தப்பிக்க வைக்க முடியுமா என்று நினைக்கும் அளவுக்கு விஷயம் அவ்வளவு பெரியது என்று புரிந்து போனது..

நான் இப்போது நின்று கொண்டிருப்பது ஆப்பிரிக்காவிலுள்ள Zambia வில்..ஆனால் என் பர்ஸில், நான் ஒரு Zimbabwe நாட்டு நிரந்தரக் குடியுரிமை பெற்றவன் என்ற பெர்மிட் பேப்பர் மற்ற பேப்பர்களோடு இருந்தது..

1975 ல் Zambia வுக்கும் Zimbabwe க்கும் இடையே எந்த அரசுத் தொடர்போ நல்லுறவோ இல்லாத ஒரு காலம் அது..

இரண்டு நாடுகளுக்கும் நடுவேயிருந்த எல்லை இறுக்கமாக மூடப்பட்டிருந்தது.
Zimbabwe யிலிருந்து நான் இப்போது வந்திருக்கும் Zambia வுக்குள் நுழைய Botswana வழியாக முன்பின் தெரியாத பாதை வழியாக சுற்றி வந்திருந்தேன்..

Zimbezi நதியருகே உள்ள பார்டரில் நான் Zambia வுக்குள் நுழைந்த போது அங்கிருந்த கஸ்டம்ஸ் ஆபீஸர் நான் ஒரு Zimbabwe குடியுரிமை பெற்றவன் என்று அறிந்திருந்தால் நிச்சயமாக இந்த நாட்டுக்குள் என்னை நுழைய விட்டிருக்க மாட்டான்.

நான் அந்த கஸ்டம்ஸில் எனது ஸ்விட்சர்லாந்து பாஸ்போர்ட்டை மட்டுமே காட்டியிருந்தேன்.

அதில்,இதற்கு முன்,நான் எவ்வளவு நாள் Zimbabwe யில் தங்கியிருந்தேன் என்பது பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை..

என் மற்ற பேப்பர்களோடு Zimbabwe ID proof மற்றும் Residence proof குறிப்பிடப்பட்ட ஒரு தனி அடையாள அட்டை என் பர்ஸுக்குள்ளே இருந்தது.

நாடு விட்டு நாடு திருட்டுத்தனமாய் நுழைந்த ஒரு உளவாளி என்று என்னைக் கடுமையான சிக்கலில் மாட்ட வைக்க அந்த அடையாள அட்டை ஒன்று மட்டுமே போதுமானதாய் இருந்தது..

அந்த இராணுவ அதிகாரிகள் இருந்த mood ஐப் பார்த்தால் முதலில் என்னைச் சுட்டுத் தள்ளிவிட்டு பிறகு விசாரணையை ஆரம்பிப்பார்கள் போலிருந்தது..

எப்படியோ என் வேனை நோக்கி நடந்தேன்.
கதவைத் திறக்க முயற்சித்த என் கைகள் என்னையும் மீறி நடுங்கிக் கொண்டிருந்தன..

கடைசியாக, நடுங்கிக் கொண்டே வேனிலிருந்து பர்ஸை எடுத்தேன்.
என்னுடைய ஒவ்வொரு அசைவையும் கண்கொத்திப் பாம்பாக பின்னாலிருந்து கவனித்துக் கொண்டே இருந்தனர்..

பர்ஸுக்குள் இருந்த அந்தப் பேப்பர் மட்டும் அவர்கள் கண்ணில் சிக்கினால் என்னை முடித்து விட்டு தான் அவர்களுக்கு மறுவேலை..

ஆனால் அதைத் தனியே வெளியில் எடுத்து ஒளித்து வைக்க முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலை அது..

" தகப்பனே! இந்தத் தப்பிக்க வழியில்லாத நிலையிலிருந்து என்னை விடுவிக்க மாட்டீரோ ?" என்று எனக்குள்ளே ஒரு சிறிய ஜெபம் ஏறெடுத்தேன்..

வண்டியிலே ஏறு !!

“ ஏறுடா வண்டியில !" எரிச்சலில் கத்தினான் ஒருவன்..

என் ஹார்ட் பீட் எக்கச்சக்கமாய் எகிற..திறந்த ஆர்மி ட்ரக்கின் பின் பக்கம் ஏறினேன்..

அந்த ட்ரக்கிலிருந்த புழுதியையும் தூசியையும் பார்த்தாலே தெரிந்தது..
அந்த வண்டி அங்குள்ள Tan-Zam ரெயில்வே லைன் போடும் வேலையில் உபயோகப்படுத்தப்படும் லோக்கல் லாரி என்று..

வண்டியில் பரவிக்கிடந்த கல்லையும் மண்ணையும் ஒதுக்கி விட்டு கீழே உட்கார்ந்தேன்.

என் தலைவிதி நிர்ணயிக்கப்பட்டுவிட்டது.
எனக்குப்பின் ஏறிய ஆப்பிரிக்க மிலிட்டரிக்காரர்கள் ஒவ்வொருவராக என்மேல் விழ ஆரம்பித்தார்கள்..

தொள தொளவென்று யூனிஃபார்ம் போட்டிருந்த ஒரு Chinese டிரைவர் வண்டியை ஸ்டார்ட் பண்ணினான்.

வண்டி ஸ்டார்ட் பண்ணப்பட்டது தான் தாமதம், அதற்குள் ஆப்பிரிக்க வீரர்களும் Chinese ஆபீஸர்களும் நிறைந்த இன்னொரு ட்ரக் ஒன்று வேகமாக மிஷன் காம்ப்பவுண்டுக்குள் நுழைந்தது..

வேகமாய் வந்த அந்த ட்ரக் நான் இருந்த லாரிக்கு மிக அருகில் வந்து கிறீச்சிட்டு நின்றது.

அதிலிருந்த ஒரு ஆப்பிரிக்கன் கத்தினான்.." ஏய் ! நில்லு..இந்த ராஸ்கல் சப்ளை பண்ணின(விநியோகித்த) எல்லாத்திலேயும் எங்களுக்கு சாம்ப்பிள் வேணும்.."

என் பக்கத்திலிருந்த ஆப்பிரிக்க வீரன் ஒருவன்.."சீக்கிரம் போய் எல்லாத்திலேயும் ஒரு சாம்ப்பிள் எடுத்துட்டு வா.." என்று என்னை வண்டியிலிருந்து காலால் உதைத்துத் தள்ளி விட்டான்..

லாரியிலிருந்து கீழே விழுந்த நான் சுதாரித்து எழுந்து நின்ற போது, என் பேப்பரை ஒளித்து வைக்க இது எனக்குக் கிடைத்த சரியான சந்தர்ப்பமோ என்று நினைத்து எனக்குள் லேசாக பெருமூச்சு விட்டுக் கொண்டேன்..

" கண் காணா இடம் நோக்கி..."

என் வேனின் பின்பக்கத்தைத் திறந்த நான் பின்னால் அடுக்கியிருந்த பெட்டிகளில் ஒன்றின் மேல் தடுமாறி விழுந்தேன்.

அந்தச் சைனாக்காரன் எடுத்து கொண்டு வரச் சொன்ன சாம்ப்பிளைத் தேடுவது போல பாவனை செய்து கொண்டே என் பர்ஸை பெட்டிகளுக்கு இடையில் மறைத்துக் கொண்டு Zimbabwe ID proof ஐ எடுத்து லாவகமாகப் பெட்டிகளுக்குள் புத்தகங்களுக்கு அடியில் பத்திரமாக ஒளித்து வைத்து விட்டேன்..

எடுக்க வேண்டிய சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புத்தகங்களின் சாம்ப்பிள்களை எடுத்துக் கொண்டு ஒரு நிம்மதிப் பெருமூச்சோடு லாரியை நோக்கி நடந்தேன்..

இப்போது என் பர்ஸில் ஸ்விஸ் பாஸ்போர்ட் மட்டுமே இருந்தது.நான் Zimbabwe யில் தங்கியிருந்ததற்கான எந்த அத்தாட்சியின் சுவடும் அதில் இல்லை..

ஒரு மிலிட்டரிக்காரன் மறுபடியும் என்னை லாரிக்குள் தள்ளினான்.
டாக்டர். டர்ரி எதுவும் செய்ய முடியாதவராய் என்னையே பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார்..

அவரை ஏக்கத்தோடு திரும்பிப் பார்த்தவனாய் ஆர்மி ட்ரக்கில் ஏறிய நான் அப்படியே அந்த லாரியின் தளத்தில் விழுந்தேன்..

என் இரு பக்கமும் இரண்டு ஆப்பிரிக்க வீரர்கள் துப்பாக்கியோடு உட்கார்ந்தார்கள். இன்னொரு நான்கு பேர் அருகில் நின்று கொண்டிருந்தார்கள்..

Chinese ஆபீஸர்கள் முன்னால் கேபினில் டிரைவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்கள்..

என்னைச் சுற்றி மிலிட்டரி வீரர்கள் முழுக்காவலோடு நிற்க, லாரி கிளம்பியது.
என்னை எங்கே கொண்டு போகிறார்கள் ?
என்ன செய்யப்போகிறார்கள் ?

இதற்குள் சூரியன் மறைந்தது.வண்டி வேகமாய் ஓட ஓட, திறந்த லாரியில் இரவின் குளிர் காற்றில் நடுங்க ஆரம்பித்தேன்..

ஆனால் குளிரின் நடுக்கத்தைக் காட்டிலும்,பயமும் திகிலும் கொண்ட நடுக்கம் என் எலும்புகளைச் சில்லிடப் பண்ணியது..

புலன் விசாரணை

இப்போது சூரியன் அஸ்தமித்திருந்தது.வெளியே குளிர்காற்றும் உள்ளே பயமும் சேர்ந்து என் எலும்புகள் நடுங்கிக் கொண்டிருந்தது..

ஆனாலும் அன்று காலை படித்த, "கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர்..யாருக்கு பயப்படுவேன்?" என்ற வார்த்தை திரும்பத் திரும்ப எனக்குள் தொனித்துக் கொண்டிருந்தது..

ஒரு மணி நேரத்துக்குப் பின் அந்த ஆர்மி ட்ரக், ஒரு சைனீஸ் கேம்ப்புக்குள் நுழைந்தது.

"இறக்கு அவனை.." என்று ஒரு சைனீஸ் ஆபீஸர் கத்தினான்.15 நிமிஷம் காத்திருப்புக்குப்பின்ஒரு ஹாலுக்கு அழைத்துச் செல்லப்பட்டேன்.

பெரிய டேபிள்.5 ஆப்பிரிக்க ஆபீஸர்கள் உட்கார்ந்திருந்தனர்.அவர்களுக்கு முன் நான் விநியோகித்த ரெட்-காஸ்பல்ஸ்..

விசாரணை ஆரம்பமானது..

"எங்கே போய்க் கொண்டிருந்தாய் ?"

"கென்யா வழியாக டான்சேனியா திரும்பிக் கொண்டிருந்தேன்.."

"எந்த பார்டர் வழியாக நுழைந்தாய் ?"

“போட்ஸ்வானா.."

"எப்போது ?"
"3 நாட்கள் முன்பு.."

"இந்த லிட்ரேச்சர் எங்கே கிடைத்தது ?" - 5 பேரில் முக்கிய அதிகாரி கேட்டார்.

"நான் தான் வண்டியில் கொண்டு வந்தேன்.."

"இது சட்டத்துக்குப் புறம்பான லிட்ரேச்சர்..நீ கடத்திக் கொண்டு வந்திருக்கிறாய்.."

“இல்லை..நான் செக் போஸ்ட் பார்டரில் எல்லாவற்றையும் தெரியப்படுத்தி விட்டு தான் கொண்டு வந்தேன்.."

"இல்ல, நீ பொய் சொல்ற..நீ கடத்திட்டு தான் வந்திருக்கிற.."

அப்போது நான் பர்ஸிலிருந்த கஸ்டம்ஸ் பேப்பரை எடுத்து நீட்டினேன்.அதில் கீழே "சைனீஸ் காஸ்பல்ஸ் " என்று எழுதப்பட்டு சீல் போடப்பட்டிருந்ததைக் காட்டினேன்..

அவர்களால் பேச முடியவில்லை.என்னை இந்த வகையில் குற்றப்படுத்த முடியாததால்.." நீ ஒரு உளவாளி..ரெயில்வே வேலையை உளவு பார்க்க வந்தாய்.." என்று ஒருவன் கத்தினான்..

“இல்லை.."

"உன்னை யார் அனுப்பியது ?”

“கடவுள்.."

"எங்களுக்கு நீயும் வேண்டாம்..உன் கடவுளும் வேண்டாம்.."

விசாரணை தொடர்ந்தது..

வெறுத்துப் போய் கடைசியாக என்னை மறுபடியும் வண்டியில் ஏற்றி தெற்கு நோக்கி வேறு ஒரு இடத்துக்குக் கொண்டு போனார்கள்.

கடைசியாக இறங்கும் போது தான் தெரிந்தது, அந்த இடம் அன்று மதியம் Rev.Bulangano வுடன் நான் லஞ்ச் சாப்பிட்ட Serenge என்று..

இப்போது என்னைக் கொண்டு வந்திருந்தது அந்த ஊரின் போலீஸ் ஹெட்குவார்ட்டர்ஸுக்கு..

அங்கிருந்த Chief Officer முன் நிறுத்தப்பட்டிருந்தேன்..

"நீ ஒரு உளவாளி என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறாய்.."

"இல்லை நான் ஒரு கிறிஸ்தவ மிஷினரி..
எங்கள் ஊழியத்தின் ஒரு பகுதியாக நான் இந்த லிட்ரேச்சரை விநியோகித்துக் கொண்டிருந்தேன்.."

மற்ற ஆப்ரிக்க போலீஸ் மாதிரி இல்லாமல் இந்த மனிதர் சற்று நிதானிக்கக்கூடிய நபராகத் தெரிந்ததால் மேற்கொண்டு நான் பேச ஆரம்பித்தேன்..

"எப்படி சார் நான் உளவாளியாக இருக்க முடியும் ?

இதே ஊரில் இன்று ரெவரெண்ட் புலங்கானோ வீட்டில் நானும் இந்த ஊர் கமிஷனரும் ஒன்றாக லஞ்ச் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்..

பேச்சுவாக்கில் அவரும் இந்தக் கைப்பிரதிகளைப் பார்த்து.."நல்லது" என்று சொன்னார்.

இதைக் கேட்டதும் அந்த ஆபீஸர் நிமிர்ந்து உட்கார்ந்தார்..

ரிலீஸ்

"அப்படியா ?
அப்போ ரெவரெண்ட் புலங்கானா இதை கன்பர்ம் பண்ணுவாரா ?" என்று கேட்டார்..

"நிச்சயமாக !" என்று சொல்லி விட்டு அவரது நம்பரைக் கொடுக்க..
அந்த நள்ளிரவில் அவருக்கு போன் பண்ணினார் அந்த அதிகாரி..

"ஹலோ, புலங்கானா ஸபீக்கிங்.."

"ரெவரெண்ட் புலங்கானா..நீங்கள் உடனடியாக இங்கு போலீஸ் ஹெட்குவார்ட்டர்ஸுக்கு வர முடியுமா ?
அவசரம்..சீக்கிரம் வாருங்கள்.." என்றுசொல்லிவிட்டு வைத்து விட்டார்..

பாஸ்டர் வருவதற்குள் என்னைப் பற்றியும் YWAM பற்றியும் மிகக் கவனமாக சொல்லிக் கொண்டிருந்தேன்.20 நிமிடம் இது தொடர்ந்தது..

அதற்குள் பாஸ்டர் வந்து விட்டார்..அங்கு என்னைப் பார்த்ததும், ஒரு பக்கம் அவருக்கு அதிர்ச்சி.

"என்ன Mr.Lack..இங்க என்ன பண்றீங்க ?"

"ஓ உங்களுக்கு இவரைத் தெரியுமா ?" என்று அமைதியாகக் கேட்டார் அந்த அதிகாரி..

“யெஸ்..இன்று நானும் இவரும் ஒன்றாக லஞ்ச் சாப்பிட்டோம்.."

"அப்படியா ? ஆனால் இவர் ஒரு உளவாளி என்று எங்களுக்குத் தகவல்.."

"இல்லை சார்..இவர் ஸ்விட்சர்லாந்திலிருந்து வந்த மிஷினரி.." என்று அன்று மதியம் கமிஷனருடன் நடந்த சம்பாஷணைகள் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் விளக்கினார் ரெவரண்ட் புலங்கானா..

" சரி..நீங்கள் கொண்டு வந்த லிட்ரேச்சர் கஸ்டம்ஸில் தெரியப்படுத்தப் பட்டுள்ளதா " என்று அவர் கேட்டதும், மறுபடியும் அந்தப் பேப்பரை எடுத்துக் காட்டினேன்..

அப்போது தான் புரிந்தது..கர்த்தர் ஏன் ஒரு கிறிஸ்தவ விசுவாசி அதிகாரியை கஸ்டம்ஸ் ஆபீஸில் வைத்து எல்லாவற்றையும் பேப்பரில் எழுத வைத்து..' Cleared' என்று சீல் போட்டு அனுப்பினார் என்று..

கஸ்டம்ஸ் clearance பேப்பரை பார்த்த பின் அந்தப் போலீஸ் அதிகாரியால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

சற்று நேரம் யோசித்தவர்..
"சரி Mr.Lack.. உங்களைக் கைது செய்யும் அளவுக்கு எதையும் என்னால் உங்களிடம் பார்க்க முடியவில்லை..உங்களைத் தவறுதலாக கைது செய்ததற்காக போலீஸ் தரப்பில் என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்..தேவையில்லாமல் உங்களுக்குக் கொடுத்த தொந்தரவுக்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்.." என்று சொல்லிவிட்டு,

தன் கீழ் வேலை செய்யும் இருவரைக் கூப்பிட்டு ஒரு கார் அனுப்பி என்னை மறுபடியும் மிஷன் காம்ப்பவுண்டுக்கு அனுப்பி வைத்தார்..

என்னால் நம்ப முடியவில்லை..

இதற்குள் விடிந்திருந்தது.

வாசலில் என்னைப் பார்த்த Dr.Durrie யால் நம்ப முடியவில்லை.

அன்றே நேராக பாஸ்டர் சைமன் மால்யாவைப் பார்க்கப் புறப்பட்டேன்.

இதற்குள் நான் அவரை சந்தித்து 3 வருடங்கள் ஆகியிருந்தது.எல்லாவற்றையும் விபரமாகப் பேசினோம்.

மீதியிருந்த எல்லா சைனீஸ் காஸ்பலையும் அவரிடம் ஒப்படைத்து விட்டு, இதுவரை விதைத்திருந்த எல்லா விதைகளையும் கர்த்தர் கையில் ஒப்புவித்து.. தேவனே விளையச் செய்வாராக !" என்ற விசுவாசத்தோடு ஜெபித்து கண்ணீரோடு விடை பெற்றேன்..
ஸ்விட்சர்லாந்து நோக்கி..

உடைத்தெறி...

(பகுதி-3)

சீனாவின்
மூங்கில் திரைகளுக்குள்ளே...

நனவான ஒரு கனவு

பல வருடங்களாக சீன மெயின்லான்டைக் குறித்து நான் எவ்வளவு படித்துத் தெரிந்து வைத்திருக்க முடியுமோ அவ்வளவு படித்து வைத்திருந்தேன். சைனாவுக்கு ஒரு விசிட்டர் விசாவாவது கிடைக்காதா என்று பலமுறை சுவிட்சர்லாந்தின் சீனத் தூதரகத்துக்கு சென்றிருக்கிறேன்.

சுவிட்சர்லாந்து மட்டுமன்றி நான் சென்றிருந்த ஆப்பிரிக்கா, ஜப்பான், லாவோஸில் இருந்த சீன தூதரகத்துக்கும்,வெளிநாட்டவர் உள்ளே வர சீனாவின் கெடுபிடிகள் தளர்த்தப்பட்டிருக்குமோ என்று அறிய பலமுறை சென்றேன்.
ஆனால் அந்த நாட்டின் மூங்கில் திரைக் கதவுகள் இரும்புத்திரைக் கதவுகளாகவே இறுக்கி மூடப்பட்டிருந்தன.

1976 ல் நடுவில் தேவன் என்னை பூமியின் கடையாந்திர பசிபிக் நாடான நியூசிலாந்துக்குக் கொண்டு சென்றிருந்தார்.

நான் அங்கே சென்றிருந்த போது அங்கு அநேக சீன மக்களைக் காண நேர்ந்தது. அவர்களில் சிலர் சீனக் கப்பல்களில் வந்த மீனவர்களாகவும், சிலர் வணிக ரீதியாகவும், சிலர் கலாச்சார உறவு மேம்பாட்டு அடிப்படையிலும் வந்தவர்களாக இருந்தனர். இவர்களைத் தவிர சீன தூதரக அதிகாரிகளும் அதிக அளவில் கண்ணில் பட்டனர்.

அந்த நாட்களில் ஒரு ஞாயிறு அன்று பாப்திஸ்து சபை ஒன்றில் பேச அழைக்கப்பட்டிருந்த நான், ஆப்பிரிக்க டான்ஸேனியாவுக்குள் வந்திருந்த சீனர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க முயற்சித்த விதத்தை விளக்கி,"நீங்கள் ஒருவேளை மெய்ன்லான்ட் சீனாவுக்குள் செல்ல இயலாமல் இருக்கலாம்.

ஆனால் தேவன் சீன மக்களை நியூசிலாந்துக்குக் கொண்டு வந்திருக்கிறார். சுவிசேஷ வெளிச்சம் அறியா அவர்களுக்கு நீங்கள் அந்த ஒளியைத் தந்தாலென்ன ?" என்று அறைகூவலிட்டு அழைத்தபோது, பல வருடங்களாக சீனாவுக்குள் செல்ல நான் படும் முயற்சிகளையும் சொல்லிக் கொண்டிருந்தேன்.

அந்த ஆராதனை முடிந்து, வந்தவர்களை சந்தித்து நான் பேசிக் கொண்டிருந்த போது, நடுத்தர வயதுப் பெண்மணி ஒருவர் என்னை சந்தித்து ராட்னி என்ற தனது மகன் மெயின்லேண்ட் சீனாவின் தலைநகர் பீக்கிங்கில் நியூசிலாந்து எம்பஸியில் மெயின்ட்டனன்ஸ் மெக்கானிக்காக இருப்பதாகச் சொல்லி சமீபத்தில் அவனிடமிருந்து வந்த டேப் ஒன்றை என்னிடம் கொடுத்தார். என் ஆச்சரியத்துக்கு அளவில்லை.

அடுத்த நாள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தபோது, "அம்மா எப்போது என்னைப் பார்க்க இங்கு வருகிறீர்கள் ? நான் தூதரகத்தில் இருப்பதால் யாரை வேண்டுமானாலும் இங்கே பீக்கிங்கிற்கு வரவழைக்க எனக்கு அனுமதி உண்டு.." என்ற அவனது வார்த்தை எனக்கு எங்கோ பொறி தட்டியது. உடனே அவனது அம்மாவுக்கு போன் செய்து அவனது முகவரியைப் பெற்றுக் கொண்டு நான் யார் என்றும், அவன் அதிகாரபூர்வமாக அங்கு சில நாட்களுக்கு என்னை அழைக்க முடியுமா என்றும் கடிதம் எழுதிக் கேட்டேன். என் கடிதம் எந்த அரசாங்கக் கண்களுக்கும் சிக்காவண்ணம் தூதரகக் கடிதங்களோடு அவன் கைகளைச் சென்றடைய, சில நாட்களிலேயே
தன்னை வந்து சந்திக்க வரும்படி அவனிடமிருந்து பதிலும் வந்தது. அதுவும் சீனத் தூதரகத்தின் முத்திரையுடன்..

இதற்குள் நியூசிலாந்திலிருந்து என் தாய் நாடான சுவிட்சர்லாந்து திரும்பியிருந்த நான் சுவிட்சர்லாந்திலுள்ள சீனத் தூதரகத்துக்கு அந்தக் கடிதத்துடன் சென்று சீனா செல்ல விண்ணப்பித்தேன். ஒரு மாதத்துக்குள் என் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சீனா செல்ல அனுமதி வந்தது.

அப்போது என் பாஸ்போர்ட்டைப் புரட்டிப் பார்த்தபோது தான் தெரிந்தது, நான் சீனாவில் தங்கியிருக்க ஒரு மாதம் மட்டுமே அனுமதி என்றும் அது செப்டம்பர் 30 முடிவடையும் என்றும்.. ஏற்கனவே ஆகஸ்ட் மத்தியில் நான் இருந்தேன். இன்னும் இரண்டே வாரங்களுக்குள் புறப்பட வேண்டும்..

சீனாவுக்குச் செல்ல சுவிட்சர்லாந்திலிருந்து ஜப்பானின் டோக்கியோ சென்று அங்கிருந்து பீக்கிங் போவதே நேரடி வழியாய் இருந்தது. எனக்கு கிடைத்த ஒரு மாதத்தையும் சீனாவுக்குள் முழுமையாய் பயன்படுத்த என் மனம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாலும், இந்தக் காரியத்தில் தேவனின் தெளிவான வழி நடத்துதலுக்காக நான் காத்திருக்க வேண்டியது மிக மிக அவசியம் என்று என் உள்மனது சொன்னது. ஆகவே சீனாவுக்குப் புறப்பட சில நாட்களே இருந்த நிலையில் ஒரு நாள் YWAM ரிட்ரீட் சென்ட்டரின் புல்வெளி வழியே நடந்து கொண்டே, "ஆண்டவரே எப்போது நான் புறப்பட நீர் சித்தமாயிருக்கிறீர்? இந்தக் கம்யூனிஸ்ட் கோட்டைக்குள் நான் எப்போது நுழைய வேண்டும் ?" என்று ஜெபிக்க ஆரம்பித்தேன்..

அதிக நேரம் காத்திருக்க வேண்டிய அவசியமின்றி 15 என்று நாள் ஒன்று என் மனதில் வர, ஆண்டவரே 15 ஆம் தேதி நான் புறப்பட்டால் அங்கு எனக்குக் கிடைக்கும் ஒரு மாதத்தில் பாதி போய்விடுமே என்று நான் கேட்கப் படபடக்கத் தோன்றினாலும், பரிசுத்த ஆவியானவரின் மெல்லிய சத்தத்தைத் தெளிவாய் கேட்ட பல அனுபவங்கள் இதற்கு முன் எனக்கு இருந்ததால் தேவனின் வழி என்னுடையதைக் காட்டிலும் உயர்ந்தது என்று அமைதியானேன்.

உடனே அங்கிருந்த போன் பூத்துக்குச் சென்று ஏர்லைன்ஸிடன் தொடர்பு கொண்டேன். என்னுடைய போனை எடுத்த பெண், "நான் உங்களுக்கு உதவட்டுமா ?" என்று கேட்க, "செப்டம்பர் 15 அன்று பீக்கிங்கிற்கு ஒரு டிக்கெட் வேண்டும்" என்று கேட்டேன். அன்றைய நாளில் ஃப்ளைட் எதுவுமில்லை என்று அவர் சொல்ல, "தயவு செய்து மறுபடியும் செக் பண்ணுங்கள்.." என்றேன்.

வேறு யாரிடமோ கலந்து பேசியவர்,"உங்களுக்கு டிக்கெட் நான் புக் பண்ணலாம் ஆனால் இது ஈரானிய ஏர்வேஸ் விமானம்.. டோக்கியோவிலிருந்து பீக்கிங் வழியாக டெஹ்ரான் செல்வது.. அதில் வேண்டுமானால் 15ஆம் தேதிக்கு ஒரு டிக்கெட் தருகிறோம்" என்று சொன்னார். நானும் பயணத்துக்கு ஆயத்தமானேன்.

சரியாக செப்டம்பர் 15 மதியம் நான் பயணித்த விமானம் பீக்கிங் வானில் வட்டமடித்து கீழே இறங்கத் தயாரானது.

இதற்குச் சரியாக ஒரு வாரம் முன்பு செப்டம்பர் 8 ம் தேதி தான் சர்வாதிகாரியாக 30 ஆண்டுகள் தன் இரும்புக் கரங்களில் சீனாவைச் சிறை வைத்திருந்த சேர்மன் மா சே துங் மரணித்த செய்தி வெளி உலகுக்கு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இப்படி ஒரு சூழலில் விமானம் தரையிறங்க ஆரம்பித்ததும் என் கை கால்கள் வெடவெடத்தன. அடுத்த இரண்டு வாரங்கள் எப்படி இருக்கும் ?

என் பைகளுக்குள் நன்கு ஒளித்து வைக்கப்பட்ட சுவிசேஷ பிரசுரங்களைப் பற்றிய எண்ணத்தோடு சற்று நடுக்கத்துடன் கஸ்டம்ஸ் அதிகாரிகளை நோக்கி நகர்ந்தேன். தூதரக விருந்தாளியாக இந்த நாட்டுக்கு நான் வந்திருந்தாலும் எனக்கென்று விசேஷித்த சலுகைகள் ஒன்றையும் அந்த நாட்டில் என்னால் எதிர்பார்க்க முடியாது என்று நன்றாகவே நான் அறிந்திருந்தேன்.

அங்கே நின்றிருந்த இரண்டு அதிகாரிகளுக்கு முன் நான் கொண்டு வந்திருந்த பொருட்கள் பட்டியலிடப்பட்ட டிக்ளெரேஷன் ஃபார்முடன் என் பாஸ்போர்ட்டையும் வைத்தேன். என் ஃபார்மை படித்துக் கொண்டே வந்த அதிகாரிகளில் ஒருவன், நான் வைத்திருந்த 16mm வீடியோ கேமரா மற்றும் பிலிம் ரோல்கள் இருந்ததைக் கண்டு, "எங்கள் சீனாவுக்குள் இதைக் கொண்டு செல்ல தடை உண்டு.." என்று சொல்ல, நான் எவ்வளவோ பேசிப் பார்த்தும் அவன் மறுத்துவிட்டான். கடைசியாக உபயோகப்படுத்துவதற்கென்று வைத்திருந்த பிலிம் ரோல் கேன் முழுவதையும் சுற்றிக் கட்டி சீல் வைத்து விட்டான்.

"திரும்பி வரும்போது இந்த சீல் உடைக்கப்படாமல் இருக்க வேண்டும் அல்லது தண்டனைக்குள்ளாவாய்" என்று எச்சரித்து என்னிடம் அதைக் கொடுத்தான்.

என்னை அழைத்துச் செல்ல வந்திருந்த ரோட்னியின் தூதரக வாகனத்தில் பீக்கிங் சாலைகளையும் தெருக்களையும் பார்த்துக்கொண்டே ரோட்னியின் அடுக்குமாடி குடியிருப்புக்கு வந்து சேர்ந்தேன். சீனாவின் தலைநகர் பீக்கிங் இன்னும் முன்னேற்றம் பெறாத ஒரு நகராக, மேற்கத்திய வாசனையே படாத ஒரு பின்தங்கிய பட்டணமாகவே காட்சியளித்தது.

ரோட்னியுடன் வீடு வந்து சேர்ந்த நான் அவன் செய்திருந்த சாதாரண உணவை உட்கொண்டபடியே மேற்கத்திய உலகத்தின் வாசல்களை அடைத்துக் கொண்ட நாட்டுக்கு அவன் எப்படி வந்தான் என்று விசாரித்தேன்..

ஏற்கனவே நியூசிலாந்தின் ஆர்மியிலிருந்த அவன், வெளிநாட்டு வேலை ஒன்றுக்கு ராணுவத்தின் மூலமே விண்ணப்பிக்க, தான் விரும்பாவிட்டாலும், விரும்பாத சீனாவைத் தவிர வேறு இடம் இல்லாததால் வேறு வழியின்றி இந்தத் தூதரக வேலைக்கு ஒப்புக் கொண்டிருந்தான். ஆனாலும் இதிலும் ஏதோ ஒரு தேவ திட்டம் இருந்தது என்று அவன் அறிந்திருந்தான்.

"உன் மூலம் தூதரக அழைப்பை நான் பெற்றிராத பட்சத்தில் நான் இந்த நாட்டில் காலடி எடுத்து வைத்திருக்கவே இயலாது என்றும் ஒருவேளை இதற்காகவே தேவன் உன்னை இங்கு அழைத்து வந்து இருப்பார்" என்றும் என்னுடைய நன்றியை அவனுக்குத் தெரிவித்தேன்.

நான் பீக்கிங் வந்து சேர்ந்த மூன்றாம் நாள் சேர்மன் மா சே துங்கின் இறுதி ஊர்வலமும் அடக்கமும் ஏற்பாடாகியிருந்தது. இலட்சக்கணக்கான மக்கள் கடந்த 10 நாட்களாகப் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த அவரது பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த தியானென்மென் சதுக்கத்தில் சாரை சாரையாய் வந்துகொண்டிருந்தனர்.

அப்போது தான் ஒரு காரியத்தை நான் உணர்ந்தேன்...ஒருவேளை ஒரு வாரத்துக்கு முன்பாக நான் வந்திருந்தால் அப்போதிருந்த குழப்பத்திலும் நெருக்கடியிலும் என்னை சீனாவின் ஏதாவது வேறொரு மாநிலத்திலேயே நிறுத்தியிருப்பார்கள் என்றும் தேவன் சகலத்தையும் நன்மைக்காகவே செய்கிறார் என்றும்..

நாங்கள் இருந்த பத்தாவது மாடியிலிருந்து இந்த வரலாற்றுக் காட்சியைக் காண ஆவலும் ஆச்சரியமும் உடையவனாக நான் இருந்தாலும் இந்தக் காட்சிகளை வீடியோ எடுக்க இயலவில்லையே என்று ஆதங்கம் என்னை உறுத்திக் கொண்டே இருந்தது. அங்கு வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் தடை செய்யப்பட்டிருந்தனர். ஒரு கட்டத்தில் எப்படியாவது இதைப் பதிவு செய்தே ஆக வேண்டும் என்ற ஆவலில் சீல் பண்ணப்பட்டிருந்த அந்தக் கேனை எடுத்து சீலை உடைக்காமலே திறக்க முடியுமா என்று தீவிர முயற்சி செய்து கடைசியாக வெளியே தெரியாதவாறு அதைத் திறந்து விட்டேன். ரோட்னியும் இன்னும் சிலர் தூதரக அதிகாரிகளும் தங்கள் பைனாகுலர் மூலம் நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்க, நானோ கேமரா லென்ஸ் மூலம் யாவற்றையும் பதிவு செய்து கொண்டிருந்தேன். முப்பது ஆண்டுகளாக கோலோச்சிக் கொண்டிருந்த கிறிஸ்தவ விரோத மாசேதுங் என்ற ஒற்றை மனிதனின் விரல் நுனிக்கு கண்மூடித்தனமாய் நாடே கட்டப்பட்டுக் கட்டுப்பட்டிருந்தது.. பயந்து நடுங்கிப்போய்..

இனி இந்த நாட்டின் எதிர்காலம் என்ன ? அன்று யாரும் அறியாத ரகசியமாய் இருந்தது அது..

அடுத்த வாரம் சீனாவின் பிற மாநிலங்களுக்குள்ளும் செல்லும்படி நாங்கள் திட்டமிட்டிருந்தோம். அது எங்கள் திட்டமாக இருந்தாலும் நாங்கள் எங்கெங்கே போக வேண்டுமென்று சீன அதிகாரிகள் அனுமதித்திருந்தார்களோ அங்கு மட்டுமே, அதுவும் அவர்கள் நியமித்த அரசாங்க guide களோடே மட்டுமே நாங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டோம்.

முதலாவது நாங்கள் செல்ல வேண்டியது Nanking என்ற மாநிலம். நீண்ட நெடும் ரயில் பயணத்துக்கு பின் நாங்கள் வந்து இறங்கிய பிறகு
தான் சொல்லப்பட்டது.. நாங்கள் அங்கே அன்றிரவு இராத்தங்க இயலாதென்றும், இப்போதே ஷாங்காய்க்குப் போக வேண்டுமென்றும்...

எவ்வளவோ போராடியும் இயலாமல் போகவே, அன்று நள்ளிரவு ஷாங்காய் வந்து சேர்ந்தோம். பிறகு தான் தெரிந்தது, அன்று Nanking நகரில் மாசேதுங்கின் மனைவி உட்பட நால்வர் கூட்டணி ஒன்று ஆட்சிப் பறிப்பு வேலையில் மும்முரமாக இறங்கியிருந்தது என்றும் அதை வெளிநாட்டவர்களாகிய நாங்கள் அறிந்து விடக்கூடாது என்பதாலுமே அங்கு நாங்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.. கடைசியாக நால்வர் அணி கவிழ்க்கப்பட்டு சேர்மன் பதவி டெங் ஷாவா பிங் என்பவருக்குச் சென்றது.

ஆனாலும் 1976 இல் சீனாவின் கதவுகள் சுவிசேஷத்திற்கு இறுக்க மூடப்பட்டே இருந்தது. ஷாங்காயைச் சுற்றியுள்ள துறைமுகத்தைப் பார்வையிட நாங்கள் சென்ற போது கப்பலிலிலிருந்து சரக்குகள் இறக்கப் படுவதை நான் பார்த்துக் கொண்டிருந்தபோதே, இதே போல ஒரு நாள் பெட்டி பெட்டியாகக் கன்ட்டெய்னர்களில் வேத புத்தகங்கள் வந்து இறங்கட்டும் என்று என் விசுவாசித்தில் நான் ஜெபித்தேன்.

ஆனால் இன்னும் சில வருடங்களிலேயே ஆப்ரேஷன் மொபிலைஸேஷனின் லோகோஸ் கப்பல்களிலிருந்து பிரதர் ஆண்ட்ரூவின் ஓப்பன் டோர் ஊழியங்கள் மூலம் லட்சக்கணக்கான வேத புத்தகங்கள் அங்கு வந்து இறங்கும் என்பதையும், சீன சபை, தானே மெய்ன்லாண்ட் சீனாவில் அரசு அனுமதியுடன் வேதம் அச்சிடப் போகிறது என்பதையும் அன்று நான் அறியாதிருந்தேன்.

ஆனாலும் இப்போது இருந்த சூழலில் விசுவாசத்தில் பெரிய அடி எடுத்து வைப்பதைக் காட்டிலும் மிக ஜாக்கிரதையாய்க்
கடத்திக் கொண்டு வந்த சில புதிய ஏற்பாடுகளையும் சிவப்பு நிற வேத பகுதிகளையும் ஆங்காங்கே வைத்துப் போவதே மிகப்பெரிய சவாலாய் இருந்தது. பீக்கிங்கில் அவைகளை வினியோகிப்பது ஆபத்து என்று அறிந்திருந்ததால் நாட்டுப்புறப் பகுதிகளுக்குள் எப்படியாவது கொண்டு சென்று விட முனைப்பாய் இருந்தோம். ஷாங்காய் நகரில் நாங்கள் சென்றிருந்த மியூசியத்தின் அலமாரிகளின் பின்பகுதிகளிலும் புத்தகங்களுக்குள்ளும் அவைகளை ஒளித்து வைத்தோம். அந்த வேலையுமே கடினமாக இருந்தது, காரணம் எங்களோடு வந்த சீன guide கண்கொத்திப் பாம்பாக எங்கள் ஒவ்வொரு அசைவையும் கண்காணித்துக் கொண்டே இருந்தான்.

ஒருநாள் இரவு கண்ணயர்ந்த அவனது கண்களுக்குத் தப்பி ஷாங்காயின் தெருக்களில் நடப்பது போல அங்கிருந்த பார்க் பெஞ்சுகளில்
மெல்லிய வெளிச்சத்தில் யாரும் பார்த்து விடாதபடி புதிய ஏற்பாடுகளை வைத்துவிட்டு நகர்ந்தோம்.

இதற்குள் ராட்னியின் ஒரு வார விடுமுறை முடிந்து அவன் பீக்கிங் திரும்பி விட, நான் மட்டும் என் கைடுடன் இன்னும் சில நாட்களுக்கு அந்த நாட்டின் மலைப் பிரதேசமான Gwelin ஐக் காணச் சென்றேன்.

என்ன தான் பல ஊர்களுக்கும் இடங்களுக்கும் நான் சென்று கொண்டிருந்தாலும், எங்காவது ஒரு ஆலயமோ சபைக் கட்டிடமோ கண்களில் தட்டுப்பட்டுவிடாதா என்பதே என் ஏக்கமாக இருந்தது. 1976 வரை நடந்த மாவோயிஸத்தின் கம்யூனிஸ்ட் கெடுபிடியின் மத்தியிலும் சீன ரகசிய சபைகள் ஆங்காங்கே செயல்படுவதாக மேற்கத்திய நாடுகளில் செய்திகள் கசிந்து கொண்டிருந்தபடியால் அவற்றில் ஏதாவது ஒன்றையாவது காண வாய்ப்பு கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டிருந்தேன்.

என்னுடைய பயணங்களில் ஒன்றில் கடைசியாக நான் சென்றிருந்த Guangzhon என்ற நகரின் மலை முகட்டிலிருந்து அந்த நகரைக் கேமரா மூலம் பார்த்துக் கொண்டிருந்தபோது அங்கே தூரத்திலே ஒரு ஆலய கோபுரம் தென்பட்டது. அந்த இடத்தை ஞாபகத்தில் இருத்திக்கொண்டு ஹோட்டலுக்குத் திரும்பிய நான் அன்று மதியம் செல்லவேண்டிய இடத்தை ஸ்கிப் பண்ணிவிட்டு மதியவேளை கண்ணயர்ந்திருந்த guide ன் கண்களுக்குத் தப்பி அந்த ஊரின் சந்து பொந்துகளுக்குள் புகுந்து,"ஆண்டவரே அந்த ஆலயத்துக்கு வழிகாட்டுமே !" என்று அந்த ஆலயத்தைத் தேடிப் போனேன்.

கடைசியாக அதைக் கண்டுபிடித்து, மூடப்பட்டிருந்த அதின் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே செல்ல முயன்ற எனக்கு ஏமாற்றம் தான் காத்திருந்தது. ஆலய இருக்கைகள் அகற்றப்பட்டு, அது காணப்பட்ட உட்புறத் தோற்றமே அங்கு ஆராதனைகள் நிறுத்தப்பட்டு பல காலமாகியிருந்தது என்பதைக் காட்டியது. இதற்குள் அங்கே காணப்பட்ட சீன மனிதன் ஒருவன் வேக வேகமாக ஓடி வந்து மாண்டரின் மொழியில் என்னை வெளியே போகும்படி சைகை காட்டினான். கனத்த இதயத்தோடு வெளியே வந்தேன்.

நான் சீனாவிலிருந்த 15 நாட்களில் பெரிய அளவில் என்னால் எதுவும் செய்ய இயலாவிட்டாலும் தேவன் எனக்கு ஒரு மிகப்பெரிய காரியத்தைச் செய்திருந்தார்.

இந்த அடைக்கப்பட்ட மூங்கில்திரை தேசம் சுவிசேஷத்திற்குத் திறக்கப்பட வேண்டுமானால், இந்த தேசத்தின் சட்டதிட்டங்களையும், உள்ளான நிலையையும் அறிந்து ஜெபிக்க ஜெப வீரர்களை எழுப்பியாக வேண்டும். அதற்கு என்னிடத்தில் முக்கியத் துருப்பாக இருப்பது நான் பதிவு செய்திருந்த 16mm வீடியோ ஃபிலிம். மாசேதுங்கின் இறுதி ஊர்வலம் முதல் பீக்கிங்கின் சந்து பொந்துகளில் காணப்பட்ட மக்களின் அன்றாட வாழ்க்கை அல்லாது, அடுத்து வந்த பத்து நாட்களில் நான் போய் வந்த ஊர்கள் கிராமங்கள் வரை சகலமும் படமாக்கப்பட்டிருந்தது.

இது ஒன்றே இப்போதைக்குப் போதும், எங்கள் மேற்கத்திய ஜனங்கள் இந்த தேசத்தைக் குறித்து பாரப்படவும் கதறி ஜெபிக்கவும்..

பீக்கிங் வழியாக சீனாவுக்குள் வந்திருந்த நான் இப்போது ஹாங்க்காங் வழியாக வெளியேறும் ரூட்டில் இருந்தேன். இப்போது எனக்கு முன்னிருந்த பெரிய சவாலே இந்த 16mm ஃபிலிமை
எப்படி கஸ்டம்ஸ் அதிகாரிகள் கண்களுக்கு மறைத்து வெளியே கொண்டு செல்வது என்பது தான்.

ஹாங்காங்கை விட்டுப் புறப்படும் முன் தினம் இரவு என்னுடைய டூத் பேஸ்ட் ட்யூபின் பின்புறத்தை வெட்டிவிட்டு அதிலிருந்த பேஸ்ட்டை வெளியே தள்ளி உட்புறமாக நன்கு சுத்தம் செய்துவிட்டு,
ரப்பர் போன்று அமுக்கும் தன்மையுடைய அந்த ட்யூபுக்குள் மிக முக்கியமான பிலிம் ரோல்களை உள்ளே தள்ளி மறுபடியும் அதின் முனையை கவனமாக மடித்து மூடினேன். மற்ற ரோல்களை ஏற்கனவே நான் கவனமாய்த் திறந்திருந்த 16mm கேனுக்குள் போட்டு மிகக் கவனமாக மூடிவிட்டேன். வெளியில் பார்க்க சீல் உடைக்கப்படாதது போலவே அது காணப்பட்டது.

வழக்கமாகவே ஒரு கம்யூனிஸ்ட் தேசத்துக்குள் நுழையும்போது ஒரு அசாதாரண டென்ஷன் என்னைச் சூழ்ந்திருக்கும். சைனாவைப் பொறுத்த மட்டில் எனக்குள் அப்படி ஒன்று இல்லாவிட்டாலும், ஹாங்காங் கஸ்டம்ஸ் ஆபீஸில் அந்தத் தொளதொள நீல நிற யூனிபார்மில் இருந்த கஸ்டம்ஸ் ஆபீஸரைக் கண்டதும் ஏதோ ஒரு வித பயம் தொற்றிக்கொண்டது. ஆனாலும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் என் பொருட்கள் எல்லாவற்றையும் அவனுக்கு முன் பரப்பி வைக்க, எல்லாவற்றையும் மேலோட்டமாய்ப் பார்த்த அவன், என் பேப்பரில் சீல் போட்டு அனுப்பிவிட்டான். இப்படியாக ஹாங்காங் வழியே ஸ்விட்ஸர்லாந்து வந்து சேர்ந்தேன்.

அடுத்து வந்த பல மாதங்களை என்ன சொல்வேன் ? அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பல இடங்களில் கிறிஸ்தவ டிவி சேனல்களிலும் நான் ஒளிப்பதிவு செய்து வந்தவைகள் ஒளிபரப்பப்பட்டு, பல சபைகளுக்கு நான் பேச அழைக்கப்பட்டேன். சென்ற இடங்களிலெல்லாம் நசுக்கப்பட்ட சீன சபைகளுக்காகக் குரல் கொடுக்கவும், ஜெப வீரர்களை எழுப்பவும் நான் பதிவு செய்து வந்த குறும்படங்கள் மிகவும் கைகொடுத்தது. அதனால் பாரப்பட்டவர்களும் ஜெபிக்க எழுப்பப்பட்ட வர்களும் ஏராளம் ஏராளம் !

ஓ ! தேவனின் அளவற்ற நன்மையை என்னவென்று சொல்வது ! இன்றும் சுவிசேஷத்திற்கு வாசல்கள் அடைக்கப்பட்ட அநேக தேசங்களுக்குள் சுவிசேஷ ஒளியை ஊடுருவிக் கொண்டு செல்ல சேனை ஒன்று எழும்பாதோ என்பதே என் ஜெபமும் இப்புத்தகத்தின் நோக்கமுமாம் !

தேவன் அதை வாய்க்கச் செய்வாராக !

Original in English
BREAKTHROUGH

Author:
RUDI LACK

தமிழில்

Pastor. Romilton
Delhi
Mob: +91 98106 46981